# நாலடியார்

## மூலமும் தெளிவுரையும்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

# நாலடியார்

## (மூலமும் தெளிவுரையும்)

உரையாசிரியர்

**முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்**

திருவள்ளுர் மனறம், திருவீங்கோய்மலை
55ஆம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **நாலடியார் (மூலமும் தெளிவுரையும்)** |
| உரையாசிரியர் | : | முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்** |
| பக்கம் | : | 168 |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| கணினி அச்சு மற்றும் வடிவமைப்பு | : | திருமதி இந்திரா காந்தி ரவி<br>ரமணா கிராபிக்ஸ், 97890 65515 |
| வெளியீடு | : | திருவள்ளுவர் மன்றம், திருவீங்கோய்மலை<br>55ஆம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு |

**நூலாசிரியர் சிலம்பொலியாரின்**

**நெஞ்சத்துள் என்றும் நிறைந்திருக்கும்**

**தெய்வத்திரு அன்னை பழனியம்மாள்**

**தெய்வத்திரு மனைவி செல்லம்மாள்**

**ஆகியோருக்கு இந்நூல் காணிக்கை**

# முன்னுரை

பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன பழந்தமிழ் நூல்கள். இவற்றுள் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் மேற்கணக்கு எனப்படும். மேல், கீழ் என்பன பாடல்களின் நீளம் கருதிக் கூறப்பட்டனவேயன்றி நூல்களின் தரம் கருதியன்று. அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள் குறித்துக் குறைந்த அடிகளையுடைய செய்யுள்களால் பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு எனப்பட்டன.

இத்தகைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தமிழில் பதினெட்டு உள்ளன. அவையாவன:

| | |
|---|---|
| 1. நாலடியார் | 10. திணைமாலை நூற்றைம்பது |
| 2. நான்மணிக்கடிகை | 11. திருக்குறள் |
| 3. இனியவை நாற்பது | 12. திரிகடுகம் |
| 4. இன்னா நாற்பது | 13. ஆசாரக்கோவை |
| 5. கார் நாற்பது | 14. பழமொழி நானூறு |
| 6. களவழி நாற்பது | 15. சிறுபஞ்சமூலம் |
| 7. ஐந்திணை ஐம்பது | 16. இன்னிலை |
| 8. ஐந்திணை எழுபது | 17. முதுமொழிக் காஞ்சி |
| 9. திணைமொழி எழுபது | 18. ஏலாதி |

இவற்றுள் திருக்குறள் உலகப் பொதுமைபெற்று விளங்கும் ஒப்பற்ற தன்மை கொண்டது. இத்தொகுதியுள் திருக்குறளோடு ஒப்ப வைத்து எண்ணத்தகுமளவில் விளங்குவது நாலடியார்.

குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல் குறள் எனப் பெயர் பெற்றது போல நாலடி வெண்பாக்களினால் ஆகிய இந்நூல் நாலடி எனப் பெயர் பெற்றது; சிறப்புப் பற்றிய 'ஆர்' விகுதி சேர்க்கப்பட்டு நாலடியார் என வழங்கி வருகிறது. நானூறு

வெண்பாக்களைக் கொண்டிருப்பதால் நாலடி நானூறு என்றும் இது கூறப்படுகிறது. அறநெறிகளை அறிந்து பிறர்க்கும் உதவி செய்து வாழ்வதற்குரிய நெறிமுறைகளைத் தொகுத்துக் கூறுவதால் இது **வேளாண்வேதம்** என்றும் பாராட்டப்படுகின்றது.

தொன்றுதொட்டுத் திருக்குறளையும் நாலடியாரையும் இணைத்து ஒரு தன்மைத்தாகக் கண்டு வந்ததைக் கீழ்க்காணும் பழமொழிகள்வழி அறிய முடிகிறது.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
**நாலும் இரண்டும்** சொல்லுக்கு உறுதி"

"பழகு தமிழ்ச் சொல்லருமை **நாலிரண்டில்**"

"**நாலடி இரண்டடி** கற்றவனிடத்தில்
வாயடி கையடி செல்லாது."

இப்பழமொழிகளில் 'நாலு' என்பது நாலடியாரையும், 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கின்றன.

பண்டை உரையாசிரியர்களான அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், பரிமேலழகர், பேராசிரியர் போன்றோர் இந்நூற் பாடல்களை எடுத்தாண்டிருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு புலனாகின்றது.

இந்நூல் சமண முனிவர்கள் பலர் எழுதிய பாடல்களின் தொகுப்பு என்பர். ஏனைய கீழ்க்கணக்கு நூல்களைப் போலவே இதுவும் ஒருவராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவாரும் உளர். அதிகாரத்தோடு பொருந்திவராமல் வருந்திப் பொருத்தத்தக்கனவாய் அமைந்துள்ள பாடல்களும், கூறிய கருத்தே கூறுதலாக உள்ள பாடல்களும் ஆங்காங்கே தென்படுவதால் இஃது ஒரு தொகுப்பு நூல் என்பதே பொருத்தமானதாகும்.

**பதுமனார்** என்பவர் இந்நூற் பாடல்களைத் தொகுத்துப் பால் வகைப்படுத்தி அதிகார அடைவும் செய்தார். அவர் இந்நூலுக்குச் சிறந்ததோர் உரையும் எழுதியுள்ளார். அவர் திருக்குறளைப் போலவே இதனையும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களாகப் பிரித்து, ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்து வெண்பாக்கள் வீதம் நானூறு பாக்களையும் நாற்பது அதிகாரங்களாக வகுத்தார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று என்பதால் நாலடியார் கடைச்சங்க காலத்தைச் சார்ந்தது எனலாம். இதன் காலம் பற்றிய கருத்து வேறுபாடு உண்டு. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் முத்தரையர் என்ற குறுநில மன்னர் மரபினர் ஆண்டனர். நாலடியாரில் 'பெரு முத்தரையர்' என்ற சொல் ஈரிடங்களில் (பாடல் 200, 296) வருகின்றது. எனவே நாலடியார் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பார் உளர். நாலடியாரில் வருகின்ற பெரு முத்தரையர் என்ற சொல் 8ஆம் நூற்றாண்டிலிருந்த முத்தரையரைத்தான் குறிக்கின்றது என்பதற்குத் தெளிவான ஆதாரம் ஏதும் இல்லாத நிலையில் அந்த ஒரு சொல்லைக் கொண்டு நாலடியாரைப் பிற்பட்ட காலத்திற்குத் தள்ள வேண்டியதில்லை. பண்டைய உரை யாசிரியர்கள் சங்க நூற் பாக்களை ஒப்பவே நாலடிப் பாடல் களையும் மேற்கோளாக எடுத்தாண்டிருப்பது கொண்டு இதனைச் சங்கத் தொன்மை நூலாகக் கொள்வதே பொருத்தமானதாகும்.

நிலையாமை சமண சமயத்தின் உயிர்நாடியான கருத்து. நாலடியார் சமண முனிவர்களால் பாடப் பெற்ற நூல் ஆதலால் இதில் செல்வம், இளமை, உடல் நிலையாமை ஆகியவை விரிவாகப் பேசப்படுகின்றன. கருத்துகளை ஏற்ற எடுத்துக்காட்டு களுடன் விளக்கிக் கூறுவதில் நாலடி வெண்பாக்கள் ஈடு இணையற்றவை.

நாலடியாருக்கு நல்லதொரு **தெளிவுரை** இந்நூலில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் கீழேயும் அப்பாடலில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளதும், உரையின் கீழே பாடலின் கருத்துரை மிகவும் தெளிவுறச் சுருக்கமாகத் தரப்பட்டிருப்பதும் இந்நூலின் சிறப்புக் கூறுகள்.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுக்கு நான் எழுதிய தெளிவுரையைத் தொடர்ந்து, இப்பொழுது நாலடியார் தெளிவுரையை மிகவும் நேர்த்தியாக, திருவீங்கோய்மலை திருவள்ளுவர் மன்றம், 55ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடுகின்றனர். அம்மன்றத்திற்கு என் உளம் நிறைந்த நன்றி. இந்நூலுக்கான முழு உரிமையை மன்றத்திற்கே உரித்தாக்குகிறேன்.

சென்னை

அன்புடன்,
**சு. செல்லப்பன்**

# பொருளடக்கம்

| | | பக். |
|---|---|---|
| | கடவுள் வாழ்த்து | 9 |
| **அறத்துப்பால்** | | |
| 1 | செல்வம் நிலையாமை | 9 |
| 2 | இளமை நிலையாமை | 13 |
| 3 | யாக்கை நிலையாமை | 17 |
| 4 | அறன் வலியுறுத்தல் | 20 |
| 5 | தூய்தன்மை | 24 |
| 6 | துறவு | 28 |
| 7 | சினமின்மை | 32 |
| 8 | பொறையுடைமை | 36 |
| 9 | பிறர்மனை நயவாமை | 40 |
| 10 | ஈகை | 43 |
| 11 | பழவினை | 47 |
| 12 | மெய்ம்மை | 51 |
| 13 | தீவினையச்சம் | 54 |
| **பொருட்பால்** | | |
| 14 | கல்வி | 58 |
| 15 | குடிப்பிறப்பு | 62 |
| 16 | மேன்மக்கள் | 65 |

| | | |
|---|---|---|
| 17 | பெரியாரைப் பிழையாமை | 69 |
| 18 | நல்லினம் சேர்தல் | 73 |
| 19 | பெருமை | 76 |
| 20 | தாளாண்மை | 80 |
| 21 | சுற்றந்தழால் | 84 |
| 22 | நட்பாராய்தல் | 88 |
| 23 | நட்பிற் பிழை பொறுத்தல் | 92 |
| 24 | கூடா நட்பு | 96 |
| 25 | அறிவுடைமை | 99 |
| 26 | அறிவின்மை | 103 |
| 27 | நன்றியில் செல்வம் | 107 |
| 28 | ஈயாமை | 111 |
| 29 | இன்மை | 114 |
| 30 | மானம் | 118 |
| 31 | இரவச்சம் | 122 |
| 32 | அவையறிதல் | 125 |
| 33 | புல்லறிவாண்மை | 129 |
| 34 | பேதைமை | 133 |
| 35 | கீழ்மை | 137 |
| 36 | கயமை | 140 |
| 37 | பன்னெறி | 144 |
| 38 | பொது மகளிர் | 148 |
| 39 | கற்புடை மகளிர் | 151 |
| 40 | காமநுதலியல் | 154 |
| | செய்யுள் முதற் குறிப்பு அகராதி | 161 |

# நாலடியார் - தெளிவுரை

## கடவுள் வாழ்த்து

வான்இடு வில்லின் வர(வு)அறியா வாய்மையால்,
கால்நிலம் தோயாக் கடவுளை, – யாம்நிலம்
சென்னி உறவணங்கிச் சேர்தும்;எம் உள்ளத்து
முன்னி யவைமுடிக என்று.

(*அருஞ்சொற்பொருள்:* தோயா - படியாத; சென்னி - தலை; முன்னியவை - நினைத்தவை.)

*வானத்து நீர்த்துளிகள் தோற்றுவிக்கும் வானவில்லைப்போல் தோன்றுமிடம் அறியாத தன்மையும், கால்கள் நிலத்தில் படியாத தன்மையும் கொண்ட தெய்வத்தை, நாம் நினைத்தவை நிறைவேறு வதற்காக, நிலத்தில் தலைபடிய வணங்கி நினைவில் நிறுத்து வோம்.*

*கருத்து :* **நினைத்தவை நிறைவேற இறைவனை நினைவோம்.**

## அறத்துப்பால்

## 1

## செல்வம் நிலையாமை

1. அறுசுவை உண்டி, அமர்ந்(து)இல்லாள் ஊட்ட,
மறுசிகை நீக்கிஉண் டாரும், – வறிஞராய்ச்
சென்(று)இரப்பர் ஓர்இடத்துக் கூழ்எனின், செல்வம்ஒன்(று)
உண்டாக வைக்கற்பாற்(று) அன்று.

(உண்டி - உணவு; அமர்ந்து - விரும்பி; இல்லாள் - மனைவி; மறுசிகை - மறுகவளம்.)

*அறுசுவை உணவை விருப்புடன் மனைவி உண்பிக்கும்போது ஒரு கவளத்தை உண்டு மறு கவளத்தை ஒதுக்கிய செல்வர்களும்கூட ஏழைகளாகி, வேறோரிடம் சென்று, கூழுக்காகப் பிச்சை யெடுப்பார்கள் என்றால், செல்வம் என்ற ஒன்று உள்ளதாக எண்ணத்தக்கது அன்று.*

*கருத்து :* **செல்வம் நிலையானது இல்லை. செல்வரும் ஏழையாகி இரந்து உண்ண நேரலாம்.**

2. துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ(டு) உண்க;
அகடுற யார்மாட்டும் நில்லாது, செல்வம்
சகடக்கால் போல வரும்.

(துகள் - குற்றம்; பகடு - எருது; அகடுற - உறுதி பொருந்த; சகடம் - வண்டி.)

*செல்வம் ஆழ்ந்து ஊன்றி எவரிடத்தும் நிலைத்து நிற்காது. வண்டிச் சக்கரம்போல் இடம்மாறி வரும். ஆதலின், குற்றமற்ற பெருஞ்செல்வம் உண்டானால், அஃது உண்டான நாள் தொடங்கியே உழவுத் தொழில் (எருது) மூலம் உண்டான உணவைப் பலருடன் கூடி உண்ணுக.*

*கருத்து* : **செல்வம் நிலைத்திராது. ஆதலின் அதனைப் பகுத்துண்டு பயன் பெறுக.**

3. யானை எருத்தம் பொலியக் குடைநிழல்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும், – ஏனை
வினைஉலப்ப வேறாகி வீழ்வர்,தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

(எருத்தம் - பிடரி; பொலிய - அழகுபெற; உலப்ப - கெடுக்க; மாற்றார் - பகைவர்.)

*யானையின் பிடரியில் அழகு தோன்ற வெண்கொற்றக்குடை நிழலில் சேனைகளுக்கெல்லாம் தலைவராகச் சென்றவரும், தீவினை சூழ்ந்து வருகையில், தம் மனைவியைப் பகைவர்கள் கவர்ந்து கொள்ள நிலைவேறாகித் தாழ்வர்.*

*கருத்து* : **தீவினை சூழ்கையில் அரசரும் நிலைமாறித் தாழ்வர்.**

4. நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்(து),
ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க;
சென்றன சென்றன வாழ்நாள்; செறுத்(து)உடன்
வந்தது வந்தது கூற்று.

(ஒன்றின - பொருந்திய; வல்லே - விரைந்து; செயின் - செய்வையாயின்; செறுத்து - வெகுண்டு; கூற்று - எமன்.)

*வாழ்நாள்கள் கழிந்து போயின; எமனும் வெகுண்டு விரைந்து வந்துவிட்டான்; ஆதலின், தொன்றுதொட்டு நிலைத்திருந்த செல்வமும் நிலையாது என்பதை அறிந்து, உம்மால் இயன்ற அறங்களைச் செய்யக் கருதுவீராயின், விரைந்து செய்யுங்கள்.*

*கருத்து* : **செல்வமோ நில்லாது; சாவோ உறுதி; ஆதலின் அறங்களை விரைந்து செய்யுங்கள்.**

5. என்னானும் ஒன்றுதம் கைஉறப் பெற்றக்கால்
பின்னாவ(து) என்று பிடித்திரா, – முன்னே

கொடுத்தார் உயப்போவர், கோ(டு)இல்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்.

(என்னானும் - ஏதேனும்; உய்தல் - தப்பித்தல்; கோடு இல் - வளைவு இல்லாத; கூற்றம் - எமன்; சுரம் - பாலை நிலம்.)

*ஏதேனும் ஒரு பொருள் தம் கையில் கிடைக்கப்பெற்றால் பின்னால் அப்பொருள் தமக்குப் பயன்படும் என்று இறுகப் பிடித்து வைத்திராமல், அப்பொருள் அழிவதன் முன்பே கொடுத்து உதவியவர், தன் தொழிலிலிருந்து தவறாத கொடிய எமன் பற்றி இழுத்துச் செல்லும் வெப்பு நிலத்தினின்று தப்பிச் செல்வர்.*

***கருத்து :*** **பின்னர்ப் பயன்படும் என்று வைத்திராமல் முன்னரே கொடுத்தவர் அழியாப் புகழ் பெறுவர்.**

6. இழைத்தநாள் எல்லை இகவா; பிழைத்(து)ஒரீஇக்
கூற்றம் குதித்(து)உய்ந்தார் ஈங்(கு)இல்லை; – ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர்! வழங்குமின்; நாளைத்
தழீஇம்தழீஇம் தண்ணம் படும்.

(இகவா - கடப்பதில்லை; ஒரீஇ - தப்பி; உய்ந்தார் - பிழைத்தவர்; ஆற்ற - மிகுந்த; தண்ணம் - (சாவுப்)பறை.)

*ஒருவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள் நாள்கள் தம் எல்லையைக் கடப்பதில்லை; அவ்வெல்லை கடந்து எமன் கையில் அகப்படாது தப்பிப் பிழைத்தவர் இங்கு ஒருவரும் இல்லை. ஆதலால், பெருஞ்செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்களே! வாரி வழங்குங்கள்! நாளைக்கே, 'தழீஇம்' என்ற ஓசையுடன் சாப்பறை உங்களுக்கு அடிக்கப்படுதலும் கூடும்.*

***கருத்து :*** **சாவிலிருந்து தப்ப முடியாது; ஆதலின் உள்ளபோதே நல்லறம் செய்யுங்கள்.**

7. தோற்றம்சால் ஞாயிறு நாழியா, வைகலும்
கூற்றம் அளந்துநும் நாள்உண்ணும்; – ஆற்ற
அறஞ்செய்(து) அருளுடையீர் ஆகுமின், யாரும்
பிறந்தும் பிறவாதார் இல்.

(ஞாயிறு - கதிரவன்; நாழி - முகத்தலளவைக் கருவி; வைகலும் - நாள்தோறும்; ஆகுமின் - ஆகுங்கள்.)

*உலகில் பிறந்த யாரும் பிறவாதவர் ஆதல் இல்லை. கிழக்கில் தோன்றும் கதிரவனை அளவு கருவியாகக் கொண்டு நாள் தோறும் உங்களின் வாழ்நாளாகிய நெல்லை அளந்து எமன் உண்டு வருகிறான். எனவே வாழ்நாள் முடியும்முன் மிகுதியும் நல்லறம் செய்து அருளுடையவர் ஆகுங்கள்.*

*கருத்து* : **பிறந்தவர் பிறந்தவரே; வாழ்வு நாளும் தேயும்; ஆதலின் அறம் செய்து அருளாளர் ஆகுங்கள்.**

8. செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம் — எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்(கு)அறக் கெட்டு விடும்.

(செல்வுழி - செல்லுமிடம்; எல் - இரவு; கொண்மூ - மேகம்; மின் - மின்னல்; மருங்கு அற - இருந்த இடம் தெரியாமல்.)

*செல்வமுடையவர்களாய் இருக்கின்றோம் என்று எண்ணி, தாம் செல்ல இருக்கும் மறுமை பற்றி நினையாத சிற்றறிவினருடைய பெருஞ்செல்வம், இரவில் கருமேகத்தினைக் கிழித்த மின்னல்போலப் பளிச்செனத் தோன்றி உடனே இருந்த இடம் தெரியாமல் மறையும்.*

*கருத்து* : **அறிவிலார் செல்வம் மின்னல்போல் தோன்றி மறையும்.**

9. உண்ணான்; ஒளிநிறான்; ஓங்கு புகழ்செய்யான்;
துன்னருங் கேளிர் துயர்களையான்; — கொன்னே
வழங்கான் பொருள்காத்(து) இருப்பானேல், ஆஅ!
இழந்தான்என்(று) எண்ணப் படும்.

(ஒளி - மதிப்பு; துன் அரும் - நெருங்கிய, பெறுதற்கரிய; கேளிர் - உறவினர்; களையான் - நீக்கான்; கொன்னே - வீணே.)

*தான் உண்ணாமலும், தன் மதிப்பை நிலைநிறுத்தாமலும், உயர்ந்த புகழுக்குரிய செயல்களைச் செய்யாமலும், நெருங்கிய உறவினரின் துன்பத்தை நீக்காமலும், பிறர்க்குக் கொடாமலும், பொருளை வீணாகக் காத்திருப்பானாயின் ஐயகோ! அவன் அச்செல்வத்தை இழந்துவிட்டான் என்றே கருதப்படுவான்.*

*கருத்து* : **தானும் துய்க்காது பிறர்க்கும் கொடுக்காது காக்கப்பட்டு வரும் செல்வம் அழிந்ததாகவே கருதப்படும்.**

10. உடாஅதும், உண்ணாதும், தம்உடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்; — கொடாஅது
வைத்து(ஈ)ட்டி னார்இழப்பர்; வான்தோய் மலைநாட!
உய்த்து(ஈ)ட்டும் தேனீக் கரி.

(உடாஅதும் - உடுக்காமலும்; செற்றும் - வருத்தியும்; கெடாஅத - அழியாத; ஈட்டும் - சேர்க்கும்; கரி - சான்று.)

*விண்ணளாவிய மலை நாட்டவனே! நல்ல உடைகளை உடுக்காமலும், நல்ல உணவுகளை உண்ணாமலும், தமது உடம்பை நல்லன துய்க்காமல் வருத்தியும், அழியாத நல்லறத்தைச்*

*செய்யாமலும், பிறர்க்குக் கொடாமலும், பொருளை ஈட்டி வைத்திருப்பவர், அப்பொருளை இழந்து விடுவார்கள். சுமந்து வந்து தேன் சேர்க்கும் ஈக்களே இதற்குச் சான்று.*

*கருத்து* : **நல்வழியில் பயன்படுத்தாது குவித்து வைக்கும் செல்வம் பிறரால் கவரப்படும்.**

# 2

# இளமை நிலையாமை

11. நரைவரும் என்(று)எண்ணி நல்லறி வாளர்
குழவி இடத்தே துறந்தார்; – புரைதீரா,
மன்னா இளமை மகிழ்ந்தாரே, கோல்ஊன்றி
இன்னாங்(கு) எழுந்திருப் பார்.

(குழவி - குழந்தை; புரை - குற்றம்; மன்னா - நிலையில்லாத; இன்னாங்கு - துன்பப்பட்டு.)

*நரைதோன்றும் முதுமைப் பருவம் உறுதியாக வரக்கூடியது என்றறிந்து நல்ல அறிவுடையவர்கள் இளமையிலேயே தீயன வற்றைத் துறப்பர். அவ்வாறு குற்றங்களை நீக்காது, நிலையில்லாத இளமைப் பருவத்தை விரும்பிக் களித்தவர்களோ, முதுமையில் கோலை ஊன்றித் துன்பப்பட்டு எழுந்திருப்பர்.*

*கருத்து* : **இளமையில் துறவாதவர் முதுமையில் துன்புறுவர்.**

12. நட்புநார் அற்றன; நல்லாரும் அஃகினார்;
அற்புத் தளையும் அவிழ்ந்தன; – உள்காணாய்!
வாழ்தலின் ஊதியம் என்உண்டாம்? வந்ததே
ஆழ்கலத்(து) அன்ன கலி.

(நார் - தொடர்பு; அஃகுதல் - குறைதல்; அற்பு - அன்பு; தளை - கட்டு; ஊதியம் - பயன்; கலம் - கப்பல்; கலி - துன்பம்.)

*வயதேறியதும் நட்புத் தொடர்புகள் அற்றுப்போயின. பெண்களும் அன்பு குறைந்தார்கள்; சுற்றத்தாரின் அன்புக் கட்டும் அவிழ்ந்தது. இதைக் கொண்டு உன்னை நீயே எண்ணிப் பாராய். இந்நிலையில் வாழ்வதனால் என்ன பயன் உண்டு? கடலில் மூழ்கும் கப்பலைப்போல் துன்பம் வந்து வருந்துவதுதான் கண்ட பயன்.*

*கருத்து* : **மூப்பு நலிவு தரும். ஆதலின் இளமையிலேயே அறம் செய்க.**

13. சொல்தளர்ந்து, கோல்ஊன்றிச், சோர்ந்த நடையினராய்ப்,
பல்கழன்று, பண்டம் பழிகாறும், – இல்செறிந்து,
காம நெறிபடரும் கண்ணினார்க்(கு) இல்லையே,
ஏம நெறிபடரும் ஆறு.

(பண்டம் - உடம்பு; பழிகாறும் - பழிக்கப்படும் வரை; கண்ணினார் - கருத்துடையவர்; ஏமம் - பாதுகாப்பு; ஆறு - வழி.)

*வாய்ச்சொல் குழறி, தடியூன்றி, தள்ளாடுகின்ற நடையினராய், பற்கள் விழுந்து, உடம்பு பிறரால் பழிக்கப்படும்வரை இல்லத்தில் அடைந்து கிடந்து, சிற்றின்பப் பாதையில் செல்லுகின்ற கருத்துடையவர்க்குப் பாதுகாப்பான வீடுபேற்று நெறியில் செல்வதற்கு வழி இல்லை.*

*கருத்து :* **உலக இன்பத்தையே நாடியவர்கள் பேரின்ப வழியில் செல்லுதல் இல்லை.**

14. தாழாத், தளராத், தலைநடுங்காத், தண்(டு)ஊன்றா,
விழா, இறக்கும் இவள்மாட்டும், — காழ்இலா
மம்மர்கொள் மாந்தர்க்(கு) அணங்காகும்; தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.

(தாழா - தாழ்ந்து; தளரா - தளர்ந்து; காழ் - (மன) உறுதி; மம்மர் - மயக்கம்; அணங்கு - துன்பம்; அம்மனை - தாய்; ஞான்று - பொழுதில்.)

*14. கூன் விழுந்து, உடல் தளர்ந்து, தலை நடுங்கி, கையில் கோலூன்றித் தள்ளாடி வீழ்ந்து இறக்கும் இவளே, இவள் கையிலுள்ள கோல் இவளுடைய தாயின் கையில் இருந்த காலத்தில் (இவளுடைய இளமைப் பருவத்தில்), மன உறுதி யில்லாமல் ஆசையால் மயங்கும் மக்களுக்கு அழகால் வருத்தும் அணங்காய்த் தோன்றியிருப்பாள்.*

*கருத்து :* **கண்டார் உயிருண்ணும் காரிகையே முதுமையுற்றுத் தடியூன்றித் தள்ளாடி விழ நேரிடும்.**

15. எனக்குத்தாய் ஆகியாள், என்னைஈங்(கு) இட்டுத்,
தனக்குத்தாய் நாடியே சென்றாள்! — தனக்குத்தாய்
ஆகி யவளும் அதுவானாள்; தாய்த்தாய்க்கொண்(டு)
ஏகும்; அளித்(து)இவ் வுலகு.

(ஈங்கு - இங்கு; நாடியே - தேடியே; ஏகும் - செல்லும்; அளித்து - இரங்கத் தக்கது.)

*15. எனக்குத் தாயாக இருந்தவள் என்னை இவ்வுலகில் விட்டு விட்டுத் தனக்கொரு தாயைத் தேடிக் கொண்டு செல்பவளாய் இறந்தொழிந்தாள். என் தாய்க்குத் தாயாக இருந்தவளும் அவ்வாறே தனக்கு ஒரு தாயைத் தேடிக் கொண்டு போனவள்தான். இவ்வாறே இந்த உலகம் தாய் தாயாகச் சாவுக்குக் கொண்டு செல்கிறது. அந்தோ இரங்கத்தக்கது!*

*கருத்து :* **இளமை கழிந்து முதுமை எய்தி இறத்தல் உறுதி. ஆதலின் உள்ளபோதே நல்லன செய்க.**

16. வெறிஅயர் வெம்களத்து, வேல்மகன் பாணி,
முறிஆர் நறும்கண்ணி, முன்னர்த் தயங்க,
மறிகுள(கு) உண்(டு)அன்ன மன்னா மகிழ்ச்சி,
அறிவுடை யாளர்கண் இல்.

(வெறி - வெறியாடல்; அயர் - செய்கின்ற; பாணி - கை; முறி - தளிர்; ஆர் - நிறைந்த; கண்ணி - மாலை; தயங்க - அசைந்து தொங்க; மறி - ஆட்டுக்குட்டி; குளகு - இலை உணவு; மன்னா - நிலையில்லாத.)

*ஆவேசம் பொங்கி ஆடுகின்ற பலிக்களத்தில், வேலேந்தி ஆடுகின்ற பூசாரியின் கையில், இளந்தளிர் பொருந்திய நல்ல மாலை தொங்கக் கண்டு, பலியிடுவதற்கு நிறுத்தப்பட்ட ஆட்டுக் குட்டி அத்தளிரை இரையென உண்பது போன்ற நிலையில்லாத மகிழ்ச்சி அறிவுடையவர்களிடத்தில் தோன்றுவது இல்லை.*

*கருத்து :* **நிலையற்ற இளமை இன்பங்களை அறிவுடையார் விரும்பார்.**

17. பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனிஉதிர்ந்து வீழ்ந்தற்(று) இளமை; — நனிபெரிதும்,
வேல்கண்ணள் என்(று)இவளை வெஃகன்மின்! மற்(று)இவளும்
கோல்கண்ணள் ஆகும் குனிந்து.

(பனி - குளிர்ச்சி; அற்று - போன்றது; நனி - மிகுதி; வெஃகுதல் - மிகவும் விரும்புதல்.)

*குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள பலன்தரும் மரங்களில் பழங்கள் உதிர்ந்து வீழ்வது போன்ற நிலையற்ற தன்மை கொண்டது இளமை. இப்போது இப்பெண் வேல்போலும் கண்களை உடையவளாயிருக்கின்றாள் என்று மிக்க விருப்பம் கொள்ளாதீர்கள். முதுமைப் பருவத்தில் இவளே கோலையே கண்ணாகக் கொண்டு குனிந்து நடக்க வேண்டியவள் ஆவாள்.*

*கருத்து :* **அழகும் கவர்ச்சியும் கொண்ட இளமை அழியும் தன்மை உடையது.**

18. பருவம் எனைத்(து)உள? பல்லின்பால் ஏனை?
இருசிகையும் உண்டீரோ? என்று — வரிசையால்
உண்ணாட்டம் கொள்ளப் படுதலால், யாக்கைக்கோள்
எண்ணார் அறிவுடை யார்.

(எனைத்து - எவ்வளவு; சிகை - கவளம்; உண்ணாட்டம் - உள்நாட்டம் - உள்ளத்து விருப்பம்; யாக்கை - உடம்பு; கோள் - இளமைக்கட்டு.)

*வயது எவ்வளவு? பற்களின் தன்மை எப்படியிருக்கிறது? இரண்டு கவளமாவது உண்டீர்களா? என்று ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாய்க் கேட்டு உள்ளத்து விருப்பம் அறிந்துகொள்ளப்*

*படுவதால் இளமை உடற்கட்டினை அறிவுடையோர் ஒரு பொருளாக மதியார்.*

*கருத்து* : **பருவந்தோறும் மாறி வருவதால் உடற்கட்டு நிலையான தில்லை.**

19. மற்(று)அறிவாம் நல்வினை, யாம்இளையம், என்னாது
கைத்(து)உண்டாம் போழ்தே கரவா(து) அறஞ்செய்ம்மின்!
முற்றி இருந்த கனிஒழியத், தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.

(மற்று - பிறகு; இளையம் - இளம் வயதினர்; என்னாது - என்று கூறாது; போழ்தே - பொழுதே; கரவாது - ஒளித்து வைக்காமல்; ஒழிய - நீங்க; வளி - காற்று.)

*நல்லறம் செய்வது பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; இப்போது யாம் இளம் வயதினராய் உள்ளோம் என்று கூறாது, கையில் பொருள் உள்ளபொழுதே, மறைத்து வைக்காமல், அறங்களைச் செய்யுங்கள். ஏனென்றால், கடுங்காற்றினால் முற்றிப் பழுத்த பழங்களேயன்றிப் பச்சைக் காய்கள் உதிர்ந்து விடுதலும் உண்டு.*

*கருத்து* : **முதியவர்களேயன்றி இளைஞர்களும் இறத்தல் கூடுமாதலின் பொருளுள்ளபோதே அறம் செய்க.**

20. ஆள்பார்த்(து) உழலும் அருள்இல்கூற்(று) உண்மையால்,
தோள்கோப்புக் காலத்தால் கொண்(டு)உய்ம்மின் – பீள்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய்அலறக் கோடலான், மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று.

(உழலும் - திரிகின்ற; தோள் கோப்பு - தோளில் கோத்துச் செல்லும் கட்டுச் சோறு; பீள் - கரு; அலற - கதற; கோடல் - கொள்ளுதல்; கள்ளம் - திருட்டுத் தனம்.)

*ஆயுள் முடிந்த ஆட்களைப் பார்த்துக் கொண்டு திரிகின்ற அருளில்லாத எமன் இருப்பது உண்மை; ஆதலால் மறுமைப் பயணத்துக்குத் துணையாகப் பயன்படும் கட்டுச் சோற்று மூட்டையை (அறப்பயனை), இளமையிலேயே கொண்டு செல்லுங்கள். கருவிலிருந்து வெளிப்படுத்தி, தாய் அலறும்போதே பிள்ளையைப் பற்றிச் செல்லும் கூற்றுவனது திருட்டுத்தனத்தை அறிந்து, தக்க செயல்களை மேற்கொள்ளுதல் நல்லது.*

*கருத்து* : **எமன் எந்நேரமும் கொண்டு செல்வான். ஆதலின் மறுமைக்கு வேண்டுவன செய்துகொள்ளுங்கள்.**

# 3

# யாக்கை நிலையாமை

21. மலைமிசைத் தோன்றும் மதியம்போல், யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்; – நிலமிசைத்
துஞ்சினார் என்(று)எடுத்துத் தூற்றப்பட்டார் அல்லால்,
எஞ்சினார் இவ்வுலகத்(து) இல்.

(மிசை - மேலே; மதியம் - நிலவு; துஞ்சுதல் - இறத்தல்; எஞ்சினார் - மீந்து நின்றவர்.)

*மலைமேல் காணப்படுகின்ற நிலவைப்போல யானையின் தலைமேல் வைக்கப்பட்ட வெண்கொற்றக் குடையையுடையராய்ச் சென்ற அரசரும் நிலத்தில் வீழ்ந்து, இறந்துபட்டார் என்று பலரறிய எடுத்துக்கூறி, (பிணமானார் என்று) இகழப் பட்டாரேயல்லாமல், இறவாது மீந்து நின்றவர் இவ்வுலகில் எவருமில்லை.*

*கருத்து* : **அரசர்க்கு அரசர்களும் இறந்தவர்கள் என்றே இயம்பப் படுதலின் யாக்கை நிலையில்லாதது.**

22. வாழ்நாட்(கு) அலகா வயங்(கு)ஒளி மண்டிலம்,
வீழ்நாள் படாஅ(து) எழுதலால், – வாழ்நாள்
உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின்; யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

(அலகு - அளவு கருவி; வயங்குதல் - விளங்குதல்; ஒளி மண்டிலம் - ஞாயிறு; உலத்தல் - அழிதல்; நிலவார் - நிலை பெற்றிரார்.)

*ஆயுளுக்கு அளவு கருவியாய் விளங்குகின்ற ஒளி பொருந்திய ஞாயிறு, தவறும் நாள் இல்லாது தோன்றுவதால், ஆயுள் உருண்டோடும் முன்னர்ப் பிறர்க்கு உதவி வாழும் ஒப்புரவுச் செயலை ஆற்றுங்கள். உலகில் யாரும் சாவாமல் நிலைபெற்று இருப்பதில்லை.*

*கருத்து* : **நாள்தோறும் ஆயுள் கழிந்து வருவதால் உயிருடன் இருக்கும் போதே பிறர்க்கு உதவி செய்யுங்கள்.**

23. மன்றம் கறங்க மணப்பறை ஆயின
அன்(று)அவர்க்(கு) ஆங்கே பிணப்பறையாய்ப், – பின்றை
ஒலித்தலும் உண்டாம்என்று, உய்ந்துபோம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.

(கறங்குதல் - ஒலித்தல்; பின்றை - பின்பு; வலித்தல் - துணிதல்; மாண்டார் - மாட்சிமை பொருந்தியவர்.)

*மணமன்றத்தார் மகிழ்ந்து சூழலும்படி மங்கலமாய் முழங்கிய பறையே, அன்றே, அவர்களுக்கே, அங்கேயே, சாப்பறையாக ஒலித்தலும் உண்டு என்று நினைந்து, மாட்சிமை உடையவர்களுடைய மனம், உய்திபெற்றுச் செல்லும் வழியில் உறுதியாக நிற்கும்.*

*கருத்து :* **மணநாளே பிணநாள் ஆதலும் கூடும்; ஆதலின் அறவழியை உடனே மேற்கொள்க.**

24. சென்றே எறிப ஒருகால்; சிறுவரை
நின்றே எறிப பறையினை; — நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்(டு)எழுவர்,
செத்தாரைச் சாவார் சுமந்து.

(எறிப - கொட்டுவர்; ஒருகால் - ஒருமுறை; சிறுவரை - சிறிது பொழுது; முக்காலை - மூன்றாம் முறை.)

*செத்த வீட்டிற்குப் போய்ச் சாப்பறையை ஒருமுறை கொட்டுவர். சிறிதுபொழுது நிறுத்தி இரண்டாம் முறை கொட்டுவர். மூன்றாம் முறை கொட்டும்பொழுது, பிணத்தை மூடி, அதைச் சுடத் தீயையும் எடுத்துக் கொண்டு, செத்தவரை இனிச் சாக இருப்பவர் சுடுகாட்டிற்குச் சுமந்து செல்லும் நிலை, ஐயகோ!, நன்று நன்று.*

*கருத்து :* **இறந்த சிறுபொழுதில் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த யாக்கை நிலையில்லாதது.**

25. கணம்கொண்டு சுற்றத்தார் கல்லென்(று) அலறப்
பிணம்கொண்டு காட்டு(உ)ய்ப்பார்க் கண்டும் — மணம் கொண்(டு), ஈண்(டு)
உண்(டு)உண்(டு) என்னும் உணர்வினால் சாற்றுமே
டொண்டொண்டொ(டு) என்னும் பறை.

(கணம் - கூட்டம்; சுற்றத்தார் - உறவினர்; காடு - சுடுகாடு; உய்ப்பார் - சேர்த்துவர்; ஈண்டு - இங்கே.)

*கூட்டமாகக் கட்டித் தழுவிக் கொண்டு சுற்றத்தார் 'கல்' லென்னும் ஒலி தோன்ற அழும்போதே, பிணத்தைச் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்வதைப் பார்த்திருந்தும், மணம் செய்து கொண்டு, இவ்வுலகில் இன்பம் "உண்டு, உண்டு," என்று நம்பி மயங்கும் உணர்ச்சி இருப்பதனால், சாப்பறை "டொண் டொண் டொடு" என்று (உடம்பின் நிலையாமையைப்) பறைசாற்றுகிறது.*

*கருத்து :* **இல்வாழ்வில் மயங்கி இருப்பார்க்குச் சாப்பறை இறப்பின் உண்மையை இயம்புகிறது.**

26. நார்த்தொடுத்(து) ஈர்க்கில்என்? நன்(று)ஆய்ந்(து) அடக்கில்என்?
பார்த்துழிப் பெய்யில்என்? பல்லோர் பழிக்கில்என்?
தோல்பையுள் நின்று தொழில்அறச் செய்(து)ஊட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(ஈர்த்தல் - இழுத்தல்; என் - என்ன?; அடக்கல் - புதைத்தல்; பார்த்துழி - பார்த்த இடத்தில்; தோல்பை - உடம்பு; கூத்தன் - (உயிரென்னும்) கூத்தாடி.)

*உடம்பாகிய தோல்பொம்மைப் பைக்குள் இருந்து கொண்டு தொழிலாற்றி வந்த உயிர் என்னும் பொம்மலாட்டக்காரன் வெளியே புறப்பட்ட பின், பிணமாய்க்கிடக்கும் உடம்பைக் கயிற்றில் கட்டி இழுத்துச் சென்றால் என்ன? நன்றாகத் தூய்மைப் படுத்திப் புதைத்தால் என்ன? கண்ட இடத்தில் போட்டுவிட்டால் தான் என்ன? பலரும் பழித்தால்தான் என்ன? எந்தப் பயனுமில்லை.*

*கருத்து* : **இறந்த பின்பு மதிப்பு இல்லையாதலின் இருக்கும்போதே நல்லறம் செய்க.**

27. படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடும்இதோர் யாக்கைஎன்(று) எண்ணித், – தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்(று)உணரும் திண்அறி வாளரை
நேர்ப்பார்யார்? நீள்நிலத்தின் மேல்.

(மொக்குள் - குமிழி; பல்காலும் - பலமுறையும்; திண்மை - உறுதி; நேர்ப்பார் - ஒப்பானவர்.)

*பெய்யும் மழையால் தோன்றும் நீர்க்குமிழியைப்போல் பலமுறை தோன்றி உடனே அழிகின்ற தன்மையுள்ளது இந்த உடம்பு என்று நினைத்து, "நாம் பிறவியெடுத்துத் தடுமாறும் துன்பத்தைத் தீர்த்துக் கொள்வோம்" என்று அறிகின்ற உறுதியான அறிவுடையவர்களுக்கு ஒப்பானவர் இவ்வுலகில் எவருளர்? (ஒருவரும் இல்லை.)*

*கருத்து* : **நீர்மேல் குமிழிபோல் யாக்கை தோன்றி அழியும் தன்மையது.**

28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர், தாம்பெற்ற
யாக்கையால் ஆய பயன்கொள்க; – யாக்கை
மலைஆடும் மஞ்சுபோல் தோன்றி,மற்று ஆங்கே
நிலையாது நீத்து விடும்.

(யாக்கை - உடம்பு; யாப்பு உடைத்தல் - கட்டு உடையதாக; மஞ்சு - மேகம்; நீத்தல் - நீங்குதல்.)

*உடம்பைக் கட்டுடையதாகப் பெற்றவர், தாம் பெற்ற அவ்வுடம்பினால் பெறுவதற்குரிய பயனைத் தேடிக்கொள்வராக! ஏனெனில், உடம்பு, மலைமேல் அசைகின்ற மேகம்போலத்*

*தோன்றி நிலைபெறாமல் அவ்விடத்திலேயே அழியும் தன்மை கொண்டது.*

*கருத்து :* **உடல், மலைமேல் அசையும் மஞ்சு போன்று அழியும் தன்மையது.**

29. புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்(று)எண்ணி
இன்னினியே செய்க அறவினை; – இன்னினியே,
நின்றான், இருந்தான், கிடந்தான்,தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லால்.

(இன்னினியே - இப்போதே; அறவினை - அறச்செயல்கள்; கிடந்தான் - படுத்திருந்தான்; கேள் - உறவினர்.)

*இப்பொழுதுதான் நின்று கொண்டிருந்தான்; உட்கார்ந்தான்; படுத்தான்; அதற்குள், தன் சுற்றத்தார் அலற இறந்து விட்டான் என்று சொல்லப்படுதலால், புல்நுனி மேல் படிந்த பனித்துளி போல உடம்பு நிலையாதது என்பதை நினைத்து இப்பொழுதே அறச் செயல்களைச் செய்யுங்கள்.*

*கருத்து :* **புல்நுனியில் உள்ள பனித்துளிபோல் இவ்வுலக வாழ்வு நிலையற்றது.**

30. கேளாதே வந்து, கிளைகளாய் இல்தோன்றி,
வாளாதே போவரால் மாந்தர்கள்; – வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள்போல
யாக்கை தமர்க்(கு)ஒழிய நீத்து.

(கிளை - உறவு; வாளாதே - வெறுமனே; சேக்கை - கூடு; மரன் - மரம்; சேண் - நீண்ட தொலைவு; புள் - பறவை; தமர் - உறவினர்.)

*மனிதர்கள் நம்மைக் கேட்காமலேயே வந்து, நமக்கு உறவினராய், நம் வீட்டிலே தோன்றிச் சிறிது காலமிருந்துவிட்டு, பிறகு கூட்டினை மரத்தில் விட்டு விட்டு நீண்ட தொலைவுக்கு நீங்கிச் செல்லும் பறவைபோலத் தம் உடம்பை மட்டும் உறவினரிடம் கிடத்திவிட்டு வெறுமனே உயிர் நீங்கிச் சென்று விடுவார்கள்.*

*கருத்து :* **கூட்டை நீத்துப் பறவை பறப்பதுபோல உடலை விட்டு உயிர் பிரிவது உறுதி.**

## 4

# அறன் வலியுறுத்தல்

31. அகத்தாரே வாழ்வார்என்(று) அண்ணாந்து நோக்கிப்,
புகத்தாம் பெறாஅர், புறங்கடை பற்றி,

மிகத்தாம் வருந்தி இருப்பரே; மேலைத்
தவத்தால் தவம்செய்யா தார்.

(அகத்தாரே - (இவ்) வீட்டில் வாழ்பவரே; புறங்கடை - வாயிற்புறம்; மேலை – மேலைநாள் (முற்பிறப்பு.)

*மேலைநாள் செய்த தவத்தால் பெற்ற இப்பிறவியில், தவத்தைச் செய்யாதவர்கள், மறுபிறப்பில், 'இவ்வீட்டில் வாழ்வாரே வாழ்பவர்' என்று ஒரு வீட்டினை நோக்கி அவ்வீட்டின் சிறப்புகளை அண்ணாந்து நோக்கி, தாம் அதனுள் புக முடியாதவராய், வாயிற்புறத்தைப் பிடித்துக் கொண்டு வருத்தப்பட்டு நிற்பவராவர்.*

*கருத்து :* **தவம் செய்யாதார் வரும் பிறப்பில் வறுமையுற்று வருந்தி நிற்பர்.**

32. ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ, அறம்மறந்து,
போவாம்நாம் என்னாப் புலைநெஞ்சே! – ஓவாது,
நின்(று)உஞற்றி வாழ்தி; எனினும்நின் வாழ்நாள்கள்
சென்றன; செய்வ(து) உரை.

(ஆக்கம் - செல்வம்; நசை - விருப்பம்; புலை - இழிவு; ஓவாது - இடைவிடாது; உஞற்றுதல் – முயற்சி செய்தல்.)

*மேன்மேலும் உயர்வடைவோம் என்று செல்வத்தை விரும்பி, அறத்தை மறந்து, நாம் இறந்துபடுவோம் என்பதையும் நினையாத அற்ப மனமே! இடைவிடாது, உழைத்து, முயற்சி செய்து வாழ்கின்றாய்! என்றாலும் உன்னுடைய வாழ்நாள்கள் கழிந்தனவேயாம். இனி நீ மறுமைக்காகச் செய்யப் போவதுதான் என்ன? சொல்!*

*கருத்து :* **ஆயுள் சென்றது சென்றதேயாம்; எஞ்சியதையேனும் அறவழியில் பயன்படுத்துக.**

33. வினைப்பயன் வந்தக்கால், வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை – நினைத்(து)அதனைத்
தொல்லைய(து) என்(று)உணர் வாரே, தடுமாற்றத்(து)
எல்லை இகந்(து)ஒருவு வார்.

(உயிர்த்தல் – பெருமூச்சு விடுதல்; பேதை – அறிவில்லாதவன்; இகத்தல் – கடத்தல்; ஒருவுதல் – தப்புதல்.)

*தீவினைப் பயனால் துன்பம் வந்தபோது அறிவில்லாதவன் பெருமூச்சு விட்டு மனம் அழிவான். அத்தீவினைப் பயனை ஆராய்ந்து இது பழவினையின் பயன் என்று உணர்பவரே பிறவித் துன்ப எல்லையிலிருந்து தப்பிச் செல்வர்.*

*கருத்து* : **தீவினைப் பயன் பழவினையால் வருவது என்றறிந்து அறவழி நிற்போர் பிறவித்துயர் நீங்குவர்.**

34. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்,
பெரும்பயனும் ஆற்றவே கொள்க; – கரும்(பு)ஊர்ந்த
சாறுபோல், சாலவும் பின்உதவி, மற்(று)அதன்
கோதுபோல் போகும் உடம்பு.

(பயத்தால் - பயனாக; ஆற்றவே - மிகுதியாக; ஊர்தல் - வடிதல்; சால - மிகுதி; கோது - சக்கை.)

*பெறற்கரிய உடம்பைப் பெற்றுள்ளதன் பயனாக அடைய வேண்டிய பயனை நிறைவாகப் பெற்றுக் கொள்க. அந்தப் பயன், கரும்பிலிருந்து கடைந்த சாறுபோலப் பிற்காலத்துக்கு உதவியா யிருக்கும். உடம்போ அக்கரும்பின் சக்கையைப் போல அழிந்து போகும்.*

*கருத்து* : **அறப்பயன் கருப்பஞ்சாறுபோல் பயன்படுவது; உடம்போ சக்கையைப் போல் அழியும் தன்மையது.**

35. கரும்(பு)ஆட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்,
துரும்(பு)எழுந்து வேம்கால் துயர்ஆண்(டு) உழவார்;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார், கூற்றம்
வருங்கால் பரிவ(து) இலர்.

(சிறுகாலை - நல்ல பக்குவம்; வேம்கால் - வேகும் பொழுது; உழவார் - வருத்தப்பட மாட்டார்; பரிதல் - வருந்துதல்.)

*கரும்பை ஆலையில் ஆட்டிக் காய்ச்சி வெல்லக்கட்டியை நல்ல பக்குவத்தில் எடுத்துக் கொண்டவர்கள், கரும்புச் சக்கை தீப்பிடித் துக் கொழுந்துவிட்டெரியும்போது துன்பப்பட மாட்டார்கள். அதுபோல, இளமையிலேயே வருந்தி உழைத்து உடம்பின் பயனைப் பெற்றுக்கொண்டவர்கள் கூற்றுவன் வரும்போது வருந்த மாட்டார்கள்.*

*கருத்து* : **சாறு பெற்றவர் கோது அழிவுக்கு வருந்தார்; அறப்பயன் பெற்றவர் உடல் அழிவுக்கு வருந்தார்.**

36. இன்றுகொல்? அன்றுகொல்? என்றுகொல்? என்னாது
பின்றையே நின்றது கூற்றமென்(று) எண்ணி,
ஒருவுமின் தீயவை; ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

(இன்று கொல் - இன்றோ; பின்றையே - பின்புறத்திலேயே; ஒருவுமின் - நீக்குங்கள்; ஒல்லும் வகை - பொருந்திய வகை; மருவுதல் - பொருந்துதல்.)

*இறப்பு இன்றோ, பின்பொரு நாளோ, என்றோ என்று கருதாமல் எமன் பின்புறத்திலேயே நின்று கொண்டிருக்கின்றான் என்று எண்ணித் தீயனவற்றை நீக்குங்கள். (அதனுடன்) பெருமை பொருந்தியோர் கூறும் அறங்களைப் பொருந்திய வகையில் செய்யுங்கள்.*

*கருத்து :* **இறப்பது உறுதி; தீயவை நீக்கிப் பொருந்திய வகையில் அறம் செய்க.**

37. மக்களால் ஆய பெரும்பயனும் ஆயுங்கால்,
எத்துணையும் ஆற்றப் பலவானால்; – தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா(து), உம்பர்க்
கிடந்(து)உண்ணப் பண்ணப் படும்.

(ஆற்ற - மிக; தொக்க - பொருந்திய; ஒப்புரவு - உதவி செய்தல்; உம்பர் - மறுமையுலகு.)

*மக்கட் பிறவியினாலாகிய பெரிய பயனை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அது எந்த அளவினதாயினும் மிகப் பலவாகும். ஆதலால், ஒருவன் தன்னோடு தொடர்புடைய உடம்பிற்கு மட்டுமே உதவி செய்து வாழாமல், மறுமையுலகில் நிலையாய்க் கிடந்து துய்ப்பதற்கு வேண்டியவைகளையும் இவ்வுலகிலேயே செய்து கொள்வானாக!*

*கருத்து :* **உடம்புக்கு மட்டும் செய்யாமல் உயிருக்கும் வேண்டுவன செய்யுங்கள்.**

38. உறக்கும் துணைய(து)ஓர் ஆலம்வித்(து), ஈண்டி
இறப்ப நிழல்பயந்(து) ஆஅங்(கு), – அறப்பயனும்,
தான்சிறி(து) ஆயினும், தக்கார்கைப் பட்டக்கால்,
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(உறக்கும் துணையது - மிகச் சிறிய அளவினது; வித்து - விதை; ஈண்டி - தழைத்து; இறப்ப - மிகுதியான; பயத்தல் - கொடுத்தல்.)

*மிகச் சிறிய ஆலம் விதை முளைத்து வளர்ந்து மிகப்பெரிய அளவில் நிழலைத் தருவதுபோல, அறச்செயலின் பயனும், அளவால் மிகச் சிறியதேயானாலும் அது தகைமை சான்றவர் கையில் சேர்ந்தால் வானத்தைச் சிறிதாக்கி அதனைப் போர்த்தும் பேரளவினதாய் மாறி விடும்.*

*கருத்து :* **தக்கவர்க்குச் செய்யும் உதவி சிறிதாயினும் பெரும் பயனைத் தரும்.**

39. வைகலும் வைகல் வரக்கண்டும், அஃ(து)உணரார்;
வைகலும் வைகலை வைகுமென்(று) இன்புறுவர்;

வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்(து)உணரா தார்.

(வைகலும் - நாள்தோறும்; வைகல் - நாள்; வரக்கண்டும் - புதிது புதிதாக வருவதைக் கண்டும்; வைகுமென்று - நிலைத்திருக்கும் என்று; தம் வாழ்நாள் மேல் வைகுதல் வைத்து - தம் ஆயுள் நாள் மேல் வரும் செலவு நாளாக வைத்து.)

*நாள்தோறும் வைகறையாகிய புதிய நாள் வருவதைக் கண்ட பின்பும், பழைய நாள் கழிந்ததனை உணராது, அது 'நிலையாக இருக்கிறது' என்று எண்ணி இன்பம் அடைவர். ஒவ்வொரு நாளும் புதுநாள் என்பதால் அந்நாள் கழிதற்கு முன்னர் அறம் செய்ய வேண்டும் என உணரவேண்டும்.*

***கருத்து* : நாள் கழிவு ஆயுள் கழிவு என்பதை உணராது இன்புற்று மயங்க வேண்டாம்.**

40. மான அருங்கலம் நீக்கி; இர(வு)என்னும்,
ஈன இளிவினால் வாழ்வேன்மன்; – ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும், உ.றுதிசேர்ந்(து), இவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின்.

(கலம் - கலன் - அணிகலன்; இரவு - பிச்சை; ஈனம் - இழிவு; இளிவு - அருவருப்பு; உறுதி - வலிமை; நீட்டித்தல் - நிலைத்தல்.)

*இழிவான தொழில்களினால் கிடைத்த உணவை ஊட்டி வளர்ப்பதால் இவ்வுடம்பு வலிமையடைந்து நிலைபெற்று நிற்கும் என்பது உண்மையானால், மானம் எனும் பெறுதற்கரிய அணிகலனை நீக்கிவிட்டுப் பிறரிடம் கெஞ்சி வாங்கி உண்ணலாகிய இழிதொழிலைச் செய்தும் உயிர் வாழ்வேன்.*

***கருத்து* : உண்பதால் மட்டும் உடல் நிலைப்பதில்லை. எனவே உடலுக்காக மானத்தைத் துறப்பது அறிவுடைமையாகாது.**

# 5

# தூய்தன்மை

41. மாக்கேழ் மடநல்லாய்! என்(று)அரற்றும் சான்றவர்
நோக்கார்கொல்? நொய்ய(து);ஓர் புக்கிலை – யாக்கைக்(கு)ஓர்
ஈச்சிற(கு) அன்ன(து)ஓர் தோல்அறினும் வேண்டுமே
காக்கை கடிவ(து)ஓர் கோல்.

(மா - மாந்தளிர்; கேழ் - நிறம்; மடம் - இளமை; நொய்யது - அற்பமானது; புக்கில் - உடம்பு; அறினும் - நீங்கினாலும்; கடிவது - ஓட்டுவது.)

'மாந்தளிர் நிறமுடைய இளம் பெண்ணே!' என்று பிதற்றும் 'பெரியவர்கள்!', அற்பமான உடம்பினை எண்ணிப் பாரார்களோ! உடம்பில் ஒரு ஈயின் சிறகு போன்ற சிறிய தோல் நீங்கினாலும் (அதனால் நேரும் புண்ணைக் கொத்தவரும்) காக்கையை ஓட்ட ஒரு குச்சி வேண்டியிருக்குமே!

*கருத்து* : **உடம்பு அருவருக்கத்தக்கது; அதைக் காமுற வேண்டா.**

42. தோற்போர்வை, மேலும் தொளைபலவாய்ப், பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித்(து), உடம்பானால்; — மீப்போர்வை
பொய்ம்மறையாக், காமம் புகலாது, மற்(று)அதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(மீ - மேல்; மாட்சி - பெருமை; புகலாது - சொல்லாது; பைம்மறி - பையின் உட்புறத்தை வெளிப்புறமாகத் திருப்புதல்.)

தோலாகிய போர்வையும், அதன் பல துளைகளும், அத்துளைகளாகிய குழிகளை மறைக்க மேலாடையும் கொண்டு மாட்சிமையுடன் தோன்றுவது இவ்வுடம்பு. மேற்போர்வை பொய்யாக மறைத்திருப்பதைக் கண்டு விரும்பிப் பாராட்டிக் கொண்டிராமல், பையின் உட்பக்கம் வெளிப்பக்கமாகும்படி திருப்பிப் பார்ப்பது போல உடம்பை ஆராய்ந்து உண்மை அறிதல் வேண்டும்.

*கருத்து* : **உடலின் தூய்தன்மையை உணர்ந்தவர் வெளித்தோற்றம் கண்டு மயங்கமாட்டார்.**

43. தக்கோலம் தின்று, தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலம் செய்ய ஒழியுமே? — எக்காலும்
உண்டி வினையுள் உறைக்கும் எனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(தக்கோலம் - தாம்பூலம் (மணப்பொருள்); கோலம் - புனைவு; ஒழியுமே? - நீங்கி விடுமோ?; உறைக்கும் - (தீய நாற்றத்தை) மிகுவிக்கும்; மயல் - செத்தை (அழுக்கு).)

எப்பொழுதும் உண்ணுகின்ற செயலால், உடல் உப்புக் கைக்கும் என்றுணர்ந்து பெரியோர்கள் வெறுத்துவிட்ட இந்த உடலின் அழுக்கு, மணப்பொருள்களை மென்று தின்று தலை நிறைய நறுமண மலர்களைச் சூடி, பொய்யான புனைவுகளைச் செய்துகொள்ளுவதால் நீங்குமோ? (நீங்காது).

*கருத்து* : **ஒப்பனையால் உடல் அழுக்கு நீங்காது.**

44. தெள்நீர்க் குவளை, பொருகயல், வேல்என்று,
கண்இல்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ?

உள்நீர் களைந்தக்கால், நுங்குசூன் றிட்(டு)அன்ன
கண்நீர்மை கண்(டு)ஒழுகு வேன்.

(தெள் நீர் - தெளிந்த நீர்; புன்மாக்கள் - அற்பர்கள்; கவற்றுதல் - கவலையடையச் செய்தல்; சூன்றல் - தோண்டுதல்; நீர்மை - தன்மை.)

*உள்ளேயுள்ள தசை நீரை எடுத்துவிட்டால், நுங்கு தோண்டிய பனங்காய் போன்று காட்சி தரும் கண்களின் இழிவான தன்மையை அறிந்து நடந்துவரும் நான், அக்கண்களைத் தெளிந்த நீரில் மலர்ந்துள்ள குவளைப் பூ என்றும், புரள்கின்ற கயல்மீன் என்றும், வேல் என்றும் சொல்லி அறிவுக்கண் இல்லாத அற்பர்கள் எனக்குக் கவலை உண்டாக்கும்படி விட்டுவிடுவேனோ? (விடமாட்டேன்).*

*கருத்து* : **வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்குவது கூடாது.**

45. முல்லை, முகைமுறுவல், முத்(து)என்(று), இவைபிதற்றும்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ?
எல்லாரும் காணப் புறங்காட்(டு) உதிர்ந்(து)உக்க
பல்என்பு கண்(டு)ஒழுகு வேன்.

(பிதற்றுதல் - அறிவின்றிக் குழறுதல்; புறங்காடு - சுடுகாடு; உக்க - சிதறிய; என்பு - எலும்பு.)

*எல்லாரும் காணும்படியாகச் சுடுகாட்டில் உதிர்ந்து சிதறிக் கிடக்கின்ற பல்லெலும்புகளின் தன்மையை அறிந்து நடந்துவரும் நான், அப்பற்களை முல்லை அரும்புகள் என்றும், முத்துகள் என்றும் உவமைகளைச் சொல்லிப் பிதற்றுகின்ற அற்பர்கள் எனக்குக் கவலை உண்டாக்கும்படி விட்டுவிடுவேனோ? (விடமாட்டேன்.)*

*கருத்து* : **அழியும் அழகை நிலையானது என்று பிதற்றாதே.**

46. குடரும், கொழுவும், குருதியும், என்பும்,
தொடரும் நரம்பொடு தோலும், - இடைஇடையே
வைத்த தடியும், வழும்பும்ஆம்; மற்(று)இவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்?

(குடர் - குடல்; கொழுவு - கொழுப்பு; தடி - தசை; வழும்பு - நிணம்; ஈர்ங்கோதை - குளிர்ச்சியான மாலை.)

*குடல், கொழுப்பு, குருதி, எலும்பு, இவற்றைத் தொகுத்துப் பிணிக்கும் நரம்பு, தோல், இவற்றின் இடையிடையே வைத்த தசை, நிணம் ஆகிய இவற்றின் தொகுப்பே இந்த உடம்பு. குளிர்ந்த மாலையை அணிந்துள்ள பெண் இவற்றுள் எத்தன்மையை உடையவள்? (கூறுவாயாக.)*

*கருத்து* : **தூய்மையற்ற உறுப்புகளின் சேர்க்கையே உடம்பு. இதைக் காமுறுதல் அறியாமை.**

47. ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்
கோதிக், குழம்(பு)அலைக்கும் கும்பத்தைப், – பேதை
பெருந்தோளி! பெய்வளாய்! என்னும்,மீப் போர்த்த
கருந்தோலால் கண்விளக்கப் பட்டு.

(கோதி - சிதறி; கும்பம் - குடம் (உடல்); தோளி - தோள்களை உடையவளே!; வளாய் - வளையல் அணிந்தவளே!)

*வியர்வை கசிந்து, உவர்க்கும் அருவருக்கத்தக்க தன்மையினை யுடைய ஒன்பது துளைகளின் வழியாக, உள்ளிருக்கும் குழம்பைச் சிதறி வெளிப்படுத்துகின்ற கும்பமாகிய உடம்பை, அதன்மேலே போர்த்தப்பட்டுள்ள தோலின் அழகினால் கவரப்பட்டு அறி வில்லாதவன், "பருத்துத் திரண்ட தோள்களை உடையவளே, வளையல் அணிந்தவளே" என்று புகழ்ந்து சொல்வான்.*

*கருத்து* : **அகத்தைக் காணும் அகக்கண், தோலைக் கண்டு காமுறாது.**

48. பண்டம் அறியார்; படுசாந்தும் கோதையும்
கண்டுபா ராட்டுவார்; கண்டிலர்கொல்? – மண்டிப்
பெடைச்சேவல், வன்கழுகு, பேர்த்திட்டுக் குத்தும்
முடைச்சாகா(டு) அச்சிற்(று) உழி.

(பண்டம் - உடம்பு; சாந்து - சந்தனம்; மண்டி - நெருங்கி; கோதை - மலர்மாலை; வன் - வலிமை; முடை - முடை (தீய) நாற்றம்; சாகாடு - வண்டி (உடல்); இறுதல் - முறிதல்.)

*உடம்பின் உண்மைத் தன்மையை உணராமல், பூசியிருக்கின்ற சந்தனத்தையும் மலர்மாலையையும் கண்டு, அவ்வுடலைப் பாராட்டுகின்றவர்கள், முடை நாற்றமுடைய உடம்பாகிய வண்டி, உயிராகிய அச்சு முறிந்து போனபோது, அவ்வுடம்பைப் பெடையும் சேவலுமாகிய வலிய கழுகுகள் நெருங்கிப் புரட்டிப் போட்டுக் கொத்தித் தின்னுவதைக் காணமாட்டார்களோ?*

*கருத்து* : **புனையும் அழகு கண்டு உடலின் பொய்ம்மையை மறவாதே.**

49. கழிந்தார் இடுதலை, கண்டார்நெஞ்(சு) உட்கக்,
குழிந்(து)ஆழ்ந்த கண்ணவாய்த் தோன்றி, – ஒழிந்தாரைப்,
போற்றி நெறிநின்மின்! இற்(று)இதன் பண்(பு)என்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(கழிந்தார் - இறந்தவர்; உட்க - அஞ்ச; ஒழிந்தாரை - இறவாதிருப்பவரை; இற்று - இத்தன்மையது; சாற்றும் - சொல்லும்.)

*இறந்தவர்களுடைய மண்டையோடுகள், பார்த்தவர் மனம் அஞ்சும்படி, குழிவும் ஆழமும் கொண்ட துளைகளை உடையன வாகத் தோன்றி, இறவாதிருக்கும் மற்றவரைப் பார்த்து மிகவும் சிரித்து, "இவ்வுடம்பின் தன்மை இதுதான்; எனவே உண்மையை உணர்ந்து போற்றி நல்வழியில் நடந்து கொள்ளுங்கள்" என்று சொல்லுகின்றன போலும்!*

*கருத்து :* **மண்டையோடுகளைக் கண்டாவது உடல் நிலையாமையை மனத்தில் கொள்க.**

50. உயிர்போயார் வெண்தலை உட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்கும் செம்மாப் பவரைச்; – செயிர்தீர்ந்தார்
கண்(டு)இற்(று) இதன்வண்ணம் என்பதனால், தம்மைஓர்
பண்டத்துள் வைப்ப(து) இலர்.

(வெண்தலை - மண்டை ஓடு; செயிர் - குற்றம்; செம்மாப்பு – இறுமாப்பு; இற்று - இத்தகையது; வண்ணம் - தன்மை; பண்டம் - பொருள்.)

*செத்தவரின் வெண்மையான மண்டை ஓடு, கண்டார் அஞ்சும் படி சிரித்து, 'இவ்வுடம்பு பெற்றோம்' என்று இறுமாந்திருப்ப வரின் மயக்க உணர்வை நீங்கச் செய்யும். அம்மயக்கம் நீங்கியவர், மண்டை ஓட்டைக் கண்டதும் உடம்பின் தன்மை இத்தகையது என்று அறிவதனால் தமது உடம்பை ஒரு பொருளாக எண்ணி மதிக்கமாட்டார்கள்.*

*கருத்து :* **இறந்து போனவர்களின் மண்டை ஓட்டைக் காண்பவர் உடம்பை ஒரு பொருளாக மதியார்.**

# 6

# துறவு

51. விளக்குப் புகஇருள் மாய்ந்தாங்(கு), ஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்; – விளக்குநெய்
தேய்விடத்துச் சென்(று)இருள் பாய்ந்தாங்கு, நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது.

(மாய்தல் - மறைதல்; ஆங்கு - போல; தேய்விடத்து - வற்றியபோது; தீர்விடத்து - நீங்கும்போது.)

*ஒளி நுழைந்ததும் இருள் மறைவதைப்போல ஒருவன் செய்யும் தவத்தின் முன்னே தீவினைகள் நிற்க முடியாமல் மறையும்; எண்ணெய் வற்றி விளக்கு அணையும்போது இருள் பரவுவது போல நல்வினைகள் நீங்கும்போது தீவினைகள் சூழ்ந்து நிற்கும்.*

*கருத்து :* **தவத்தின் முன் பாவம் தொலையும்; தவம் இல்லையேல் பாவம் சூழும்.**

52. நிலையாமை, நோய்,மூப்புச் சாக்கா(டு)என்(று) எண்ணித்
தலையாயார் தம்கருமம் செய்வார்; — தொலை(வு)இல்லாச்
சத்தமும் சோதிடமும் என்றாங்(கு) இவைபிதற்றும்
பித்தரின் பேதையார் இல்.

(மூப்பு - முதுமை; தலையாயார் - மேலானவர்கள்; கருமம் - கடமை; சத்தம் - பிறப்பிய நூல்; பிதற்றுதல் - உளறுதல்.)

*நிலையாமை, நோய், முதுமை, சாவு ஆகிய இவற்றை எண்ணி மேலானவர்கள் தம் கடமையைச் செய்வர். அவ்வாறின்றி, முடிவில்லாத பிறப்பிய நூல் (ஜாதகம்), சோதிட நூல் என்னும் இவை போன்றவற்றை உளறுகின்ற பித்தரைக் காட்டிலும் அறிவில்லாதவர் இல்லை.*

*கருத்து :* **அறிவுடையார் பயனற்றவற்றில் மனம் செலுத்திப் பைத்தியமாக மாட்டார்.**

53. இல்லம், இளமை, எழில்,வனப்பு, மீக்கூற்றம்,
செல்வம், வலிஎன்(று) இவைஎல்லாம், — மெல்ல
நிலையாமை கண்டு, நெடியார் துறப்பர்;
தலையாயார் தாம்உய்யக் கொண்டு.

(மீக்கூற்றம் - புகழ்; வனப்பு - அழகு; வலி - வலிமை; நெடியார் - தொலை நோக்கு உள்ளவர்.)

*இல்லற வாழ்க்கை, இளமைப் பருவம், தோற்றப் பொலிவு, அழகு, புகழ், செல்வம், வலிமை என்ற இவையெல்லாம் மெல்ல மெல்ல நிலையாது அழிந்துபோவதை அறிந்து தொலைநோக்கு உள்ளவர் துறவு மேற்கொள்வர். அவர்கள் தம்மைத் தாமே உய்யச் செய்துகொண்டதால் தலைமையானவர் ஆயினர்.*

*கருத்து :* **தன்னலத்தைத் துறந்து தம்மைத் தாம் உய்யச் செய்பவர் தலைமையானவர்.**

54. துன்பம் பலநாள் உழந்தும், ஒருநாளை
இன்பமே காமுறுவர் ஏழையார்; — இன்பம்
இடைதெரிந்(து) இன்னாமை நோக்கி, மனையா(று)
அடை(வு)ஒழிந்தார் ஆன்(று)அமைந் தார்.

(உழல்தல் - வருந்துதல்; காமுறுதல் - விரும்புதல்; ஏழையார் - அறிவில்லார்; அடைவு - அடைந்து கிடப்பது; ஒழிதல் - நீங்குதல்; ஆன்று - (அறிவில்) நிறைந்து; அமைந்தார் - அடங்கி ஒழுகும் பெரியோர்.)

*அறிவிலார் துன்பத்தில் பலநாள் வருந்தினாலும், இடையில் கிடைக்கும் ஒரு நாளைய அற்ப இன்பத்தையே விரும்புவர். அறிவால் சிறந்து அடங்கி ஒழுகும் பெரியோர் இன்பத்தின் நிலையற்ற தன்மையையும் அதனால் நேரும் துன்பத்தையும் உணர்ந்து இல்லறத்திலேயே அடைந்து கிடப்பதைத் தவிர்ப்பர்.*

*கருத்து* : **துன்பம் நிறைந்த இல்லறத்தில் தோன்றும் சிறு இன்பத்தைப் பெரிதாகக் கருதாதே.**

55. கொன்னே கழிந்தன்(று) இளமையும், இன்னே
பிணியொடு மூப்பும் வருமால்; – துணி(வு)ஒன்றி,
என்னொடு சூழா(து), எழுநெஞ்சே! போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(கொன்னே - வீணே; இன்னே - இப்பொழுதே; பிணி - நோய்; சூழ்தல் - கலந்து ஆராய்தல்.)

*இளமையோ வீணாகக் கழிந்துவிட்டது; நோயும் முதுமையும் இப்பொழுதே வந்து சேர்ந்துவிடும். என்னுடன் கலந்து எண்ணிப் பாராது துணிவுகொண்டு புலன்களின்மேல் செல்லுகின்ற மனமே! இனியேனும், நமக்கு நன்னெறி கிடைக்க என்னுடன் சேர்ந்து வருவாயா?*

*கருத்து* : **புலன்வழிச் செல்லாது நன்னெறியில் செல்க.**

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே(று) இல்எனினும்,
பூண்டான் கழித்தற்(கு) அருமையால், – பூண்ட
மிடிஎன்னும் காரணத்தின் மேன்முறைக் கண்ணே,
'கடி'என்றார் கற்(று)அறிந் தார்.

(மாண்ட - மாட்சிமை பொருந்திய; பூண்டான் - இல்லறம் மேற்கொண்டவன்; கழித்தல் - நீக்குதல்; மிடி - துன்பம்; கடி - நீக்கு.)

*மாட்சிமை பொருந்திய குணங்களும் இல்லை; குழந்தைச் செல்வமும் இல்லை; என்றாலும் இல்லறம் மேற்கொண்டவன் மனைவியை விட்டு நீங்குவது அருமை. எனவே, திருமணம் என்பது ஒருவன் தானே மேற்கொண்ட துன்பம் ஆகும். அதனால் தான் போலும் உயர்ந்த நோக்கோடு திருமணத்தை, 'கடி' (= திருமணம்; நீக்கு) என்று கற்றறிந்தார் கூறினார்கள்.*

*கருத்து* : **கடி ( திருமணம்) துன்பம் தருதலால் கடிய ( நீக்க) வேண்டிய ஒன்று.**

57. ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்உடையத்,
தாக்(க)அருந் துன்பங்கள் தாம்தலை வந்தக்கால்,

நீக்கி நிறூஉம் உரவோரே, நல்ஒழுக்கம்
காக்கும் திருவத் தவர்.

(உள்உடைதல் - கெடுதல்; நிறூஉம் - நிலை நிறுத்துகின்ற; உரவோர் - மனவலிமை உடையவர்; திருவத்தவர் - சிறப்பினையுடையவர்.)

*ஊக்கமுடன் தாம் மேற்கொண்ட நோன்புகள் கெடும்படியாகத் தாங்குவதற்கு அரிய துன்பங்கள் தம்மிடம் வந்து சேர்ந்தாலும், அவற்றை நீக்கி, அந்நோன்புகளை நிலைநிறுத்துகின்ற மனவலிமை உடையவர்களே துறவறம் காக்கின்ற சிறப்புடையவர் ஆவர்.*

*கருத்து* : **நோன்பை அழிக்கும் துன்பத்தை வெல்லுதலே துறவறம்.**

58. தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப(து) அன்றி,மற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால், – உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்! என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

(அன்றி - அல்லாமல்; உம்மை - மறுமை; நிரயம் - நரகம்; பரிதல் - இரக்கப்படுதல்.)

*தம்மைப் பழித்துப் பேசியதைத் தாம் பொறுத்துக் கொள்வது மட்டும் அல்லாமல், "இவர்கள் நம்மை இகழ்ந்ததனால் ஆகிய தீவினையின் விளைவால், மறுமையில் எரி நிரம்பிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவரே" என்று அவர்க்காக இரக்கப்படுவதும் (துறவறம் பூண்ட) மேலோர் கடமை ஆகும்.*

*கருத்து* : **தம்மைத் துன்புறுத்தியவரும் துன்புறக் கூடாது என்ற தூய உள்ளம் கொண்டவரே துறவியர்.**

59. மெய்வாய்கண் மூக்குச் செவிஎனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக், – கைவாய்க்
கலங்காமல், காத்(து)உய்க்கும் ஆற்றல் உடையான்,
விலங்காது வீடு பெறும்.

(மெய் - உடம்பு; ஐவாய - ஐந்து வழிகளில்; கை - ஒழுக்கம்; கைவாய் - ஒழுக்க நெறியில்; விலங்காது - தவறாமல்.)

*மெய், வாய், கண், மூக்கு, செவி என்று பெயர் பெற்றுள்ள ஐந்து பொறிகள் வாயிலாகத் தோன்றுகின்ற பற்றாலும் ஆசையாலும் தனது மனம் கலங்காதபடி தடுத்து, நன்னெறியிற் செலுத்தும் ஆற்றல் உடையார் தவறாமல் வீடுபேறு அடைவர்.*

*கருத்து* : **ஐம்புலன்களையும் அடக்கியாள்பவர் வீடுபேறு அடைவர்.**

60. துன்பமே மீதூரக் கண்டும், துற(வு)உள்ளார்,
இன்பமே காமுறுவர் ஏழையார்; – இன்பம்

இசைதொறும், மற்(று)அதன் இன்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதாம், மேல்.

(மீதூர்தல் - மேலும் மேலும் வருதல்; உள்ளார் - நினையார்; இசைதல் - வந்து பொருந்துதல்; பசைதல் - உளங்கொள்ளுதல்; பரிதல் - பற்று வைத்தல்; மேல் - மேலோர்.)

*அறிவிலார், துன்பமே மேலும் மேலும் வருவதைக்கண்டும் அத் துன்பத்திலிருந்து விடுதலை பெறத் துறவறத்தை மேற்கொள்ள எண்ணியும் பாராமல், சிற்றின்பத்தையே விரும்பி நிற்பர். மேன் மக்களோ, இன்பமே நேர்ந்த காலத்தும் அதனால் நேரும் துன்பத்தை எண்ணிப் பார்த்து இன்பத்தில் பற்றுக் கொள்ளுதலை உளம் கொள்ளமாட்டார்கள்.*

*கருத்து* : **இன்பமே துன்பத்தின் பிறப்பிடம்; ஆதலின் இன்பத்தில் பற்றுக் கொள்ளாதே!**

# 7

# சினமின்மை

61. மதித்(து)இறப் பாரும் இறக்க; மதியா
மிதித்(து)இறப் பாரும் இறக்க; – மிதித்(து)ஏறி,
ஈயும் தலைமேல் இருத்தலால், அஃதுஅறிவார்
காயும் கதம்இன்மை நன்று.

(இறப்பாரும் - நடப்பவரும்; இறக்க - நடக்கட்டும்; காயும் - எரிந்து விழும்; கதம் - சினம்; இன்மை - இல்லாதிருத்தல்.)

*தம்மை நன்கு மதித்து நடப்பவரும் நடக்கட்டும்; சிறிதும் மதியாமல் கீழ்ப்படுத்திச் செல்வாரும் செல்லட்டும். ஈகூட கால்களால் மிதித்து ஏறி நம் தலையின் மேல் அமர்கிறதே! இவ் வுண்மையை நன்கு அறிந்தவர்கள் (அந்த ஈயின் மேற்சினங்கொள் ளாததுபோல்) பிறர் மீது எரிந்து விழும் சினத்தைக் கொள்ளாது இருத்தல் சிறப்பு.*

*கருத்து* : **'தலைமேல் ஏறினும்' அற்பரை ஒரு பொருட்டாக மதித்துச் சினவாதே!**

62. தண்டாச் சிறப்பின்தம் இன்உயிரைத் தாங்காது
கண்டுழி எல்லாம் துறப்பவோ? – மண்டி
அடிபெயரா(து), ஆற்ற, இளிவந்த போழ்தின்
முடிகிற்கும் உள்ளத் தவர்.

(தண்டா - அழியாத; கண்டுழி - (சினம்) ஏற்பட்ட பொழுதிலெல்லாம்; மண்டி - நெருக்கமாக; ஆற்ற - மிகவும்; இளி - இழிவு; முடிகிற்கும் - தாம் எண்ணியதை முடிக்கும்.)

*நெருக்கமாக, அடிபெயராது, மிகுதியான அளவில் ஏளனம் சேர்ந்த காலத்திலும் தாம் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்கின்ற உறுதியான உள்ளம் உடையவர்கள், சிறிதே இடர் நேர்ந்தபோது அதனைப் பொறுத்துத் தாங்கிக் கொள்ளாமல், அழியாச் சிறப்பினை உடைய தமது இனிய உயிரைப் போக்கிக் கொள்வார்களோ? (மாட்டார்கள்.)*

*கருத்து* : **சினம் உயிரை அழிக்கும்; ஆதலால் அதனைத் தவிர்ப்பாயாக.**

63. காவா(து) ஒருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால், – ஓவாதே
ஆய்ந்(து)அமைந்த கேள்வி அறிவுடையார், எஞ்ஞான்றும்
காய்ந்(து)அமைந்த சொல்லார் கறுத்து.

(ஓவாது - இடைவிடாது; காய்ந்து - சினந்து; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; கறுத்து - சினந்து.)

*ஒருவன் நாவைக் காக்காமல் தன் வாயைத் திறந்து வந்ததை யெல்லாம் சொல்லுகின்ற தீய சொற்கள், சொன்ன அவனையே இடைவிடாது சுடும்; ஆதலால், ஆராய்ந்து அறிந்து அடங்கி நடக்கிற சிறந்த கேள்வியறிவு உடையவர்கள் எக்காலத்திலும் சினத்தோடு கூடிய கடுமையான சொற்களைக் கூற மாட்டார்கள்.*

*கருத்து* : **சினம், சினந்தவனையே சுடும்.**

64. நேர்த்து, நிகர்அல்லார், நீர்அல்ல சொல்லியக்கால்,
வேர்த்து, வெகுளார் விழுமியோர், – ஓர்த்(து)அதனை
உள்ளத்தால் உள்ளி, உரைத்(து)உராய், ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாம் கீழ்.

(நேர்த்து - நேரில் நின்று; நிகர் - ஒப்பு; நீர் அல்ல - தகுதியில்லாத; வேர்த்து - மனம் புழுங்கி; ஓர்த்து - ஆராய்ந்து; உள்ளி - நினைத்து; உராய் - திரிந்து; கீழ் - கீழோர்.)

*தமக்கு ஒப்பில்லாத கீழோர் நேரில் நின்று தகுதியில்லாத சொற்களைச் சொல்லும்போதும் பெரியோர் அதற்காக உணர்ச்சி வயப்பட்டுச் சினம் கொள்ள மாட்டார். கீழ்மகனோ அச்சொற் களையே மனத்தில் நினைத்து நினைத்து, தானே சொல்லிச் சொல்லித் திரிந்து, பிறகு ஊரார் அறியுமாறு துள்ளிக் குதித்துத் தூணிலும் முட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வான்.*

*கருத்து :* **பிறர் வைவதை எண்ணிச் சினந்து துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்யாதே!**

65. இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்; – எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரன்உடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(கிளைத்தல் - பெருகி வளர்தல்; ஒறுக்கும் - தண்டிக்கும்; மதுகை - வலிமை; உரன் - உறுதி.)

*இளமைப் பருவம் உடையவனுடைய புலன் அடக்கமே உயர்ந்த அடக்கமாகும். பெருகி வளரும்படியான பொருள் வருவாய் இல்லாதவனது ஈகையே பயனுள்ள ஈகையாகும். எல்லாவற்றையும் தண்டிக்கும் உடல் வலிமையும் உள்ள உறுதியும் உடையவன் பொறுத்துக் கொள்ளும் பொறுமையே சிறந்த பொறுமையாகும்.*

*கருத்து :* **இளையான் அடக்கமும், இல்லாதான் ஈகையும், வலிமை யுடையான் பொறுமையும் பெருமை உடையன.**

66. கல்எறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாரும் காணப் பொறுத்(து)உய்ப்பர்; – ஒல்லை
இடுநீற்றால், பைஅவிந்த நாகம்போல், தத்தம்
குடிமையால் பாதிக்கப் பட்டு.

(அன்ன - போன்ற; ஒல்லை - விரைந்து; இடு நீறு - மந்திரித்துப் போட்ட திருநீறு; பை - படம்; அவிந்த - ஒடுங்கிய.)

*மந்திரித்துப் போட்ட திருநீற்றினால் உடனே படம் ஒடுங்கிய நாகத்தைப்போல, நல்லோர் தங்கள் குடிமையின் தகைமைப் பண்பால் தடுக்கப்பட்டு, கயவர்களுடைய வாயிலிருந்து தோன்று கின்ற கல்லை வீசுவதுபோன்ற கடுஞ்சொற்களைப் பலர் முன்னிலை யிலும் பொறுத்துக் கொண்டு நல்வழியிலேயே நடப்பர்.*

*கருத்து :* **பெரியோர் தம் குலப் பெருமைக்குக் கட்டுப்பட்டுப் பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் பொறுப்பர்.**

67. மாற்றாராய் நின்று,தம் மா(று)ஏற்பார்க்(கு) ஏலாமை
ஆற்றாமை என்னார் அறிவுடையார்; – ஆற்றாமை
நேர்த்(து)இன்னா மற்றவர் செய்தக்கால், தாம்அவரைப்
பேர்த்(து)இன்னா செய்யாமை நன்று.

(மாற்றார் - பகைவர்; ஏலாமை - பொருந்தாமை; ஆற்றாமை - வலிமை யில்லாமை; நேர்த்து - எதிர்த்து; பேர்த்து - திரும்ப.)

*பகைவராய் நின்று தமக்கு மாறாய்ச் செயல்படுபவர்களின் எதிர்ப்பை ஏற்காமல் பொறுமை காட்டுதலை வலிமையின்மை என்று அறிவுடையோர் சொல்லார். ஆதலால், அப்பகைவர்கள் பொறுமையில்லாமல் மேலும் தமக்குத் தீங்கு செய்தாலும் திருப்பித் தாமும் அவர்களுக்கு அக்கொடுமைகளைச் செய்யா திருத்தல் நல்லது.*

*கருத்து :* ***தீமை செய்வோர்க்குத் திருப்பித் தீமை செய்யாதிருத்தல் சிறந்த வலிமையாம்.***

68. நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும்; – அடும்காலை
நீர்கொண்ட வெப்பம்போல், தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

**(நீசர் - கீழோர்; பரக்கும் - வளரும்; அடுதல் - சுடுதல்; தணிதல் - குறைதல்; சீர் - சிறப்பு.)**

*நீண்ட காலம் சென்றாலும் கீழோரின் சினம் தணிதல் இல்லாமல் மேன்மேலும் வளரும். சிறப்புமிக்க சான்றோரிடம் பிறர் துன்புறுத்தலால் ஏற்படும் சினம், காய்ச்சும்போது நீரில் தோன்றும் வெப்பம், காய்ச்சுவதை நிறுத்தியவுடன், தானே ஆறிவிடுவதுபோலத் தானாகவே ஆறிவிடும்.*

*கருத்து :* **சான்றோர் சினம் நிலைத்திராது; தானே ஆறும்.**

69. உபகாரம் செய்ததனை ஓராதே, தம்கண்
அபகாரம் ஆற்றச் செயினும், – உபகாரம்
தாம்செய்வ(து) அல்லால், தவற்றினால் தீங்(கு)ஊக்கல்,
வான்தோய் குடிப்பிறந்தார்க்(கு) இல்.

**(உபகாரம் - உதவி; ஓராதே - நினையாமல்; அபகாரம் - தீமை; ஆற்ற - மிகுதியாக; ஊக்கல் - முனைதல்.)**

*செய்த உதவியை நினைத்துப் பார்க்காமல் அவ்வுதவியைப் பெற்றவர் தமக்குத் தீமைகளை மிகுதியாகச் செய்தாலும் அவர்க்கு மீண்டும் உதவி செய்வார்களே அல்லாமல் அவர் செய்த குற்றம் காரணமாகத் தீமை செய்ய முனைதல் உயர்ந்த குடியில் பிறந் தோரிடம் இல்லை.*

*கருத்து :* **உதவியை மறந்து தீமையே செய்பவர்க்கும் உயர்குடிப் பிறந்தோர் நன்மையே செய்வர்.**

70. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்(கு)இல்லை; – நீர்த்(து)அன்றிக்

கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால், சொல்பவோ?
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு.

(கூர்த்து - சினம் கொண்டு; பேர்த்து - திரும்ப; ஈங்கு - இவ்வுலகில்; நீர்த்து அன்றி - தன்மை இல்லாமல்; மீட்டு - மறுபடியும்.)

*சினம் கொண்டு நாய் தம்மைக் கௌவிக் கடிப்பதைக்கண்டு, அதற்காகத் தம் வாயினால் நாயைத் திருப்பிக் கடிப்பவர்கள் இவ்வுலகில் இல்லை. அதுபோல், கீழ்மக்கள் தகைமையின்றி இழிந்த சொற்களைச் சொன்னாலும் அதற்காக உயர்ந்தோர் தம் வாயால் அந்த இழிசொற்களைத் திருப்பிச் சொல்லமாட்டார்கள்.*

*கருத்து* : **அற்பர்கள் சொல்லும் இழிசொற்களை அறிவுடையார் திருப்பிச் சொல்லார்.**

# 8

# பொறையுடைமை

71. கோதை அருவிக் குளிர்வரை நல்நாட!
பேதையோ(டு) யாதும் உரையற்க; – பேதை
உரைப்பின் சிதைந்(து)உரைக்கும்; ஒல்லும் வகையால்
வழுக்கிக் கழிதலே நன்று.

(கோதை - மாலை; வரை - மலை; பேதை - அறிவில்லாதவன்; சிதைந்து - முறை தவறி; வழுக்கி - தப்பி; கழிதல் - நீங்குதல்.)

*மாலைபோல் விழுகின்ற அருவிகளால் குளிர்ச்சி பெற்றுள்ள மலைகளைக் கொண்ட நல்ல நாட்டை உடையவனே! அறிவில்லா தவனோடு எதையும் பேசாது இருப்பாயாக. பேசினால், அந்த அறிவில்லாதவன் முறை தவறிப் பேசுவான். எனவே இயன்றவரை அவனிடமிருந்து நழுவிச் சென்றுவிடுதலே நல்லது.*

*கருத்து* : **பேதையிடம் பேசாது நழுவிவிடுவதே நல்லது.**

72. நேர்அல்லார் நீர்அல்ல சொல்லியக்கால் மற்(று)அது
தாரித்(து) இருத்தல் தகுதி;மற்(று) – ஒரும்;
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(நேர் - ஒப்பு; நீர் அல்ல - தகுதியற்ற; தாரித்து - பொறுத்து; ஞாலம் - உலகம்; சமழ்மை - இழிவு.)

*தமக்கு ஒப்பு ஆகாத கீழ்மக்கள் தகுதியற்ற சொற்களைச் சொல்லும்போது பொறுத்துக் கொள்ளுதலே தக்கது. இதை நீங்களே எண்ணிப்பாருங்கள். அங்ஙனம் பொறுத்துக் கொள்ளாது*

*மறுத்துப் பேசினால் அதனைக் கடல்சூழ்ந்த இவ்வுலகம் புகழுடைய செயலாகக் கொள்ளாமல் தகாத செயலாக எண்ணி விடும்.*

*கருத்து* : **தகுதியற்ற சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல் புகழாம்.**

73. காதலால் சொல்லும் கடுஞ்சொல், உவந்(து)உரைக்கும்
ஏதிலார் இன்சொலின் தீ(து)ஆமோ? – போ(து)எலாம்
மாதர்வண்(டு) ஆர்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!
ஆவ(து) அறிவார்ப் பெறின்.

**(ஏதிலார் - பகைவர்; ஆமோ - ஆகுமோ?; போது - மலர்; மாதர் - அழகிய; ஆர்க்கும் - ஒலிக்கும்; சேர்ப்பன் - கடற்கரை நிலத் தலைவன்.)**

*மலர்கின்ற பூக்களிலெல்லாம் ஆசைகொண்ட அழகான வண்டுகள் ஆரவாரிக்கும் வளம்மிக்க குளிர்ச்சி பொருந்திய நெய்தல் நிலத்தலைவனே! நமக்கு நன்மை தருவதை ஆராய்ந்து அறிந்து கொள்பவரை நட்பாகக் பெற்றால், அவர்கள் அறிவுடைமையால், நம்மைத் திருத்த உரைக்கும் கடுஞ்சொல், பகைவர் நம்மைக் கெடுப்பதற்காக மகிழ்ந்து கூறுகின்ற இனிய சொல்லைக் காட்டிலும் தியது ஆகுமோ? (ஆகாது).*

*கருத்து* : **பகைவர்களின் இன்சொல்லைக் காட்டிலும் அன்பர்களின் கடுஞ்சொல் நல்லது.**

74. அறிவ(து) அறிந்(து)அடங்கி, அஞ்சுவ(து), அஞ்சி
உறுவ(து) உல(கு)உவப்பச் செய்து, – பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார், எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

**(உறுவது - செய்யும் செயல்கள்; உவப்ப - மகிழ; எஞ்ஞான்றும் - எப்போதும்; அரிது - இல்லை.)**

*அறிய வேண்டியவற்றை அறிந்து, அடக்கம் உடையவராகி, அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சி, செய்யும் செயல்களை உலகம் மகிழும்படி செய்து, கிடைப்பது கொண்டு இன்பமடைந்து வாழுகின்ற தன்மையுடையோர் துன்பமடைந்து வாழ்தல், எந்தக் காலத்திலும் இல்லை.*

*கருத்து* : **அறிவு, அடக்கம், தீவினையச்சம், ஒப்புரவு, போதுமென்ற மனம் ஆகியன உடையோர் துன்புறுதல் இல்லை.**

75. வேற்றுமை இன்றிக் கலந்(து)இருவர் நட்டக்கால்,
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றும் துணையும் பொறுக்க; பொறான்ஆயின்,
தூற்றாதே தூர விடல்.

(நட்டக்கால் - நட்பாயிருந்தால்; தேற்றா - தெளியாத; ஆற்றும் துணையும் - பொறுக்கக்கூடிய மட்டும்; தூற்றாதே - பழிக்காதே.)

*வேறுபாடு சிறிதும் இல்லாமல் ஒன்றுபட்டு இருவர் நண்பரான பிறகு ஒருவனிடம் கூடா ஒழுக்கம் உண்டானால் அதனை மற்றொருவன் தன்னால் முடியும் அளவு பொறுத்துக் கொள்வானாக; பொறுக்க முடியாத நிலை ஏற்படும்போது பலரும் அறியப் பழிதூற்றாமல், அவனை விட்டு விலகித் தொலைவிற் செல்வானாக!*

*கருத்து* : **நண்பரிடம் கூடாவொழுக்கம் தோன்றினால் முடிந்த அளவு பொறுக்க; பொறுக்க முடியாவிட்டால் தூற்றாதே; தூர விலகு.**

76. இன்னா செயினும், இனிய ஒழி(க)என்று
தன்னையே தான்நோவின் அல்லது, – துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது.

(ஒழிக - நீங்குவதாகுக; நோதல் - வருந்துதல்; துன்னி - பொருந்தி; விள்ளல் - பிரிதல்; அரிது - அருமையுடையது.)

*காடுகள் சூழ்ந்த நாட்டையுடையவனே! நண்பர் எனக் கொண்ட ஒருவர் துன்பமே செய்தாலும் இன்பமே செய்ததாய் எண்ணி, அவ்வாறு நேர்ந்தமைக்குத் தன்னைத்தானே நொந்து கொள்வது அல்லாது தம்மோடு பொருந்தி ஒன்றுபட்டு நட்புக் கொண்டவரைக் கைவிடுதல் கூடாது. ஏனெனில், பிரிந்து வாழ்தல் விலங்குகளுக்கும் அரிய செயலாகும்.*

*கருத்து* : **நெருங்கிப் பழகியவர் துன்பமே செயினும் இன்பமாய்க் கொள்க.**

77. பெரியார் பெருநட்புக் கோடல்,தாம் செய்த
அரிய பொறுப்பஎன்(று) அன்றோ? – அரியரோ
ஒல்லென் அருவி உயர்வரை நல்நாட!
நல்லசெய் வார்க்குத் தமர்.

(கோடல் - கொள்ளுதல்; பொறுப்ப - பொறுத்துக் கொள்வர்; அரியரோ? - அரிதோ?; வரைநாடன் - மலைநாட்டுத் தலைவன்; வரை - மலை; தமர் - சுற்றம், உறவினர்.)

*'ஒல்' என்று ஒலிக்கும் அருவிகளையுடைய உயர்ந்த மலைநாட்டவனே! பெரியார்களிடம் பெருந்தன்மையான நட்புறவு கொள்வது, பொறுத்தற்கு அரியன செய்தாலும் அவர்கள் பொறுப்பர் என்னும் நம்பிக்கையினால் அல்லவா? நல்லன செய்வோர்க்குச் சுற்றம் கிடைப்பது அரிதோ? (இல்லை என்றவாறு.)*

*கருத்து* : **அல்லன பொறுத்து ஏற்றுக் கொள்வது பெரியோர் பண்பு.**

78. வற்றி,மற்(று) ஆற்றப் பசிப்பினும், பண்பிலார்க்(கு)
அற்றம் அறிய உரையற்க; – அற்றம்
மறைக்கும் துணையார்க்(கு) உரைப்பவே, தம்மைத்
துறக்கும் துணி(வு)இலா தார்.

(வற்றி - உடல் மெலிந்து; ஆற்ற - மிகுதியாக; அற்றம் - இல்லாமை (வறுமை); அறிய - வெளிப்படும்படியாக.)

*உடல் வற்றி மற்றும் அளவுக்கு மிஞ்சிப் பசித்தாலும் நல்லியல்பு இல்லாதவர்களிடம் தன் வறுமை வெளிப்படும்படியாக ஒருவன் சொல்லாதிருப்பானாக! இன்மைக் காலத்தில் உயிரைத் துறக்கும் துணிவு இல்லாதவர்கள் தம் இல்லாமையைத் தூற்றாது மறைக்கும் தன்மையுடையவர்களிடம் மட்டும் சொல்வாராக!*

*கருத்து* : **இழிவை மறைக்கும் இயல்பில்லாரிடம் வறுமையைச் சொல்லாதே.**

79. இன்பம் பயந்தாங்(கு) இழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க; – இன்பம்
ஒழியாமை கண்டாலும், ஓங்(கு)அருவி நாட!
பழியாகா ஆறே தலை.

(ஆங்கு - அவ்வழியில்; தலைவரினும் - நேர்ந்தாலும்; இருந்தைக்க - இருக்காதே; ஒழியாமை - இடைவிடாது வருதல்; ஆறு - வழி; தலை - சிறந்தது.)

*பெருகும் அருவிகளையுடைய நாட்டை உடையவனே! (ஒரு தொழில்) இன்பத்தைக் கொடுத்து ஆழ்ந்த ஓர் இழிவைத் தருமானால் அந்த இன்பத்தை இன்பமென்று கருதாமல் விடுக. இன்பம் இடைவிடாது வரக்கண்டாலும் தமக்குப் பழி உண்டாகாத வழியில் செல்வதே சிறந்தது.*

*கருத்து* : **இன்பமே தரினும் பழி தரும் வழியில் செல்லற்க.**

80. தான்கெடினும் தக்கார்கே(டு) எண்ணற்க; தன்உடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத்(து) உண்ணற்க; – வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும், உரையற்க
பொய்யோ(டு) இடைமிடைந்த சொல்.

(தக்கார் - தகுதி வாய்ந்த பெரியோர்; எண்ணற்க - நினையாதிருப்பாயாக; ஊன் - தசை; கைத்து - கையில்; கவிந்த - போர்த்த; வையகம் - உலகம்; இடைமிடைந்த - இடையிலே கலந்த.)

*தான் கெட்டுப்போக நேர்ந்தாலும் தகுதி வாய்ந்த பெரியோர்க்குக் கேடு நினையாதிருப்பானாக! தன் உடம்பின் ஊன் வற்றி எலும்பன் ஆனாலும் தான் பெற்று உண்ணத்தகாதவர் கையில் உணவு வாங்கி உண்ணாதிருப்பானாக! வானக்குடை*

*யுடைய வையகம் முழுதும் பெறுவதானாலும் பொய்யோடு இட்டுக்கட்டிய சொற்களைச் சொல்லாதிருப்பானாக!*

*கருத்து* : **தக்கார்க்குக் கேடு நினைத்தலும், தகாதார் கையில் உண்ணலும், பொய் பேசுதலும் கூடாவாம்.**

# 9

# பிறர்மனை நயவாமை

81. அச்சம் பெரிதால்; அதற்(கு)இன்பம் சிற்றளவால்;
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்; — நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால்; பிறன்தாரம்
நம்பற்க நாண்உடை யார்.

(சிற்றளவு - சிறிய அளவு; நிச்சலும் - நாள்தோறும்; கோ - அரசன்; கும்பி - நரகம்; கூர்த்த - மிகுந்த; தாரம் - மனைவி.)

*பிறன் மனைவியை விரும்புவதால் உண்டாகும் அச்சம் மிகப் பெரியது. விரும்பிப் பெற்றால் கிடைக்கும் இன்பமோ மிகச் சிறியது. நாள்தோறும் நினைத்துப் பார்த்தால் அரசின் கொலைத் தண்டனையும் கிடைக்கும். எந்நாளும் நரகத்திற்கே ஏதுவாகிய மிக்க பாவமும் உண்டாகும். ஆதலால் நாணம் உள்ளவர்கள் பிறனுக்குத் தாரப்பட்டவளை விரும்பாதிருப்பாராக.*

*கருத்து* : **அச்சத்தையும், அரச தண்டனையையும், நரகத்தையும் தருவதால் பிறர்மனை விரும்புதல் கூடாது.**

82. அறம்,புகழ், கேண்மை, பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா; — பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும், பகைபழி பாவம்என்(று)
அச்சத்தோ(டு) இந்நாற் பொருள்.

(கேண்மை - நட்பு; நச்சுவார் - விரும்புவார்.)

*அயலான் மனைவியை அடைய விரும்புபவரை அறம், புகழ், நட்பு, பெருமிதம் என்ற நான்கு நற்பேறுகளும் சேர மாட்டா. பிறர்மனை விரும்புபவர்களைப் பகை, பழி, பாவம், அச்சம் என்ற இந்நான்கு தீய பொருள்களே வந்து சேரும்.*

*கருத்து* : **பிறர்மனை விரும்புபவரைப் பெருமைகள் நீங்கிச் சிறுமைகள் சேரும்.**

83. புக்க இடத்(து)அச்சம்; போதரும் போ(து)அச்சம்;
துய்க்கும் இடத்(து)அச்சம்; தோன்றாமல் காப்(பு)அச்சம்

எக்காலும் அச்சம் தருமால்; எவன்கொலோ?
உட்கான் பிறன்இல் புகல்.

(புக்க - புகுந்த; போதரும் போது - திரும்பி வரும்போது; துய்த்தல் - நுகர்தல்; காப்பு - காத்தல்; உட்குதல் - அஞ்சுதல்.)

*பிறன்மனையாளை விரும்பிச் செல்லும்போது அச்சம்; திரும்பி வரும்போதும் அச்சம்; இன்பம் நுகரும்போதும் அச்சம்; செய்தி வெளிப்படாமல் காத்தலிலும் அச்சம்; இவ்வாறு எக்காலத்திலும் அச்சத்தையே தருவதாயிருக்க, ஒருவன் அஞ்சாமல் பிறன் மனைக்குள் நுழைதல் ஏனோ?*

*கருத்து* : **பிறன்மனை நயத்தல் எப்போதும் அச்சத்தையே கொடுக்கும்.**

84. காணில் குடிப்பழியாம்; கைஉறில் கால்குறையும்;
மாண்இன்மை செய்யுங்கால் அச்சமாம்; — நீள்நிரயத்
துன்பம் பயக்குமால், துச்சாரி! நீகொண்ட
இன்பம் எனக்(கு)எனைத்தால்? கூறு.

(கைஉறில் - கையில் அகப்பட்டுக் கொண்டால்; நிரயம் - நரகம்; துச்சாரி - தீச்செய்கை செய்பவனே; எனைத்து? - எவ்வளவினது?)

*உடல் வெறியனே! உன்செயலைப் பிறர் கண்டால் உன் குடிக்கே பழி உண்டாகும்; கையும் களவுமாகப் பிடிபட்டால் தண்டனை யாக உன் கால் வெட்டப்படும்; தண்டனையிலிருந்து தப்பினாலும் பெருமையை அழிக்கும்; அச்சத்தைத் தோற்றுவிக்கும்; நீண்ட நரக வேதனையையும் உண்டாக்கும். இவ்வாறிருக்க, நீ கண்ட இன்பம் தான் என்ன? எனக்குக் கூறு.*

*கருத்து* : **பிறன்மனை விரும்புதல் துன்பமேயன்றி இன்பமல்ல.**

85. செம்மையொன்(று) இன்றிச், சிறியார் இனத்தராய்க்,
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ, — உம்மை
வலியால் பிறர்மனைமேல் சென்றாரே, இம்மை
அலியாகி ஆடிஉண் பார்.

(செம்மை - நேர்மை; கொம்மை - திரட்சி; வரி - தேமல்; மரீஇ - சேர்ந்து; வலி - வலிமை; ஆடி - கூத்தாடி.)

*முற்பிறப்பில் நேர்மை சிறிதும் இல்லாமல் கீழ்மக்கள் இனத்தில் சேர்ந்து, திரட்சியும் தேமலும் பொருந்திய முலைகளையுடை யவளின் தோளை அணைத்து, உடல் திமிரால் பிறர்மனை விரும்பிச் சென்றவர்களே இப்பிறப்பில் துய்க்கும் தன்மை இழந்த வர்களாய் உருவம் அடைந்து கூத்தாடி வயிறு பிழைப்பவராவர்.*

*கருத்து* : **பிறர்மனை விரும்புவார் அடுத்த பிறவியில் துய்க்கும் தன்மை இழந்து அல்லலுறுவர்.**

86. பல்லார் அறியப் பறைஅறைந்து, நாள்கேட்டுக்
கல்யாணம் செய்து, கடிப்புக்க – மெல்இயல்
காதல் மனையாளும் இல்லாளா; என்ஒருவன்
ஏதில் மனையாளை நோக்கு?

**(கடி - காவல்; இல்லாளா - வீட்டில் இருக்க; என் - ஏன்?; ஏதில் - அயலான்.)**

*பலரும் அறிய, மணப்பறை முழக்கி, நல்ல நாள் கேட்டறிந்து, திருமணம் செய்து கொண்டு, தன் காவலுக்குள் புகுந்துள்ள (உடல், உள்ளங்களில்) மென்மைத் தன்மையும் அன்புமுடைய மனைவி வீட்டில் இருக்க, ஒருவன் அயலானுடைய மனையாளை அடைய விரும்பி நோக்குவது ஏனோ?*

*கருத்து* : **கட்டிய மனைவி வீட்டிலிருக்க அயன்மனை நோக்கும் அற்பப் பண்பு ஏனோ?**

87. அம்பல் அயல்எடுப்ப, அஞ்சித் தமர்பரீஇ,
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று, – நம்பும்
நிலைமைஇல் நெஞ்சத்தான் துப்புரவு, பாம்பின்
தலைநக்கி அன்ன(து) உடைத்து.

**(அம்பல் - பழிச்சொல்; அயல் - அயலார்; எடுப்ப - பேச; பரீஇ - வருந்த; வம்பலன் - அயலான்; மரீஇ - மருவி; மைந்துற்று - களிப்படைந்து; துப்புரவு - சிற்றின்ப நுகர்ச்சி.)**

*பக்கத்தில் வாழ்பவர் பழித்துப்பேச, அதனைக்கேட்டு அஞ்சித் தம் உறவினர் வருந்த, அயலானுடைய மனைவியைத் தழுவிக் களிமயக்கம் கொண்டு, அதுவே நிலையென நம்புகின்ற உறுதியற்ற மனமுடையவனது அச்சிற்றின்ப நுகர்ச்சி பாம்பினது தலையை நக்கினாற்போன்ற தன்மையுடையது.*

*கருத்து* : **பிறன் மனைவியைச் சுவைப்பது பாம்பின் தலையைச் சுவைப்பது போன்ற தீமையானது.**

88. பரவா, வெளிப்படா, பல்லோர்கண் தங்கா,
உரவோர்கண்; காமநோய் ஓஒ கொடிதே!
விரவாருள் நாணுப் படல்அஞ்சி, யாதும்
உரையாது(உள்) ஆறி விடும்.

**(உரவோர் - உள்ள உறுதி மிக்கவர்; கண் - இடம்; விரவார் - கலவாதவர் (அயலார்); உள் - உள்ளேயே; ஆறும் - அடங்கி விடும்.)**

*காமநோய் கொடியது; எனினும் மனவலிமை மிக்கவரிடம் அந்நோய் அவர் உள்ளத்திலும் பரவாது; அடுத்தவர் பார்வைக்கும் தோன்றாது; அயல்மாதரிடத்தும் சென்று தங்காது. அயலார் இடையில் நாணப்பட நேரிடும் என்ற அச்சத்தால் அவர்தம் காம*

*உணர்வு சிறிதும் தோன்றாது மனத்துள்ளேயே அடங்கிப் போய் விடும்.*

*கருத்து* : **காமநோய் கொடியது; எனினும் அது நெஞ்சுரமுள்ளவர்களிடம் அடங்கிவிடும்.**

89. அம்பும், அழலும், அவிர்கதிர் ஞாயிறும்,
வெம்பிச் சுடினும் புறம்சுடும் – வெம்பிக்,
கவற்றி, மனத்தைச் சுடுதலால், காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.

(அழல் - நெருப்பு; அவிர் - விரிந்த; புறம் - வெளியேயுள்ள (உடம்பு); வெம்பி - சுட்டு; கவற்றி - கவலைப்படுத்தி.)

*அம்பும், நெருப்பும், விரிந்த கதிர்களையுடைய பகலவனும் கனன்று சுட்டாலும் உள்ளத்தைச் சுடாமல் உடம்பை மட்டுமே சுடும். ஆனால் காமநோய் உடலை வெம்பச் செய்து, உள்ளத்தில் கவலையுண்டாக்கி, உடலை மட்டும் அல்லாமல் உள்ளத்தையும் சுடும். ஆதலால் காமநோய் அம்பு முதலியவற்றைக் காட்டிலும் அஞ்ச வேண்டிய ஒன்று.*

*கருத்து* : **காமநோய் உள்ளத்தைச் சுட்டெரிக்கும்.**

90. ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு,
நீருள் குளித்தும் உயல்ஆகும்; – நீருள்
குளிப்பினும் காமம் சுடுமே;குன்(று) ஏறி
ஒளிப்பினும் காமம் சுடும்.

(உருகெழு - வெப்பம் நிறைந்த; உயல் - தப்பிப் பிழைத்தல்.)

*ஊரைப் பற்றிச் சூழ்ந்து மேலோங்கிய அஞ்சத்தக்க சிவந்த நெருப்பிலிருந்து நீரினுள் மூழ்கித் தப்பிப் பிழைக்க முடியும். ஆனால் காமமாகிய நெருப்போ, நீரினுள் மூழ்கினாலும் தணியாது சுடும். மலை மேலேறி மறைந்தாலும் தாவிச் சுடும். (எனவே இதற்கு உய்தி இல்லை.)*

*கருத்து* : **தீக்குத் தப்பலாம்; காமத் தீக்குத் தப்ப முடியாது.**

# 10

## ஈகை

91. இல்லா இடத்தும், இயைந்த அளவினால்,
உள்ள இடம்போல், பெரி(து)உவந்து, மெல்லக்
கொடையொடு பட்ட குணன்உடைய மாந்தர்க்(கு),
அடையாவாம் ஆண்டைக் கதவு.

(இயைந்த - முடிந்த; உள்ள இடம் போல் - செல்வம் உள்ள காலம் போல; உவந்து - மகிழ்ந்து; கொடை - கொடுத்தல்; ஆண்டை - அவ்விடம் (அவ்வுலகம்.)

*பொருள் மிகுதியாக இல்லாத நிலையிலும், தம்மால் முடிந்த அளவில், பொருள் மிகுதியாக உள்ள நிலையில் கொடுப்பது போன்றே மிகவும் மகிழ்ச்சியுடன் இயல்பாகக் கொடுக்கின்ற தன்மை பொருந்திய மக்களுக்கு, மறுமை உலகக் கதவுகள் அடைபடாது திறந்தே இருக்கும்.*

*கருத்து* : **கொடையாளர்க்கு வீட்டுலகக் கதவுகள் திறந்தே இருக்கும்.**

92. முன்னரே சாம்நாள்; முனிதக்க மூப்(பு)உள;
பின்னரும் பீ(டு)அழிக்கும் நோய்உள; – கொன்னே
பரவன்மின்; பற்றன்மின்; பாத்(து)உண்மின்; யாதும்
கரவன்மின்; கைத்(து)உண்டாம் போழ்து.

(முனிதல் - வெறுத்தல்; பீடு - பெருமை; கொன்னே - வீணே; பரவன்மின் - அலையாதிருங்கள்; பாத்து - பகுத்து; கரத்தல் - ஒளித்தல்.)

*கண் முன்னேயே சாவு நாளும், வெறுக்கத்தக்க கிழப் பருவமும் உள்ளன; மேலும் பெருமையைக் குலைக்கும் பிணிகளும் உள்ளன. ஆதலால், செல்வம் தேடுவதற்கு வீணே அலைந்து திரியாதீர்கள்; உள்ள பொருளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இராதீர்கள்; கையிலிருக்கும்பொழுதே பலருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள்; ஒன்றையும் ஒளியாதீர்கள்.*

*கருத்து* : **உள்ளதை ஒளியாது பிறருக்கு அளியுங்கள்.**

93. நடுக்குற்றுத், தற்சேர்ந்தார் துன்பம் துடையார்;
கொடுத்துத்தான் துய்ப்பினும், ஈண்டுங்கால் ஈண்டும்;
இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது, செல்வம்
விடுக்கும்; வினை(உ)லந்தக் கால்.

(துய்த்தல் - அனுபவித்தல்; ஈண்டுங்கால் - சேரும் காலத்தில்; இடுக்குற்று - இறுக்கி; விடுக்கும் - நீங்கும்; உலத்தல் - நீங்குதல்.)

*பிறருக்குக் கொடுத்துத் தானும் நுகர்ந்தாலும் சேருங்காலத்தில் செல்வம் மேன்மேலும் சேரும்; தீவினை உருண்டு வந்த காலத்தில் இறுக்கிப் பிடித்தாலும் செல்வம் தன்னை விட்டுப் பிரிந்து விடும். இதனை உணராது, செல்வம் நம்மை விட்டு நீங்கி விடுமே என்று நடுங்கித் தன்னை அண்டியவர்களின் துன்பத்தைப் போக்காமலும் வாழ்கின்றனரே!*

*கருத்து :* **செல்வம் வரும்; போகும். உள்ளபோதே கொடுங்கள்.**

94. இம்மி அரிசித் துணையானும், வைகலும்
நும்மில் இயைவ கொடுத்(து)உண்மின்; — உம்மைக்
கொடாஅ தவர்,என்பர்; குண்டுநீர் வையத்து
அடாஅ அடுப்பி னவர்.

**(துணையானும் - அளவாயினும்; இயைவ - முடிந்தவற்றை; குண்டு நீர் - ஆழமான நீர் (கடல்); அடா - சமைக்காத.)**

*ஆழமான கடல் சூழ்ந்த இவ்வுலகில் (இன்று) சமைக்காத அடுப்பினை உடையவர்களை முற்பிறப்பில் பிறர்க்குக் கொடாதவர் என்று சொல்வர். ஆதலால், சிறிய அரிசி அளவாயினும் நாள்தோறும் உங்களால் முடிந்த அளவு பிறருக்குக் கொடுத்து (அதன் பிறகு) உண்ணுங்கள்.*

*கருத்து :* **ஈயாதார் மறுபிறவியில் வறியராய் வருந்துவர்.**

95. மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்(கு)
உறுமா(று) இயைவ கொடுத்தல், — வறுமையால்
ஈதல் இசையா(து) எனினும், இரவாமை
ஈதல் இரட்டி உறும்.

**(உறும் ஆறு - தக்க வகையில்; இயைவ - முடிந்த அளவு; இசையாது - முடியாது; இரட்டி - இருமடங்கு.)**

*மறுமைப் பயனையும் இம்மைப் பயனையும் கருதியாவது ஒருவர்க்குத் தக்கவகையில் தம்மால் முடிந்த அளவில் கொடுத்தல் வேண்டும். இல்லாமையினால் பிறர்க்குக் கொடுக்க முடியாது போனாலும் பிறரிடம் சென்று, ஒன்றைத் தரும்படி கேட்காமலிருப்பது, கொடுப்பதைக் காட்டிலும் இருமடங்கு மதிப்புள்ளது.*

*கருத்து :* **ஈதலினும் இரவாமை இருமடங்கு நன்று.**

96. நடுஊருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க
படுபனை அன்னர், பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணும், கொடுத்(து)உண்ணா மாக்கள்,
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

**(வேதிகை - திண்ணை (மேடை); சுற்றுக்கோள் - சூழ்ந்திருத்தல்; நச்சுதல் - விரும்புதல்; கொழுத்த - செழித்த; இடுகாடு - சுடுகாடு; ஏற்றைப் பனை - ஆண் பனை.)**

*பலரும் தம்மை விரும்பிப் பயன்பெறும்படி வாழ்பவர் ஊர் நடுவில் திண்ணையால் சூழப்பெற்ற பயன்தரும் பெண் பனையைப்*

*போன்றவர்; செல்வ வளத்தால் தம்குடி செழித்திருக்கும் காலத்திலும் பிறர்க்குக் கொடுத்துண்ணாத மக்கள் இடுகாட்டில் நிற்கும் பலன் தராத ஆண் பனையைப் போன்றவர்கள்.*

*கருத்து* : **பலரும் விரும்பும்படி கொடுத்து வாழ்வது சிறந்தது.**

97. பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும், உலகம்
செயற்பால செய்யா விடினும், – கயல்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!
என்னை உல(கு)உய்யும் ஆறு.

(கயல் - மீன்; புலால் - நாற்றம்; கடிதல் - நீக்குதல்; உய்தல் - பிழைத்தல்.)

*கயல் மீனின் புலால் நாற்றத்தைப் புன்னையின் பூமணம் நீக்குகின்ற அலைமோதும் குளிர்ந்த துறைகளையுடையவனே! பெய்ய வேண்டிய பருவத்தே மழை பெய்யாதபோதும் உலகிலுள்ளோர் செய்ய வேண்டிய ஈகையினைச் செய்யாத போதும் இந்த உலகம் பிழைக்கும் வழி ஏது? (இல்லை.) (உலகத்து உயிர்கள் எவ்வாறு பிழைக்கும்?)*

*கருத்து* : **மழையும் கொடையும் பொய்ப்பின் உலகம் அழியும்.**

98. ஏற்றகை மாற்றாமை, என்னானும், தாம்வரையா(து),
ஆற்றாதார்க்(கு) ஈவதாம் ஆண்கடன்; – ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப! மா(று)ஈவார்க்கு ஈதல்,
பொலிகடன் என்னும் பெயர்த்து.

(மாற்றாமல் - இல்லையென்னாமல்; என்னானும் - எதுவாயினும்; கடன் - கடமை; ஆற்றின் - கொடுப்பதானால்; மாறு ஈவார் - திருப்பித்தர முடிந்தவர்க்கு; பொலிகடன் - வளர்கடன்.)

*வளம் நிறைந்த கடலால் குளிர்ச்சி பொருந்திய நெய்தல் நிலத்தலைவனே! தம்மிடம் ஏதேனும் கேட்டு நீட்டிய கையில் இல்லை யென்று மறுக்காமல் எதுவாயினும் தமக்கு ஏற்ற வகையில், வறிஞர்க்கு ஈவதே ஆண் மகனின் கடமை. திருப்பித் தரவல் லார்க்குக் கொடுத்தால் அது 'பொலிகடன்' (வளர்கடன்) என்று பெயரிட்டு வழங்கப்படும்.*

*கருத்து* : **மாற்றுதவி கருதிக் கொடுப்பது கடனேயன்றி ஈகையாகாது.**

99. இறப்பச் சிறி(து)என்னா(து), இல்என்னா(து), என்றும்
அறப்பயன் யார்மாட்டும் செய்க; – முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல்,
பைய நிறைத்து விடும்.

(இறப்ப - மிகவும்; இல் - இல்லை; என்னாது - என்னாமல்; புதவு - வாயில்; ஐயம் - பிச்சை; கடிஞை - பிச்சைப் பாத்திரம்; பைய - மெல்ல.)

*தம்மிடம் உள்ளது மிகவும் குறைவு என்று கருதாமலும், இல்லையென்று சொல்லாமலும், எந்நாளும் அறச்செயல்களை எல்லார்க்கும் செய்க. அதன் பயன், முறையாக வீடுதோறும் பிச்சையெடுக்கும் துறவியின் உண்கலம்போல மெல்ல மெல்ல நிரம்பி விடும்.*

*கருத்து :* **சிறிய அறமெனினும் தொடர்ந்து செய்யப் பயன் திரளும்.**

100. கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்;
இடித்து முழங்கிய(து)ஓர் யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும் கேட்குமே, சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்!

(கடிப்பு இடு - குறுந்தடியால் அடிக்கப்படுகின்ற; காதம், யோசனை என்பன - தூர எல்லைகள்; அடுக்கிய - அடுக்காக அமைந்துள்ள.)

*குறுந்தடியால் அடிக்கப்படுகின்ற முன்புறத்தையுடைய முரசின் ஒலியை ஒரு காத தொலைவில் இருப்பவரே கேட்பர்; இடித்து முழங்கும் இடியோசையை ஒரு யோசனை தூரத்தில் உள்ளவரே கேட்பர். 'இன்னார் கொடுத்தார்' என்று உயர்ந்தோரால் சொல் லப்படும் சொல் அடுக்காக உள்ள மூவுலகங்களிலும் கேட்கும்.*

*கருத்து :* **ஈகை செய்வோன் பெயர் எங்கும் பரவும்.**

# 11
# பழவினை

101. பல்ஆவுள் உய்த்து விடினும், குழக்கன்று
வல்ல(து)ஆம் தாய்நாடிக் கோடலைத்! – தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே,தற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

(ஆ - பசு; உய்த்தல் - செலுத்துதல்; குழ - இளமையான; நாடி - தேடி; கோடல் - கொள்ளுதல்; தகைத்தே - தன்மையதே; கிழவன் - உரியவன்.)

*பல பசுக்களுள்ள கூட்டத்தினுள் கொண்டுபோய் விட்டாலும் இளங்கன்று தாய்ப்பசுவைத் தேடி அடைவதில் தேர்ச்சி உடையது. தொன்றுதொட்டு வரும் வினையும் அவ்வினை செய்த உரிமையாளனைத் தேடி அடைவதில் அத்தன்மையதேயாம்.*

*கருத்து :* **பழவினை, செய்தவனை நாடி அடையும்.**

102. உருவும், இளமையும், ஒண்பொருளும், உட்கும்,
ஒருவழி நில்லாமை கண்டும், – ஒருவழி

ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை, உடம்(பு)இட்டு
நின்றுவீழ்ந் தக்க(து) உடைத்து.

(ஒள் - மேலான; உட்குதல் - அஞ்சுதல்; ஒருவழி - ஒரே சீராக; ஒருவழி - யாதானும் ஒரு வழியில்; வீழ்ந்தக்க - அழிந்துபோகும் தன்மையை.)

*அழகும், இளமையும், பகட்டான செல்வமும், பிறர் கண்டு அஞ்சத்தக்க மதிப்பும் ஒரே சீராக நிலைபெற்றிராமையைக் கண்டறிந்தும் யாதேனும் ஒரு வழியிலாவது ஒரு நல்லறமும் செய்யாதவனுடைய வாழ்வு, ஏதோ சில காலம் உடம்பைப் பெற்று, நின்று, பிறகு அழிந்துபோகும் தன்மையை உடையதாகும்.*

*கருத்து* : நல்லறம் செய்யாதவன் மனிதனாகப் பிறந்தும் பயன் இல்லை.

103. வளம்பட வேண்டாதார் யார்?யாரும் இல்லை;
அளந்தன போகம் அவர்அவர் ஆற்றால்;
விளங்காய் திரட்டினார் இல்லை; களங்கனியைக்
கார்எனச் செய்தாரும் இல்.

(வளம் - சிறப்பு; போகம் - இன்பம்; கார் - கருமை.)

*செல்வத்திலே சிறந்து வாழ விரும்பாதார் யார்? ஒருவரும் இல்லை. ஆயினும், அவரவர் துய்க்கும் இன்பங்கள் அவரவர் பழவினைக்கேற்பவே அளந்து வைக்கப்பட்டுள்ளன. விளாங் காயை உருண்டையாக ஆக்கினாரும் இல்லை; களாப்பழத்தைக் கருமையாகச் செய்தவரும் இல்லை. (அவை தாமே அமையும்.)*

*கருத்து* : செல்வமும் இன்பமும் பழவினைக்கு ஏற்ப அமையும்.

104. உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா;
பெறற்பால அனையவும் அன்னவாம்; மாரி
வறப்பில் தருவாரும் இல்லை; அதனைச்
சிறப்பில் தணிப்பாரும் இல்.

(உறுவர் - ஆற்றல் மிக்கவர்; அனையவும் - எல்லாமும்; மாரி - மழை; வறப்பின் - பெய்யாது போனால்; சிறப்பில் - மிகுதியானால்; தணிப்பாரும் - குறைப்பாரும்.)

*வரக்கூடிய தீமைகளை விலக்கிவிடுவது வல்லவர்களாலும் முடியாதது. பெறத்தக்க இன்பங்களைப் பெறுதலும் அத்தன்மை யதே. மழை பெய்யாமல் பொய்த்துப் போனால் அதைப் பெய்ய வைப்பாரும் இல்லை. மிகுதியாகப் பெய்தால் தடுத்துக் குறைப் பவர்களும் இல்லை.*

*கருத்து* : பழவினைப் பயன்களைத் தடுக்க முடியாது.

105. தினைத்துணையர் ஆகித்,தம் தே(சு)உள் அடக்கிப்,
பனைத்துணையார், வைகலும் பா(டு)அழிந்து வாழ்வர்;

நினைப்பக் கிடந்த(து) எவன்உண்டாம்? மேலை
வினைப்பயன் அல்லால் பிற.

(துணை - அளவு; தேசு - புகழ்; பாடு - பெருமை; எவன் - என்ன?)

*பனையளவு உயர்ந்தவர்கள்கூட தினையளவு சிறியவர்களாக மாறி, தம் புகழை உள்ளடக்கிக் கொண்டு, நாள்தோறும் பெருமை குன்றி உயிர் வாழ்வர். இதற்குக் காரணம், முன்செய்த வினைப் பயனே அல்லாமல் வேறு நினைக்கக்கூடியது என்ன உண்டு?*

*கருத்து* : **பெரியவர்கள் மதிப்பு இழக்க நேர்ந்தால் அது வினைப் பயனாலேயாம்.**

106. பல்ஆன்ற கேள்விப் பயன்உணர்வார் வீயவும்,
கல்லாதார் வாழ்வ(து) அறிதிரேல், – கல்லாதார்
சேதனம் என்னும்அச் சே(று)அகத்து இன்மையால்
கோ(து)என்று கொள்ளாதாம் கூற்று.

(பல் - பல; ஆன்ற - சிறந்த; வீதல் - இறந்து போதல்; சேதனம் - அறிவு; கோது - சக்கை.)

*பல்நூல் கல்வி கேள்வியால் வரும் அறிவுப் பயனை உணர்ந்தவர்கள் விரைவிலே இறந்து போவதற்கும், கல்லாதார் நீண்ட காலம் உயிர் வாழ்வதற்கும் காரணம் யாதென எண்ணுவீர் களேயானால், கல்லாதார் உள்ளத்தில் அறிவு என்னும் சாறு இல்லாமையால் அவர்களைச் சக்கை என்று கருதிக் கூற்றுவன் கொள்ளாமல் விட்டுவிடுகிறான் (என்று அறிய முடியும்.)*

*கருத்து* : **கல்லாதார் சத்தில்லாக் கோது.**

107. இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாரும் காண
நெடுங்கடை நின்(று)உழல்வ(து) எல்லாம், – அடம்பப்பூ
அன்னம் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப!
முன்னை வினையாய் விடும்.

(இடும்பை - துன்பம்; கூர் - மிக்க; நெடுங்கடை - உயர்ந்த வாயில்; உழல்வது - (பிச்சைக்காக) வருந்துவது.)

*அடும்பின் பூவை அன்னங்கள் கோதி விளையாடும் அலைகள் நிறைந்த குளிர்ந்த கடற்கரை நாட்டவனே! உலகில் சிலர், வறுமைத் துயர் நிறைந்த நெஞ்சினராய், எல்லாரும் பார்க்குமாறு, செல்வர்களுடைய வீட்டு உயர்ந்த வாசல்கள்தோறும் நின்று, பிச்சை கேட்டு வருந்துவது எல்லாம் முன் செய்த தீவினைப் பயனாலேயாம்.*

*கருத்து* : **சிலர் வறியராய் உழல்தற்கு அவர் செய்த தீவினையே காரணம்.**

108. அறியாரும் அல்லர், அறிவ(து) அறிந்தும்,
பழியோடு பட்டவை செய்தல், – வளிஓடி
நெய்தல் நறவு(உ)யிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப!
செய்த வினையால் வரும்.

(வளி - காற்று; நெய்தல் - நெய்தல் மலர்; நறவு - தேன்; உயிர்க்கும் - சொரிகின்ற.)

*காற்றினால் அலைப்புண்டு நெய்தல் மலர்கள் தேனைச் சொரிகின்ற நீண்ட குளிர்ந்த கடற்கரை நாட்டவனே! நன்மை தீமைகளை அறியாதவராக இல்லாமல், அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்திருந்தும் சிலர் பழியொடு கூடிய செயலைச் செய்து, பழியைப் பெறுவது, முன் செய்த தீவினையாலேயாம்.*

*கருத்து* : **அறிந்தும் தீயன செய்தற்குக் காரணம் பழவினையே.**

109. ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டார்மன் தீய விழைபயன்; நல்லவை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது.

(ஈண்டு - நெருங்கிய; வையம் - உலகம்; விழைபயன் - யாருவம் விரும்பும் பயன்; உறற்பால - வந்து சேர வேண்டியவை; தீண்டுதல் - தொடுதல்.)

*நிறைந்த நீர்சூழ்ந்த இவ்வுலகத்தில் எவரும் சிறு அளவுகூடத் தீமையை விரும்ப மாட்டார்கள். யாவரும் விரும்புவது நல்லனவற்றையே. ஆயினும், ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முன் வினையால் வந்து சேர வேண்டியவை அவரை அடையாமல் விடுவதில்லை.*

*கருத்து* : **விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வினைப்பயன் விளையும்.**

110. சிறுகா, பெருகா, முறைபிறழ்ந்து வாரா,
உறுகாலத்(து) ஊற்றாகா, ஆம்இடத்தே ஆகும்,
சிறுகாலைப் பட்ட பொறியும்; அதனால்
இறுகாலத்(து) என்னை பரிவு?

(சிறுகா - குறையாது; பெருகா - மிகுதியாகாது; பிறழ்ந்து - மாறி; ஊற்று - ஊன்றுகோல்; சிறுகாலை - கரு அமையும் காலத்திலேயே; பட்ட - உண்டாகிய; பொறி - வினைப்பயன்; இறுகாலம் - துன்புறும் காலம்; பரிவு - இரங்குவது.)

*கரு அமையும் காலத்திலேயே அமைகின்ற வினைப்பயன் அளவில் குறையாது; இருக்க வேண்டியதைவிட மிகாது; முறை தவறியும் வராது; தீவினையுற்ற காலத்தில் ஊன்றுகோலாய் இருந்து உதவியும் செய்யாது; துணையாகும் காலத்தில்தான்*

*துணையாகும். ஆகையால் தீவினையால் துன்புறும் காலத்தில் வருந்துவது எதற்காக?*

*கருத்து* : **துன்பம் பழவினைப் பயன்; ஆதலின் அதைக்கண்டு வருந்தாதே.**

## 12

## மெய்ம்மை

111. இசையா ஒருபொருள் இல்என்றல், யார்க்கும்
வசைஅன்று; வையத்(து) இயற்கை; – நசைஅழுங்க
நின்(று)ஓடிப் பொய்த்தல், நிரைதொடீஇ! செய்ந்நன்றி
கொன்றாரின் குற்றம் உடைத்து.

(இசையா - முடியாத; வசை - பரி; நசை - விருப்பம்; அழுங்க - கெடும்படி; நிரை - வரிசை; தொடி - வளையல்.)

*வரிசையுற வளையல் அணிந்தவளே! கொடுக்க முடியாத ஒரு பொருளை இல்லையென்று சொல்லுவதால் யாருக்கும் பழி இல்லை. அஃது உலக இயல்பாகும். கொடுப்போர் போல நெடுங் காலம் தோன்ற வைத்துப் பின்பு இல்லையென்று சொல்லுதல் செய்ந்நன்றி மறத்தலைவிடக் கொடிய குற்றமாகும்.*

*கருத்து* : **ஆசை காட்டி இல்லை என்று கூறுவது நன்றி மறத்தலைக் காட்டிலும் பெருங்குற்றம்.**

112. தக்காரும், தக்கவர் அல்லாரும், தம்நீர்மை
எக்காலும் குன்றல் இலர்ஆவர்; – அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம்; கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு.

(நீர்மை - தன்மை; எக்காலம் - எப்போதும்; குன்றல் - குறைதல்; அக்காரம் - வெல்லக்கட்டி; கைப்பு - கசப்பு.)

*தகுதியுடைய பெரியோரும் தகுதியில்லாத சிறியோரும் அவரவர் இயல்பில் எப்போதும் மாறுபடுதல் இல்லை. வெல்லக் கட்டி யார் தின்றாலும் கசக்காது; வேம்பு தேவரே தின்றாலும் கசக்கும்.*

*கருத்து* : **உயர்ந்தோரும் இழிந்தோரும் அவரவர் இயல்புகளிலிருந்து மாறுவது இல்லை.**

113. காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலர்ஆவர்; – ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிர்.

(கழி - மிகுதி; கிளைஞர் - சுற்றத்தார்; ஏலா - பொறுக்க முடியாத; இடர் - துன்பம்; ஈர்ங்குன்றம் - குளிர்ச்சியான மலை.)

*குளிர்ச்சி பொருந்திய மலைநாட்டவனே! ஒருவர் செல்வம் உடையவராய்க் காலாட்டிக் கொண்டு வாழுங்காலத்தில் சுற்றத்தார் என்று சொல்லிச் சூழ்பவர் விண்ணில் விளங்கும் மீன்களிலும் மிகப் பலராக இருப்பர். அவரே பொறுக்க முடியாத வறுமைத் துன்பத்தை அடையும்போது 'உறவுடையேம்' என்று உரிமை பாராட்டுபவர் ஒரு சிலரே இருப்பர்.*

*கருத்து :* **செல்வக் காலத்தில் சூழ்ந்திருப்பவர் அல்லற்காலத்தில் அகன்று விடுவர்.**

114. வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண(து) எய்த இருதலையும் எய்தும்;
நடுவண(து) எய்தாதான் எய்தும், உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர்.

(வடு - குற்றம்; மன்னிய - நிலைபெற்றுள்ள; மூன்று - அறம் பொருள் இன்பம் எனும் மூன்று; இருதலையும் - இரண்டு பக்கங்களும்; எய்தும் - சேரும்; அடுதல் - சமைத்தல்.)

*குற்றமில்லாத இவ்வுலகில் நிலைபெற்றுள்ள அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில், நடுவில் உள்ள பொருள் கிடைத்தால், ஏனை இருபுறங்களிலுமுள்ள அறமும் இன்பமும் தாமே வந்து சேரும். நடுவே உள்ள பொருள் இல்லாவதன் உலையிலிட்டுச் சுடப்படுவது போன்ற துன்பத்தை அடைவான்.*

*கருத்து :* **செல்வம் பெற்றவன் அறத்தையும் இன்பத்தையும் அடைவான்.**

115. நல்ஆவின் கன்(று)ஆயின் நாகும் விலைபெறூஉம்;
கல்லாரே ஆயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்;
புல்ஈரப் போழ்தின் உழவேபோல், மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.

(நாகு - இளங்கன்று; செல்லும் - ஏற்றுக் கொள்ளப்படும்; புல் ஈரம் - குறைந்த ஈரம்; போழ்து - பொழுது; மீது - மேலே; நல்கூர்ந்தார் - வறியவர்.)

*உயர்ந்த இனப் பசுவின் கன்றாக இருந்தால் இளங்கன்றும் சிறந்த விலை பெறும். அதுபோலப் படிக்காதவர்களாய் இருந்தாலும் செல்வமுடையவர் வாயிலிருந்து வெளிப்படும் சொல் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும். வறியவர்கள் கூறும் சொற்கள் குறைந்த ஈரமுள்ள காலத்தில் உழுதல்போல மேலெழுந்தவாறாகச் சென்று உட்புகாதாம்.*

*கருத்து :* **ஏழை பேச்சு அம்பலம் ஏறாது.**

116. இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும், என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்; – தடங்கண்ணாய்!
உப்பொடு நெய்,பால் தயிர்,காயம் பெய்(து)அடினும்
கைப்(பு)அறா, பேய்ச்சுரையின் காய்.

(இடம்பட - அதிகமாக; தட - பெரிய; காயம் - பெருங்காயம்; அடினும் - சமைத்தாலும்; கைப்பு - கசப்பு; அறா - நீங்காது.)

*அகன்ற கண்களையுடையவளே! எப்போதும் அடங்கி நடக்கும் தன்மை இல்லாதவர்கள் சிறந்த அறிவு நூல்களை விரிவாகக் கற்றாலும் எந்நாளும் அடக்கமில்லாதவர்களாகவே இருப்பர். உப்புடன் நெய், பால், தயிர், பெருங்காயம் ஆகியவற்றைச் சேர்த்துச் சமைத்தாலும் பேய்ச் சுரைக்காய் கசப்புத் தன்மை யிலிருந்து நீங்குவதில்லை.*

*கருத்து* : **அடங்காதவர் அரிய நூல்களைக் கற்றாலும் தம் இயல்பில் மாறுவதில்லை.**

117. தம்மை இகழ்வாரைத் தாம்அவரின் முன்இகழ்க;
என்னை அவரொடு பட்டது?–புன்னை
விறல்பூங் கமழ்கனல் வீங்குநீர்ச் சேர்ப்ப!
உறற்பால யார்க்கும் உறும்.

(என்னை - என்ன?; விறல் - பெருமை; கானல் - கடற்கரைச் சோலை; வீங்கு நீர் - மிக்க நீர் (கடல்); உறும் - சேரும்.)

*புன்னை மரத்தின் மிக்க பூக்களால் மணம் கமழ்கின்ற சோலை சூழ்ந்த கடற்றுறையை உடையவனே! தம்மை இகழ்ந்து பேசுகின்ற வர்களைத் தாமும் அவர் எதிரிலேயே இகழ்ச்சியாகப் பேசி விடுக! அதனால் புதிதாக விளைவது என்ன? வரக்கூடியவை யாருக்கும் தாமாக வந்தே தீரும்.*

*கருத்து* : **தம்மை இகழ்வாரைத் தாமும் இகழ்ந்து ஒதுக்குக.**

118. ஆவே(று) உருவின ஆயினும், ஆபயந்த
பால்வே(று) உருவின அல்லவாம்; – பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி; ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

(பயந்த - கொடுத்த; உருவின - நிறமுடையவை; ஒரு தன்மைத்து - ஒரே தன்மையுடையது; உருவு - உருவம்.)

*பசுக்கள் வெவ்வேறு நிறம் உடையனவாய் இருந்தாலும், அப்பசுக்கள் தந்த பால் வெள்ளை நிறமேயன்றி வெவ்வேறு நிறமுடையவை அல்ல. அதுபோல, இவ்வுலகில் அறவழிகள் பசுக்களின் உருவம்போலப் பல்வேறு அமைப்புகளைக்*

*கொண்டிருந்தாலும் அவற்றின் பயன் பாலைப் போல ஒரே தன்மை உடைய தாகும்.*

*கருத்து* : **அறத்துறைகள் பல; ஆயினும் பயன் ஒன்றே.**

119. யாஅர் உலகத்தோர் சொல்இல்லார்? தேருங்கால்
யாஅர் உபாயத்தின் வாழாதார்? – யாஅர்
இடையாக இன்னாத(து) எய்தாதார்? யாஅர்
கடைபோகச் செல்வம்உய்த் தார்?

(யாஅர் - எவர்?; தேருங்கால் - ஆராயும்போது; உபாயம் - சூழ்ச்சித் திறம்; இடையாக - இடையில்; கடைபோக - கடைசிவரை; உய்த்தார்- துய்த்தார்.)

*ஆராய்ந்து பார்த்தால் இவ்வுலகில் பழிச்சொல் பெறாமல் வாழ்ந்தவர் எவர்? முயற்சியால் வாழாதவர் யார்? வாழ்வின் இடையில் துன்பத்தை அடையாதவர் எவர்? இறுதி வரையிலும் செல்வத்தைத் துய்த்து வாழ்ந்தவர் எவர்? (ஒருவருமில்லை என்றவாறு.)*

*கருத்து* : **எதையும் நிலையாகப் பெற்றவர் எவரும் இல்லை.**

120. தாம்செய் வினையல்லால், தம்மொடு செல்வது,மற்(று)
யாங்கணும் தேரின் பிறி(து)இல்லை; – ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயன்இன்றே;
கூற்றம்கொண்(டு) ஓடும் பொழுது.

(அல்லால் - அல்லாது (தவிர); யாங்கணும் - எங்கும்; தேரின் - ஆராய்ந்தால்; இன்றே - இல்லை.)

*எவ்வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் தாம் செய்த வினைப் பயனே அன்றித் தம்முடன் வருவது வேறொன்றும் இல்லை. எமன் உயிரைப் பற்றிக் கொண்டு விரைந்து செல்லும்போது, நாள் தோறும் பேணி, ஆடை அணிகளால் புனைந்த உடலும் உயிரைத் தொடர்ந்து வர முடியாததாய்ப் பயனற்றதாக ஆகிவிடும்.*

*கருத்து* : **வினைப்பயனே உயிரைத் தொடரும்.**

# 13

# தீவினையச்சம்

121. துக்கத்துள் தூங்கித், துறவின்கண் சேர்கலா,
மக்கள் பிணத்த சுடுகாடு – தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே! புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(தூங்கி - கிடந்து; சேர்கலா - சேராத; புள் - பறவை; புலன் - உணர்வு; புல்லறிவாளர் - அற்ப அறிவினர்.)

*சுடுகாடுகளோ துன்பத்தில் கிடந்தும் துறவு நெறியில் செல்லாத மக்களின் பிணங்களைக் கொண்டுள்ளன; ஆனால், புலன்களை நன்னெறியில் செலுத்தாத அற்ப அறிவுடையாரின் வயிறுகளோ விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் சுடுகாடுகளாய் உள்ளன.*

*கருத்து :* **புலால் உண்போன் வயிறு சுடுகாடு.**

122. இரும்பார்க்கும் காலராய், ஏதிலார்க்கு ஆளாய்க்,
கரும்(பு)ஆர் கழனியுள் சேர்வர்; — சுரும்(பு)ஆர்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

(இரும்பு ஆர்க்கும் - இரும்பு ஒலிக்கும்; ஏதிலார் - பகைவர்; சுரும்பு - வண்டு; சிவல் - கவுதாரி; குறும்பூழ் - காடை.)

*வண்டுகள் ஆரவாரிக்கும் காட்டிலே வாழ்கின்ற கௌதாரியை யும் காடையையும் கூட்டிலே இருக்கும்படி அடைத்து வைப்போர் மறுபிறவிகளில், இரும்பு விலங்குகள் பூட்டப்பட்ட கால்களை உடையவர்களாய், அயலார்க்கு அடிமைப்பட்டுக் கரும்பு நிறைந்த கழனிகளில் வேலை செய்யப் போய்ச் சேர்வர்.*

*கருத்து :* **பறவைகளைக் கூண்டிலடைப்போர் அடிமையாகித் துன்புறுவர்.**

123. அக்கேபோல், அங்கை ஒழிய, விரல்அழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே; — அக்கால்
அலவனைக் காதலித்துக், கால்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(அக்கு - சங்குமணி; அங்கை - அம்+கை = அழகிய கை; எழுப - உண்டாகும்; அக்கால் - அந்தக் காலத்தில்; அலவன் - நண்டு.)

*முற்காலத்தில் (முற்பிறவியில்) நண்டுகளை விரும்பி அவற்றின் கால்களை ஒடித்துத் தின்றவர்களை, அத்தீவினைப் பயன் வந்தடையும். பிற்காலத்தில், சங்குமணியைப் போல உள்ளங்கை மட்டும் வெண்மையாய் நிற்க, விரல்கள் அழுகித் துன்பம் தரும் குட்டநோய் உண்டாகப் பெறுவர்.*

*கருத்து :* **உயிர்வதை செய்வோர் குட்டநோய் பெறுவர்.**

124. நெருப்(பு)அழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்,
எரிப்பச்சுட்(டு) எவ்வநோய் ஆக்கும்; — பரப்பக்
கொடுவினையர் ஆகுவர், கோடாரும் கோடிக்
கடுவினையர் ஆகியார்ச் சார்ந்து.

(எவ்வம் - துன்பம்; பரப்ப - மிகவும்; கோடுதல் - வளைதல்; கோடார் - நடுவுநிலை தவறாதவர்.)

*நெருப்பின் தழலைச் சேர்ந்தால் நெய்போல் குளிர்ந்த பொருளும் கொதிப்பச் சுட்டு, அதனைத் தொட்டவர்க்குத் துயருண்டாக்கும். அதுபோல, நடுவுநிலை தவறாதவர்களும் கொடுமையாளரைச் சார்ந்தால் நடுவுநிலை தவறி மிகவும் கொடுமையான செயல்களைச் செய்பவராவர்.*

*கருத்து* : **தீவினையாளர் தொடர்பால் நல்லவரும் கெடுவர்.**

125. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்; — வரிசையால்
வான்ஊர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(கேண்மை - நட்பு; வரிசை - முறை; நந்தும் - வளரும்; மதியம் - நிலவு; வைகலும் - நாள்தோறும்.)

*மேலோர் நட்பு வளர்பிறைபோல நாள்தோறும் படிப்படியே வளர்ந்து வரும். கீழோர் நட்பு வானத்தில் தவழும் முழுமதிபோல நாள்தோறும் தானே தேய்ந்து குறையும்.*

*கருத்து* : **நல்லோர் நட்பு நாளும் வளரும்; தீயோர் நட்புத் தேய்ந்து அழியும்.**

126. சான்றோர் எனமதித்துச் சார்ந்தாய்மன்; சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்கண் இல்லாயின், — சார்ந்தாய்கேள்!
சாந்(து)அகத்து உண்டென்று செப்புத் திறந்(து),ஒருவன்
பாம்(பு)அகத்துக் கண்ட(து) உடைத்து.

(சார்ந்தாய் - சேர்ந்தாய்; சாந்து - சந்தனம்; அகத்து - உள்ளே; செப்பு - சிமிழ்; உடைத்து - (போன்ற) தன்மையது.)

*நட்புப் பூண்டவனே! ‘நற்குணங்களால் நிறைந்தவர் இவர்’ என்று மதித்து நட்புப் பூண்டாய்; அவ்வாறு நட்புக் கொண்ட உனக்கு நீ விரும்பி அடைந்த அவரிடத்தில் சான்றாண்மைப் பண்புகள் இல்லை என்றால், அது, சந்தனம் உள்ளே இருக்கின்றது என்று எண்ணிச் சிமிழைத் திறந்தபோது அதனுள்ளே பாம்பைக் கண்டது போன்ற தன்மையது ஆகும்.*

*கருத்து* : **ஆராயாமல் நட்புக் கொள்வது தீமைக்கே இடமளிக்கும்.**

127. யாஅர் ஒருவர், ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் துணைமை உடையவர்? — சாரல்
கனமணி நின்(று)இமைக்கும் நாட!கேள், மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு.

(துணைமை - வல்லமை; கனமணி - மிகுதியான மணிகள்; இமைக்கும் - ஒளிரும்.)

*மலைச்சாரல்களில் மிகுந்த மணிகள் கிடந்து மிளிருகின்ற நாடனே! கேள்; மற்றொருவருடைய உள்ளக்கருத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் வல்லமை உடையவர் யார் உளர்? ஒருவருமில்லை. ஏனெனில், மக்களுடைய எண்ணம் வேறு; செயல் வேறு.*

*கருத்து :* **மக்கள் மனமும் செயலும் வேறுபட்டிருப்பர்.**

128. உள்ளத்தால் நள்ளா(து), உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தால் நட்டார் கழிகேண்மை, – தெள்ளிப்
புனல்செதும்பு நின்(று)அலைக்கும் பூங்குன்ற நாட!
மனத்துக்கண் மாசாய் விடும்.

(நள்ளாது - நட்புக் கொள்ளாது; கழிகேண்மை - மிகுந்த தொடர்பு; தெள்ளுதல் - கொழித்தல்; புனல் - நீர்; செதும்பு - சேறு; மாசு - குற்றம்.)

*நீர்முத்துகளைக் கொழித்துக் கொண்டு ஊற்றுநீர் முழங்கால் அளவு நின்று அலைவீசிக் கொண்டிருக்கிற அழகிய மலை நாடனே! மனத்தளவில் நட்புக் கொள்ளாமல், தன்னலத்தையே நாடி வஞ்சனையாக உறவு கொள்பவருடன் கொள்ளும் நெருங்கிய நட்பு மனத்தில் பெருங்குற்றமாய் அமைந்து விடும்.*

*கருத்து :* **தன்னலம் கருதும் வஞ்சகர் நட்புக் குற்றமுடையதாகும்.**

129. ஒக்கிய ஒள்வாள்,தன் ஒன்னார்கைப் பட்டக்கால்,
ஊக்கம் அழிப்பதூஉம் மெய்யாகும்; – ஆக்கம்
இருமையும் சென்று சுடுதலால், நல்ல
கருமமே கல்லார்கண் தீர்வு.

(ஒக்கிய - ஓங்கிய; ஒள் - ஒளி பொருந்திய; ஒன்னார் - பகைவர்; இருமை - இம்மை மறுமை; கருமம் - செயல்.)

*ஓங்கித் தாக்கிய ஒளிபொருந்திய வாள் பகைவர் கையில் அகப்பட்டுவிட்டால் அது அவனுடைய மனவலிமையை அழித்தல் உண்மை. அதுபோல, கல்லாதவரிடம் சேரும் செல்வம் இம்மை மறுமையாகிய இரண்டையும் அழிக்கும். ஆதலின் அவரிடம் சேராமல் நீங்குவது சிறந்த செயலாகும்.*

*கருத்து :* **அறிவிலார் சேர்க்கையை அஞ்சி நீக்குக.**

130. மனைப்பாசம் கைவிடாய்; மக்கட்(கு)என்று ஏங்கி
எனைத்(து)ஊழி வாழ்தியோ நெஞ்சே! – எனைத்தும்
சிறுவரையே ஆயினும், செய்தநன்(று) அல்லால்,
உறுபயனோ இல்லை உயிர்க்கு.

(எனைத்து - எவ்வளவு?; ஊழி - காலம்; சிறுவரை - சிறிய அளவு; உறுதல் - அடைதல்.)

*மனமே! இல்லறத்தின் மேலுள்ள ஆசையைக் கைவிட்டாய் இல்லை. பெற்ற மக்களுக்காக ஏக்கம் கொண்டு எவ்வளவு காலம் வாழப் போகிறாய்? எவ்வளவு சிறியதாயினும் தான் செய்த நல்லறமே அல்லாது தமது உயிருக்கு அழியாத் தொடர்பாக இருப்பது வேறொன்றும் இல்லை.*

*கருத்து* : **உயிருக்கு உற்ற துணை அறப்பயனே.**

## பொருட்பால்

# 14

# கல்வி

131. குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல; – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

(குஞ்சி - மயிர்முடி; தானை - சேலை; கோட்டழகு - கோடு + அழகு = முந்தானை அழகு.)

*மயிர்முடியின் அழகும், வளைய உடுத்த சேலையின் முந்தானை அழகும், மஞ்சள் பூச்சு அழகும் அழகல்ல. உள்ளத்தில் நல்லவராய் இருக்கின்றோம் என்னும் நியாயமான உணர்வுடன் தோன்றும் கல்வி அழகே அழகு.*

*கருத்து* : **கல்வி அழகே அழகு.**

132. இம்மை பயக்குமால்; ஈயக் குறை(வு)இன்றால்;
தம்மை விளக்குமால்; தாம்உளராக் கே(டு)இன்றால்;
எம்மை உலகத்தும் யாம்காணோம், கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

(பயக்கும் - தரும்; உளரா - உள்ளவரை; கேடு - அழிவு; மம்மர் - மயக்கம்.)

*கல்வியானது இம்மை இன்பமெலாம் தரும்; பிறர்க்குக் கொடுப்பதால் குறையாது; உடையவரை மதிப்புடன் விளங்கச் செய்யும்; உடையவர் உள்ளவரை அழிதல் இல்லை; ஆதலால் கல்விபோல அறியாமை மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தை யாம் எந்த உலகத்திலும் கண்டதில்லை.*

*கருத்து* : **அறியாமையைப் போக்கும் அருமருந்து கல்வியே!**

133. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(விழுமிது - சிறப்புடையது; கடைநிலம் - கீழ்ப்பட்ட இடம்; தலை நிலம் - முதன்மை இடம்.)

*உவர்நிலத்தில் தோன்றிய உப்பை, கல்வி நலமிக்க சான்றோர் விளைநிலத்தில் உண்டாகிய நெல்லைவிடச் சிறப்புடையதென்று மதிப்பர். அதுபோல, கற்றறிந்த பெரியவர்கள் கடைப்பட்ட இடத்தில் இருப்பினும் முதன்மையிடத்தில் வைத்துப் போற்றப் படுவார்கள்.*

*கருத்து* : **எந்நிலையராயினும் கல்வியுடையார் முதன்மை பெறுவர்.**

134. வைப்புழிக் கோட்படா; வாய்த்(து)ஈயின் கே(டு)இல்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன,
விச்சைமற்(று) அல்ல பிற.

(வைப்புழி - வைத்த இடத்திலிருந்து; கோள்படா - கவர முடியாது; செறின் - சினந்தாலும்; வவ்வுதல் - வாரிக் கொள்ளுதல்; எச்சம் - விட்டுச் செல்வது; விச்சை - வித்தை - கல்வி.)

*கற்ற வித்தைகளை, வைத்த இடத்திலிருந்து (மனத்திலிருந்து) கவர முடியாது; வாய்ப்பு உண்டாக்கிப் பிறருக்குக் கொடுத்தாலும் அழிக்க முடியாது; பெருஞ்சிறப்புடைய அரசரே சினம் கொண்டார் என்றாலும் அவராலும் வாரிக் கொள்ள முடியாது. ஆதலால், ஒருவன் தன் மக்களுக்குப் பிற்காலத்துக்கு ஆக்கமாகச் சேர்த்து வைக்கத்தக்கது கல்வி அல்லது வேறொன்றும் இல்லை.*

*கருத்து* : **மக்கட்குத் தேடி வைத்தற்குரிய பொருள் கல்வியே!**

135. கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல; — தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே, நீர்ஒழியப்
பால்உண் குருகின் தெரிந்து.

(பிணி - நோய்; தெள்ளிதின் - தெளிவாக; குருகு - பறவை; பால்உண் குருகு - அன்னப் பறவை.)

*கல்வியின் பரப்புக்கு எல்லையில்லை; கற்பவரின் வாழ்நாள் எல்லையோ சிறிது. (அச்சிறு வாழ்நாளிலும்) நுட்பமாக நினைந்து பார்த்தால், தோன்றும் நோய்களும் பல உள. ஆதலால், கலந்த பாலில் நீரை நீக்கிப் பாலை மட்டும் உண்ணும் அன்னம்போலத்*

*தெளிவாக ஆராய்ந்து சாரம்மிக்க நூல்களை மட்டுமே சான்றோர் கற்பர்.*

*கருத்து* : **அறிவுச் சத்துள்ளவற்றை மட்டுமே அறிய வேண்டும்.**

136. தோணி இயக்குவான், தொல்லை வருணத்துக்
காணின், கடைப்பட்டான் என்றிகழார்! – காணாய்
அவன்துணையா ஆறுபோய் அற்றே,நூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்.

(இயக்குதல் - செலுத்துதல்; தொல்லை வருணம் - பழைய (கீழ்க்) குலத்தவன்; ஆறு - வழி; போய் அற்றே - போவது போன்றதே.)

*தோணியைச் செலுத்துபவன், பழமையான குலங்களிலுள்ளே கீழ்க்குலத்தவன் என்று தெரிந்தாலும், அவன் குடியை இகழாது, அவன் துணை கொண்டு ஆற்றைக் கடப்பதுபோல, கற்றவர் யாராக இருந்தாலும் அவரைத் துணையாகக் கொண்டு நல்ல நூல்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*கருத்து* : **கற்றாரிடம் அவர் குலம் கருதாது நூற்பொருளைக் கற்றுணர வேண்டும்.**

137. தவல்அருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகல்இலர், எஃகுடையார், தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம், அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி.

(தவல் - குற்றம்; தவல் அரு - குற்றமில்லாத; இகல் - மாறுபாடு; எஃகு உடையார் - கூரிய அறிவுடையார்; குழீஇ - கூடி; உம்பர் - தேவருலகம்.)

*குற்றமற்ற பழமையான நூற்கேள்வி உடையவராயும் தம்முள் மாறுபாடு இல்லாதவராயும், நுண்ணறிவுடையவராகவும் விளங்கும் கற்றோர் குழுவில் சேர்ந்து கருத்துகளைப் பரிமாறி மகிழ்வதைக் காட்டிலும், அகன்ற வானத்துக்குமேல் உள்ள தேவருலகம் இனிதாக இருக்குமானால், அப்போது வேண்டு மானால் அதனைக் காணலாம்.*

*கருத்து* : **கல்வி வல்லாருடன் கூடி மகிழும் மகிழ்ச்சி தெய்வ உலக மகிழ்ச்சியினும் சிறந்தது.**

138. கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின்(று) அற்றே; – நுனிநீக்கித்
தூரின்தின்(று) அன்ன தகைத்தரோ, பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு.

(கனை - ஒலிக்கின்ற; தூர் - அடிப்பகுதி; தகைத்து - தன்மையுடையது; ஈரம் - அன்பு; இலாளர் - இல்லாதவர்.)

*முழங்கும் கடலால் குளிர்ச்சி பொருந்தியுள்ள நெய்தல் நிலத்தவனே! கற்றறிந்த பெரியோர் நட்பு நுனியிலிருந்து கரும்பு தின்னல்போல் இனிமை பெருகிக் கொண்டே செல்லும் தன்மை கொண்டது. பண்பும் அன்பும் இல்லாதவர் நட்பு நுனியை விட்டு அடியிலிருந்து கரும்பைத் தின்னல்போல் இனிமை குறைந்து கொண்டே செல்லும் தன்மை கொண்டது.*

*கருத்து* : **கற்றார் நட்புப் பழகப் பழக முதிர்ந்து வளரும்; கல்லார் நட்போ குறைந்து அழியும்.**

139. கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்; – தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால், புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(தலைப்படுவர் - சேரப் பெறுவர்; ஒள்நிற - ஒளி பொருந்திய நிறமுடைய; புத்தோடு - புது ஒடு - புதுப்பானை; பயத்தல் - தருதல்.)

*தொன்றுதொட்ட சிறப்பும், ஒளி பொருந்திய நிறமும் உடைய பாதிரிப்பூவைச் சேர்ந்திருப்பதால் புதுப்பானை தன்மீது சேர்ந்த மணத்தை அதன் உள்ளேயுள்ள தண்ணீருக்குத் தந்து அத்தண்ணீரையும் மணமுள்ளதாக்கும். அதுபோல முன்பு கல்லாதவரே ஆனாலும் அவர் கற்றவர்களோடு சேர்ந்து வாழ்ந்தால் கற்றவரின் நல்லறிவு நாள்தோறும் உண்டாகப்பெற்றுச் சிறப்படைவர்.*

*கருத்து* : **கற்றாரைச் சாரின் கல்லாரும் அறிவு நலம் பெறுவர்.**

140. அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா(து),
உலகநூல் ஓதுவ(து) எல்லாம், கலகல
கூஉம் துணையல்லால், கொண்டு, தடுமாற்றம்
போஒம் துணையறிவார் இல்.

(அலகு - அளவு; ஓதுவது - படிப்பது; கூஉம் - கூவும்; போஒம் - போகும்.)

*எல்லையற்ற, கற்பதற்கு இனிமையான, அறிவு சான்ற நூல்களைக் கற்பதை விட்டுவிட்டு வெறும் உலக அறிவை மட்டும் தரும் நூல்களை எல்லாம் கற்பது 'கலகல' என்னும் கலகலப்பே அன்றி வேறில்லை. இத்தகைய வெறும் உலக அறிவு நூல்களை மட்டும் கொண்டு பிறவித் துன்பத்தைப் போக்கும் வழியை அறிபவர் எங்குமில்லை.*

*கருத்து* : **வெற்று நூல்களைக் கற்று வீண்காலம் கழியாது அரிய மெய்ஞ்ஞான நூல்களைக் கற்று அறிவுத் தடுமாற்றம் நீங்குக.**

# 15
# குடிப்பிறப்பு

141. உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்;
இடுக்கண் தலைவந்தக் கண்ணும், அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று?

(உடுக்கை - உடை; உலறி - கிழிந்து; குன்றுதல் - குறைதல்; அரிமா - சிங்கம்; கறிக்குமோ - தின்னுமோ?)

*பசித்துன்பம் மிகுதியாக வந்துற்றபோதும் சிங்கம் கொடிப் புல்லைத் தின்னுமா? (தின்னாது; அதுபோல) நல்ல குடியிற் பிறந்தவர் கொடிய வறுமைக்கு ஆளாகி, உடை கிழிந்து உடம்பு மெலிந்த காலத்திலும் தம் ஒழுக்க நெறியிலிருந்து குறைய மாட்டார்கள்.*

*கருத்து* : **இடருற்றபோதும் உயர்குடிப் பிறந்தோர் ஒழுக்கம் குன்றார்.**

142. சான்றாண்மை, சாயல், ஒழுக்கம், இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க்(கு) அல்லது – வான்தோயும்
மைதவழ் வெற்ப! படாஅ, பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(சாயல் - பெருந்தன்மை (மென்மை); மை - கறுப்பு - மேகம்; வெற்பு - மலை; வெற்ப - மலை நாட்டவனே!)

*வானளாவிய மேகங்கள் தவழ்கின்ற மலைநாட்டவனே! சான்றாண்மை, பெருந்தன்மை, நல்லொழுக்கம் ஆகிய இவை மூன்றும் பெருமை பொருந்திய நற்குடியிற் பிறந்தவர்க்கல்லது பிறர்க்கு மிகப்பெருஞ்செல்வம் பொருந்திய காலத்தும் உண்டாக மாட்டா.*

*கருத்து* : **நற்பண்புகள் நற்குடிப் பிறந்தார்க்கே அமையும்.**

143. இருக்கை எழலும், எதிர்செலவும், ஏனை
விடுப்ப ஒழிதலோ(டு), இன்ன – குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ(டு)
ஒன்றா உணரற்பாற்(று) அன்று.

(எழலும் - எழுதலும்; எதிர் செலவு - எதிர் சென்று அழைத்தல்; விடுப்ப ஒழிதல் - உடன் சென்று வழியனுப்புதல்; இன்ன - இவற்றை.)

*பெரியாரைக் காணுமிடத்து, இருக்கையை விட்டு எழுதலையும், எதிர்சென்று அழைத்தலையும் மற்றும் மீளும்போது*

*உடன்சென்று வழியனுப்புதலையும், இன்னும் இவை போன்ற ஒழுக்கங்களையும் உயர்குடிப் பிறந்தவர்கள் என்றும் நீங்காத நன்னடக்கையாகக் கொண்டு விட்டார்கள். (ஆதலால் இக் குணங்கள்) கீழ்மக்களோடு பொருந்தா என்று உணர்தல் வேண்டும்.*

*கருத்து :* **நற்பண்புகள் கீழ்மக்களிடம் அமையா.**

144. நல்லவை செய்யின் இயல்பாகும்; தீயவை
பல்லவர் தூற்றும் பழிஆகும்; – எல்லாம்
உணரும் குடிப்பிறப்பின், ஊதியம் என்னோ
புணரும் ஒருவர்க்(கு) எனின்.

**(பல்லவர் – பலரும்; குடிப்பிறப்பின் - குடியில் பிறந்ததைவிட; ஊதியம் - சிறப்பு; என்னோ - என்ன உண்டு; புணர்தல் - சேர்தல்.)**

*நல்லன தீயன ஆகிய எல்லாவற்றையும் உணர்ந்த உயர்குடிப் பிறந்தார் நல்லவை செய்தால் அஃது அவர்க்கு இயல்பாகும் என்பர்; தீயவை செய்தால் பலரும் தூற்றும் பழியாக முடியும். இந்நிலையுடைய உயர்குடிப்பிறப்பு ஒருவர்க்கு அமையுமெனின் அதனினும் சிறந்த சிறப்பு என்ன உண்டு?*

*கருத்து :* **நற்குடிப் பிறப்பைவிடச் சிறந்த சிறப்பு வேறில்லை.**

145. கல்லாமை அச்சம்; கயவர் தொழில்அச்சம்;
சொல்லாமை யுள்ளும்ஓர் சோர்(வு)அச்சம்; – எல்லாம்
இரப்பார்க்(கு)ஒன்(று) ஈயாமை அச்சம்; மரத்தார்இம்
மாணாக் குடிப்பிறந் தார்.

**(கயவர் - கீழ் மக்கள்; சோர்வு - தளர்ச்சி; ஈயாமை - தாராமை; மாணா - மாட்சிமை இல்லாத.)**

*கல்வியில்லாதிருத்தல் அச்சம்; கீழ்மக்கள் தொழிலைச் செய்தல் அச்சம்; சொல்லத் தகாதவற்றைத் தவறிச் சொல்லுதலும் அச்சம்; ஒன்றும் இல்லை என்று இரந்தவர்க்கு ஒன்றைக் கொடாததும் அச்சம். (இவ்வாறு அச்சப்படுதல் உயர்குடிப் பிறந்தவர் இயல்பு.) ஆதலால், இத்தகைய சிறப்பில்லாக் குடியிற் பிறந்தவர் மரம் போல்வர் ஆவர்.*

*கருத்து :* **நற்குடிப் பிறவாதார் எதற்கும் அஞ்ச வேண்டியதிருக்கும்.**

146. இனநன்மை, இன்சொல்ஒன்(று), ஈதல்மற்(று), ஏனை
மனநன்மை என்(று),இவை எல்லாம் – கனமணி
முத்தோ(டு) இமைக்கும் முழங்(கு)உவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே உள.

**(ஏனை - மற்றும்; இமைக்கும் - ஒளி விடுகின்ற; உவரி - கடல்; சேர்ப்பன் - கடற்கரை நிலத் தலைவன்.)**

*சிறந்த மணிகளுடன் முத்துகள் ஒளிவிடுகின்ற ஒலிகடலால் குளிர்ச்சி பெற்றுள்ள நெய்தல் நிலத்தவனே! நல்லினத்தோடு நட்புக் கொள்ளுதல், இனிய சொல் சொல்லுதல், இரப்போர்க்கு ஒரு பொருளைக் கொடுத்தல் மற்றும் மனத்தூய்மை என்ற இந்த நற்பண்புகளெல்லாம் உயர்குடிப்பிறந்தவரிடம் இயல்பாக உள்ளன.*

**கருத்து : நல்லினம், நற்செயல், ஈகை, மனநலம் ஆகியவை நற்குடிப் பிறந்தார் பண்புகள்.**

**147.** செய்கை அழிந்து, சிதல்மண்டிற்(று) ஆயினும்,
பெய்யா ஒருசிறை, பேர்இல் உடைத்தாகும்;
எவ்வம் உழந்தக் கடைத்தும், குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

**(செய்கை - கட்டு; சிதல் - கறையான்; மண்டுதல் - மிகுதல்; பெய்யா - ஒழுகாத; ஒருசிறை - ஒரு பக்கம்; எவ்வம் - துன்பம்; செயற்பாலவை - செய்யக்கூடியவற்றை.)**

*பெரிய வீடு கட்டுக்கோப்புக் குலைந்து, கறையான் பற்றி அரிக்கப்பட்டதானாலும், ஒழுகாத இடத்தை ஒரு பகுதியில் கொண்டிருக்கும்; அதுபோல, உயர்குடிப் பிறந்தவர் தாம் மிக்க துன்பத்தையடைந்த காலத்தும் செய்யத்தக்க அறங்களைச் செய்யத் தவற மாட்டார்.*

**கருத்து : நற்குடிப் பிறந்தார் தாம் நிலைகுலைந்தாலும் பிறருக்கு உதவுதலில் தவற மாட்டார்.**

**148.** ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் — திங்கள்போல்,
செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும், ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

**(ஒரு புடை - ஒரு பகுதி; அங்கண் மாஞாலம் - அம் கண் மா ஞாலம் - அழகிய இடமகன்ற பெரிய உலகம்; ஒப்புரவு - உதவி செய்தல்; ஒல்குதல் - தளர்தல்.)**

*ஒரு பகுதியைப் பாம்பு பற்றி விழுங்கினாலும் மற்றொரு பகுதியால் அழகிய இடமகன்ற பூமியை விளங்கச் செய்யும் நிலவுபோல வறுமையால் செல்வாக்கின்மை குறுக்கே நின்றாலும் உயர்குடிப் பிறந்தவர் அறம் செய்தலில் தளரார்.*

**கருத்து : நற்குடிப்பிறந்தார் தாம் வருந்தினும் தவறாது அறம் செய்வர்.**

**149.** செல்லா இடத்தும் குடிப்பிறந்தார் செய்வன,
செல்இடத்தும் செய்யார் சிறியவர்; — புல்வாய்

பருமம் பொறுப்பினும், பாய்பரி மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

(செல்லா இடத்தும் - செல்ல முடியாத நிலையிலும்; புல்வாய் - மான்; பருமம் - சேணம்; பாய் பரி - தாவும் குதிரை; பொருதல் - போர் செய்தல்.)

*கலைமான், சேணம் முதலிய போர்க்கோலம் தாங்கி நின்றாலும் பாயும் குதிரையைப் போலத் தாக்கிப் போரைச் செய்வதில்லை. அதுபோல, வறுமையால் எதையும் செய்ய முடியாத நிலையிலும் நற்குடிப் பிறந்தார் செய்கின்ற நற்செயல்களைக் கீழ்மக்கள் செல்வக் காலத்திலும் செய்ய மாட்டார்கள்.*

*கருத்து* : **கீழ்மக்கள் செல்வக் காலத்திலும் அறம் செய்யார்.**

150. எற்(று)ஒன்றும் இல்லா இடத்தும், குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க்(கு), அசைவிடத்து – ஊற்(று)ஆவர்;
அற்றக் கடைத்தும், அகல்யா(று) அகழ்ந்தக்கால்,
தெற்றெனத் தெண்ணீர் படும்.

(அற்று - இல்லாமல்; அசைவு இடத்து - தளர்ச்சியடைந்தபோது; ஊற்று - ஊன்றுகோல்; அற்ற - (நீர்) இல்லாத; கடைத்தும் - காலத்திலேயும்; அகல் - அகன்று; அகழ்தல் - வேண்டுதல்; தெற்றென - விரைவாக.)

*நீர் வற்றிய போதும் அகன்ற ஆறு, தோண்டும்போது விரைந்து தெளிந்த நீரைத் தரும். அதுபோல, யாதொரு பொருளும் இல்லாத போதும் நல்லகுடியிற் பிறந்தவர் துன்புற்றுத் தம்மைச் சார்ந்தவர்க்கு அவரது தளர்ச்சி நீங்க ஊன்றுகோல்போல நின்று உதவுவர்.*

*கருத்து* : **நற்குடிப் பிறந்தவர் வறியோர்க்கு உதவுவர்.**

# 16

# மேன்மக்கள்

151. அங்கண் விசும்பில், அகல்நிலாப் பாரிக்கும்,
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்; – திங்கள்
மறுஆற்றும்; சான்றோர்அஃ(து) ஆற்றார்; தெருமந்து
தேய்வர் ஒருமா(சு) உறின்.

(விசும்பு - வானம்; பாரித்தல் - பரவச் செய்தல்; மறு - களங்கம்; தெருமரல் - மனங்கலங்குதல்; மாசு - குற்றம்.)

*அழகிய பரப்புக் கொண்ட வானத்திலிருந்து மிகுந்த ஒளியைப் பரப்புகின்ற நிலவும் சான்றோரும் தன்மையால் ஒப்பாவர்.*

*ஆயினும், திங்கள் தன்னிடத்திலுள்ள களங்கத்தைப் பொறுத்துக் கொள்ளும்; ஆனால், சான்றோர் களங்கத்தைப் பொறுத்துக் கொள்ளார்; சிறு குற்றம் தம்மை அடைந்தாலும் மனம் கலங்கி அழிவர்.*

*கருத்து* : **மேலோர் தமக்கு மிகச்சிறு பழி தோன்றினாலும் பொறார்.**

152. இசையும் எனினும் இசையா(து) எனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்; – விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

(இசையும் - முடியும்; வசை - பழி; மா - விலங்கு; நரிமா - நரி; அரிமா - சிங்கம்; பிழைத்தல் - தவறுதல்.)

*விசையுடன் நரியின் நெஞ்சைப் பிளந்து சென்ற அம்பினைக் காட்டிலும் சிங்கத்தின் மீது விடப்பட்டபோது குறி தவறிய தடி தீயது ஆகுமோ? ஆகாது; எனவே, எளிதில் முடியக் கூடிய தாயினும் முடியாததாயினும் மேலோர், பழிப்புக்கு இடமின்றி மேலான செயல்களையே செய்ய நினைப்பர்.*

*கருத்து* : **பெரியோர் உயர்ந்த செயல்களையே நினைப்பர்.**

153. நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும், சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண்(டு) ஏறார்; – உரம்கவறா
உள்ளமெனும் நாரினால் கட்டி, உளவரையால்
செய்வர் செயற்பா லவை.

(நரம்பு எழுந்து - நரம்பு மேலே தெரியுமாறு; குரம்பு எழுந்து - எல்லை கடந்து; ஏறார் - நடக்க மாட்டார்; உரம் - வலிமை; உளவரை - தமக்குள்ள அளவிற்கேற்ப.)

*மேன்மக்கள் உடல் மெலிந்து நரம்பு தோன்றுமாறு வறுமை யடைந்தாராயினும், ஒழுக்க எல்லையைக் கடந்து குற்றமான வழியில் நடவார். தம் அறிவையே பற்றுக் கோடாகக் கொண்டு, ஊக்கம் என்னும் நாரினால் மனத்தைக்கட்டி, தமக்குள்ள அளவிற்கேற்ப செய்யத்தக்க நற்செயல்களையே செய்வர்.*

*கருத்து* : **மேன்மக்கள் தளர்ச்சியுற்ற போதும் தக்கனவே செய்வர்.**

154. செல்வுழிக் கண்,ஒருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையின் தோன்றப் புரிந்(து)யாப்பர்;
நல்வரை நாட! சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி.

(செல்வுழிக்கண் - வழியே செல்லும்போது; தொல் வழி - நீண்ட நாள் பழகிய; யாப்பர் - நட்புக் கொள்வர்; அடிப்படின் - நடந்தால்; கல்வரை - கல்மலை; நெறி - வழி.)

*நல்ல மலைநாடனே! மேலோர் தாம் சென்ற இடத்தில் ஒருவரை ஒருநாள் (தற்செயலாகக்) கண்டு பழகினாலும் நீண்ட நாள் பழகியவர் எனத் தோன்றும் முறையில் அன்பு காட்டி நட்புக் கொள்வர். சில காலம் தொடர்ந்து நடந்தால் கல்மலையிலும் வழி உண்டாகுமே! (அதுபோலப் பலநாள் பழகினால் எவரும் நட்பாகலாம்; ஆனால் மேலோர் நட்போ ஒருநாள் பழகினும் கிட்டும்.)*

*கருத்து* : **மேலோர் நட்பு ஒருநாள் பழகினும் கிட்டும்.**

155. புல்லா எழுத்தின், பொருளில் வறுங்கோட்டி,
கல்லா ஒருவன் உரைப்பவும், கண்ணோடி
நல்லார் வருந்தியும் கேட்பரே; மற்(று)அவன்
பல்லாருள் நாணல் பரிந்து.

(புல்லா - பொருந்தாத; பொருளில் - பொருள் இல்லாத; வறுங் கோட்டி - பயனற்ற கூட்டம்; கண்ணோடி - கண்ணோட்டம் (பரிவு) உற்று.)

*இலக்கணத்தோடு பொருந்தாத, பொருள் அறிவில்லாத, பயனற்ற கூட்டத்தில் அறிவில்லாத ஒருவன் ஒன்றைச் சொல்லும் போது மேன்மக்கள் அந்த அறிவில்லாதவன் பலர்முன் அவமானப்பட்டுவிடக் கூடாதென்ற பரிவுடையராய் அதனை வருத்தத் தோடும் கேட்டிருப்பர்.*

*கருத்து* : **கல்லார் அவமானப்பட்டுவிடக் கூடாதென்ற பரிவினால் அவர் கூறும் பொருளற்றவற்றையும் பெரியோர் கேட்டிருப்பர்.**

156. கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே ஆகும்;
வடுப்பட வை(து)இறந்தக் கண்ணும், குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயில் சிதைந்து.

(கண் தகர - கணுக்கள் நொறுங்க; நூறி - இடித்து; வடுப்பட - கேவலமாக; வைது - திட்டி; இறந்தக் கண்ணும் - வரம்பு கடந்த போதும்; சிதைந்து - தீயனவற்றை.)

*கரும்பினை வாயால் கடித்தும், கணுக்கள் நொறுங்கும்படி அழித்தும், ஆலைவாய்க் கொடுத்தும் சாற்றைக் கொண்டாலும் அஃது இனிப்புச் சுவை உடையதாகவே இருக்கும். அதுபோல உள்ளம் புண்ணாகும்படி ஒருவர், தம்மை வைது, எல்லை கடந்து, கூறத்தகாதன கூறினும் நற்குடியில் பிறந்தார் தம் வாயில் தீய சொற்களைச் சொல்லார்.*

*கருத்து* : **பிறர் வருத்தியபோதும் மேன்மக்கள் தங்கள் நற்குணத்தையே வெளிப்படுத்துவர்.**

157. கள்ளார்,கள் உண்ணார், கடிவ கடிந்(து)ஒரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்(து)உரையார் – தள்ளியும்
வாயில்பொய் கூறார்; வடுஅறு காட்சியார்
சாயின் பரிவ(து) இலர்.

(கள்ளார் - திருட மாட்டார்; கடிதல் - விலக்குதல்; ஒரீஇ - நீக்கி; எள்ளி - அவமதித்து; தள்ளியும் - தவறியும்; சாயின் - தளர்ந்தாலும்.)

*குற்றமற்ற அறிவுடைய மேன்மக்கள் திருடார்; கள் குடியார்; உயர்ந்தோரால் விலக்கப்பட்ட தீச்செயல்களைச் செய்யார்; பிறரை இகழ்ந்து பழித்துப் பேசார்; தவறியும் தம் வாயினால் பொய் பேசார்; வறுமையுற்றுத் தளர்ந்தாலும் அதற்காக வருந்தார்.*

*கருத்து* : **மேன்மக்கள் மறந்தும் தீய செயல்களைச் செய்யார்.**

158. பிறர்மறை யின்கண் செவிடாய்த், திறன்அறிந்(து)
ஏதிலார் இல்கண் குருடனாய்த், தீய
புறங்கூற்றின் மூங்கையாய், நிற்பானேல் யாதும்
அறம்கூற வேண்டாம் அவற்கு.

(மறை - இரகசியம்; ஏதிலார் - அயலார்; இல் - மனைவி; புறங்கூறல் - பழி சொல்லல்; மூங்கை - ஊமை.)

*பிறருடைய இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாயும், ஒழுக்க வகையுணர்ந்து அயலாருடைய மனையாளைப் பார்ப் பதில் குருடனாயும், கொடியதான பழிச்சொல் பேசுவதில் ஊமை யாயும் ஒருவன் இருப்பானானால் அவனுக்கு ஏந்த ஓர் அறமும் சொல்ல வேண்டியதில்லை.*

*கருத்து* : **பிறர்மறை கேளாமை; பிறன்மனை நோக்காமை; புறங்கூறாமை ஆகியவை அறங்களுள் சிறந்தவையாம்.**

159. பன்னாளும் சென்றக்கால், பண்பிலார் தம்உழை
என்னானும் வேண்டுப என்றிகழ்ப; – என்னானும்
வேண்டினும், நன்றுமற்(று) என்று, விழுமியோர்
காண்தொறும் செய்வர் சிறப்பு.

(பன்னாளும் - பல நாளும்; என்னானும் - யாதானும் ஒன்று; விழுமியோர் - மேலோர்; காண்தொறும் - காணும்பொழுது எல்லாம்.)

*மேன்மைக் குணமில்லாதார், தம்மிடம் ஒருவர் பல நாளும் வருவாரானால், அவர் யாதாகிலும் ஒன்றைக் கேட்பார் என்று கருதி அவரை இகழ்ச்சி செய்வர். ஆனால் மேன்மக்கள் தம்மிடம் அவர் எதைக் கேட்டாலும் நன்று என்று நினைத்து அவரைக் காணும் பொழுதெல்லாம் சிறப்புச் செய்வர்.*

*கருத்து* : **கீழோர் தம்மை அடைபவரை இகழ்வர்; பெரியரோ பெருமை செய்வர்.**

160. உடையார் இவர்என்(று), ஒருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர்; – உடைய
பிலம்தலைப் பட்டது போலாதே நல்ல
குலம்தலைப் பட்ட இடத்து.

**(உடையார் - பொருள் உடையவர்; கடையாயார் - கீழ்மக்கள்; ஒரு தலையா – உறுதியாக; பிலம் – சுரங்கம்; தலைப்பட்டது - அடைந்தது.)**

*பொருளுடையவர் இவர் என்று கருதி, சுரங்கத்தை அடைந்தது போல் உறுதியாகப் பற்றிக்கொண்டு கீழ்மக்கள் பின்னேபோய்ச் சிலர் பிழைப்பர். இச்செயல் தங்கச் சுரங்கத்தை அடைந்ததாக ஆகாது. நல்ல குடியிற்பிறந்தவர்களை அடைந்தபோதுதான் அச்சுரங்கத்தை அடைந்ததாக ஆகும்.*

*கருத்து* : **மேன்மக்கள் நட்புத் தங்கச் சுரங்கம் போன்றது.**

# 17

# பெரியாரைப் பிழையாமை

161. பொறுப்பர்என்(று) எண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்; – வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நல்நாட!
போக்குதல் யார்க்கும் அரிது.

**(புரை - குற்றம்; தீர்ந்தார் - நீங்கியவர்; மாட்டும் - இடத்திலும்; ஆர்க்கும் - ஒலிக்கும்.)**

*ஒலிக்கின்ற அருவிகளைக் கொண்ட அழகிய மலை நாட்டவனே! எதுசெயினும் பொறுத்துக் கொள்வர் என்று கருதி, குற்றம் நீங்கிய குணமுடைய பெரியாரிடத்தும், அவர் வெறுக்கும் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும். ஏனெனில், அவர் வெறுத்த பின்பு, அவ்வெறுப்பினை விலக்குதல் எவராலும் முடியாது.*

*கருத்து* : **பெரியோர் வெறுப்பைப் போக்குதல் அரிது.**

162. பொன்னே கொடுத்தும் புணர்தற்(கு) அரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும், – அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே, நல்ல
நயமில் அறிவி னவர்.

**(கொன்னே - ஒன்றும் கொடாமல்; தலைக்கூட - சேர; அன்னோ - ஐயகோ; நயம் இல் - நன்மை இல்லாத.)**

*பொன்னையே கொடுத்தாலும் நட்பாக அடைதற்கு அரியவர்களை, ஒன்றும் கொடாதே சேரப்பெற்றிருந்தும், நற்பண்பில்லா அறிவினை உடையவர், ஐயகோ, வீணாகவே நாளைக் கழிக்கின்றார்களே! (இது மிகவும் இரங்கத்தக்கது).*

*கருத்து :* **அறிவுடையாரைச் சேர்ந்திருந்தாலும் அறிவிலார் வீண்காலமே கழிப்பர்.**

163. அவமதிப்பும், ஆன்ற மதிப்பும், இரண்டும்
மிகைமக்க ளான்,மதிக்கற் பால—நயம்உணராக்
கையறியா மாக்கள், இழிப்பும் எடுத்(து)ஏத்தும்
வையார், வடித்தநூ லார்.

(ஆன்ற - மிகுந்த; மிகை மக்கள் - மேன் மக்கள்; கையறியா - நல்லொழுக்கத்தை அறியாத; எடுத்து ஏத்தல் - சிறப்பித்துப் புகழ்தல்; வையார் - ஒரு பொருளாகக் கொள்ள மாட்டார்.)

*தாழ்வாக நினைப்பதும் மேலாக நினைப்பதும் ஆகிய இரண்டும் பெரியோர்களால் மதிக்கப்படும் தன்மைகளாம். நல்லனவற்றை உணராத, ஒழுக்க நெறியை அறியாத மக்கள் இழிவாகப் பேசுவதையும் உயர்த்திப் புகழ்வதையும் நுண்ணிய நூலறிவுடைய பெரியோர் ஒரு பொருளாகக் கொள்ளமாட்டார்.*

*கருத்து :* **சிறியோர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் பொருளில்லை.**

164. விரிநிற நாகம் விடர்உள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேண்நின்றும் உட்கும்;
அருமை உடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை உடையார் செறின்.

(விடர் - மலைப்பிளவு; உரும் - இடி; சேண் - நெடுந்தொலைவு; உட்கும் - நடுங்கும்; அரண் - பாதுகாப்பான இடம் (கோட்டை); செறின் - சினந்தால்.)

*பளபளக்கும் நிறத்தையுடைய பாம்பு, மலைப் பிளப்பில் மறைவாக இருந்தபோதிலும் நெடுந்தொலைவில் விண்ணி லிருந்து எழுகின்ற இடியின் பேரொலி கேட்டு அஞ்சி நடுங்கும். அதுபோல, பெருமைக் குணமுடைய மேலோர் சினந்தால் அதற்கு ஆளானோர், அழித்தற்கரிய பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்திருந்தாலும் தப்பிப் பிழைக்க மாட்டார்.*

*கருத்து :* **பெரியோரால் பகைக்கப்படுவோர் பாதுகாப்புடன் இருப்பினும் அழிவர்.**

165. எம்மை அறிந்திலிர், எம்போல்வார் இல்என்று
தம்மைத்தாம் கொள்வது கோள்அன்று; — தம்மை

அரியரா நோக்கி, அறன்அறியும் சான்றோர்,
பெரியராக் கொள்வது கோள்.

(அறிந்திலிர் - அறிய மாட்டீர்; இல் - இல்லை; கோள் அன்று - பெருமை ஆகாது; அரியர் - அருமையானவர் (சிறந்தவர்).

*'எம் சிறப்பை நீவிர் அறியமாட்டீர்; எம்மை ஒத்தவர் எவரும் இல்லை' என்று தம்மைத் தாமே உயர்த்திக் கொள்வது ஒரு பெருமையாகாது. அறநெறியுணர்ந்த பெரியோர் தம்மைச் சிறந்தவராக நினைத்து, 'இவர் பெரியார்' என்று தம்மை மதிக்கப் பண்ணிக் கொள்வதே ஒருவர்க்குப் பெருமையாகும்.*

*கருத்து* : **பெரியோரால் மதிக்கப்படுவதே பெருமை; தற்புகழ்ச்சி பெருமை தராது.**

166. நளிகடல் தண்சேர்ப்ப! நாள்நிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை; – விளி(வு)இன்றி
அல்கு நிழல்போல் அகன்(று)அகன்(று) ஓடுமே,
தொல்புக ழாளர் தொடர்பு.

(நளி - பெரிய; நாள் நிழல் - முற்பகல் நிழல்; விளியும் - சுருங்கும்; அல்கு நிழல் - பிற்பகல் நிழல்.)

*அகன்ற கடலின் குளிர்ந்த துறையை உடையவனே! சிறியோர்களுடைய நட்பு முற்பகல் நிழல்போல வரவரக் குறையும். பழமையான புகழை ஆளுகின்ற பெரியோர்களுடைய நட்பு, பிற்பகல் நிழல்போல வளர்ந்து வளர்ந்து நீளும்.*

*கருத்து* : **சிறியோர் நட்புச் சுருங்கி அழியும்; பெரியோர் நட்புத் தொடர்ந்து வளரும்.**

167. மன்னர் திருவும் மகளிர் எழில்நலமும்
துன்னியார் துய்ப்பர்; தகல்வேண்டா; – துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கட் சென்றார்க்(கு) ஒருங்கு.

(துன்னுதல் - நெருங்கிப் பழகுதல்; துய்ப்பர் - அனுபவிப்பர்; தகல் - தகுதி; குழை - தளிர்; உழை - இடம்; ஒருங்கு - ஒரே தன்மையாக.)

*அரசர்களின் செல்வத்தையும். மகளிரின் தோற்றப்பொலிவு நலத்தையும் நெருங்கிப் பழகுபவர் துய்ப்பர்; அவற்றிற்கு இன்னார் தகுதியுடையவர் என்று வேண்டியதில்லை. அஃது எதுபோலெனில், நெருங்கிய தளிர்களைக் கொண்டு கவிந்திருக்கின்ற குளிர்ந்த மரங்களெல்லாம் தம்மை அடைந்தவர்களுக்கு வேற்றுமையின்றி நிழலைக் கொடுப்பதுபோலாம். தகுதியுடையவர், தகுதியற்றவர் என்ற வேறுபாடு இன்றி மரம் எல்லோர்க்கும் நிழலளிக்கும்.*

*கருத்து* : **பெரியோரை எல்லாம் பயன்படுத்திக் கொள்வர்.**

168. தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்; – பெரிய
உலவா இருங்கழிச் சேர்ப்ப!யார் மாட்டும்
கலவாமை கோடி உறும்.

(தெரிவில்லார் - ஆராயும் அறிவில்லாதவர்; படர் - துன்பம்; உலவா - வற்றாத; இரு - பெரிய; கழி - உப்பங்கழி; உறும் - ஆகும்.)

*பெரிய, வற்றாத, நெடிய கழிகளையுடைய கடல் துறையை உடையவனே! விளங்க அறியும்படியான அறிவில்லாதவரிடத்திலும் நட்புக் கொண்டு, பின்பு பிரிந்தால் அது மிகவும் துன்பமாகிய வருத்தத்தைச் செய்யும். ஆதலால், பொதுப்படையாக எவரிடத்தும் நட்புக் கொள்ளாதிருத்தல், நட்புக் கொண்டு பிரிதலினும் பல மடங்கு நன்மையாகும்.*

*கருத்து* : **கூடிப் பிரிவதைவிட நட்புச் செய்யாதிருப்பது நல்லது.**

169. கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும், – ஒல்வ
கொடாஅ(து) ஒழிந்த பகலும், உரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண்.

(வைகிய - கழிந்த; ஒல்வ - கொடுக்க முடிந்ததை; ஒழிந்த - கழிந்த; படா - தோன்றா.)

*கற்க வேண்டியவைகளைக் கற்காமல் கழிந்த நாள்களும், பெரியவர்களிடத்துச் செல்லாது கழிந்த நாள்களும், இல்லை என்று கேட்டவர்க்கு இயன்றதைக் கொடாமல் கழிந்த நாள்களும் சொல்லப் போனால் பண்புடையாரிடத்துத் தோன்றாவாம்.*

*கருத்து* : **கல்லாமையும், பெரியோரைச் சேராமையும், ஈயாமையும் பண்புடையாரிடம் தோன்றா.**

170. பெரியார் பெருமை சிறுதகைமை; ஒன்றிற்(கு)
உரியார் உரிமை அடக்கம்; – தெரியுங்கால்
செல்வம் உடையாரும் செல்வரே, தற்சேர்ந்தார்
அல்லல் களைப எனின்.

(சிறு தகைமை - எளிமை தோன்ற வணங்கியிருத்தல்; உரிமை - சீரிய குணம்; தெரிதல் - ஆராய்தல்; அல்லல் - துன்பம்; களைதல் - நீக்குதல்.)

*பெரியோர்க்குப் பெருமையாவது எளிமை தோன்றப் பணிந்து ஒழுகுதல்; கல்வி, வீரம், செல்வம் ஆகியவற்றுள் யாதாயினும் ஒரு சிறப்பை உடையவர்க்குச் சிறந்த குணமாவது அடங்கி யிருத்தல்;*

*ஆராயுமிடத்து, தம்மை அடைந்தவர்களுடைய துன்பங் களை நீக்குவார்களானால் செல்வம் உடையவர் உண்மையில் செல்வமுடையவர் ஆவர். (இல்லையேல் செல்வம் உள்ளவராகக் கருதப்பட மாட்டார்.)*

*கருத்து* : **பணிவுடைமை பெரியோர்க்கும், அடக்கம் கற்றோர்க்கும், ஈகை செல்வர்க்கும் பெருமை சேர்க்கும்.**

# 18

# நல்லினம் சேர்தல்

171. அறியாப் பருவத்(து) அடங்காரோ(டு) ஒன்றி
நெறியல்ல செய்(து)ஒழுகி அவ்வும், – நெறிஅறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே, வெயில்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

(ஒன்றி - சேர்ந்து; ஒழுகி அவ்வும் - ஒழுகியவும்; நற்சார்வு - நல்ல தொடர்பு; முறுக - முதிர (மிகுதலால்)

*அறியாத பருவத்தில் அடக்கமில்லாத துடுக்குத்தனம் உள்ள வர்களோடு சேர்ந்து நன்னெறிக்குப் புறம்பாகச் செய்து வந்தவை எல்லாம், நன்னெறியுணர்ந்த பெரியோர்களிடம் சேர்ந்தால் வெயில் மிகுந்தோறும் புல்நுனியில் படிந்திருந்த பனி மறைவது போல மறையும்.*

*கருத்து* : **நல்லினம் சேர்தலால் தீமைகள் பகலவனைக் கண்ட பனியென மறையும்.**

172. அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை;எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(போற்றுமின் - (உம்மிடம் வராது) பாதுகாத்துக் கொள்ளுங்கள்; வஞ்சம் - வஞ்சனையான செயல்; வினை - செயல்; கேண்மை - நட்பு.)

*அறவழிகளை அறியுங்கள்; கூற்றுவனுக்கு அஞ்சுங்கள்; பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். வஞ்சனைச் செயல்களிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்; தீச்செயல் செய்வார் நட்பை வெறுத்து ஒதுக்குங்கள்; எப்பொழுதும் பெரியோர் வாயிற் பிறக்கும் சொற்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.*

*கருத்து* : **நல்லன செய்யுங்கள்; அல்லன அகற்றுங்கள்.**

173. அடைந்தார்ப் பிரிவும், அரும்பிணியும் கேடும்,
உடங்(கு)உடம்பு கொண்டார்க்(கு) உறலால் – தொடங்கிப்
பிறப்(பு)இன்னா(து) என்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மாஎன் நெஞ்சு.

(உடங்கு - உடனே; உறலால் - சேர்தலால்; உறப்புணர்க - உறுதியாகப் பற்றிக் கொள்க.)

*அம்மம்மா! சேர்ந்தவர்களைப் பிரிதலும், தீராத நோயும், இறப்பும் முடங்கிக் கிடக்கும் இந்த உடம்பை எடுத்தவர்களுக்கு வந்து சேர்தலால், தொன்றுதொட்டு வருகின்ற பிறப்பு, துன்பமுடையது என்று அறிகின்ற பேரறிவாளர்களை என் மனம் சிக்கெனப் பற்றிக் கொள்வதாக.*

*கருத்து* : **பிறவியைத் துன்பமென்றறியும் பெரியாரைச் சேர்க.**

174. இறப்ப நினையுங்கால் இன்னா(து) எனினும்
பிறப்பினை யாரும் முனியார்; – பிறப்பினுள்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ(டு) எஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

(இறப்ப - மிகவும்; முனியார் - வெறுக்க மாட்டார்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; நட்கப் பெறின் - நட்பைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றால்.)

*முற்ற முடிய ஆராயுமிடத்து, பிறப்புத் துன்பமேயானாலும், அப்பிறவியில் நல்லவைகளைச் செய்கின்ற மனமுடையாருடன் எந்நாளும் நெருக்கமாக நட்புச் செய்யும் நல்வாய்ப்புக் கிடைக்கப் பெற்றால், பிறவியைக் கொடுமையானது என்று எவரும் வெறுக்க மாட்டார்.*

*கருத்து* : **பெரியோர் நட்பினால் துன்பம் தரும் பிறப்பும் இன்பமாம்.**

175. ஊர்அங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்,
பேரும் பிறிதாகித், தீர்த்தமாம்; – ஓரும்
குலமாட்சி இல்லாரும், குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(அங்கணம் - சாய்க்கடை; உரவு நீர் - ஆற்று நீர்; தீர்த்தம் - புனித நீர்.)

*ஊரிலுள்ள சாய்க்கடை நீர், மிகுந்துவரும் ஆற்று நீரோடு சேர்ந்தால் அதன் பெயரும் வேறாகிப் புனித நீராகும். அதுபோல, குலச்சிறப்பு இல்லாதவரும் பெருமைமிக்க பெரியோரைச் சார்ந்தால் குன்றுபோல் புகழ் ஓங்கிச் சிறந்து நிற்பர்.*

*கருத்து* : **நல்லாரைச் சாரின் கீழோரும் பெருமை பெறுவர்.**

176. ஒண்கதிர் வாள்மதியம் சேர்தலால், ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்;

குன்றிய சீர்மையர் ஆயினும் சீர்பெறுவர்
குன்(று)அன்னார் கேண்மை கொளின்.

(வாள் - ஒளி; அங்கண் - அம் + கண் - அழகிய இடமகன்ற; முயல் - நிலவில் தோன்றும் முயல் உருவம் போன்ற களங்கம்.)

*ஒள்ளிய கதிர்களையுடைய ஒளிவீசும் நிலவைச் சேர்ந்திருப்பதால் உயர்ந்த அழகிய இடமகன்ற வானத்துத் திங்களில் களங்கமாய் அமைந்த முயல் உருவமும், வணங்கப்படும் பெருமையை அடைகிறது. அதுபோல, சிறப்பில் குறைந்தவர்களே ஆனாலும் மலைபோலும் மாண்புடைய பெரியோர் நட்பைக் கொள்வார்களானால் அவர்கள் நிறைந்த சிறப்பைப் பெறுவர்.*

*கருத்து* : **பெரியோரைச் சேர்ந்த சிறியோரும் சிறப்படைவர்.**

177. பாலோ(டு) அளாயநீர், பால்ஆகும் அல்லது,
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்; — தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம், நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(அளாய - கலந்த; நிறம் தெரிந்து - நிறம் வேறுபட்டு; தேரின் - ஆராயுங்கால்.)

*பாலோடு கலந்த நீர் பாலாகக் காணப்படுமே அல்லாமல் நீராய்த் தன்நிறம் விளங்கத் தோன்றாது. அதுபோல, ஆராயுமிடத்து நல்ல பெரியோர்களுடைய பெருமைக் குணத்தைச் சேர்ந்து இருத்தலால் சிறியோர் சிறுமைக் குணமும் தோன்றாமல் மறைந்து போகும்.*

*கருத்து* : **பெரியோருடன் சேர்ந்த சிறியோரும் பெரியோராகவே கருதப்படுவர்.**

178. கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே ஆகும், உழவர் உழுபடைக்கு;
மெல்லியரே ஆயினும், நற்சார்பு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்.

(கொல்லை - தோட்டம்; புனம் - வயல்; குற்றி - குத்துக்கட்டை; ஒல்கா - அசையா; உழுபடை - கலப்பை; செற்றார் - பகைவர்.)

*கொல்லையாகிய பெரிய புனத்தில் குத்துக்கட்டையை அடுத்துள்ள புற்கள் உழவருடைய கலப்பைக்குச் சிறிதும் அசையாதனவாகும். அதுபோல, வலிமையில்லாதவர்களேயானாலும் நல்ல நண்பர்களைச் சார்ந்திருப்பாரேயானால் அவரிடம் பகைவருடைய சினம் செல்லாது.*

*கருத்து* : **வலியாரைச் சார்ந்த மெலியாரும் வலிமை பெறுவர்.**

179. நிலநலத்தால் நந்திய நெல்லேபோல், தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்; – கலம்நலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச், சான்றாண்மை
தீஇனம் சேரக் கெடும்.

(நந்திய - வளர்ந்த (விளைந்த); கலம் - மரக்கலம்; தீ வளி - தீய காற்று (சுழல் காற்று); சிதைத்தல் - அழித்தல்.)

*நிலத்தினது நல்வளத்தால் மிகுந்து விளைகின்ற நெல்லைப் போல மக்களும் அவரவர் சேரும் குலத்தின் சிறப்பால் மேன் மக்கள் ஆவர். கடலில் செல்லும் மரக்கலத்தைச் சுழற்காற்றுச் சென்று சிதைப்பதுபோல, ஒருவரிடமுள்ள உயர்குணங்கள் தீய இனம் சேர்வதால் அழிந்துவிடும்.*

*கருத்து* : **தீயினம் சேர்வதால் சான்றாண்மை அழியும்.**

180. மனத்தான் மறுஇலர் ஏனும்,தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்; –புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே,
எறிபுனம் தீப்பட்டக் கால்.

(மறு - குற்றம்; ஏனும் - என்றாலும்; வெறி - மணம்; வேங்கை - மரம்; வேம் - வேகும்; எறிபுனம் - வெட்டி அழிக்கப்பட்ட காடு.)

*வெட்டிய, அழிக்கப்பட்ட காட்டில் நெருப்புப் பற்றினால் அக்காட்டிலுள்ள மற்ற மரங்களோடு சேர்ந்து, மணம் கமழ்கின்ற சந்தன மரமும் வேங்கை மரமும் வேகும். அதுபோல, ஒருவர் மனத்தால் குற்றமிலாராயினும் தாம் சேர்ந்த தீய இனத்தினால், அவரோடு சேர்ந்து தாமும் இகழப்படுவார்.*

*கருத்து* : **தீயாரோடு சேர்ந்த நல்லாரும் இகழப்படுவர்.**

# 19

# பெருமை

181. ஈதல் இசையா(து), இளமைசேண் நீங்குதலால்,
காத லவரும் கருத்தல்லர்; – காதலித்(து)
ஆதும்நாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(இசையாது - முடியாது; சேண் - நெடுந்தொலைவு; கருத்தல்லர் - எண்ணுதலும் இலர்; ஆதும் - ஆவோம் (இன்பமடைவோம்.)

*பொருளின்மையால் பிறர்க்கு ஒன்றைக் கொடுக்கவும் முடியாமல், இளமைப் பருவமும் நெடுந்தொலைவு கடந்து சென்று*

விட்டதால் நம்மேல் முன்பு அன்பு பூண்டவரும் இப்போது ஒரு பொருட்டாகக் கருதுவது இல்லை. ஆதலால், இல்லறத்தைக் காதலித்து இன்பமடைவோம் என்னும் ஆசையைக் கைவிட்டு, துறவு நெறியில் செல்வதே நமக்கு உண்மையான செல்வம் போலும்.

கருத்து : **இல்லற ஆசையில் தடுமாறுவதைத் தவிர்ப்பதே உண்மையான செல்வமாகும்.**

182. இற்சார்வின் ஏமாந்தேம், ஈங்கமைந்தேம் என்றெண்ணிப்
பொச்சாந்(து) ஒழுகுவர் பேதையார்; – அச்சார்வு
நின்றன போன்று நிலையா எனஉணர்ந்தார்,
என்றும் பரிவ(து) இலர்.

(ஏமாந்தேம் - இன்பமடைந்தோம்; ஈங்கு அமைந்தோம் - இவ்வுலகில் நலம் பெற்றிருக்கிறோம்; பொச்சாப்பு - பொல்லாங்கு; பரிவது - வருந்துவது.)

இல்லறத்தைச் சார்ந்திருப்பதால் பாதுகாப்பாக மகிழ்வுடன் இருக்கிறோம் என்றும், இவ்வுலகில் எல்லா நலன்களும் அமையப் பெற்றிருக்கிறோம் என்றும் நினைத்து, பின்னர் வர இருக்கும் துன்பத்தை மறந்து அறிவிலார் வாழ்வர். அப்பற்றுகள் எல்லாம் நிலைபெற்றனபோலக் காணப்பட்டு நிலைபெறாத் தன்மை யுடையன என்பதை அறிந்தவர்கள் என்றும் துன்பப்படுதல் இல்லை.

கருத்து : **பற்றுகளின் நிலையற்ற தன்மையை உணர்வதால் அறிவுடையார் வருந்துதல் இல்லை.**

183. மறுமைக்கு வித்து, மயல்இன்றிச் செய்து,
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்; – அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறாம்; காரணம்
இன்றிப் பலவும் உள.

(வித்து - விதை; மயல் - மயக்கம்; இன்றி - இல்லாமல்; நின்றுழி நின்றே - இருந்த இடத்தில் இருந்து கொண்டே.)

இருந்த இடத்தில் இருந்து கொண்டேயிருக்க உடம்பின் தன்மை வேறுபட்டுப் போகின்றது. எக்காரணமும் தெரியாமல் பல மாறுபாடுகள் உண்டாகிவிடுகின்றன. ஆதலால், நீங்கள் மறுமை இன்பத்திற்குக் காரணமாயுள்ள அறங்களை மயக்க மின்றிச் செய்து துன்பப்படாமல் அறிஞராய் வாழுங்கள்.

கருத்து : **மறுமைக்கு உறுதியான அறங்களை மயக்கமின்றிச் செய்யுங்கள்.**

184. உறைப்(பு)அரும் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத்(து)உணினும் ஊர்ஆற்றும் என்பர்; – கொடைக்கடனும்

சாஅஅய்க் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
ஆஅஅயக் கண்ணும் அரிது.

(உறைப்பு - மழைத்துளி; அறும் - அற்றுப்போன; ஆற்றும் - காப்பாற்றும்; சாய - தளர்ந்த; கண்ணும் - இடத்தும்; ஆய - பெருகிய.)

*மழைத்துளி இல்லாத காலத்திலும் ஊற்று நீர் உடைய கேணியின் நீரை இறைத்துக் குடித்தாலும் அஃது ஊராரைக் காப்பாற்றும் என்று சொல்வர். அதுபோல, தளர்ச்சி வந்தடைந்த காலத்திலும் பெரியோர் பிறர்க்குக் கொடுக்கும் கடமையைச் செய்வர்; ஆனால், சிறியோரோ செல்வம் பெருகிய காலத்திலும் பிறர்க்கு உதவுவது இல்லை.*

*கருத்து* : **சிறியோர் செல்வமுள்ளபோதும் உதவார்.**

185. உறுபுனல் தந்துல(கு) ஊட்டி, அறும்இடத்தும்,
கல்லூற் றுழிஊறும் ஆறேபோல், — செல்வம்
பலர்க்காற்றிக், கெட்(டு)உலந்தக் கண்ணும், சிலர்க்(கு)ஆற்றிச்
செய்வர் செயற்பா லவை.

(உறு - மிகுதி; அறும் - அற்றுப்போன; கல் ஊற்று - தோண்டப்படும் ஊற்று; உலந்த - வறண்டுபோன; செயற்பால - செய்யத்தக்கவற்றை.)

*மிக்க நீரைக் கொடுத்து உலகத்தை ஊட்டிய ஆற்றில் வெள்ளம் இல்லாத காலத்திலும், தோண்டப்படுகின்ற ஊற்றுக் குழியில் நீர் சுரக்கும். அதுபோல, பொருளைப் பலருக்கும் கொடுத்து உதவியவர் அதனால் செல்வமழிந்த காலத்திலும், தம்மால் முடிந்த அளவில், சிலர்க்காயினும் கொடுத்துச் செய்தற்கு உரியனவற்றைச் செய்து கொண்டிருப்பர்.*

*கருத்து* : **பெரியோர் வறுமையிலும் உதவுவர்.**

186. பெருவரை நாட! பெரியோர்கண் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும் — கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினும் சிறியார்மேல்
ஒன்றானும் தோன்றாக் கெடும்.

(கரு - நிறம்; நரை - வெண்மை; கரு நரை - வெள்ளை நிற எருது; ஒன்றானும் - ஒன்று கூட; தோன்றா - தோன்றாமல்.)

*பெரிய மலைநாடனே! பெரியோரிடத்து உண்டாகிய குற்றம் பெரிய வெள்ளை எருதின்மேல் போடப்பட்ட சூடு போலத் தெளிவாகத் தெரியும். அப்பெரிய எருதைக் கொன்றது போன்ற குற்றத்தைச் செய்தாலும் சிறியவர்களிடத்தில் ஒரு குற்றமும் வெளியே தோன்றாமல் மறைந்து விடும்.*

*கருத்து* : **பெரியோர் செய்யும் தவறு பளிச்செனத் உடனே தெரியும்.**

187. இசைந்த சிறுமை இயல்(பு)இலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம் — அசைந்த
நகையேயும் வேண்டாத நல்அறிவி னார்கண்
பகையேயும் பாடு பெறும்.

(இசைதல் - பொருந்துதல்; பசைதல் - நட்புக் கொண்டிருத்தல்; துணையும் - அளவும்; அசைந்த - நிலை தடுமாறிய; நகையேயும் - விளையாட்டிலே கூட; பாடு - பெருமை)

*சிறுமைக்குணம் பொருந்திய பண்பில்லாதவரிடத்தில் நட்புக் கொண்டிருக்கும் வரையிலும் துன்பமே உண்டாகும். நிலை தடுமாறிய தீய செயல்களை விளையாட்டிலேயும் விரும்பாத நல்லறிவாளரிடத்தில் கொண்ட பகையும் பெருமை தரும்.*

*கருத்து :* **சிறியோர் நட்பைவிடப் பெரியோர் பகைமை பெருமையுடையது.**

188. மெல்லிய நல்லாருள் மென்மை; அதுஇறந்(து)
ஒன்னாருள் கூற்(று)உட்கும் உட்(கு)உடைமை; எல்லாம்
சலவருள் சாலச் சலமே; நலவருள்
நன்மை வரம்பாய் விடல்.

(இறந்த - ஒழிந்த; ஒன்னார் - பகைவர்; உட்கும் - அஞ்சும்; சலவர் - வஞ்சனையுடையார்; சால - மிகுதி; வரம்பு - எல்லை.)

*மெல்லிய இயல்பினையுடைய நல்லாரிடத்து மென்மைத் தன்மையராய்த் திகழ்க; அதுவொழிந்த பகைவரிடத்தில் கூற்று வனும் அஞ்சத்தக்க கடுமையான செயல்களை மேற்கொள்க; எல்லா வகையிலும் வஞ்சனையுடையாரிடத்தில் அவரினும் மிக்க வஞ்சனை செலுத்துக; நல்லவர்களிடத்தில் நன்மைக்கு எல்லை யாய் விளங்குக.*

*கருத்து :* **இடத்திற்குத் தக்கவாறு ஒழுகுதலே பெருமை.**

189. கடுக்கி, ஒருவன் கடுங்குறளை பேசி,
மயக்கி விடினும், மனப்பிரிப்(பு)ஒன்(று) இன்றித்,
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்,
விளக்கினுள் ஒண்சுடரே போன்று.

(கடுக்கி - முகம் சுளித்து; குறளை - கோள் மொழி; துளக்கம் - நடுக்கம்; ஒண்சுடர் - ஒள் + சுடர் - ஒளி பொருந்திய சுடர்.)

*ஒருவன் சினமூட்டுபவனாய், கொடிய கோள்மொழிகளைப் பேசித் தம் அறிவை மயங்கச் செய்தாலும் தம் மனத்தில் வேறு பாடு ஒன்றும் இல்லாமல் விளக்கின் ஒள்ளிய சுடரைப் போலக் கலக்கமின்றி இருப்பர், தூயமனத்தர்.*

*கருத்து :* **தூயமனமுடையவர் சினமூட்டினாலும் நிலைதளரார்.**

190. முன்துற்றுத் துற்றினை நாளும் அறஞ்செய்து
பின்துற்றுத் துற்றுவர் சான்றவர்; – அத்துற்று,
முக்குற்றம் நீக்கி, முடியும் அளவெல்லாம்,
துக்கத்துள் நீக்கி விடும்.

(துற்று - பிடி உணவு; துற்றுதல் - உண்ணுதல்; முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம் எனும் மூன்று குற்றம்; முடியும் அளவு எல்லாம் - இறக்கும் காலம் வரையிலும்; துக்கம் - துன்பம்.)

*ஒவ்வொரு நாளும் சான்றோர் முதலில் எடுத்த பிடி உணவினைப் பிறர்க்குக் கொடுத்து அதன்பிறகே தாம் உண்பர். பிறர்க்குக் கொடுத்து உண்டதாகிய அவ்வுணவு அவர்களுடைய காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களையும் போக்கி இறக்குமளவும் அவர்களை எல்லாத் துன்பங்களிலிருந்தும் நீக்கி விடும்.*

*கருத்து* : **சான்றோர் பிறர்க்குக் கொடுத்த பிறகே தாம் உண்ணுவர்.**

# 20

# தாளாண்மை

191. கோள்ஆற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போல்,
கேள்ஈவ(து) உண்டு கிளைகளோ துஞ்சுப;
வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்
தாளாளர்க்(கு) உண்டோ தவறு?

(கோள் - கொள்ளுதல்; ஆற்ற - மிகுதியாக; கூழ் - பயிர்; கேள் - உறவினர்; துஞ்சுப - அழிவர்; கூத்தியர் - ஆடுமகளிர்; தாள் - முயற்சி.)

*கொள்ளுதற்குரிய நீரை மிகுதியாகக் கொள்ளமாட்டாத குளத்தின் பாய்ச்சலில் உள்ள பசிய பயிர்போல உறவினர் தந்த உணவை உண்டு பிழைப்போர், அவ்வுறவினர் வறுமையுற்றபோது தாமும் அழிவர். அவ்வாறின்றி வாளின் மேலிருந்து ஆடுகின்ற மகளிரது கண்போல, நாற்புறமும் ஒருசேரச் சுழல்கின்ற முயற்சியுடையார்க்குக் குறைவு நேர்வது உண்டா? (இல்லை.)*

*கருத்து* : **முயற்சியுடையார் முட்டுப்பாடின்றி வாழ்வர்.**

192. ஆடுகோ(டு) ஆகி, அதர்இடை நின்றதூஉம்,
காழ்கொண்ட கண்ணே, களி(று)அணைக்கும் கந்(து)ஆகும்
வாழ்தலும் அன்ன தகைத்தே; ஒருவன்தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

(கோடு - கொம்பு; அதர் - வழி; காழ் - உறுதி; களிறு - ஆண்யானை; கந்து - கட்டுத்தறி முளை; தகைத்தே - தன்மையதே.)

துவளுகின்ற சிறு கொம்பாக வழியில் நின்ற இளமரமும் வயிரம் பாய்ந்தபோது யானையைக் கட்டும் கட்டுத்தறி முளை யாக ஆகும். ஒருவன் சோர்வின்றி முயன்று தன்னை உயர்த்திக் கொள்வான். ஆனால், அவனுடைய வாழ்க்கையும் அப்படிப்பட்ட தன்மையுடையது ஆகும்.

*கருத்து :* **முயற்சியில் சோர்வின்மை வலிமையைச் சேர்க்கும்.**

193. உறுபுலி ஊன்இரை இன்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும்; – அறிவினால்
கால்தொழில் என்று கருதற்க; கையினால்
மேல்தொழிலும் ஆங்கே மிகும்.

**(உறு - (வலிமை) மிகுந்த; ஊன் - இறைச்சி; கால் தொழில் - சிறு தொழில்; ஆங்கே - அங்கே.)**

வலிமை பொருந்திய புலி, இறைச்சி உணவு கிடைக்காமல், ஒரு நாளில் சிறு தவளையைப் பிடித்தும் தின்னுதல் உண்டு. ஆதலால், தனக்குள்ள அறிவாற்றல் கருதி இது சிறு தொழில் என்று எதையும் அலட்சியமாக நினையாதே. சிறு தொழிலாயினும் அதனை முயற்சியுடன் செய்து வந்தால் அது மேன்மையான தொழிலாக மேம்படவும் கூடும்.

*கருத்து :* **சிறு தொழிலாயினும் முயற்சியோடு செய்தால் மேன்மை அடையலாம்.**

194. இசையா(து) எனினும் இயற்றிஓர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை; – இசையுங்கால்
கண்டல் திரைஅலைங்குங் கானலந் தண்சேர்ப்ப!
பெண்டிரும் வாழாரோ மற்று.

**(இசையாது - கை கூடாது; இயற்றி - செய்து; ஓர் ஆற்றால் - ஒரு வகையாலும்; அசையாது - தளராது; கண்டல் - தாழை.)**

தாழையை அலைகள் அலைக்கின்ற சோலைகளை உடைய குளிர்ச்சியான கடற்கரையை உடையவனே! ஒரு செயல் எளிதில் கைகூடாது. ஆயினும், அதை முயற்சியோடு செய்து ஒருவகை யாலும் தளராமல் நிற்பதே ஆண்மை. எளிதாகக் கைகூடுபவை களைப் பெண்களும் செய்து முடித்து விடுவார்களே!

*கருத்து :* **எளிதில் கைகூடாத செயலையும் முயற்சியோடு செய்து முடிப்பதே ஆண்மை.**

195. நல்ல குலம்என்றும், தீய குலம்என்றும்,
சொல்லளவு(வு) அல்லால் பொருள்இல்லை; – தொல்சிறப்பின்

ஒண்பொருள் ஒன்றோ, தவம்கல்வி ஆள்வினை
என்(று)இவற்றால் ஆகும் குலம்.

(அல்லால் - அல்லாமல்; தொல் சிறப்பு - பழமையான சிறப்பு; ஆள்வினை - முயற்சி.)

*உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் சொல்லுதல் சொல் அளவே அல்லாமல் அதற்குப் பொருள் எதுவும் இல்லை. குலம் என்பது பழமையாகிய சிறப்பினையுடைய மிக்க செல்வத் தால் மட்டுமல்லாமல் தவம், கல்வி, முயற்சி என்ற இவற்றாலும் வருவது ஆகும்.*

*கருத்து* : **முயற்சியால் ஈட்டிய பொருளுடன் கல்வியும் தவமும் உடையவரே உயர் குலத்தவர்.**

196. ஆற்றும் துணையும் அறிவினை உள்அடக்கி,
ஊக்கம் உரையார் உணர்வுடையார்; — ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட(து) உலகு.

(ஆற்றும் துணையும் - (ஒரு செயலை) முடிக்கும் வரையிலும்; ஊக்கம் - முயற்சி; ஒண்மை - அறிவு; பட்டது - தங்கியிருந்தது.)

*நல்லுணர்வு உடையவர்கள் தாம் எடுத்த செயலை முடிக்கும் வரையிலும் தம் துணிவுகளை மனத்துள்ளே அடக்கி, தம் முயற்சியையும் பிறரறியச் சொல்ல மாட்டார்கள். மேலும் பிறரு டைய ஊக்கத்தை அவர்களுடைய உறுப்புகளின் குறிப்பினால் ஆராய்ந்தறியும் ஒள்ளிய அறிவும் உடையவர்களாயிருப்பர். ஆதலின், இத்தகையவருடைய குறிப்பின்கீழ் உலகம் தங்குகிறது.*

*கருத்து* : **முயற்சி செய்தும் பிறர் முயற்சியை அறிந்தும் வாழ்கின்ற அறிவுடையாளர் வழியில் உலகம் நிற்கும்.**

197. சிதலை தினப்பட்ட ஆல மரத்தை,
மதலையாய், மற்(று)அதன் வீழ்ஊன்றி யாங்குக்,
குதலைமை தந்தைகண் தோன்றில்,தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(சிதலை - கறையான்; மதலை - தூண்; வீழ் - விழுது; குதலைமை - தளர்ச்சி; கெடும் - நீங்கும்.)

*கறையானால் அரிக்கப்பட்ட, அடி மரம் சிதைந்த ஆல மரத்தை அதிலிருந்து இறங்கிய விழுதுகள் தூணாக நிலத்தில் ஊன்றித் தாங்கிக் கொள்வதுபோல, தந்தையிடத்துத் தளர்ச்சி தோன்றும் போது, அவன் பெற்ற பிள்ளை தன் முயற்சியால் அக்குடும்பச் சுமையைத் தாங்கி நிற்பானானால், அத்தந்தையின் தளர்ச்சி இல்லாது நீங்கும்.*

*கருத்து* : **ஆலின் விழுதுபோல் ஒருவன் தான் பிறந்த குடியைத் தாங்க வேண்டும்.**

198. ஈனமாய் இல்இருந்(து), இன்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ? – யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்உகிர் நோன்தாள்
அரிமா மதுகை யவர்.

**(ஈனம் - தாழ்ந்த நிலை; இல் - வீடு; விளிதல் - இறத்தல்; வள் - கூரிய; உகிர் - நகம்; நோன்தாள் - வலிமை; அரிமா - சிங்கம்; மதுகை - வலிமை.)**

*புள்ளிகளையுடைய யானையினது முகத்தைப் புண்படுத்தும் வளைந்த நகத்தையும், வலிய காலையுமுடைய சிங்கத்தையொத்த வலிமையுடையவர், தாழ்ந்த நிலையினராய் வீட்டிலேயே இருந்து, ஏதுமில்லாமல் இறக்க நேரிட்டாலும் தமக்கு மானக்குறைவை உண்டாக்கும் செயல்களைச் செய்வரோ? (செய்யார்).*

*கருத்து* : **வறுமைக் காலத்தும் மேலோர் பிறர் பழிக்கும் செயல்களைச் செய்யார்.**

199. தீங்கரும்(பு) ஈன்ற திரள்கால் உளைஅலரி
தேங்கமழ் நாற்றம், இழந்தாஅங்(கு) – ஓங்கும்
உயர்குடி யுள்பிறப்பின் என்னாம்? பெயர்பொறிக்கும்
பேராண்மை இல்லாக் கடை.

**(தீம் - இன் சுவை; திரள் கால் - திரண்ட காம்பு; உளை - பிடரி மயிர்; அலரி - பூ; என்+ஆம்=என்னாம் - என்ன ஆகும்?; பொறிக்கும் - நிலைநிறுத்தும்; இல்லாக்கடை - இல்லாத போது.)**

*திரண்ட காம்பு கொண்டதும் குதிரையின் பிடரி மயிரைப் போன்ற தோற்றம் கொண்டதுமான கரும்புப்பூ, இனிதாகக் கமழ்கின்ற மணத்தை இழந்திருப்பது போல, தன் பெயரை நிலைநிறுத்துதற்குரிய பெரிய முயற்சித் திறமை இல்லாதபோது, ஒருவன் ஓங்கி உயர்ந்த குடியிற் பிறந்ததனால் மட்டும் என்ன பயன்? (பூத்தும் மணக்காத கரும்புப் பூப்போலப் பிறந்தும் பயனில்லாதவன் ஆவான்.)*

*கருத்து* : **பெயரை நிலைநிறுத்தும் பேராண்மை இல்லாவிட்டால் உயர்குடிப்பிறப்பில் பயன் இல்லை.**

200. பெருமுத் தரையர் பெரி(து)உவந்(து) ஈயும்
கருனைச்சோ(று) ஆர்வர் கயவர்; – கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்.

(கருனைச் சோறு - பொறிக் கறியோடு கூடிய சோறு; ஆர்வர் - உண்ணுவர்; பேரும் - பெயரும்; நனி - மிகுதி; தாளாண்மை - முயற்சி.)

*பெருமுத்தரையர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற செல்வர் பெரிதும் மகிழ்ந்து கொடுக்கின்ற பொரிக்கறியோடு கூடிய சோற்றைக் கீழோர் ஆர்வத்தோடு உண்பர். ஆனால், பொரிக்கறி யின் பெயரும் அறியாதவராய், தாம் மிகவும் விரும்பி மேற் கொண்ட முயற்சியால் கிடைத்தது நீரே என்றாலும், அம்முயற்சி யுடையார்க்கு அதுவே அமிழ்தம்போல் இனிமையாக இருக்கும்.*

***கருத்து* : தன் முயற்சியால் கிடைப்பது கூழே ஆனாலும் அஃது அமிழ்தினும் சிறந்தது.**

# 21

# சுற்றந்தழால்

201. வயாவும், வருத்தமும், ஈன்றக்கால் நோவும்,
கவாஅன் மகன்கண்டு தாய்மறந் தாஅங்(கு);
அசாஅத்தான் உற்ற வருத்தம், உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(வயா - கருவுற்றதனால் உண்டாகும் துன்பம்; நோவு - துன்பம்; கவான் - மடி; அசா - தளர்ச்சி; உசாதல் - கேட்டல்.)

*கருவுற்ற காலத்துத் தோன்றும் மசக்கைத் துன்பத்தையும், கருவைச் சுமக்கும் துன்பத்தையும், மகவு ஈனும் காலத்தில் உண்டாகும் துன்பத்தையும் தாயானவள் தன் மடிமேல் கிடக்கும் குழந்தையைக் கண்ட அளவில் மறப்பதுபோல, தளர்ச்சியால் ஒருவன் அடைந்த துன்பம் அதனைக் கேட்டறிந்து உதவி செய்கின்ற உறவின் முறையினரைக் கண்டவுடனேயே நீங்கும்.*

***கருத்து* : ஒருவன் அடையும் தளர்ச்சியும் வருத்தமும் உதவி செய்கின்ற உறவினரைக் கண்டவுடன் நீங்கும்.**

202. அழல்மண்டு போழ்தில், அடைந்தவர்கட்(கு) எல்லாம்,
நிழல்மரம்போல் நேர்ஒப்பத் தாங்கிப், – பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத், தான்வருந்தி வாழ்வதே
நல்ஆண் மகற்குக் கடன்.

(மண்டுதல் - மிகுதல்; நேர் ஒப்ப - ஒரே மாதிரி; பல்லார் - பலர்; துய்த்தல் - நுகர்தல்.)

*வெம்மை மிக்க கோடைக் காலத்தில் தன்னைச் சேர்ந்தவர்கட் கெல்லாம் நிழலைத் தரும் மரத்தைப் போல, தன்னைச் சார்ந்தவர்*

*களை வேற்றுமையின்றிக் காப்பாற்றி, பழுத்திருக்கும் மரத்தைப் போலத் தான் வருத்தம் ஏற்றாயினும் தன்னையடைந்தார் பலரும் பயன் நுகருமாறு செய்து வாழ்ந்திருப்பதே சிறந்த ஆண்மகனுக்குக் கடமையாகும். (பழுத்த மரம் கல்லடிபட்டுத் துன்புறும்.)*

*கருத்து* : **நிழல் மரம்போல அடைந்தவரைக் காத்து, பழுமரம் போலப் பிறர்க்குப் பயன்பட்டு வாழ்தல் வேண்டும்.**

**203.** அடுக்கல் மலைநாட! தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்; அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

**(எடுக்கலம் - பாதுகாக்க மாட்டோம்; வன்காய் - திரண்ட காய்; பொறுக்கலா - தாங்க முடியாத.)**

*அடுக்கடுக்கான மலைகள் பொருந்திய நாட்டையுடையவனே! மேன்மேலும் திரண்ட காய்களை நிரம்பக் காய்த்தாலும் தன் இடத்துத் தோன்றிய அக்காய்களைச் சுமக்க மாட்டாத மரக் கிளைகள் இல்லையன்றோ? அதுபோல, பெரியவர்கள் தம்மைத் தேடி அடைந்தவர் பலராயினும் ஏற்றுப் பாதுகாக்க மாட்டோம் என்று சொல்ல மாட்டார்கள்.*

*கருத்து* : **பெரியவர்கள் தம்மை அண்டியவர்களையெல்லாம் பாதுகாப்பர்.**

**204.** உல(கு)அறியத் தீரக் கலப்பினும் நில்லா,
சிலபகலாம் சிற்றினத்தார் கேண்மை; – நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறிடைய நின்றனைத்தால்
ஒற்கம் இலாளர் தொடர்பு.

**(தீர - இரண்டற; நில்லா - (நிலைத்து) நிற்காது; சில பகல் - சில நாள்; ஒற்கம் - மனத் தளர்ச்சி.)**

*உலகத்தார் எல்லாரும் அறியுமாறு இரண்டறக் கலந்து உறவு கொண்டாலும் கீழ்மக்கள் நட்பு நிலைத்து நிற்காது; சில நாள்களே நிற்கும். மனத் தளர்ச்சியில்லாதவர்களுடன் கொண்ட உறவோ, நிலை குலையாமல், அறநெறியில் நிற்கும் பெரியோர் தாம் கொண்ட குறிக்கோள் நிறைவேறுமளவும் உறுதியாக நிற்பதுபோல ஊன்றி நிற்கும்.*

*கருத்து* : **கீழோர் நட்பு நிலையில்லாதது; மேலோர் நட்பு என்றும் நிலையானது.**

**205.** இன்னர், இனையர், எமர்பிறர், என்னும்செல்
என்னும் இலராம் இயல்பினால், – துன்னித்

தொலைமக்கள் துன்பம்தீர்ப் பாரே,யார் மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்.

(இனையர் - இத்தன்மையர்; எமர் - எமக்கு வேண்டியவர்; என்னும் - மிகச் சிறிதும்; துன்னி - சேர்ந்து; பாலார் - தன்மை யுடைவர்.)

*'இவர் இத்தன்மையர்; எமக்கு வேண்டியர்; எமக்கு வேண்டாதவர்' என்று வேறுபடுத்திச் சொல்லுகின்ற சொற்கள் எந்த அளவும் தம்மிடம் இல்லாத இயல்பினராய், தம்மை அடைந்து துயரத்தால் வாடுகின்ற மக்களின் துன்பத்தை நீக்கிக் காக்கின்றவர்களே, எவராலும் மேன்மக்கள் என்று கருதப்பெறும் தன்மையுடையவர் ஆவர்.*

*கருத்து* : **மேன்மக்கள் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி அனைவர்க்கும் உதவுவர்.**

206. பொற்கலத்துப் பெய்த புலிஉகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ(டு) அமரார்கைத்(து) உண்டலின்,
உப்பிலிப் புற்கை, உயிர்போல் கிளைஞர்மாட்(டு),
எக்கலத் தானும் இனிது.

(உகிர் - நகம்; புழுக்கல் - சோறு; அக்காரம் - சர்க்கரை; அமரார் - அன்பில்லாதவர்; உப்பிலி - உப்பு இல்லாத; புற்கை - புல்லரிசிக் கூழ்.)

*பொற்கலத்திலிட்ட புலிநகம் போன்ற வெண்மையான சோற்றைச் சர்க்கரையுடனும் பசுவின் பாலுடனும் சேர்த்து அன்பில்லாதவரிடத்தில் பெற்று உண்பதைக் காட்டிலும் உப்பில்லாத புல்லரிசிக் கூழை உயிர்போன்ற உறவின் முறையாரிடத்தில் பெற்று, அதனை எத்தகைய கலத்திலிட்டு உண்டாலும் இனியதாகும்.*

*கருத்து* : **சுற்றத்தாரின் கூழுணவு அன்பிலாரின் விருந்துணவை விடச் சிறந்தது.**

207. நாள்வாய்ப் பெறினும்,தம் நள்ளாதார் இல்லத்து
வேளாண்மை, வெம்கருனை வேம்பாகும்; — கேளாய்!
அபராணப் போழ்தில் அட(கு)இடுவ ரேனும்
தமராயார் மாட்டே இனிது.

(நள்ளாதார் - உறவினர் அல்லாதார்; கருனை - கறியமுது; அடகு - கீரைக்கறி; அபராணப்பொழுது - மாலைப்பொழுது.)

*தமக்கு உறவினர் அல்லாதார் வீட்டில், வேளை தவறாமல் விருப்பம் பொருந்திய கருனைப் பொரியலோடு கூடிய உணவினைப் பெற்றாலும் அது வேப்பங்காயை ஒத்ததாகும். அந்திக் காலத்தில், வெறும் கீரைக்கறியை மட்டுமே உணவாகக் கொடுப்பாராயினும், அன்புடைய சுற்றத்தாரிடத்தில் உண்பதே இன்பமாகும். மனமே இதைக் கேட்பாயாக!*

*கருத்து* : **உறவினர் உணவு, உறவினர் அல்லாதார் உணவைவிட எளியதாயினும் அதுவே இனிதாம்.**

208\. முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டிஉண் பாரும் குறடுபோல் கைவிடுவர்;
சுட்டுக்கோல் போல எரியும் புகுவரே
நட்டார் எனப்படு வார்.

(முட்டிகை - சம்மட்டி; முனியாது - வெறுப்பில்லாமல்; கொட்டி - அடித்து; நட்டார் - நட்புடைய உறவினர்.)

*சம்மட்டி போல நாளும் பிறரை வருத்தி உண்பவர், காலம் நேர்ந்தால் உணவு கொடுக்கும் அவரை, நெருப்பிலே இரும்பைப் போட்டுவிட்டுத் தான் விலகிக் கொள்ளும் குறடுபோல நீங்கி விடுவர். ஆனால் அன்புடைய உறவினர்களோ, தம்மை நெருங்கிய வரைக் கைவிடாமல், பொருளோடு சேர்ந்து நெருப்பிலே நுழைகின்ற உலையாணிக் கோல்போலத் தாமும் நெருப்பினுள் மூழ்குவர்.*

*கருத்து* : **இன்பத்தில் உடனிருந்து துன்பத்தில் நீங்குபவர் உறவினர் ஆகார்.**

209\. நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையும் செய்வ(து) ஒன்(று)உண்டோ? – இறும்அளவும்
இன்புறுவ இன்புற்(று), எழீஇ அவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

(கோதாய் - மலர் மாலையை அணிந்தவளே; இறும் அளவும் - இறக்கும் வரையிலும்; எழீஇ - எழுந்து.)

*மணமுள்ள மலர்களாலாகிய குளிர்ந்த மாலையை அணிந் தவளே! நண்பருக்கு நண்பராய் இருப்போர் ஒருவர்க்கு ஒருவர் இறக்கும் வரையிலும் இன்பமடைவதில் இன்பமடைந்து, கூடவே இருந்து, துன்புறும்போது துன்பமடையாவிட்டால், மறு பிறப்பிலே செய்யத்தக்க நற்காரியம் ஒன்று உண்டா? (இல்லை என்றவாறு.)*

*கருத்து* : **நண்பர்க்கு நண்பர் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும்.**

210\. விருப்பிலார் இல்லத்து வேறிருந்(து) உண்ணும்
வெருக்குக்கண் வெம்கருனை வேம்பாம் – விருப்புடைத்
தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை
என்போ(டு) இயைந்த அமிழ்து.

(வேறு இருந்து - தனியே இருந்து; வெருக்கு - பூனை; தயங்கு நீர் - தெளிந்த நீர்; புற்கை - புல்லரிசிக் கூழ்.)

*அன்பில்லாதார் இல்லத்திலே தனியேயிருந்து உண்ணுகின்ற பூனைக்கண் போன்றதும் விரும்பும் சுவையையுடையதுமான கருனைப் பொரியலோடு கூடிய உணவும் வேம்புபோலக் கசப்புடையதாகும். அன்புடைய தன்னோடொத்த உறவினர் வீட்டில் தெளிந்த நீர் போன்ற குளிர்ந்த புல்லரிசிக் கூழைக் குடிப்பதும் உடம்புடன் பொருந்துகின்ற இனிய அமிழ்தாக இருக்கும்.*

*கருத்து* : **அன்பிலார் விருந்து வேம்பு; அன்புடையார் கூழ் அமிழ்து.**

# 22

# நட்பாராய்தல்

211. கருத்(து)உணர்ந்து கற்(று)அறிந்தார் கேண்மை,எஞ் ஞான்றும்
குருத்தின் கரும்புதின்(று) அற்றே, – குருத்திற்கு
எதிர்செலத்தின்(று) அன்ன தகைத்(து)அரோ, என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.

(குருத்தின் - குருத்திலிருந்து; அற்று - போன்றது; அன்ன - போன்ற; தகைத்து - தன்மையுடையது; மதுரம் - இனிமை.)

*நூல்களின் உட்பொருளைத் தெரிந்து கற்றுத் தெளிந்தவர்களுடைய நட்பு, மேல் நுனியிலிருந்து கரும்பைத் தின்பதுபோலச் சுவை கூடிச் செல்லும் தன்மையுடையது. இனிய தன்மை இல்லாதவர்களுடைய நட்பு, அக்கரும்பைக் குருத்திற்கு எதிராக அடியிலிருந்து தின்பதுபோலச் சுவை குறைந்து செல்லும் தன்மையுடையது.*

*கருத்து* : **கற்றார் நட்பு சுவை பெருகும்; கல்லார் நட்பு சுவை குறையும்.**

212. இற்பிறப்(பு) எண்ணி, இடைதிரியார் என்பதோர்
நற்புடை கொண்டமை அல்லது, – பொற்கேழ்
புனல்ஒழுகப் புள்இரியும் பூங்குன்ற நாட!
மனம்அறியப் பட்ட(து)ஒன்(று) அன்று.

(திரியார் - வேறுபட மாட்டார்; நற்புடை - நல்ல தன்மை; பொற்கேழ் - பொன்+கேழ் = பொன் நிறம்; இரிதல் - ஓடுதல்.)

*பொன்னைக் கொழித்து விழுகின்ற அருவி நீரின் ஒலி கேட்டுப் பறவைகள் அஞ்சிப் பறந்தோடுகின்ற அழகிய மலை நாடனே! ஒருவருடைய குடிபிறப்பைக் கருதி, (அவருடன் நட்புக்*

*கொண்டால்) நடுவில் அவர் வேறுபட மாட்டார் என்றதொரு நல்ல தன்மையை மனத்திற்கொண்டு நட்புக் கொள்வதே அல்லாமல், நட்பாராய்தல் என்பது நண்பர்களின் உள்ளம் முழுவதையும் அறிந்து கொண்ட ஒன்று அன்று.*

*கருத்து* : **நட்பு நம்பிக்கையின்பாற்பட்டது; முற்றிலும் ஆராய்தல் முடியாத ஒன்று.**

**213.** யானை அனையவர் நண்(பு)ஒரீஇ, நாய்அனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்; – யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(ஒரீஇ - நீக்கி; தழீஇக் கொளல் - தழுவிக் கொள்ளுதல்; மெய்யதா - உடம்பில் தைத்திருக்கும்போதும்.)

*யானையை ஒப்பானவர் நட்பை நீக்கி நாயை ஒப்பானவர் நட்பைத் தழுவிக் கொள்ள வேண்டும். ஏனெனில், யானை பல காலம் பழகியிருந்தும், தனக்கு உணவு முதலியன கொடுத்துக் காத்திடும் பாகனையே கொல்லும். நாய், தன்னை வளர்ப்பவன் தன்மேற்சினந்து எறிந்த வேலானது தன் உடம்பில் தைத்துள்ள நிலையிலும் வாலை ஆட்டித் தன் அன்புடைமையைக் காட்டி நிற்கும்.*

*கருத்து* : **நன்றி மறவாதாரிடம் மட்டுமே நட்புக் கொள்ள வேண்டும்.**

**214.** பலநாளும் பக்கத்தார் ஆயினும், நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோ(டு) ஒட்டார்; – பலநாளும்
நீத்தார் எனக்கை விடல்உண்டோ? தம்நெஞ்சத்(து)
யாத்தாரோ(டு) யாத்த தொடர்பு.

(பக்கத்தார் - பக்கத்திலே வாழ்ந்திருப்பவர்; ஒட்டார் - சேர மாட்டார்; நீத்தார் - (தம்மை விட்டு) நீங்கியுள்ளவர்; யாத்தல் - கட்டுதல்.)

*பல நாளும் தம் பக்கத்திலேயே வாழ்ந்துள்ளவர்களானாலும் சில நாள் கூட உள்ளத்தோடு ஒன்றாதவர்களிடம் அறிவுடையார் நட்புக் கொள்ளமாட்டார். ஆனால் தம் மனத்தை அன்பால் பிணித்தவர்களுடன் கொண்ட நட்பை, அவர்கள் பல காலம் தம்மை விட்டு அகன்றுள்ளார் என்பதற்காகக் கைவிடுதல் உண்டோ? (இல்லை).*

*கருத்து* : **உடன் இருப்பது உண்மை நட்பன்று; உள்ளக் கலப்பே உயர்ந்த நட்பு.**

**215.** கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது,
வேட்டதே வேட்டதாம் நட்(பு)ஆட்சி; – தோட்ட

கயப்பூப்போல், முன்மலர்ந்து பின்கூம்பு வாரை,
நயப்பாரும் நட்பாரும் இல்.

(கோடு - மரக்கிளை; கூம்புதல் - குவிதல்; வேட்டல் - விரும்புதல்; கயம் - நீர் நிலை; நயத்தல் - விரும்புதல்.)

*மரக்கிளைகளில் பூக்கின்ற பூவைப்போல மலர்ந்தது மலர்ந்ததாகவே, பின்பு சுருங்குதல் இல்லாமல், ஒருவரோடு ஒருவர் கொண்ட விருப்பம் இறுதிவரை மாறாது இருப்பது தான் நட்பின் சிறப்பு ஆகும். தோண்டப்பட்ட நீர்நிலையிலுள்ள பூவைப்போல முதலில் மலர்ச்சி காட்டி, பின்பு முகம் சுருங்கும் இயல்புடையாரை விரும்புவாரும் நட்புச் செய்வாரும் இல்லை.*

*கருத்து* : **நிலைமாறும் தன்மையில்லாதிருப்பதே உண்மை நட்பு.**

216. கடையாயார் நட்பில் கமு(கு)அனையர்; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்; – தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்(று) இட்டஞான்(று) இட்டதே
தொண்மை உடையார் தொடர்பு.

(கமுகு - பாக்கு; தெங்கு - தென்னை; பெண்ணை - பனை; ஞான்று - பொழுது; தொடர்பு - நட்பு.)

*நட்பில் கடைப்பட்டவர், ஒருநாள் தண்ணீர்விடாவிட்டாலும் பயன்கொடாத பாக்கு மரத்திற்கு ஒப்பாவர். மற்றை இடைப்பட்டவர், பாதுகாக்கும் அளவுக்கே பயன் தருகின்ற தென்னை மரத்தை ஒத்திருப்பர். முதல் தரமானவராகிய பழமை கருதும் மேன்மக்களுடைய நட்பு ஊன்றிய பிறகு எப்போதும் எவ்வகைப் பாதுகாப்பும் இல்லாதிருக்கவும் பயன் தருகின்ற, நினைத்தற்கும் அருமையான சிறப்புடைய பனைமரத்தைப் போன்றது. அந்நட்பு ஊன்றிய காலத்ததுபோல் ஊன்றியே நிற்கும்.*

*கருத்து* : **கைம்மாறு கருதாத நட்பே சிறந்த நட்பு.**

217. கழுநீருள் கார்அட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்; – விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே ஆயினும் மேவாதார்
கைத்(து)உண்டல் காஞ்சிரங் காய்.

(கார் - கறுத்த; அடகு - கீரைக்கறி; விழுமிதா - சிறந்ததாக; குய் - தாளிதம்; துவை - துவையல்; மேவாதார் - அன்பில்லாதார்.)

*கழுநீரில் வெந்த முற்றிய கீரைக் கறியேயானாலும் நண்பர் ஒருவர் கையிலிருந்து அதைச் சிறப்பானதாக ஏற்றுக் கொள்ளும் போது அதுவே அமிழ்தாம்; தாளிதம் செய்த துவையலோடு கூடிய வெண்மையான சோற்றுணவாயினும் உள்ளன்பில்லா தவர் கையில் பெற்று உண்ணுதல் எட்டிக்காயை உண்பதற்கு ஒப்பாகும்.*

*கருத்து* : **அன்புடையார் இடும் இலைக்கறியும் அமிழ்து; அன்பிலார் தரும் அறுசுவை உணவும் எட்டிக்காய்.**

218. நாய்க்கால் சிறுவிரல்போல், நன்(கு)அணியர் ஆயினும்,
ஈக்கால் துணையும் உதவாதார் நட்(பு)என்னாம்?
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும், செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு.

(அணியர் - நெருங்கி இருப்பவர்; துணையும் - அளவு கூட; சேய்மை - நெடுந்தொலைவு; செய் - வயல்; அனையார் - போன்றவர்.)

*நாயின் காலிலுள்ள சிறிய விரல்களைப்போல நம்மிடம் மிகவும் நெருக்கமுடையவராக இருந்தாலும் ஈயின் கால் அளவா கிலும் உதவி செய்யாதவருடைய நட்பு என்ன பயனுடையது? வயலில் பாய்ந்து விளைவிக்கின்ற வாய்க்காலைப் போன்ற தண்ணளியாளரின் நட்பை அவர்கள் நெடுந்தொலைவில் இருப் பாராயினும் தேடிப்போய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*கருத்து* : **உதவும் பண்புடையவர்களைத் தேடிச் சென்றாகிலும் நட்புக் கொள்ள வேண்டும்.**

219. தெளிவிலார் நட்பின் பகைநன்று; சாதல்
விளியா அருநோயின் நன்றால்; – அளிய
இகழ்தலின் கோறல் இனிதே;மற்(று) இல்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(நட்பின் - நட்பை விட; விளியா - தீராத; அளிய - மிகவும்; கோறல் - கொல்லுதல்; இல்ல - இல்லாத; வைதல் - திட்டுதல்.)

*தன்னைப் பற்றிய தெளிவில்லாதவருடைய நட்பைவிடப் பகையே நல்லது. தீராமல் துன்பந்தரும் நோயைவிட இறத்தல் நல்லது. மனம் நைந்துபோகுமாறு இகழ்ந்து பேசுவதைக் காட்டிலும் கொன்று விடுதல் நல்லது. இல்லாத குணங்களைக் கூறிப் புகழ்வதைக் காட்டிலும் திட்டி விடுவது நல்லது.*

*கருத்து* : **தெளிவிலார் நட்பும், தீராத நோயும், மனத்தை நோகச் செய்யும் பேச்சும், பொய்ப் புகழ்ச்சியும் இல்லாதிருத்தல் நல்லது.**

220. மரீஇப், பலரோடு பன்னாள் முயங்கிப்,
பொரீஇப், பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்;
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா,
மரீஇஇப் பின்னைப் பிரிவு.

(மரீஇ - சேர்ந்து; முயங்கி - கலந்து பழகி; பொரீஇ - ஒப்பிட்டுப் பார்த்து; கோடல் - கொள்ளுதல்; பரீஇ - கடித்து; செகுக்கும் - உயிரைக் கொல்லுகின்ற; மரீஇ - பழகி; பின்னை - பிறகு.)

*பலரோடு சேர்ந்து, பலநாள் நெருங்கிப் பழகி, தம் இயல்பை அவர் இயல்போடு ஒப்பிட்டு அறிந்து, தகுதியுடையவர்களையே நட்பாகக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், கடித்து உயிரை மாய்க்கின்ற பாம்போடு ஆயினும் பழகிவிட்டுப் பின்பு பிரிவது என்பது துன்பந்தருவது ஆகும்.*

*கருத்து* **: கூடிப் பிரிதல் அரிது; ஆதலின் ஆராய்ந்து நட்புக் கொள்க.**

# 23

# நட்பிற் பிழை பொறுத்தல்

221. நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்(கு) உமிஉண்டு; நீர்க்கு நுரைஉண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

(அல்லார் - (நல்லவர்) அல்லாதார்; புல் இதழ் - புற இதழ்.)

*நல்லவர் என்று தாம் மிகவும் விரும்பி நட்புக் கொண்டவர் நல்லவர் அல்லர் என்று கண்டபோதிலும், அவர் குற்றங்களைத் தம் மனத்திலேயே அடக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், நெல்லுக்கும் உமியாகிய நாம் வேண்டாத பகுதி உள்ளது; நீருக்கும் நுரையாகிய நாம் வேண்டாத பகுதி உள்ளது; பூவிற்கும் புறவிதழாகிய நாம் வேண்டாத பகுதி உள்ளது. (குறைபாடில் லாதது எதுவுமில்லை.)*

*கருத்து* **: நண்பரது குணம் கருதிக் குற்றம் மறக்க வேண்டும்.**

222. செறுத்தோ(று) உடைப்பினும் செம்புனலோ(டு) ஊடார்,
மறுத்தும் சிறைசெய்வர், நீர்நசைஇ வாழ்நர்;
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே,
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

(செறுத் தோறும் - வயல்களிலெல்லாம்; செம்புனல் - புதுநீர்ப் பெருக்கு; ஊடுதல் - பிணங்குதல்; சிறை செய்தல் - அடைத்து வைத்தல்; நசைஇ - விரும்பி.)

*நீரை விரும்பி வாழும் உழவர், வயல்வரப்புகளை உடைத்துக் கொண்டு போனாலும், புதுநீர்ப் பெருக்குடன் சிறிதும் பிணங் காமல், மறுபடியும் அதனை அடைத்துத் தடுப்பர். அதுபோல, வெறுக்கும்படியான செயல்களை அடிக்கடி செய்தாலும் தாம் விரும்பி நட்புக் கொண்டவர் தொடர்பை, அறிவுடையோர் பொறுத்துக் கொள்வர்.*

*கருத்து* : **நண்பர்கள் வெறுக்கத்தக்க குற்றங்களைச் செய்தாலும் அறிவுடையோர் பொறுப்பர்.**

223. இறப்பவே தீய செயினும்,தன் நட்டார்
பொறுத்தல் தகுவ(து)ஒன்(று) அன்றோ?– நிறக்கோங்(கு)
உருவவண்(டு) ஆர்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறை,இருவர் நட்பு.

(இறப்ப - மிகுதியாக; கோங்கு - கோங்கமலர்; ஆர்க்கும் - ஒலிக்கும்; பொறை - பொறுமை.)

*நல்ல நிறம் பொருந்திய கோங்க மலர்களில் அழகிய வண்டுகள் ஆரவாரிக்கும் உயர்ந்த மலைநாடனே! தன் நண்பர்கள் மிகவும் தீங்குகளையே செய்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்த நன்மையாகும் அல்லவா? ஒருவர் காட்டும் பொறுமை இருவர் நட்பு நீடிக்க இடமாகிறது.*

*கருத்து* : **நண்பர்களின் பிழையைப் பொறுத்தல் நட்பை நிலைக்கச் செய்யும்.**

224. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரைஅலைக்கும் சேர்ப்ப!
விடுதற்(கு) அரியார், இயல்பிலரேல், நெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

(மடி - மடிகின்ற; திரை - அலை; வான் கதிர் - சிறந்த ஒளி; முத்தம் - முத்து; கடுவிசை - மிகுந்த வேகம்; நாவாய் - கப்பல்.)

*மடிந்து விழுகின்ற அலைகள் கொழிக்கின்ற ஒளி பொருந்திய முத்துகளை, விரைந்து செல்லும் கப்பல்கள் கரையில் குவிக்கின்ற கடல் நாட்டவனே! விடுவதற்கு அரியவராக நாம் நட்புக் கொண்டவர் நல்லியல்பு இல்லாதவராக இருப்பாரானால், அவர் நம் மனத்தைச் சுடுவதற்கு நம்மாலேயே மூட்டிக் கொள்ளப்பட்ட நெருப்பாக ஆவார்.*

*கருத்து* : **நண்பர்கள் கெட்டவர்களாக மாறினால் அது நெஞ்சைச் சுடுகின்ற நெருப்பாகும்.**

225. இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும்; – பொன்னொடு
நல்இல் சிதைத்ததீ நாள்தோறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்.

(விடல் பாலர் - விட்டுவிட முடியாதவர்; நாடி - விரும்பி; ஆக்குதல் - சோறாக்குதல்.)

*பொன்னுடன் நல்ல வீட்டையும் எரித்து அழித்ததாயினும் நெருப்பின் மீது வெறுப்புக் கொள்ளாமல் நாள்தோறும் விரும்பித் தம் வீட்டில் வளர்த்துச் சோறாக்கக் காண்கிறோம். ஆதலால், துன்பமே செய்தாலும் விட்டுவிட முடியாத நண்பர்களைப் பொன்னாகப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.*

*கருத்து* : **துன்பமே செய்தாலும் நண்பர்களைக் கைவிடக் கூடாது.**

**226.** இன்னா செயினும் விடுதற்(கு) அரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ? – துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற்(று) என்றுதம் கை.

**(துன்னா - நெருங்காது; விண் குத்தும் - விண்ணைப் பொருந்தும்; நீள் வரை – நீண்ட மூங்கில்.)**

*அணுகுதற்கரிய சிறப்புடன் விண்ணைப் பொருந்தும் நீண்ட மூங்கில்களையுடைய மலை நாடனே! துன்பங்களைச் செய்தாலும் விடுதற்கு அரியவர்களை நெருங்காமல் விலக்குதல் தகுதியுடையதா? கண்ணைக் குத்தி விட்டது என்பதற்காகத் தம் கையை வெட்டுவார் உண்டா?*

*கருத்து* : **நண்பர்கள் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தலே அறிவுடைமை.**

**227.** இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்; – கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்அறி(வு) இல்லாதார்
தாமும் அவரில் கடை.

**(இலங்குதல் - விளங்குதல்; கலத்தல் - நட்புக் கொள்ளுதல்; திண் அறிவு - உறுதியான அறிவு; கடை - கீழ்ப்பட்டவர்.)**

*தெளிந்த நீரையுடைய குளிர்ந்த கடற்கரையை உடையவனே! தம்மோடு நட்புக் கொண்ட பிறகு ஒருவர் துன்பங்களைச் செய்தாலும் சான்றோர் அவர்மேல் குறை காணமாட்டார். நட்புக் கொண்ட பின்பு அவருடைய குற்றங்களைப் பலரிடமும் வெளிப்படுத்திக் கூறுகின்ற உறுதியற்ற அறிவுள்ளவர்கள் அக்குற்றம் செய்தவரைக் காட்டிலும் கீழ்ப்பட்டவரேயாவர்.*

*கருத்து* : **நண்பர்களின் குற்றங்களை வெளிப்படுத்துபவர் குற்றம் செய்பவரினும் கீழோராவர்.**

**228.** ஏதிலார் செய்த(து) இறப்பவே தீ(து)எனினும்,
நோதக்க(து) என்உண்டாம் நோக்குங்கால்? – காதல்
கழுமியார் செய்த, கறங்(கு)அருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று.

(ஏதிலார் - அயலார்; இறப்பவே - மிகுதியும்; நோதக்கது - துன்பப்படத் தக்கது; கழுமியார் - மிகுந்தவர்; கறங்குதல் - ஒலித்தல்; விழுமிது - சிறப்பு டையது.)

*ஒலிக்கின்ற அருவிகளையுடைய நாடனே! அயலார் செய்தது அளவு கடந்த தீமையேயானாலும் ஆராயுங்கால் அதில் வெறுக்கத் தக்கது யாது உளது? (ஒன்றுமில்லை). அவ்வாறிருக்கையில், அன்பு மிகுந்தவர் செய்த குற்றத்தை மனத்தில் நிறுத்தி எண்ணிப் பார்க்கும்போது, நட்பிற்பிழை பொறுத்தல் காரணமாக, அதுவே சிறப்புடையதாக ஆகிவிடும்.*

**கருத்து : அயலார் குற்றமே வெறுக்கத்தக்கது அன்று என்றால் நண்பர் செய்வதை வெறுக்க முடியுமா?**

229. தமர்என்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்,
தமர்அன்மை தாம்அறிந்தார் ஆயின், அவரைத்
தமரினும் நன்கு மதித்துத், தமர்அன்மை
தம்முள் அடக்கிக் கொளல்.

(தமர் - உறவினர், (நண்பர்); தமர் அன்மை - நண்பர் அல்லாமல் இருப்பதை.)

*நண்பர் என்று தம்மால் விரும்பிச் கொள்ளப்பட்டவர் தம்மை நண்பர் என்று கொள்ளாத தன்மையை ஒருவர் அறிந்தாரானால், அவரை நண்பரைக் காட்டிலும் மிகுதியும் போற்றி, அவர் நண்பர் அல்லாமல் இருப்பதைத் தம் மனத்திற்குள்ளேயே அடக்கிக் கொள்ள வேண்டும்.*

**கருத்து : உறவு பூண்டவரிடம் உறவில்லாத தன்மை காணப்பட்டால் அதனைப் பிறர் அறியாமல் மறைத்துக் கொள்ள வேண்டும்.**

230. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல், – நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க;
அறைகடல்சூழ் வையம் நக.

(நாடி - ஆராய்ந்து; நட்டான் - நட்புக் கொண்டவன்; அறை கடல் - ஒலிக்கின்ற கடல்; நக - இகழும்படியாக.)

*ஒருவரிடம் நட்புக் கொண்ட பிறகு அவருடைய குற்றங்களை யும் குணங்களையும் ஆராய்ந்து திரிவேனாயின், ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இவ்வுலகம் இகழும்படியாக, நண்பனுடைய இரகசியங் களைக் காப்பாற்றாமல் வெளிப்படத் தூற்றியவன் செல்லும் தீக்கதிக்கு, நானும் செல்வேனாக!*

**கருத்து : நண்பர்களிடம் குற்றம் காண்பான் இகழப்பட்டு இழிவடைவான்.**

# 24

## கூடா நட்பு

231. செறிப்(பு)இல் பழங்கூரை, சே(று)அணை யாக,
இறைத்துநீர் ஏற்றும் கிடப்பர்; – கறைக்குன்றம்
பொங்(கு)அருவி தாழும், புனல்வரை நல்நாட!
தங்கருமம் முற்றும் துணை.

(செறிப்பு – கட்டுக் கோப்பு; கறை – கறுப்பு; தாழும் – விழுகின்ற.)

*கரிய மலைகளிலிருந்து நீர் பொங்கி அருவிகள் விழுகின்ற நீர்வளமிக்க நல்ல மலைநாடனே! கட்டுக்கோப்பில்லாத பழைய கூரை வீட்டிலே மழை பொழியும்போது, சேற்றினால் அணை கட்டி, அதனுள் வீழ்ந்த நீரை வெளியே இறைத்தும், மேலே யிருந்து ஒழுகுகின்ற நீரைக் கையினாலும் பாத்திரங்களினாலும் ஏற்றும், தம் செயல் முடியுமளவும் அவ்வீட்டில் தங்கி இருப் பவர்கள்போலப் போலி நண்பர்கள் தம் காரியம் நிறைவேறும் வரை, துன்பங்கள் ஏற்றும் ஒருவருடன் சேர்ந்திருப்பர். (காரியம் நிறைவேறியதும் நீங்கி விடுவர்.)*

*கருத்து* : **கூடா நட்பினர் தம் காரியம் முடியும் வரையே நண்பர்களாய் இருப்பர்.**

232. சீரியார் கேண்மை, சிறந்த சிறப்பிற்றாய்,
மாரிபோல் மாண்ட பயத்த(து)ஆம்; – மாரி
வறந்தக்கால் போலுமே, வால்அருவி நாட!
சிறந்தக்கால் சீர்இலார் நட்பு.

(மாரி – மழை; மாண்ட – சிறப்புடைய; பயத்தது – பயனுடையது; வால் – வெண்மை; சீர் – பெருமை.)

*வெண்மையான அருவிகளையுடைய நாடனே! மேலோரு டைய நட்பு மிகுந்த சிறப்புடையதாக, வேண்டிய பொழுது மழை பெய்தாற்போன்ற சிறந்த பயனுடையதாக இருக்கும். கீழோரு டைய நட்பு மிகுமானால் அது மழை பெய்யாத காலம்போல வறட்சி மிக்கதாய் இருக்கும்.*

*கருத்து* : **மேலோர் நட்பு நன்மை தரும்; கீழோர் நட்புக் கேடு விளைவிக்கும்.**

233. நுண்உணர்வி னாரோடு கூடி நுகர்(வு)உடைமை
விண்உலகே ஒக்கும் விழைவிற்றால்; – நுண்நூல்

உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல், நிரயத்துள் ஒன்று.

(விழைவு - விருப்பம்; ஊதியம் - பயன்; புணர்தல் - சேர்தல்; நிரயம் - நரகம்.)

*நுட்ப அறிவாளருடன் சேர்ந்து பழகும் இன்பம் விண்ணுலகில் வாழ்வது போன்ற பேரின்பம் உடையது. அது விரும்பத்தக்க ஒன்று. நுட்பநூல் அறியாராகிய பயனற்றவர்களுடன் பழகுதல் நரகத்தில் வாழ்வது போன்ற ஒன்று.*

*கருத்து* : **அறிவிலார் நட்பு நரக துன்பத்தைத் தரும்.**

234. பெருகுவது போலத் தோன்றி,வைத் தீப்போல்,
ஒருபொழுதும் சொல்லாதே நந்தும்; – அரு(கு)எல்லாம்
சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட!
பந்தம் இலாளர் தொடர்பு.

(வை - வைக்கோல்; நந்தும் - பெருகும்; பந்தம் - (அன்பின்) கட்டு; இலாளர் - இல்லாதவர்.)

*பக்கங்களிலெல்லாம் நீண்ட சந்தனச் சோலைகள் நிறைந்த சாரல்களையுடைய மலைநாடனே! அன்பிலாருடைய நட்பு வளர்வதுபோலத் தோன்றி வைக்கோற்போரில் பற்றிய தீயைப் போல, முதலில் பெருகுவதுபோலத் தோன்றிப் பிறகு சிறிது நேரமும் நிலைத்திராமல் அழிந்துவிடும்.*

*கருத்து* : **அன்பிலார் நட்பு நிலைக்காது; உடனே அழியும்.**

235. செய்யாத செய்தும்நாம் என்றலும், செய்தவனைச்
செய்யாது தாழ்த்துக்கொண்(டு) ஓட்டலும், – மெய்யாக
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும், அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

(செய்தும் - செய்வோம்; பெற்றி - தன்மை; இகழ்ந்தார்- வெறுத்தவர்.)

*செய்யத் தகாத செய்லகளை நாம் செய்வோம் என்று சொல்லுதலும், செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாது சோம்பேறியாகக் காலத்தை ஓட்டுதலும், உண்மையாகவே இன்புறும் தன்மைகளை வெறுத்துவிட்ட துறவியர்க்கும் அப்பொழுதே துன்புறும் தன்மையை உண்டாக்கும்.*

*கருத்து* : **கூடாதவரோடு நட்புச் செய்தலும், நட்புச் செய்ய வேண்டியவர்களோடு நட்புச் செய்யாது காலம் தாழ்த்தலும் துன்பம் தருவனவாம்.**

236. ஒருநீர்ப் பிறந்(து),ஒருங்கு நீண்டக் கடைத்தும்,
விரிநீர்க் குவளையை, ஆம்பல்;ஒக் கல்லா,

பெருநீரார் கேண்மை கொளினும்,நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும்.

(ஒருங்கு - ஒன்றாகவே; ஒக்கல்லா - ஒத்திருக்காது; பெருநீரார் - பெருந் தன்மையுடையவர்; நீர் அல்லர் - நல்ல தன்மை இல்லாதவர்.)

*ஒரே நீர்நிலையில் தோன்றி ஒன்றாகவே வளர்ந்தபோதும் மலர்ந்த தன்மையுள்ள குவளைமலரை ஆம்பல் மலர் ஒத்திருக் காது. அதுபோலப் பெருந்தன்மையுடையாரோடு நட்பைக் கொண்டிருந்தாலும் நல்ல தன்மை இல்லாதவருடைய செயல்கள் வேறுபட்டே இருக்கும்.*

*கருத்து* : **நல்லவர்களோடு சேர்ந்து இருந்தாலும் தீயோர் தம் தன்மையில் மாறுபடுதல் இல்லை.**

237. முற்றல் சிறுமந்தி, முற்பட்ட தந்தையை,
நெற்றுக்கண் டன்ன விரலால், ஞெமிர்த்திட்டுக்,
குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

(நெற்று - பயற்றங்காயின் நெற்று; ஞெமிர்த்தல் - நெரித்தல்; குற்றி - குத்தி.)

*வயது வந்த சிறு குரங்கு வயதால் தனக்கு முற்பட்ட தந்தையைப் பயிற்றங்காயின் நெற்றைக் கண்டொத்த தன் விரல்களால் நெரித்துக் குத்தி அதனிடமுள்ள இரையைப் பிடுங்கும் மலை நாடனே! மன ஒற்றுமை இல்லாதவர்களுடைய நட்பு அக்குரங்கு களின் செயலைப்போலப் பொல்லாதது.*

*கருத்து* : **உள்ளம் பொருந்தாத நட்பு துன்பம் தருவதாகும்.**

238. முட்டுற்ற போழ்தில், முடுகிஎன் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனல்; – நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க;
நெடுமொழி வையம் நக.

(முட்டு - துன்பம்; முடுகி - விரைந்து; நட்டான் - நட்புச் செய்தவன்; கடி மனை - காவலில் உள்ள மனைவி; கட்டழித்தான் - கற்பழித்தவன்; செல்வுழி - செல்லும் இடம் (நரகம்); நக - இகழும்படியாக.)

*நண்பன் ஒருவனுக்குத் துன்பம் நேர்ந்தபோது அதைப் போக்கு தற்கு விரைந்து என் இனிய உயிரை அவன் கையில் ஒப்படைக் கேன் என்றால், மிக்க புகழுடைய இவ்வுலகம் இகழும்படியாக, காவலில் உள்ள தன் நண்பனுடைய மனையாளைக் கற்பழித்தவன் செல்லுகின்ற நரகத்திற்கு நானும் செல்லுவேனாக.*

*கருத்து* : **உயிரைக் கொடுத்தாவது நண்பர்களின் துன்பத்தைக் போக்க வேண்டும்.**

239. ஆன்படு நெய்பெய் கலனுள், அதுகளைந்து,
வேம்படு நெய்பெய்(து) அனைத்தரோ; – தேம்படு
நல்வரை நாட! நயம்உணர்வார் நண்(பு)ஓரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

(ஆன் - பசு; களைந்து - நீக்கி; வேம்பு அடு நெய் - வேம்பில் பிழிந்த நெய்; அனைத்து - போன்றது; தேம்படு - தேன்படு - தேன் பொருந்திய.)

*தேன் கூடுகள் பொருந்திய நல்ல மலைநாடனே! நன்மை இன்னது என்று அறிகின்றவர்களின் நட்பை ஒதுக்கிவிட்டு, அற்ப அறிவாளருடன் நட்புக் கொள்ளுதல், பசு நெய்யை ஊற்றி வைத்திருந்த பாத்திரத்தில் அதை நீக்கிவிட்டு வேம்பு நெய்யை ஊற்றி வைத்ததுபோலாகும்.*

*கருத்து* : **அறிவுடையார் நட்பு இனிக்கும்; அறிவிலார் நட்புக் கசக்கும்.**

240. உருவிற்(கு) அமைந்தான்கண், ஊராண்மை இன்மை
பருகற்(கு) அமைந்தபால் நீர்அளாய் அற்றே;
தெரிவுடையார், தீஇனத்தார் ஆகுதல், நாகம்
விரிபெடையோ(டு) ஆடிவிட் டற்று.

(ஊராண்மை - பிறர்க்கு உதவும் குணம்; இன்மை - இல்லாதிருத்தல்; அளாய் - கலந்தது; தெரிவுடையார் - தெளிந்த அறிவுடையார்; விரிபெடை - பெண் விரியன்.)

*உருவ அமைப்பு ஒழுங்காக அமைந்த ஒருவனிடம் ஒப்புரவுத் தன்மை இல்லாதிருத்தல், குடிப்பதற்கு ஏற்ற பாலில் நீரைக் கலந்ததுபோலாகும்; தெளிந்த அறிவுடையார் தீயவர்களுடன் சேர்ந்திருத்தல் ஆண் நாகம் பெண் விரியனுடன் கூடிக் கலந்து உயிரை விட்டதுபோலாகும்.*

*கருத்து* : **நல்லறிவுடையார் தீயினத்தாரோடு உறவு கொள்ளக் கூடாது.**

# 25

# அறிவுடைமை

241. பகைவர் பணிவிடம் நோக்கித், தக(வு)உடையார்,
தாமேயும் நாணித் தலைச்செல்லார், காணாய்!
இளம்பிறை ஆயக்கால், திங்களைச் சேரா(து)
அணங்கருந் துப்பின் அரா.

(தகவு உடையார் - மிகுந்த அறிவுடையவர்; ஆயக்கால் - ஆகும்போது; அணங்கு - வருத்தம்; துப்பு - வலிமை; அரா - அரவு - பாம்பு.)

*வருத்தம் செய்தற்குரிய அரிய வலிமையினையுடைய பாம்பு (கிரகண நிழல்) திங்கள் இளம்பிறையாகத் தேய்ந்துள்ளபோது*

*அதனை அடைந்து துன்புறுத்தாது. அதுபோல, அறிவுடையோர் தம் பகைவர் தாழ்ந்திருக்கும் காலத்தில் அவர் மெலிவுக்கு நாணப்பட்டு அவருடன் போர் செய்ய மாட்டார்கள். இதனை அறிவாயாக!*

*கருத்து* : **அறிவுடையார் தம் பகைவர் தளர்ந்திருக்கும் நிலையில் அவரை வெல்லக் கருதார்.**

242. நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்(கு)
அணிகலம் ஆவ(து) அடக்கம்; – பணிவில்சீர்
மாத்திரை இன்றி நடக்குமேல், வாழும்ஊர்
கோத்திரம் கூறப் படும்.

(நளி - பெரிய; நல்கூர்தல் - வறுமையடைதல்; மாத்திரை - அளவு; நடக்கும் ஏல் - நடக்குமே ஆனால்.)

*பெரிய கடலும் குளிர்ந்த கடற்கரையும் உள்ள நாட்டை உடையவனே! வறுமையடைந்துள்ள மக்கட்கு அணிகலமாவது அடக்கமுடைமையாம். அவ்வாறின்றி அடக்கமில்லாமலும் அளவை மீறியும் நடப்பாராகில் ஊரிலுள்ளவரால் அவர்கள் பிறந்த குடியும் பழிக்கப்படும்.*

*கருத்து* : **வறுமையாளர் அடக்கமின்றி நடந்தால் ஊராரால் பழிக்கப்படுவர்.**

243. எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்(கு)ஆகா;
தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்,
தன்னால்தான் ஆகும் மறுமை; வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

(வித்திடினும் - விதைத்தாலும்; காஞ்சிரம் - எட்டி; காழ் - விதை; தெங்கு - தென்னை; கொன் ஆளர் - வீணே காலம் கழிப்பவர்.)

*எந்த நிலத்தில் விதைத்தாலும் எட்டி விதை தென்னையாக முளைக்காது. தென்திசையில் உள்ளவரும் அறம் செய்து சுவர்க்கம் எய்துகின்றனர். வடதிசையிலும் வீண்காலம் கழித்து நரகம் புகுபவர் மிகப் பலதாயுள்ளனர். ஆதலால், மறுமை தன் முயற்சியினால் உண்டாவது; இருக்கும் இடத்தினால் அன்று.*

*கருத்து* : **எத்திசையில் பிறந்தாராயினும் அறம் செய்யார்க்கு மறுமை இன்பம் இல்லை.**

244. வேம்பின் இலையுள் கனியினும், வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம், – ஆங்கே
இனந்தீ(து) எனினும், இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது.

(கனியினும் - பழுத்தாலும்; தீம் சுவை - இனிய சுவை; திரியாது - மாறாது; இயல்பு உடையவர் - நல்லியல்பு உடையவர்.)

*வேம்பின் இலைக்குள்ளேயிருந்து பழுத்தாலும் வாழைப் பழம் தன் இனிய சுவையில் சிறிதும் வேறுபடாது. அதுபோலச் சேர்ந்த கூட்டம் தீயதாயிருந்தாலும் நல்லியல்பு உடையவர்களின் நட்பு மனம் தீமைகளின் பக்கம் திரும்புவது இல்லை.*

*கருத்து* : **தீயோருடன் கூடியிருந்தாலும் நல்லோர் மனம் தீமை அடைவதில்லை.**

245. கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலைசார்ந்தும்
உப்(பு)ஈண்(டு) உவரி பிறத்தலால், தத்தம்
இனத்(து)அனையர் அல்லர்; எறிகடல்தண் சேர்ப்ப!
மனத்(து)அனையர் மக்கள்என் பார்.

(சார்ந்தும் - அருகேயும்; ஈண்டு - நிறைந்த; உவரி - உவர் நீர்; எறிகடல் - அலைமோதும் கடல்.)

*அலைமோதும் குளிர்ந்த கடற்கரை நாட்டை உடையவனே! உப்புநீர் நிறைந்த கடல் அருகேயும் இனிய நீர் தோன்றும்; நன்னீர் மிக்க மலையின் பக்கத்திலும் உப்புமிக்க உவர்நீர் தோன்றும். ஆதலால், மக்கள் தாம் சேர்ந்துள்ள இனத்தின் தன்மையைப் பொறுத்தவர் அல்லர்; தங்கள் மனத்தின் இயல்பைப் பொறுத்தே இருப்பர் என்பர்.*

*கருத்து* : **மாசற்ற அறிவுடையோரின் இயற்கையான நற்குணம் சேர்க்கையால் மாறுபடுவதில்லை.**

246. பராஅரைப் புன்னை படுகடல்தண் சேர்ப்ப!
ஓராஅலும் ஒட்டலும் செய்பவோ? நல்ல
மரூஉச்செய்(து) யார்மாட்டும் தங்கும் மனத்தார்,
விராஅஅய்ச் செய்யாமை நன்று.

(பரு + அரை - பராரை - பருத்த அடியிடையுடைய; ஓரால் - நீங்குதல்; மரூஉ - பொருந்திய; விராய் - கலந்து.)

*பருத்த அடிகளையுடைய புன்னை மரங்கள் மிக்க குளிர்ந்த கடற்கரை நாட்டவனே! ஒருவரிடம் சிறந்த நட்புச் செய்து, பிறகு, மற்ற எவரிடத்திலும் சென்று தங்கும் மனமுடையவர்கள், எவரிடத்தும் நெருங்கி நட்புச் செய்யாதிருப்பதே நல்லது. நல்ல நண்பர்கள், கைவிடுதலும் ஒட்டுதலும் ஆகிய செயல்களை மாறி மாறிச் செய்வார்களா? (செய்யார்).*

*கருத்து* : **கூடிப் பிரிதலினும் கூடாமை நன்று.**

247. உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்; – புணரின்

தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்.

(புணர்தல் - சேர்தல்; தெரிவிலாதார் - தேர்ச்சியற்றவர்; நோய் - துன்பம்.)

*நண்பர்களின் உள்ளுணர்வுகளை உள்ளுர உணரும் உணர்வுடையவர்களைச் சேர்தலால் இன்பம் சேரும். நன்மை தீமைகளை நன்றாகத் தெரியும்படி பகுத்துணரும் தேர்ச்சி அற்ற அறிவிலிகளை விட்டுப் பிரிதலால் துன்பங்கள் நீங்கும்.*

*கருத்து* : **அறிவுடையாருடன் நட்புக் கொள்ளுதலும் அறிவிலாரை நீங்குதலும் இன்பம் தருவன.**

248. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், — நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

(நிறுப்பானும் - நிறுத்திக் கொள்பவனும்; கீழிடுவானும் - கீழாக்கிக் கொள்பவனும்; தலையாக - முதன்மையாக.)

*நல்ல நிலையில் தன்னை நிறுத்திக் கொள்பவனும், உள்ள நிலையையும் கெடுத்துத் தன்னைக் கீழாக்கிக் கொள்பவனும், இருக்கும் நிலையிலிருந்து மேலும் மேலும் தன்னை உயர்த்திக் கொண்டு சென்று நிறுத்துபவனும், தன்னை முதன்மையானவனாகச் செய்துகொள்பவனும் தானேயாம்!*

*கருத்து* : **பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவரே காரணம்.**

249. கரும வரிசையால், கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாரும் சேறல், — அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப!
பேதமை யன்(று);அ(து) அறிவு.

(கரும வரிசை - செயலின் சிறப்பு; ஓதம் - அலை; அரற்றல் - ஒலித்தல்; பேதமை - அறியாமை.)

*மாற்றுதற்கு அரிய முறையில் அலைகள் ஓலமிட்டு ஒலிக்கின்ற குளிர்ந்த கடற்கரை நாட்டை உடையவனே! செயல் சிறக்க வேண்டுமென்று கருதிக் கற்காதவர் பின்னே பெருமையுடையவர்கள் செல்லுதல் அறியாமை அன்று; அஃது அறிவுடைமையே!*

*கருத்து* : **காரியம் கருதிக் கல்லார் பின்னே கற்றோர் செல்லுதல் பேதமையாகாது.**

250. கருமமும் உள்படாப்; போகமும் துவ்வாத்;
தருமமும் தக்கார்க்கே செய்யா; — ஒருநிலையே

முட்டின்றி மூன்றும் முடியுமேல், அஃ(து)என்ப
பட்டினம் பெற்ற கலம்.

(உள்படா - உடன்பட்டுச் செய்து; போகம் - இன்பம்; துவ்வா - துய்த்து; செய்யா - செய்து; முட்டு இன்றி - இடையூறு இல்லாமல்; கலம் - கப்பல்.)

*கடமைகளையும் அரைகுறையின்றிச் செய்து, இன்பத்தையும் துய்த்து, அறத்தையும் தகுதியுடையவர்க்கே செய்து இடையூறுகளின்றி நிலையாக இம்மூன்றையும் ஒருவன் செய்ய முடியுமானால் அஃது ஒரு மரக்கலம் சேர வேண்டிய துறைமுகத்தை எவ்வித இடையூறுமின்றிச் சேர்ந்ததற்கு ஒப்பாம்.*

*கருத்து* : **கடமை, இன்பம், அறம் ஆகிய மூன்றும் கைகூடப்பெறின் பெரும் பயனாம்.**

# 26

# அறிவின்மை

251. நுண்ணுணர்(வு) இன்மை வறுமை; அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்; – எண்ணுங்கால்
பெண்அவாய், ஆண்இழந்த பேடி, அணியாளோ
கண்அவாத் தக்க கலம்.

(நுண்உணர்வு - நுட்பமான அறிவு; பண்ணப் பணைத்த - மிக வளர்ந்த; பெண் அவாய் - பெண் தன்மையை விரும்பி; கலம் - அணிகலன்.)

*நுட்பமான அறிவில்லாமையே வறுமை; அறிவுடைமையோ மிக வளர்ந்த பெரிய செல்வமாம்; ஆராயுமிடத்து, பெண் தன்மையை விரும்பி ஆண் தன்மையை இழந்த பேடியும் கண்கள் விரும்பிக் காணத் தகுந்த அணிகலன்களை அணிந்து கொள்வதில்லையா?*

*கருத்து* : **நுண்ணறிவிலார்க்குச் செல்வம் மிகுந்தாலும் பெருமை இல்லை.**

252. பல்லான்ற கேள்விப் பயன்உணர்வார்; பா(டு)அழிந்து,
அல்லல் உழப்ப(து) அறிதிரேல், – தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால், சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

(பல் + ஆன்ற - பலவகைப்பட்ட நிறைந்த; பாடு - பெருமை; நாவின் கிழத்தி - கலைமகள்; பூவின் கிழத்தி - திருமகள்.)

*பல்வகைப்பட்ட நிறைந்த கேள்விப் பயனை அறிந்தவர்கள் வறுமையால் பெருமை கெட்டுத் துன்பத்திலே கிடந்து*

*துடிப்பதற்குக் காரணம் அறிவீர்களேயானால், அது பழஞ்சிறப்பினையுடைய நாமகளாகிய கலைகமள் அவரிடத்தே தங்கியிருப்பதால், பூமகளாகிய திருமகள் பிணங்கிச் சேராமையே ஆகும்.*

*கருத்து* : **கல்விச் செல்வம் உள்ளவரிடம் பொருட்செல்வம் சேர்வதில்லை.**

253. கல்லென்று தந்தை கழற, அதனைஓர்
சொல்என்று கொள்ளா(து) இகழ்ந்தவன், – மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

(கல் + என்று = கற்பாயாக என்று; கழற - சொல்ல; விளியா - சினம் கொண்டு; வழுக்கோலை - தடிக் கொம்பை.)

*'கற்றுக்கொள்வாயாக' என்று தந்தை கூற, அதனையொரு சொல் என்று பொருட்படுத்தாது இகழ்ந்தவன், பின்னாளில், பலர் கூடியுள்ள இடத்தில் அவன் இருக்கும்போது, 'எழுதப் பட்டுள்ள இந்த ஓலையைப் படி'யென்று மெதுவாக ஒருவன் எழுந்து நீட்டினால் சினம் கொண்டு அவனை அடிப்பதற்காகக் கோலைக் கையிலே தூக்கிக் கொள்வான்.*

*கருத்து* : **இளமையில் கல்லாதவன் முதுமையில் இகழ்ச்சி அடைவான்.**

254. கல்லாது நீண்ட ஒருவன், உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு, – மெல்ல
இருப்பினும் நாய்இருந் தற்றே; இராஅ(து)
உரைப்பினும் நாய்குரைத்(து) அற்று.

(இடைப்புக்கு - இடையிலே நுழைந்து; அற்றே - போன்றதே; இராஅது - அவ்வாறின்றி; உரைப்பினும் - பேசினாலும்.)

*கற்காமல் வளர்ந்த ஒருவன் இவ்வுலகில் நல்ல அறிவுடையார் இடையே நுழைந்து அமைதியாக இருந்தாலும் அது நாய் இருந்ததுபோல ஆகும்; அவ்வாறின்றி ஏதேனும் பேசினால் அது நாய் குரைத்ததுபோல ஆகும்.*

*கருத்து* : **அறிவுடையார் அவையில் அறிவிலார் பேசாமல் இருந்தாலும் பேசினாலும் இழிந்தவராகவே எண்ணப்படுவர்.**

255. புல்லாப்புண் கோட்டிப் புலவர் இடைப்புக்குக்,
கல்லாத சொல்லும் கடைஎல்லாம்; – கற்ற
கடாஅயினும், சான்றவர் சொல்லார், பொருள்மேல்
படாஅ விடுபாக்(கு) அறிந்து.

(புல்லா - பொருந்தாத; புன் கோட்டி - இழிவான அவை; இடை - கீழ் மக்கள்; கடாஅயினும் - கேட்டாலும்; விடுபாக்கு - நீங்கிப் போதல்.)

*அறிவொடு பொருந்தாத புல்லியர் கூட்டத்தில் புகுந்து, கீழ்மக்கள் தாம் கல்லாதனவற்றையெல்லாம் ஆரவாரமாகச் சொல்லுவர். ஆனால் சான்றோர்களோ அவர் கற்றிருக்கும் செய்திகளைச் சொல்லும்படி பிறர் கேட்டாலும், கேட்பவர் அறிவு தாம் சொல்லும் பொருளைக் கேட்டறிய முடியாத தன்மையை அறிந்து அவற்றைச் சொல்ல மாட்டார்கள்.*

*கருத்து* : **கல்லாதவர் எங்கும் எதையும் பேசுவர். கற்றவரோ உணர்ந்து பேசுவர்.**

256. கற்றறிந்த நாவினார் சொல்லார்,தம் சோர்(வு)அஞ்சி;
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும்; எஞ்ஞான்றும்
பச்சோலைக்(கு) இல்லை ஒலி.

(சோர்வு - பிழை (நேர்தல்); பகர்வர் - செய்வர்; வற்றிய - காய்ந்த; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.)

*பனைமரத்தின் மேலுள்ள உலர்ந்த ஓலைகள் கலகலவென்று ஒலிக்கும். எந்நாளிலும் பச்சை ஓலைக்கு ஒலி இல்லை. அதுபோல, நூல்களைக் கற்று உண்மைப் பொருளை அறிந்த நாவினையுடையவர் தாம் சொல்லும் சொற்களில் ஏதாவது பிழை நேரிடுமோ என்று அஞ்சிக் கண்டபடியெல்லாம் பேச மாட்டார்கள். கல்லாதவரோ சலசலவென, வாயில் வந்ததையெல்லாம் பேசிக் கொண்டே இருப்பர்.*

*கருத்து* : **அறிவுடையார் அடங்கியிருப்பர்; அறிவிலார் ஆர்ப்பரிப்பர்.**

257. பன்றிக்கூழ் பத்தரில், தேமா வடித்(து)அற்றால்,
நன்(று)அறியா மாந்தர்க்(கு) அறத்தா(று) உரைக்குங்கால்;
குன்றின்மேல் கொட்டும் தறிபோல், தலைதகர்ந்து
சென்(று)இசையா வாகும் செவிக்கு.

(பத்தர் - தொட்டி; தேமா - இனிய மாங்கனிச் சாறு; தறி - கட்டுத்தறி; இசையா - பொருந்தாது.)

*நன்மையை அறிய மாட்டாத மக்களுக்கு அறநெறிகளை எடுத்துச் சொல்லுதல் பன்றிக்குக் கூழ் வார்க்கும் தொட்டியில் இனிய மாங்கனியைப் பிழிந்து ஊற்றுவதுபோலாகும். அவ்வாறு கூறும் அறநெறிகள் குன்றின்மேல் அடிக்கப்படுகின்ற முளைக் குச்சி சிதைந்து இறங்காததுபோல அறநெறியும் அவர்கள் காதுகளிற் சென்று நுழையா.*

*கருத்து* : **அறிவற்றவர்க்குச் சொல்லும் அறிவுரைகள் பயனற்றவை.**

258. பாலால் கழீஇப், பலநாள் உணக்கினும்,
வாலிதாம் பக்கம்,இருந்தைக்(கு) இருந்தன்று;

கோலால் கடாஅய்க் குறினும், புகல்ஒல்லா
நோலா உடம்பிற்(கு) அறிவு.

(கழீஇ - கழுவி; உணக்கினும் - உலர்த்தினாலும்; வால் - வெண்மை; இருந்தை - கரி; கடாஅய் - அடித்து; குறினும் - குத்தினாலும்; புகல் ஒல்லா - நுழைய மாட்டாது; நோலா - நோன்பு செய்யாத.)

*பல காலமும் பாலினால் கழுவி உலர்த்தினாலும் கரிக்கு வெண்மையாகும் தன்மை உண்டாகாது. அதுபோல, அறிவு பெறுதற்கேற்ற நோன்பு செய்யாத உடம்புள்ளவரைக் கோலால் அடித்துக் கைகளால் குத்தி அறிவு புகட்டினாலும் அவர்களின் உணர்வில் அது நுழையாது.*

*கருத்து* : **அறிவிலிக்கு எவ்வளவு சொன்னாலும் அறிவு பொருந்துவதில்லை.**

259. பொழிந்(து)இனிது நாறினும், பூமிசைதல் செல்லா(து),
இழிந்தவை காமுறூஉம் ஈப்போல், — இழிந்தவை
தாம்கலந்த நெஞ்சினார்க்(கு), என்னாகும்? தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொல் தேர்வு.

(நாற்றம் - மணம்; மிசைதல் - உண்ணுதல்; காமுறும் - விரும்பும்; தேற்றச் சொல் - மெய்ம்மைச் சொல்; தேர்வு - தெளிவு.)

*தேனைச் சொரிந்து நறுமணம் வீசினாலும் மலர்களிடத்திலுள்ள தேனை உண்ணச் செல்லாது இழிந்த பொருள்களையே விரும்பிச் சேர்கின்ற ஈயைப் போன்ற, இழிந்த குணங்கள் பொருந்திய மனமுடையார்க்கு மேலோர் வாயிலிருந்து தோன்றும் இனிமை நிறைந்த மெய்ம்மைச் சொற்களின் தெளிவு என்ன பலனைத் தரும்?*

*கருத்து* : **அறிவிலார் மனம் உயர்ந்த பொருளிற் படியாது; இழிந்த பொருளையே நாடும்.**

260. கற்றார் உரைக்கும் கசடறு நுண்கேள்வி,
பற்றாது தன்னெஞ்(சு) உதைத்தலால், — மற்றும்ஓர்
தன்போல் ஒருவன் முகநோக்கித், தானும்ஓர்
புன்கோட்டி கொள்ளுமாம் கீழ்.

(கசடு + அறு = குற்றம் அற்ற; பற்றாது - ஒட்டாது; உதைத்தலால் - தள்ளி விடுதலால்; புன்கோட்டி - இழிந்த கூட்டம்.)

*கற்றோர் சொல்லுகின்ற குற்றமற்ற நுட்பமான சொற்கள் தன் நெஞ்சில் தங்காது உருவிச் சென்றுவிடுதலால், கீழ்மகன் தன்னைப் போல்வானாகிய மற்றுமொரு கீழ்மகனின் முகத்தைப் பார்த்து, தானும் அவனைப் போலவே அறிவில்லாதவர் அவையில் பேசப் படும் சொற்களை ஏற்றுக் கொள்வான்.*

*கருத்து* : **கீழ்மகனுக்குக் கீழ்மகன் சொல்லே ஏறும்.**

# 27

# நன்றியில் செல்வம்

261. அருகல்(அ)து ஆகிப், பலபழுத்தக் கண்ணும்,
பொரிதாள் விளவினை, வாவல் குறுகா,
பெரி(து)அணியர் ஆயினும், பீ(டு)இலார் செல்வம்,
கருதும் கடப்பாட்ட(து) அன்று.

(பொரிதாள் - பொரிந்த அடிமரம்; வாவல் - வௌவால்; அணியர் - அருகிலிருப்பவர்; கடப்பாடு - முறைமை.)

*அருகிலேயே இருந்து ஏராளமாகப் பழுத்தாலும், பொரிந்த அடிமரத்தையுடைய 'விளாவின் பழத்தை, வௌவால் அணுகாது. அதுபோல மிகவும் அருகிலிருந்தாராயினும், பெருமையில்லாதவர் செல்வம், பிறரால் நினைக்கத்தக்க முறைமையுடையது அன்று.*

*கருத்து* : **பெருமைக் குணமில்லாரை அருகில் இருப்போரும் விரும்ப மாட்டார்கள்.**

262. அள்ளிக்கொள்(வ) அன்ன, குறுமுகிழ ஆயினும்
கள்ளிமேல் கைந்நீட்டார், சூடும்பூ அன்மையால்;
செல்வம் பெரி(து)உடையர் ஆயினும், கீழ்களை
நள்ளார் அறிவுடை யார்.

(முகிழ் - அரும்பு; அன்மையால் - ஆகாமையால்; நள்ளார் - விரும்பிச் சேரார்.)

*அள்ளியெடுத்துக் கொள்ளலாம் போன்ற சிறிய அரும்புகளை உடையவையாயினும், சூடுதற்குரிய மலர் ஆகாமையால், எவரும் கள்ளியின்மேலே பூப்பறிக்கக் கையை நீட்ட மாட்டார்கள். அதுபோலச் செல்வம் மிக உடையாராயினும் கீழ்மக்களை அறிவுடையோர் விரும்பிச் சேரார்.*

*கருத்து* : **கீழோர் பெருஞ்செல்வம் உடையவராயினும் அறிவுடையோர் அவரை அணுகார்.**

263. மல்கு திரைய கடற்கோட்(டு) இருப்பினும்,
வல்ஊற்(று) உவர்இல் கிணற்றின்கண் சென்றுண்பர்;
செல்வம் பெரிதுடையர் ஆயினும், சேட்சென்றும்
நல்குவார் கட்டே நசை.

(மல்கு - மிகுந்த; கோடு - கரை; வல் ஊற்று - முயற்சி செய்து தோண்டி உண்டாக்கப்படும் நீர்; உவர் - உவர்ப்புத் தன்மை.)

*மிகுந்த அலைகளையுடைய கடலின் கரையிலேயே இருந்தாலும், கடல் நீரைக் குடிக்காமல், சிறிதே ஊறக் கூடியதாயினும், அது தொலைவிலிருந்தாலும், உப்பில்லாத நீரையுடைய கிணற்றினைத் தேடிச் சென்று நீரைக் குடிப்பர். அதுபோல, தமக்கு அருகிலிருப்போர் செல்வம் மிகுதியாக உடையவராக இருந்தாலும் அவரை விரும்பாது, தூரத்தே செல்ல வேண்டியிருந்தாலும் கொடுப்பவரிடம் சென்றுதான் பெறுதற்கு விருப்பம் தோன்றும்.*

*கருத்து* : **தொலைவில் இருந்தாலும் கொடுப்பவரையே மனம் நாடும்.**

264. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே!
உணர்வ(து) உடையார் இருப்ப, – உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே,
பட்டும் துகிலும் உடுத்து.

**(வையம் - உலகம்; வட்டு - உலோக வட்டை; வழுதுணை - கண்டங்கத்திரி; துகில் - நல்ல ஆடை.)**

*அறிவுடையார் வறியராய் இருப்ப, அடித்து நீட்டினாலன்றிப் பயன்படாத உலோகத்தின் உருக்கிய வட்டும், கொள்வாரை முள்ளால் குத்தி வருத்தும் வழுதுணங்காயும் போன்ற அற்பர்கள் பட்டும் துகிலும் அணிந்து வாழ்கின்றார்களே! ஆதலால், அலைகள் பொருந்திய கடல் சூழ்ந்த பூமியில் புண்ணியமானது கல்வி, அறிவு முதலியவற்றோடு பொருந்தாது வேறுபட்டே இருக்கும் போலும்!*

*கருத்து* : **அறிவுடைமையும் பொருளுடைமையும் வேறுபட்டே இருக்கும் போலும்!**

265. நல்லார் நயவர் இருப்ப, நயமிலாக்
கல்லார்க்(கு)ஒன்(று) ஆகிய காரணம், – தொல்லை
வினைப்பயன் அல்லது, வேல்நெடுங் கண்ணாய்!
நினைப்ப வருவதொன்(று) இல்.

**(நயவர் - நற்குணமுடையவர்; நயமிலா - நற்பண்பு இல்லாத; தொல்லை - பழைய.)**

*வேல் போன்ற நீண்ட கண்களையுடையவளே! நல்லவர்களும் ஒப்புரவுடையவர்களும் வறியராய் இருக்க, நற்பண்பில்லாக் கல்வியறிவற்றவர்களுக்குச் செல்வம் உண்டாவதற்குக் காரணம் அவரவர் செய்த பழைய வினையின் பயனே அல்லாது ஆராயத் தக்கது வேறொன்றும் இல்லை.*

*கருத்து* : **செல்வம் நல்லவரிடம் நில்லாது கல்லாதவரிடம் செல்வதற்குக் காரணம் அவரவர் முன்வினைப் பயனேயாம்.**

266. நாறாத் தகடேபோல் நன்மலர்மேல் பொற்பாவாய்!
நீறாய் நிலத்து விளியரோ! — வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ, பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து.

(நாறா - மணமில்லாத; தகடேபோல் - புறவிதழ்போல; நீறாய் - சாம்பலாய்; விளியரோ - அழிவாயாக; துறந்து - விட்டு நீங்கி.)

*சிறந்த தாமரை மலரின்மேல் பொன் தகடுபோல் வீற்றிருக்கின்ற பொலிவினையுடைய திருமகளே! பொன்னைப் போன்ற நல்லோர்களிடம் இருப்பதை விட்டுவிட்டு அவரின் வேறுபட்ட கீழோரிடத்தில் சென்று சேர்கிறாய்! ஆதலால், பூமியில் நீ சாம்பலாய் அழிந்து போவாயாக!*

*கருத்து* : **கீழோரிடத்தில் தோன்றிய செல்வம் அறிவுடையோரால் இகழப்படும்.**

267. நயவார்கண் நல்குரவு, நாண்இன்று கொல்லோ?
பயவார்கண் செல்வம், பரம்பப் — பயின்கொல்?
வியவாய்காண்; வேற்கண்ணாய்! இவ்விரண்டும் ஆங்கே
நயவாது நிற்கும் நிலை.

(நயவார் - உதவி செய்யும் குணமுடையவர்; நாண் - நாணம்; பயவார் - பிறர்க்குப் பயன்படாதவர்; பரம்ப - பரவுகின்ற; பயின் - பிசின்.)

*பிறர்க்கு உதவும் நற்குணம் உள்ளவரிடத்திலுள்ள வறுமைக்கு வெட்கம் இல்லையா? பிறர்க்குப் பயன்படாதாரிடத்தில் செல்வம் பிசினைப்போல உறுதியாய்ப் பற்றிக் கொண்டுள்ளதே! வறுமையும் செல்வமும் ஆகிய இரண்டும் நல்லோரிடமும் கீழோரிடமும் விரும்பத்தகாத முறையில் தங்கி நிற்கும் தன்மை கண்டு வியப்பாயாக! வேல் போன்ற கண்களையுடையவளே! வறுமை, செல்வம் என்னும் இவ்விரண்டும் இவ்விருவரிடத்திலும் பயன்படுதலின்றி நிற்கும் நிலையை நீ வியக்கின்றாய் இல்லையோ?*

*கருத்து* : **நல்லோரிடத்தில் வறுமையும் ஈயாதாரிடத்தில் செல்வமும் நிலைத்திருத்தல் வியப்பன்றோ!**

268. வலவைகள் அல்லாதார், காலாறு சென்று,
கலவைகள் உண்டு கழிப்பர்; — வலவைகள்
காலாறும் செல்லார், கருனையால் துய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

(வலவை - பேய்; கால் ஆறு சென்று - காலால் வழி நடந்து; மேல் ஆறு பாய - உடம்பில் வியர்வை ஆறு பெருக.)

*பிறருடையதைப் பேய்போல் பிடுங்கித் தின்னும் குணம் இல்லாத நல்லோர் வறுமையுற்றபோது காலால் வழிநடந்து*

*சென்று தாம் உழைத்துப் பெற்ற கலவைக் கூழை உண்டு காலங் கழிப்பர். பேய்போல் பிறர் உழைப்பின் பயனைப் பிடுங்கித் தின்னும் பண்புடைய கீழ் மக்களோ, காலால் நடந்து சிறு வழியையும் கடக்க மாட்டார்கள். வீட்டிற்குள்ளேயே இருந்து தம் உடம்பில் வியர்வை, ஆறுபோல் ஓடுமாறு, வயிறுபுடைக்கக் கருனைப் பொரியலோடு கூடிய உணவைக் களித்து உண்டிருப்பர்.*

*கருத்து* : **உழைத்து உண்பது கூழ் எனினும் மேல்.**

269. பொன்நிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட
மின்ஒளிர் வானம் கடலுள்ளும் கான்(று)உகுக்கும்;
வெண்மை உடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்;
வண்மையும் அன்ன தகைத்து.

(பொதி - கதிர்; பீள் - கரு; மின் - மின்னல்; ஒளிர் - ஒளிர்கின்ற; கான்று - கக்கி; உகுக்கும் - கொட்டும்; வண்மை - கொடைத் தன்மை.)

*பொன் போன்ற நிறத்தையுடைய செந்நெற்பயிர்கள் மேலே பொதிந்துள்ள தாளுடனும் ஈனும் தருவாயிலுள்ள கதிர்களுட னும் வாடி நிற்க, மின்னல் மிளிர்கின்ற மேகம் அப்பயிர்களுக்குப் பயன்படுமாறு பெய்யாமல் வீணாகக் கடலுக்குள்ளே நீரைக் கக்கிக் கொட்டும். அறிவிலார் சிறந்த செல்வத்தைப் பெற்றால் அவர்களுடைய கொடைச் செயலும் அத்தன்மையதே ஆகும்.*

*கருத்து* : **அறிவிலார் செல்வம் தேவையான இடத்தில் பயன்படாது; தேவையற்ற இடத்தில் சென்று அழியும்.**

270. ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்
ஓதி அனையார் உணர்வுடையார்; — தூய்தாக
நல்கூர்ந்தும் செல்வர்இரவாதார்; செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்.

(ஓதுதல் - படித்தல்; அனையார் - ஒப்பாவர்; தூய்தாக - முற்றிலுமாக; நல்கூர்தல் - வறுமையடைதல்; ஈதல் - கொடுத்தல்.)

*அறிவில்லாதவர் கற்றவராயினும் கல்லாதவரோடு ஒப்பர். அறிவுடையார் கற்றிலராயினும் கற்றவரோடு ஒப்பர். முற்றிலுமாக வறுமையடைந்தபோதிலும் இரவாதிருப்பவர்களே செல்வர்; இரந்தோர்க்குக் கொடுக்காதவர் செல்வமுடையவராக இருந் தாலும் வறியவரே!*

*கருத்து* : **இரவாதவர் வறியராயினும் செல்வரே; ஈயாதார் செல்வ ராயினும் வறியரே.**

# 28

## ஈயாமை

271. நட்டார்க்கும், நள்ளா தவர்க்கும், உளவரையால்,
அட்டது, பாத்(து)உண்டல், அட்(டு)உண்டல்; – அட்ட(து),
அடைத்திருந்(து) உண்டொழுகும், ஆவ(து)இல் மாக்கட்கு
அடைக்குமாம், ஆண்டைக் கதவு.

(நள்ளாதவர் - நட்புக் கொள்ளாதவர்; உளவரை - உள்ள அளவிற்கு; அட்டது - சமைத்தது; பாத்து - பகுத்து; ஆண்டை - அவ்விடம் (மேலுலகம்.)

*நண்பர்களுக்கும் நட்பின்றிப் புதியதாக வந்தவர்க்கும் தம்மிடம் உள்ள அளவிற்கு ஏற்பச் சமைத்த உணவைப் பகுத்துக் கொடுத்து உண்ணுதலே உண்ணுதலாகும். அவ்வாறின்றி, சமைத்த உணவைக் கதவை அடைத்துக் கொண்டு தாம் மட்டும் உண்டு வாழுகின்ற பயனில்லாத மக்களுக்கு அவ்வுலகக் கதவு மூடப்படும்.*

*கருத்து* : **இருப்பதைப் பகுத்துண்ணுதலே உண்ணுதலாம்.**

272. எத்துணை யானும், இயைந்த அளவினால்,
சிற்றறம் செய்தார் தலைப்படுவர்; – மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால், பின்அறிதும் என்பார்,
அழிந்தார் பழிகடலத் துள்.

(தலைப்படுவர் - உயர்வெய்துவர்; பின்அறிதும் - பிறகு சிந்திப்போம்; கடலம் - கடல்.)

*எந்த அளவினதாயினும் முடிந்த அளவில் சிறிய அறமேனும் செய்தவர் உயர்வடைவார். அவ்வாறின்றி, மிகுதியான செல்வம் கிடைத்தால் அறம் செய்வது பற்றிப் பிறகு சிந்திப்போம் என்று இருப்போர் பழியாகிய கடலில் மூழ்கி அழிவர்.*

*கருத்து* : **ஈயாதார் பழி எய்துவர்.**

273. துய்த்துக் கழியான், துறவோர்க்கொன்(று) ஈகலான்,
வைத்துக் கழியும் மடவோனை, – வைத்த
பொருளும் அவனை நகுமே; உலகத்(து)
அருளும் அவனை நகும்.

(ஈகலான் - ஈயாதவன்; கழியும் - இறக்கும்; மடவோன் - அறிவில்லாதவன்; நகும் - (இகழ்ந்து) சிரிக்கும்.)

*தன்னிடமுள்ள பொருளைத் தானும் துய்க்காமலும் துறவிகளுக்கும் கொடுக்காமலும் பொருளைத் தேடி வைத்திருக்கும்*

*அறிவிலியை, அவன் தேடி வைத்த பொருளும் இகழ்ந்து சிரிக்கும்; உயர்ந்தோருடைய அருளும் அவனைச் சிரிக்கும்.*

**கருத்து : ஈகையில்லானை அவன் தேடிய பொருளும் சிரிக்கும்; உலகமும் சிரிக்கும்.**

274. கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்; இல்லத்(து)
உருவுடைக் கன்னியரைப் போலப், பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்.

(தேற்றா - அறியாத; இடுக்குடை - சுருங்கிய; ஏதிலார் - பிறர்.)

*பிறர்க்குக் கொடுத்தலும் தான் நுகர்தலும் அறியாத சுருங்கிய உள்ளமுடையவனிடம் சேர்ந்த பெருஞ்செல்வம், வீட்டிலுள்ள அழகுடைய கன்னிப் பெண்களைப் பருவ காலத்தில் பிறர் அனுபவிப்பதுபோல அயலானால் நுகரப்படும்.*

**கருத்து : ஈகையிலான் செல்வத்தை அயலான் துய்ப்பான்.**

275. எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற்(று) ஊறல்பார்த்(து) உண்பர்;
மறுமை அறியாதார் ஆக்கத்தின், சான்றோர்
கழிநல் குரவே தலை.

(எறி நீர் - அலை வீசும் கடல்; அறுநீர் - நீர் அற்றுப்போன; ஊறல் - ஊற்று; ஆக்கம் - செல்வம்; தலை - சிறந்தது.)

*அலைமோதும் பெரிய கடலை அடுத்திருந்தாலும் அதை விடுத்து, நீர் வற்றிப் போகின்ற சிறிய கிணற்றின் ஊற்றினைத் தேடிச் சென்று மக்கள் நீர் பருகுவர். அதுபோல மறுமைப் பயனை அறியாதவனிடம் உள்ள பெருஞ்செல்வத்தைவிடப் பெரியோரது மிக்க வறுமையே மேலானது.*

**கருத்து : ஈகையில்லாதவன் செல்வத்தைக் காட்டிலும் சான்றோரின் வறுமை மேலானது.**

276. என(து)என(து) என்றிருக்கும் ஏழை பொருளை;
என(து)என(து) என்றிருப்பன் யானும்; – தனதாயின்
தானும் அதனை வழங்கான்; பயன்துவ்வான்;
யானும் அதனை அது.

(வழங்கான் - கொடுக்க மாட்டான்; துவ்வான் - துய்க்க மாட்டான்.)

*'என்னுடையது, என்னுடையது' என்று சொல்லிக் கொண்டிருக்கும் அறிவிலியின் பொருளை நானும் 'என்னுடையது' என்று சொல்லிக் கொண்டிருப்பேன். எவ்வாறெனில், அப்பொருள்*

*அவனுடையதாக இருந்தும் அவன் அதைப் பிறர்க்குக் கொடுப்பதுமில்லை; தான் துய்ப்பதும் இல்லை. நானும் அப்பொருளுக்கு அவ்வாறே உள்ளேன்.*

*கருத்து* : **ஈயாதார் செல்வம் எவர்க்கும் பயன் தருவதில்லை.**

**277.** வழங்காத செவ்வரின் நல்கூர்ந்தார் உய்ந்தார்;
இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்; – உழந்(து)அதனைக்
காப்(பு)உய்ந்தார், கல்லுதலும் உய்ந்தார்,தம் கைந்நோவ
யாப்(பு)உயந்தார்; உய்ந்த பல.

**(உய்தல் - தப்பித்தல்; உழத்தல் - வருந்துதல்; காப்பு - காத்தல்; கல்லுதல் – தோண்டுதல்; யாப்பு – கட்டு.)**

*கொடாத செல்வரினும் வறுமையாளரே பல்துன்பங்களின்றும் தப்பியவர் ஆவர். எவ்வாறெனில், அவர்கள் பொருளை இழந்தார்கள் என்ற சொல்லிலிருந்து தப்பினர்; வருந்தி அப்பொருளைக் காத்தலினின்றும் தப்பினர்; அப்பொருளைப் புதைக்க நிலத்தைத் தோண்டுதலினின்றும் தப்பினர்; பொருளைக் கவர்வோரால் தம் கைகள் வலிக்கக் கட்டப்படுவதிலிருந்தும் தப்பினர். இவ்வாறாக அவர்கள் தப்பிப் பிழைத்தவை பல.*

*கருத்து* : **செல்வத்தை ஈயாது வைத்திருப்போர் அடையும் துன்பங்கள் பல.**

**278.** தனதாகத் தான்கொடான்; தாயத் தவரும்
தமதாய போழ்தே கொடாஅர்; – தனதாக
முன்னே கொடுப்பின், அவர்கடியார்; தான்கடியான்
பின்னே அவர்கொடுக்கும் போழ்து.

**(தாயத்தவர் – பங்காளிகள்; கடிதல் - விலக்குதல்.)**

*ஒருவன் தேடிய பொருள் தனக்கே உரியதாயிருக்கும்போது தானேயும் பிறர்க்குக் கொடுத்தல் இல்லை. அவன் இறந்தபின் அப்பொருளைத் தமதாகப் பெற்ற அவனுடைய தாயத்தாரும் பிறருக்குக் கொடுக்கப் போவதில்லை. அச்செல்வம் தன்னுடையதாக இருக்கையில் தான் இறப்பதற்கு முன்பே பிறர்க்குக் கொடுத்திருந்தால் தாயத்தார் அவனைத் தடுத்திருக்க மாட்டார்கள். இறந்த பின்பு தாயத்தார் கொடுத்தால் அவன் வந்து அதைத் தடுத்துவிடவும் முடியாது. (அப்படியிருக்க உள்ளபோதே கொடாதது ஏனோ?)*

*கருத்து* : **செல்வம் தனக்கு உரியதாய் இருக்கும்போதே பிறர்க்குக் கொடுத்துப் பயன் பெற வேண்டும்.**

**279.** இரவலர் கன்றாக, ஈவார்ஆ ஆக,
விரகில் சுரப்பதாம் வண்மை; – விரகின்றி

வல்லவர் ஊன்ற வடிஆபோல், வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாம் கீழ்.

(இரவலர் - இரப்பவர்; ஆ - பசு; விரகு - உற்சாகம்; ஊன்ற - அழுத்திக் (கறக்க); வாய் வைத்து - வாய்த்த இடமெல்லாம்; கொல்ல - வருத்த.)

*இரப்போர் கன்றாகவும், கொடுப்போர் பசுவாகவும் இருக்கும் படி உற்சாகத்துடன் கொடுப்பதுவே ஈகையாம். உற்சாகமில் லாமல், வலியவர் அழுத்திக் கறக்கப் பால் தருகின்ற பசுவைப் போல வாய்த்தபோதெல்லாம் வல்லவர் வருத்துவதனால் கொடுப்பது கீழோர் இயல்பு.*

*கருத்து* : **ஈகைக் குணமில்லார் வலிந்து பறிப்பவர்க்கல்லது பிறர்க்கு உதவார்.**

280. ஈட்டலும் துன்பம்;மற்(று) ஈட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்; – காத்தல்
குறைபடில் துன்பம்; கெடில்துன்பம்; துன்புக்கு
உறைபதி, மற்றைப் பொருள்.

(ஈட்டல் - சேர்த்தல்; ஒண்பொருள் - சிறந்த பொருள்; கடு - மிகவும்; கெடுதல் - அழிதல்; உறைபதி - இருப்பிடம்.)

*செல்வத்தைச் சேர்த்தலும் துன்பம்; தேடிய சிறந்த பொருளைப் பாதுகாத்தலும் அவ்வாறே பெருந்துன்பம்; காத்த பொருளில் சிறிது குறைபடினும் துன்பம்; முற்றிலும் அழிந்தாலும் துன்பம். ஆதலால் செல்வம் துன்பங்களுக்கெல்லாம் இருப்பிட மாம்.*

*கருத்து* : **பொருளால் துன்பமேயன்றி இன்பம் இல்லை.**

## 29

## இன்மை

281. அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்,
பத்(து)எட்(டு) உடைமை, பலருள்ளும் பா(டு)எய்தும்;
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்,ஒன்(று) இல்லாதார்,
செத்த பிணத்தின் கடை.

(அத்திட்ட - காவி தோய்த்த; கூறை - ஆடை; பாடு - பெருமை; கடை - கீழானவர்.)

*காவி தோய்த்த ஆடையை இடையில் சுற்றிக் கொண்டு வாழ்ந்தாலும், பத்தோ எட்டோ பொருளுடையராயிருந்தால்,*

*அவர்கள் பலரிடையேயும் நன்கு மதிக்கப் பெறுவர். உலகத்தாரது மதிப்புக்கு ஏற்ற உயர்ந்த குடியிற் பிறந்திருந்தாலும் சிறிதும் பொருளில்லாதவர் செத்த பிணத்தைக் காட்டிலும் இழிந்த வராகக் கருதப்படுவர்.*

*கருத்து* : **நற்குடியிற் பிறந்தாலும் பொருளிலார் பெருமை பெறார்.**

282. நீரினும் நுண்ணிது நெய்என்பர்; நெய்யினும்
யாரும் அறிவர் புகைநுட்பம்; — தேரின்
இரப்(பு)இடும்பை யாளன் புகுமே, புகையும்
புகற்(கு)அரிய பூழை நுழைந்து.

**(நுண்ணிது - நுண்மையானது; தேரின் - ஆராயும்போது; இடும்பை - துன்பம்; பூழை - துளை.)**

*நீரைக் காட்டிலும் நெய் நுண்ணியது என்று சொல்லுவர். நெய்யைக் காட்டிலும் புகை நுண்ணியது என்பதை எல்லோரும் அறிவர். ஆராயும்போது, இரத்தலாகிய துன்பமுடையவன், புகையும் நுழைய முடியாத வாயிலிலும் நுழைந்து செல்வர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்வான்.*

*கருத்து* : **வறுமை ஒருவனை மிகவும் எளியவனாக்கும்.**

283. கல்ஓங்கு உயர்வரைமேல், காந்தள் மலராக்கால்,
செல்லாவாம் செம்பொறி வண்டினம்; — கொல்லைக்
கலாஅல் கிளிகடியும் கானக நாட!
இலாஅஅர்க்(கு) இல்லை தமர்.

**(வரை - மலை; கலாஅல் - கல் ஆல் - கல்லைக் கொண்டு; கடியும் - ஓட்டுகின்ற; தமர் - உறவினர்.)**

*தினைப்புனம் காப்பவர்கள் கொல்லைகளில் கற்களைக் கொண்டு கிளிகளை ஓட்டுகின்ற காடுகளையுடைய நாடனே! கற்கள் நிறைந்துள்ள, ஓங்கி உயர்ந்துள்ள மலையில் காந்தள் மலர் பூக்காவிட்டால் சிவந்த புள்ளிகளையுடைய வண்டுக்கூட்டம் அம்மலைமேல் பறந்து செல்லாவாம். அதுபோன்று பொருளி லார்க்கு உறவினர் இல்லை.*

*கருத்து* : **செல்வமில்லாதவரிடம் யாரும் செல்ல மாட்டார்.**

284. உண்டாய போழ்தில், உடைந்துழிக் காகம்போல்
தொண்(டு)ஆ யிரவர் தொகுபவே; — வண்டாய்த்
திரிதரும் காலத்துத், தீதிலிரோ என்பார்,
ஒருவரும் இவ்வுலகத்(து) இல்.

**(உடைந்துழி - (உடல்) அழியும்போது; தொண்டு - ஒன்பது; தீது + இலிரோ? - துன்பமில்லாமல் இருக்கின்றீரா?)**

*ஒருவரிடம் பொருள் இருக்கும் காலத்தில் அதை நுகர்வதற்காக அழிந்த உடம்பைச் சூழும் காக்கைகளைப்போல ஒன்பதாயிரம் பேர் (ஆயிரக்கணக்கானோர்) வந்து கூடுவார்கள். (அவரே செல்வமிழந்து, உணவைத் தேடி) வண்டுபோலத் திரியும் காலத்தில், 'நீர் துன்பமில்லாமல் இருக்கின்றீரா?' என்று கேட்கக் கூடியவர் இவ்வுலகில் ஒருவர்கூட இல்லை.*

*கருத்து* : **செல்வமுள்ளவனையே அனைவரும் சூழ்வர்.**

285. பிறந்த குலம்மாயும்; பேராண்மை மாயும்;
சிறந்ததம் கல்வியும் மாயும்; – கறங்கருவி
கல்மேல் கழூஉம் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு.

(மாயும் - அழியும்; ஆண்மை - வலிமை; கறங்குதல் - ஒலித்தல்; கணம் - கூட்டம்.)

*ஒலிக்கின்ற அருவிகள் கற்களின்மேல் விழுந்து தூய்மை செய்கின்ற கூட்டமான மலைகளையுடைய நல்ல நாட்டை உடையவனே! வறுமையடைந்தவர்களுக்கு அவர்கள் பிறந்த குடிப்பெருமை அழியும்; பெரிய வலிமை அழியும்; சிறப்பு வாய்ந்த கல்வியும் அழியும்.*

*கருத்து* : **குடிப்பெருமை, வலிமை, கல்வி ஆகிய சிறப்புகள் வறுமையால் அழியும்.**

286. உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்(கு)
உள்ளூர் இருந்தும்ஒன்(று) ஆற்றாதான், – உள்ளூர்
இருந்(து)உயிர் கொன்னே கழியாது, தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று.

(கூர் - மிகுந்த; நசை இ - விரும்பி; கொன்னே - வீணாக.)

*வயிற்றினுள்ளே தோன்றிய மிகுந்த பசியினால் துன்பமெய்தித் தம்மிடம் உணவை விரும்பி வந்தவர்க்கு உள்ளூரில் இருந்து கொண்டும் ஒன்றும் கொடுக்க மாட்டாதவன், அங்கேயே இருந்து உயிரை வீணாகக் கழிக்காமல் வேற்றூருக்குச் சென்று பிறர் வீட்டில் விருந்தாளியாய் இருத்தலே நல்லது.*

*கருத்து* : **பசித்தவர்க்கு உதவாதான் வாழ்க்கை பயனற்றது.**

287. நீர்மையே அன்றி, நிரம்ப எழுந்த,தம்
கூர்மையும் எல்லாம் ஒருங்(கு)இழப்பர்; – கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய்! நிரப்(பு)என்னும்
அல்லல் அடையப்பட் டார்.

(நீர்மை - நற்குணம்; கூர்மை - அறிவுக் கூர்மை; அலைக்கும் - வருத்தும்; எயிறு - பல்; அல்லல் - துன்பம்.)

*கூர்மை அழகால் முல்லை அரும்பை வெல்லுகின்ற பற்களை யுடையவளே! வறுமை எனும் துன்பம் சேரப்பட்டவர் நற்பண்பு களை மட்டுமே அல்லாமல், நிறைவுற ஓங்கியுள்ள தம் கூர்மை யான அறிவையும், மற்றுமுள்ள எல்லாச் சிறப்புகளையும் ஒருங்கே இழப்பர்.*

*கருத்து* : **வறுமையால் குணமும் அறிவும் அழியும்.**

288. இட்டாற்றுப் பட்(டு),ஒன்(று) இரந்தவர்க்(கு) ஆற்றாது,
முட்டாற்றுப் பட்டும், முயன்(று)உள்ளூர் வாழ்தலின்,
நெட்டாற்றுச் சென்று, நிரைமனையிற் கைந்நீட்டும்,
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(இட்டு + ஆறு + பட்டு = வறுமை வழியில் அகப்பட்டு; முட்டு + ஆறு + பட்டு = சங்கடமான வழியிலே பொருந்தி; நெடு + ஆறு = நீண்ட வழி; கெடு + ஆறு = கெட்ட வழி.)

*வறுமையில் அகப்பட்டுத் துன்புற்று யாதானும் ஒன்றை இரந்து தன்னிடம் வந்தவர்க்கு உதவ முடியாமல் தட்டுப்பாட் டோடு உள்ளூரில் வாழ்வதைக் காட்டிலும், நெடுவழி சென்று, வரிசையாக அமைந்துள்ள வீடுகளில் கைகளை ஏந்தி இரந்து வாழுகின்ற அவல வாழ்க்கை வாழ்வது நல்லதாம்.*

*கருத்து* : **இரப்பவர்க்குக் கொடுக்க முடியாத வறுமை நிலையை விட இரந்துண்டு வாழ்தல் நல்லது.**

289. கடகம் செறிந்த,தம் கைகளால் வாங்கி,
அடகு பறித்துக்கொண்(டு) அட்டுக், – குடைகலனா,
உப்பிலி வெந்ததைத்தின்(று), உள்ளற்று வாழ்பவே,
துப்புரவு சென்(று)உலந்தக் கால்.

(கடகம் - காப்பு; அடகு - கீரை; குடை - பனங்குடை; கலன் - உண்கலன்; உப்பிலி - உப்பில்லாதது; உள் அற்று - உள்ளம் உடைந்து; துப்புரவு - அனுபவிப்பன (செல்வம்); உலத்தல் - அழிந்து ஒழிதல்.)

*செல்வராயிருந்தோர், அச்செல்வம் நீங்கி வறுமையுற்ற காலத் தில், முன் செல்வராய் இருந்தபோது காப்பு அணிந்திருந்த அதே கைகளால் தூறுகளைத் தள்ளிக் கீரைகளைப் பறித்துவந்து வேக வைத்து, பனங்குடையை உண்கலமாகக் கொண்டு, உப்பில்லாது வெந்த அக்கீரையைத் தின்று, மனம் உடைந்து வாழ்வார்கள்.*

*கருத்து* : **செல்வரும் வறியராகி வருந்துவர்.**

290. ஆர்த்த பொறிய, அணிகிளர் வண்டினம்,
பூத்(து)ஒழி கொம்பின்மேல் செல்லாவாம்; – நீர்த்(து)அருவி

தாழா, உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட!
வாழாதார்க்(கு) இல்லை தமர்.

(ஆர்த்த - நிறைந்த; பொறிய - பொறிகளையுடைய; அணி - அழகு; பூத்து ஒழி - பூத்து உதிர்ந்த; தாழா - குறைவு படாத.)

*நீர் நிறைந்த அருவிகள் இடையறாது ஒழுகுகின்ற மேலான சிறப்பையுடைய குளிர்ந்த மலைநாட்டவனே! நிறைந்த புள்ளிகளும் அழகுப் பொலிவும் கொண்ட வண்டுக் கூட்டம் பூத்து உதிர்ந்துபோன மரக்கிளைகளைச் சேரா. அதுபோலச் செல்வமில்லாதார்க்கும் பிறர் எவரும் அவரிடம் வாராமையால் உறவினர் இல்லை.*

*கருத்து* : **செல்வமில்லார்க்கு உறவினர் இல்லை.**

# 30

# மானம்

291. திருமதுகை யாகத், திறன்இலார் செய்யும்,
பெருமிதம் கண்டக் கடைத்தும், – எரிமண்டிக்
கானம் தலைப்பட்ட தீப்போல் கனலுமே,
மானம் உடையார் மனம்.

(திரு - செல்வம்; மதுகை - வலிமை; மண்டி - மிகுந்து; கானம் - காடு.)

*(தம்மிடமுள்ள) செல்வத்தையே வலிமையாகக் கொண்டு, குண வலிமையற்றவர்கள் செய்யும் போலிப் பெருமிதச் செய்கையைக் காணும்போது, மானம் உடையவர்களின் மனம், எரிமிகுந்து காட்டில் பற்றிய தீயைப் போலக் கனன்று எரியும்.*

*கருத்து* : **கீழ்மைச் செயல்களைக் கண்டால் மானமுடையோர் மனம் கொதிக்கும்.**

292. என்பாய் உகினும், இயல்(பு)இலார் பின்சென்று,
தம்பா(டு) உரைப்பரோ தம்உடையார்? தம்பா(டு)
உரையாமை, முன்உணரும் ஒண்மை உடையார்க்(கு),
உரையாரோ தாம்உற்ற நோய்?

(உகினும் - சிதைந்தாலும்; தம் பாடு - தம் வருத்தத்தை; ஒண்மை - கூர் அறிவு.)

*தம்மானத்தைக் காக்கும் இயல்புடையவர், எலும்பு தோன்ற இளைத்துத் தாம் சிதைந்து ஒழிவதாக இருந்தாலும், நல்லியல்பு இல்லாதவர் பின்னே சென்று தமது வறுமை நிலையைச்*

*சொல்லுவரோ? (சொல்லார்.) தம் வறுமையைத் தாம் சொல்லா திருக்கும் முன்பே குறிப்பால் அறிந்து உதவத்தக்க கூரிய அறிவுடையார்க்குத் தாம் உற்ற வருத்தத்தைச் சொல்லாது இருப்பரோ? (சொல்வர்.)*

*கருத்து* : **மானமுடையார் தம் வறுமையைக் குறிப்பால் அறியும் இயல்புடையார்க்கன்றிப் பிறரிடம் கூறார்.**

293. யாம்ஆயின் எம்இல்லம் காட்டுதும்; தாம்ஆயின்
காணவே கற்பழியும் என்பார்போல்; – நாணிப்
புறங்கடை வைத்(து)ஈவர் சோறும்; அதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

(கற்பு அழியும் - உறுதி கெடும்; நாணி - கூச்சப்பட்டு; புறங்கடை - வெளிவாசல்.)

*வறுமையுடையோராயினும் நாமானால் செல்வர்க்கு நம் வீடு முழுவதையும் காண்பிப்போம். செல்வச் செருக்குடைய அவரோ எனில், வீட்டின் உட்புறத்தைப் பிறர் கண்ட அளவிலே அதன் உறுதி கெடும் எனக் கருதுவார்போலக் கூச்சப்பட்டு நம்மை வாசலில் வெளியிலேயே இருத்திச் சோறிடுவர். ஆதலால் செல்வர் நட்பை, மனமே நீ மறந்திடுவாயாக.*

*கருத்து* : **நம்மை மதியாத செல்வரது நட்பை நாம் மறந்து விட வேண்டும்.**

294. இம்மையும் நன்றாம், இசைநெறியும் கைவிடா(து),
உம்மையும் நல்ல பயத்தலால், – செம்மையின்
நானம் கமழும் கதுப்பினாய்! நன்றேகாண்
மானம் உடையோர் மதிப்பு.

(இசை - புகழ்; உம்மை - மறுமை; நெறி - வழி; பயத்தல் - தருதல்; நானம் - கத்தூரி; கதுப்பு - கூந்தல்.)

*செம்மையான கத்தூரி மணம் கமழும் கூந்தலையுடையவளே! மானமுடையோரால் மதிக்கப்படுதல் நன்றென அறிவாயாக. ஏனெனில், அது இப்பிறப்பினும் நல்லதாகும். புகழ் தரும் வழியை விட்டும் நீங்காது; மறுமையிலும் நன்மைகள் தரும்.*

*கருத்து* : **மானமுடையோரால் மதிக்கப் பெறுதல் மறுமையிலும் இன்பம் தரும்.**

295. பாவமும் ஏனைப் பழியும் படவருவ,
சாயினும் சான்றவர் செய்கலார்; – சாதல்
ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம்; அவைபோல்
அருநவை ஆற்றுதல் இன்று.

(ஏனை - மற்றும்; சாயினும் - சாக நேரிட்டாலும்; அரு - பொறுத்தற்கரிய; நவை - துன்பம்; ஆற்றுதல் - செய்தல்.)

*பாவமும் மற்றும் பழிப்புரையும் தொடருமாறு வரும் செயல்களைத் தாம் சாக நேரிட்டாலும் பெரியோர் செய்யார். ஏனெனில், சாதல் ஒரு நாளில் ஒரு பொழுதைய துன்பமே. அப்பழி பாவமோ உயிர் உள்ள அளவும் நிலைத்து நின்று நுகர்தற்கரிய துன்பங்களைச் செய்யும்.*

*கருத்து* : **சாதல் ஒரு நாளைத் துன்பம்; பாவம் பழியோ பல நாள் துன்பம்.**

296. மல்லல்மா ஞாலத்து வாழ்ப வருள்எல்லாம்
செல்வர் எனினும், கொடாதவர் நல்கூர்ந்தார்;
நல்கூர்ந்தக் கண்ணும், பெருமுத் தரையரே
செல்வரைச் சென்(று)இரவா தார்.

(மல்லல் - வளப்பம்; மா - பெரிய; நல்கூர்ந்தார் - வறியவர்; கண்ணும் - காலத்திலும்.)

*வளப்பமுடைய இப்பெரிய உலகில் வாழ்பவர் எல்லாரையும் விடச் செல்வமுடையரேயாயினும் இரப்போர்க்குக் கொடுக்காத வர்கள் வறியவரே! வறுமையடைந்த காலத்திலும் செல்வரிடத்துச் சென்று ஒன்றைக் கேட்காதவர்கள் 'பெருமுத்தரையர்' என்று சிறப்புப் பெயர் பெற்றவரை ஒத்த செல்வரே!*

*கருத்து* : **வறுமையிலும் இரவாமை மானமுடையார் செயல்.**

297. கடையெலாம் காய்பசி அஞ்சும்;மற்(று) ஏனை
இடையெலாம் இன்னாமை அஞ்சும்; – புடைபரந்த
வில்புருவ வேல்நெடுங் கண்ணாய்! தலையெலாம்
சொல்பழி அஞ்சி விடும்.

(கடை - கீழவர்; இடை - இடைப்பட்டவர்; தலை - மேலோர்; புடை - பக்கம்.)

*பக்கங்களில் பரவிய வில் போலும் புருவத்தையும் வேல் போலும் நெடிய கண்களையும் உடையவளே! கீழ்ப்பட்ட குண முடையாரெல்லாம் வருத்துகின்ற பசிக்கு அஞ்சுவர்; அவர்களிலும் வேறுபட்ட இடைப்பட்டவர்கள் உடல் துன்பத்திற்கு அஞ்சுவர்; தலைப்பட்டவர்கள் பழிச் சொல்லுக்கு அஞ்சுவர்.*

*கருத்து* : **மேலோர் பழிச் சொல்லுக்கு அஞ்சுவர்.**

298. நல்லர், பெரி(து)அளியர், நல்கூர்ந்தார், என்(று)எள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால், – கொல்லன்
உலைஊதும் தீயேபோல், உள்கனலும் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

(அளியர் - அருளத் தக்கவர்; எள்ளி - ஏளனம் செய்து; சிறு நோக்கு - சிறுமைப் பார்வை; கனலும் - கொதிக்கும்.)

*'இவர் மிகவும் நல்லவர்; இப்பொழுது வறுமையடைந்து விட்டார்; ஆதலால் மிகவும் இரக்கம் கொண்டு அருளத்தக்கவர்' என்று ஏளனமாகக் கூறிச் செல்வமுடையவர்கள் சிறுமையான பார்வை பார்க்கும்போது, உயர் பண்புகளையுடைய சான்றோர் மனம் கொல்லன் உலைக்களத்தில் ஊதும் தீயேபோல உள்ளே கனன்று நிற்கும்.*

***கருத்து* : தம்மை மதியாது இகழும் செல்வர்களுடைய செயல் மானமுடையோர் மனத்தைக் கொதிக்கச் செய்யும்.**

299. நச்சியார்க்(கு) ஈயாமை நாண்அன்று; நாள்நாளும்
அச்சத்தால் நாணுதல் நாண்அன்றாம்; – எச்சத்தின்
மெல்லியர் ஆகித்,தம் மேலாயார் செய்தது
சொல்லா(து) இருப்பது நாண்.

(நச்சியார் - விரும்பி வந்தவர்; அன்றாம் - அல்லவாம்; எச்சம் - குறைவு.)

*நம்மை விரும்பி வந்தவர்க்கு ஒன்றைக் கொடாதிருப்பது நாணம் அன்று; நாள்தோறும் பயத்தினால் நாணுதலும் நாணம் அன்று; செல்வக் குறைவுடைய எளியவர்களாயிருக்கையில் செல்வத்தால் உயர்ந்தவர் தமக்குச் செய்த மதிப்புக் குறைவைப் பிறர்க்குச் சொல்லா திருப்பதே நாணமுடைமையாம்.*

***கருத்து* : தமக்குச் செய்த மதிப்புக் குறைவை வெளிச் சொல்லா திருத்தலே நாணமுடைமையாம்.**

300. கடமா தொலைச்சிய கான்உறை வேங்கை
இடம்வீழ்ந்த(து) உண்ணா(து) இறக்கும்; – இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்;
மானம் அழுங்க வரின்.

(கடமா - காட்டு விலங்கு; தொலைச்சிய - கொன்ற; கான் உறை - காட்டில் வாழும்; கையுறினும் - கைப்படுவதாயினும்; அழுங்க - கெட.)

*காட்டில் வாழ்கின்ற புலியானது விலங்கைக் கொன்று, அவ் விலங்கு தன் இடப்பக்கத்தில் விழுமாயின் அதனை உண்ணாமல் விட்டுவிட்டுக் கடந்து செல்லும்; அதுபோலச் சீரியோர் விண்ணுலகமே தம் கையில் கிடைப்பதாக இருந்தாலும் அது தம் மானம் கெட வருவதாயின் அதனை விரும்பார்.*

***கருத்து* : விண்ணுலகமே பெறுவதாயினும் மானம் கெடுவதைப் பெரியோர் விரும்பார்.**

# 31

# இரவச்சம்

301. நம்மாலே ஆவர்,இந் நல்கூர்ந்தார் எஞ்ஞான்றும்
தம்மால்ஆம் ஆக்கம் இலர்என்று, — தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ? தாமும்
தெருண்ட அறிவி னவர்.

(எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; ஆக்கம் - செல்வம்; மருட்சி - மயக்கம்; தெருண்ட - தெளிந்த.)

*"இவ்வறியவர் நம்மாலேதான் வாழ்வு பெறுகின்றனர்; அவர்களாக ஈட்டிய செல்வம் எதுவும் இல்லாதவர்" என்று தம்மைத் தாமே மேலாக எண்ணி மயங்கிய மனத்தையுடையவர்களின் பின்னே தெளிந்த அறிவினையுடையவர்கள், இரந்து செல்வார்களோ? (மாட்டார்.)*

*கருத்து* : **இரப்பாரை இகழ்ந்து தம்மையே மதிக்கும் அறிவிலாரிடம் மேலோர் சென்று இரவார்.**

302. இழித்தக்க செய்(து),ஒருவன் ஆர உணலின்,
பழித்தக்க செய்யான், பசித்தல் தவறோ?
விழித்(து)இமைக்கும் மாத்திரை அன்றோ, ஒருவன்,
அழித்துப் பிறக்கும் பிறப்பு.

(ஆர - வயிறார (மிகுதியா); பழித்தக்க - பழிக்கத்தக்க; மாத்திரை - அளவு.)

*ஒருவன் இழிவான செயல்களைச் செய்து வயிறார உண்ணுவதைக் காட்டிலும், பழிக்கத்தக்க செயல்களைச் செய்யாதவனாய், பசியோடிருந்து சாவது குற்றமாகுமா? (ஆகாது; ஏனெனில்) ஒருவன் செத்து மீண்டும் பிறக்கும் பிறப்பென்பது கண் விழித்து இமைக்கும் நேரத்தில் ஆவது அல்லவா?*

*கருத்து* : **பழிக்கத்தக்க இரத்தலினும் இறத்தல் நல்லது.**

303. இல்லாமை கந்தா, இரவு துணிந்(து),ஒருவர்
செல்லாரும் அல்லர் சிறுநெறி; — புல்லா
அகம்புகுமின், உண்ணுமின், என்பவர்மாட்(டு) அல்லால்
முகம்புகுதல் ஆற்றுமோ மேல்.

(கந்து - காரணம்; இரவு - இரத்தல்; புல்லா - தழுவிக் கொண்டு; முகம் புகுதல் - எதிர்சென்று நிற்றல்.)

*வறுமை காரணமாக இரத்தலை மேற்கொள்ளத் துணிந்து, இரத்தலாகிய இழிதொழிலில் ஒருவர் செல்லாமலும் இருக்க*

*மாட்டார். ஆயினும், தம்மைத் தழுவி, 'வீட்டிற்கு வாருங்கள்; உண்ணுங்கள்' என்று சொல்வாரிடத்தில் அல்லாமல் மற்றை யோரிடத்தில் அவர் தயவை நாடி எதிர்சென்று நிற்பார்களோ? (மாட்டார்கள்).*

*கருத்து* : **மேலோர் தம்மை மதித்து அழைக்காதவரை ஏறெடுத்தும் பாரார்.**

304. திருத்தன்னை நீப்பினும், தெய்வம் செறினும்,
உருத்த மனத்தோ(டு) உயர்(வு)உள்ளின் அல்லால்,
அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின்சென்(று)
எருத்(து)இறைஞ்சி நில்லாதாம் மேல்.

(செறினும் - வெகுண்டாலும்; உருத்த - சினந்த; அருத்தம் - செல்வம்; செறிக்கும் - சேர்த்து வைக்கும்; எருத்து - தலை.)

*மேலோர்கள் செல்வம் தம்மை விட்டு நீங்கினாலும், தெய்வம் வெகுண்டாலும், ஊக்கிய மனத்தோடு உயர்வையே எண்ணுவது அல்லாமல், செல்வத்தைப் புதைத்து வைக்கும் அறிவிலார் பின்னே சென்று, ஒன்றைப் பெற வேண்டி, அவரிடம் தலை வணங்கி நில்லார்.*

*கருத்து* : **மேலோர் அறிவிலாச் செல்வரிடம் தலைவணங்கி நில்லார்.**

305. கரவாத திண்அன்பின் கண்அன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை; – இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்; என்கொலோ?
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு.

(கரத்தல் - ஒலித்தல்; திண்மை - உறுதி; அன்னார் - ஒப்பானவர்; கண்ணும் - இடத்திலேயும்; உள்ளுதல் - நினைத்தல்.)

*ஒன்றையும் ஒளிக்காது கொடுக்கின்ற உறுதியான அன்பினை யுடைய, கண் போன்ற இனியவரிடத்தும் கூட, இரந்து பெறாமல் வாழும் வாழ்க்கையே வாழ்க்கையாம். இரத்தலை நினைக்கும் பொழுதே மனம் உருகி அழிகிறது. அவ்வாறிருக்க, இரந்து ஒன்றினைப் பெற்றுக் கொள்பவருடைய மனம் எப்படித்தான் இருக்குமோ? (அறியேன்).*

*கருத்து* : **கண்ணுக்குக் கண்ணானவரிடத்தும் இரவாது வாழ்தலே வாழ்வாம்.**

306. இன்னா இயைக; இனிய ஒழி(க)என்று,
தன்னையே தான்இரப்பத் தீர்வதற்(கு), – என்னைகொல்?
காதல் கவற்றும் மனத்தினால், கண்பாழ்பட்(டு),
ஏதி லவரை இரவு.

(இயைக - பொருந்துக; தீர்வது - நீங்கி விடுவது; கவற்றும் - கவலைப்படுத்தும்; பாழ்பட்டு - ஒளியிழந்து.)

*துன்பங்கள் சேரட்டும்; இன்பங்கள் விலகட்டும் என்று தன்னையே தான் திடப்படுத்திக் கொண்டால் தீர்வது வறுமை. இந்த ஒன்றிற்காகப் பொருளாசை துன்புறுத்தும் மனத்துடன் அறிவு கெட்டு அயலானிடம் சென்று இரப்பதால் என்ன பயன் கிடைக்கும்?*

*கருத்து* : **துன்பத்தை இன்பமாகக் கொண்டால் இரக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது.**

307. என்றும் புதியார் பிறப்பினும், இவ்வுலகத்(து)
என்றும் அவனே பிறக்கலான்; – குன்றின்
பரப்பெல்லாம் பொன்ஒழுகும் பாய்அருவி நாட!
இரப்பாரை எள்ளா மகன்.

(ஒழுகும் - ஒழுகும்படியாக; எள்ளுதல் - இகழ்தல்.)

*மலைப் பரப்பு முழுதும் பொன்னைக் கொழித்துப் பாய்கின்ற அருவிகளையுடைய மலைநாடனே! என்றென்றும் புதிய உருவினை உடையவர்கள் பிறந்து கொண்டே இருந்தாலும் அவர்கள் என்றென்றும் பழைய உணர்வினை உடையவர்களாகவே பிறக்கிறார்கள். ஆதலால், இரப்போரை எள்ளாத உணர்வுடைய மகன் தோன்றப் போவதில்லை. (ஆதலால் இரவாதே.)*

*கருத்து* : **என்றென்றும் இரப்போர் இகழப்படுவர்.**

308. புறத்துத்தன் இன்மை நலிய, அகத்துத்தன்
நன்ஞானம் நீக்கி, நீறிஇ, ஒருவனை
ஈயாய் எனக்(கு)என்(று) இரப்பானேல், அந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.

(இன்மை - இல்லாமை; நலிய - வருத்த; நீறிஇ - நிறுத்தி; மாற்றி விடின் - மறுத்து விட்டால்.)

*புற உடலைத் தன் வறுமையானது வருத்த, அதற்காகத் தன் நெஞ்சிலுள்ள நல்ல அறிவினை ஒதுக்கிவிட்டு, மனத் துணிவை முன் நிறுத்தி, செல்வமுடைய ஒருவனிடம் சென்று, 'எனக்குக் கொடு' என்று இரப்பவனுக்கு, அச்செல்வமுடையவன் இல்லை என்று மறுத்துவிட்டால் அப்பொழுதேனும் தன் பழைய நல்லறிவு மீண்டும் வரப்பெற்று அவ்விரப்பவன் இறந்து போகமாட்டானா?*

*கருத்து* : **ஒருவன் தர மறுப்பதைக் கேட்டும் இரப்பவன் இறவாமல் வாழ்வது ஏனோ?**

309. ஒருவர் ஒருவரைச் சார்ந்(து)ஒழுகல் ஆற்றி,
வழிபடுதல் வல்லுதல் அல்லால், – பரி(சு)அழிந்து,

செய்யீரோ என்னானும் என்னும்சொற்(கு) இன்னாதே,
பையத்தான் செல்லும் நெறி.

(வல்லுதல் - வலிவு உடைத்தாதல்; பரிசு - பெருமை; என்னானும் - யாதானும் (ஏதாவதொன்று); பைய – மெல்ல.)

*ஒருவர் மற்றொருவரைச் சார்ந்து, ஒருவர் மற்றொருவர்க்கு உதவியாய் இருவரும் ஒருவழியில் நடந்து, இரு திறத்தாரும் வல்லவராயிருப்பது முறையே அல்லாமல், அவருள் ஒருவர் தம் பெருமை அழிந்து மற்றொருவரிடம், யாதானுமோர் உதவி செய்யீரோ என்று சொல்கின்ற சொல்லைக் காட்டிலும் வறுமையால் மெலிந்து பொறுமையோடு அடங்கி நடக்கும் வாழ்க்கை தீயதாகுமோ? (ஆகாது).*

*கருத்து* : **இரந்து உயிர் வாழ்தலிலும் வறுமைத் துன்பத்தை ஏற்று நடத்தல் மேல்.**

310. பழமைகந் தாகப், பசைந்த வழியே
கிழமைதான் யாதானும் செய்க; – கிழமை
பொறாஅர் அவர்என்னில், பொத்தித்தம் நெஞ்சத்(து),
அறாஅச் சுடுவ(து)ஓர் தீ.

(கந்து - பற்றுக்கோடு; பசைதல் - அன்பு கொள்ளுதல்; கிழமை - நட்பு; பொத்தி - பதிந்து; அறா - நீங்காமல்.)

*ஒருவர் தம் நண்பரிடம் தொன்றுதொட்டு வந்த நட்பைப் பற்றுக்கோடாகக் கொண்டு அன்புடன் நெருங்கிய பொழுது, தாமும் அவரும் முன் காலத்திலிருந்த முறைமையினை நினைத்து, அவர்க்கு வேண்டிய உதவி எதுவாயினும் அந்நண்பர் செய்ய வேண்டும். பழமையைப் பற்றாகக் கொண்டு வந்தவரின் அந்த உரிமைச் செயலை, அந்நண்பர் பொறுக்கவில்லை என்றால் அஃது அவர் மனத்திலே பதிந்து நீங்காமல் சுடுகின்ற தீயாக நிற்கும்.*

*கருத்து* : **பழகியவர் இல்லையென மறுப்பது ஒருவர் நெஞ்சைத் தீப்போற் சுடுவதாகும்.**

# 32

# அவையறிதல்

311. மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்(டு),ஆங்(கு)ஓர்
அஞ்ஞானம் தந்திட்(டு), அதுஆங்(கு) அறத்துழாய்க்
கைஞ்ஞானம் கொண்டொழுகும் கார்அறி வாளர்முன்,
சொல்ஞானம் சோர விடல்.

(கோட்டி - அவை; உறழ் - ஒப்பு; அற துழாய் - மிகவும் பரப்பி; கை - சிறிய; கார் அறிவாளர் - இருண்ட அறிவினர்.)

*மெய்யறிவினையுடைய அவையில் கூறப்படுவன தம் கருத்தோடு மாறுபட்டவிடத்து, அவ்விடத்தில் அறிவில்லா ஒன்றைச் சொல்லி, அதனை அவ்விடத்தில் மிகவும் பரப்பி, தன் அற்ப அறிவினையே பற்றி நடக்கின்ற இருண்ட அறிவினையுடையவர்கள் முன்பு, அறிவுமொழிகளைக் கூறுதலைக் கைவிடுக.*

*கருத்து* : **அறிவிலிகள் அவையில் அறிவுரை சொல்லற்க.**

312. நாப்பாடம் சொல்லி நயம்உணர்வார் போல்செறிக்கும்
தீப்புலவர் சேரார் செறிவுடையார்; — தீப்புலவன்
கோட்டியுள் குன்றக், குடிப்பழிக்கும்; அல்லாக்கால்
தோட்புடைக் கொள்ளா எழும்.

(செறிக்கும் - (கூட்டம்) சேர்க்கும்; குன்ற - குறைவுபட; தோள்புடை கொள்ளா - தோளைத் தட்டிக் கொண்டு.

*உட்கருத்தை உயராது வெறுமனே மனப்பாடம் செய்து கொண்டு, நீதியை உணர்த்துகின்றவர்போலப் பிறர்க்கு அறிவுறுத்துகின்ற தீயபுலமையுடையானை அறிவு நிரம்பியோர் சேர மாட்டார். தீய புலமையுடையான் அவையிடத்தே தோற்றால், யாரிடம் தோற்றானோ அவருடைய குடிப்பிறப்பைக் குறைவு படுத்திப் பழித்துரைப்பான்; அல்லது தோளைத் தட்டிக்கொண்டு சண்டைக்கு எழுவான்.*

*கருத்து* : **அவையில் தோற்றால் அறிவிலான் இகழ்ந்து பேசுவான்; அல்லது சண்டைக்கு எழுவான்.**

313. சொற்றாற்றுக் கொண்டு, சுனைத்தெழுதல் காமுறுவர்,
கற்றாற்றல் வன்மையும் தாம்தேறார்; — கற்ற
செலவுரைக்கும் ஆ(று)அறியார்; தோற்ப(து) அறியார்;
பலஉரைக்கும் மாந்தர் பலர்.

(சொல் + தாறு - சொல்லாகிய தாற்றுக்கோல்; சுனைத்து எழுதல் - நாத்தினவெடுத்துப் பேச முற்படுதல்; காமுறுவர் - விரும்புவர்.)

*தனது சொல்லாகிய தாற்றுக்கோலைக் கொண்டு, பிறரைக் குத்திப் பேசுவதைச் சிலர் விரும்புவர்; அவர்கள், பிறர் கல்வியாற்றலும் சொல்வன்மையும் பெற்றிருப்பதை அறிந்து தெளிவடைய மாட்டார்கள். தாம் கற்றுள்ளவற்றை அவையில் பிறர் விரும்பிக் கேட்குமாறு சொல்லுதலையும் அறியார். இறுதியில் தாம் தோற்றுப் போவதை அறியாதவராய்ப் பலவாறு அவையிலே பேசிக் கொண்டே இருப்பவர் பலர்.*

*கருத்து* : **கற்றார் அவையில் பொருளற்றவற்றைப் பேசும் புல்லர்களும் உள்ளனர்.**

314. கற்றதூஉம் இன்றிக், கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம், பேதைஓர் சூத்திரம் – மற்றதனை
நல்லார் இடைப்புக்கு, நாணாது சொல்லித்,தன்
புல்லறிவு காட்டி விடும்.

(இன்றி - இல்லாமல்; புக்கு - புகுந்து; நாணம் - வெட்கம்; புல்லறிவு - சிற்றறிவு.)

*முறையாகக் கற்றது ஒன்றுமில்லாமல், ஆசிரியர் திரும்பத் திரும்பச் சொல்லக் கேட்டுப் பாடமானதால், மூடனுக்குக் கைவரப் பெற்றது ஒரே சூத்திரம்; அச்சூத்திரத்தை அவன் அறிவுடையோர் இடையே சென்று, வெட்கப்படாது சொல்லித் தன் சிற்றறிவை வெளிப்படுத்தி விடுவான்.*

*கருத்து* : **நல்லோர் அவையில் வாளா இராது, பேதை தன் புல்லறிவை வெளிப்படுத்திவிடுவான்.**

315. வென்றிப் பொருட்டால், விலங்(கு)ஒத்து மெய்கொள்ளார்,
கன்றிக் கறுத்(து)எழுந்து, காய்வாரோ(டு)–ஒன்றி
உரைவித் தகம்எழுவார், காண்பவே, கையில்
சுரைவித்துப் போலும்தம் பல்.

(வென்றி - வெற்றி; கன்றி - புழுங்கி; கறுத்து - வெகுண்டு; வித்தகம் - வல்லமை; வித்து - விதை.)

*வெற்றி கொள்வது காரணமாக, விலங்குகள்போல உண்மைப் பொருள்களை உணராதவர்களாய், மனம் புழுங்கி, வெகுண்டு, சீறி, கொதிக்கின்ற புல்லறிவாளர்களிடம் நெருங்கி, தமது உரை வல்லமையைப் புலப்படுத்த முற்படும் அறிவுடையாளர்கள், தம் கைகளில் சுரைவிதைகளைப் போன்ற தம் பற்கள் இருக்கக் காண்பார்கள். (அதாவது அந்த அறிவிலிகள் தம் கன்னத்தில் அறைவதால் பற்கள் உடைபடுவர்.)*

*கருத்து* : **அறிவுடையார் புல்லறிவாளரிடம் தம் சொல் வன்மையை வெளிப்படுத்தினால் துன்பமே அடைவர்.**

316. பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால், – கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே; மற்றவரை
ஈன்றாட்(கு) இறப்பப் பரிந்து.

(ஓதுதல் - படித்தல்; தேற்றாத - தெளிவு பெறாத; சமழ்த்தனர் - நாணங்கொண்டவராய்; இறப்ப - மிகவும்.)

*பாடங்களை மாத்திரம் படித்து, அவற்றின் பயனைச் சீர்தூக்கிப் பார்த்துத் தெளிவு பெறாத மூடர்கள், வெறுக்கத்தக்க சொற்களை அவையில் சொல்லும்போது, அழிவில்லாச் சிறப்புடைய அறிஞர்கள் அவ்வறிவிலாரைப் பெற்றவளுக்காக இப்படி ஒருவனைப் பெற என்ன பாவம் செய்தாளோ என்று மிகவும் இரங்கி, நாணமடைந்து, யாதும் கூறாமல் பொறுத்திருப்பர்.*

*கருத்து* : **அவையிடத்தே அறிவிலார் வெறுக்கத் தக்கன சொல்லும் போது அறிவுடையோர் அவருடைய பயனற்ற பிறப்பிற்காக வருந்துவர்.**

317. பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிப்பட்டுக்,
கற்பவர்க்(கு) எல்லாம் எளியநூல்; – மற்(று)அம்
முறிபுரை மேனியர் உள்ளம்போல், யார்க்கும்
அறிதற்(கு) அரிய பொருள்.

(முறி - தளிர்; புரை - போன்ற.)

*கிடைக்கப் பெறுவதைப் பெற்றுக் கொள்ளுகின்ற விலைமாதர்களுடைய தோள்களை எளிதில் அடைய முடிவதுபோல, மேற்போக்காகப் படிப்பவர்களுக்கெல்லாம் நூல்களின் பொதுக் கருத்துகள் எளிதில் விளங்கும். ஆனால், அந்நூல்களின் உட்பொருள்களோ, மாந்தளிர்போலும் மேனியையுடைய அவ்விலை மாதர்களின் உள்ளத்தை யாராலும் அறிய முடியாததுபோல, அறிவதற்கு அருமையானதாக இருக்கும்.*

*கருத்து* : **நூல்கள் வெளிப்பட எளிமையாய்த் தோன்றினும் அறிதற்கு அரியனவாம்.**

318. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்,
உய்த்(து),அகம் எல்லாம் நிறைப்பினும், – மற்(று)அவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(சால - மிகுதி; உய்த்து - சேர்த்து; அகம் - வீடு; தேற்றும் - தெளிவுபடுத்தும்.)

*புத்தகங்களை மிகுதியாகச் சேர்த்து அவற்றின் பொருளை அறியாதவராய், அவற்றைக் கொண்டு வந்து வீடு முழுவதும் நிறைத்து வைத்தாலும், அப்புத்தகங்களைப் பாதுகாக்கின்ற அப்புலவர் வேறு; அவற்றின் பொருளைத் தெரிந்து பிறர்க்குத் தெளிவுபடுத்தும் புலவர் வேறு.*

*கருத்து* : **புத்தகங்களைச் சேர்த்துக் காப்பதில் பயனில்லை; அவற்றின் பொருளை உணர்தலே சிறப்பு.**

319. பொழிப்(பு),அகலம், நுட்பநூல், எச்சம்,இந் நான்கின்
கொழித்(து)அகலம் காட்டாதார் சொற்கள், – பழிப்(பு)இல்

நிரையாமா சேக்கும் நெடுங்குன்ற நாட!
உரையாமோ நூலிற்கு நன்று.

(பொழிப்பு - பொழிப்புரை; அகலம் - விரிவுரை; நுட்பம் - நுண்ணுரை; எச்சம் - எச்சவுரை; கொழித்து - நன்றாக ஆராய்ந்து; அகலம் - விரிவு; நிரையாமா - நிரை + ஆமா - கூட்டமாயுள்ள காட்டுப்பசு; சேக்கும் - தங்குகின்ற.)

*காட்டுப் பசுக்களின் கூட்டம் தங்குகின்ற உயர்ந்த மலைநாடனே! நூலுக்குப் பொழிப்புரையும், அகல உரையும், நுட்ப உரையும், சொல்லியவற்றின் எச்சமாக உணர்த்தப்பட்ட உரையும் ஆகிய இந்த நான்கு வகை உரைகளையும் ஆராய்ந்து விரிவாக விளக்காதவருடைய உரைகள் குற்றமில்லாத நல்ல உரைகளாமோ? (ஆகா.)*

*கருத்து* : **நூற்பொருளைப் பல்லாற்றானும் விளக்கிக் கூறுவதே நல்ல உரையாம்.**

320. இல்பிறப்(பு) இல்லார், எனைத்துநூல் கற்பினும்,
சொல்பிறரைக் காக்கும் கருவியரோ! – இல்பிறந்த
நல்லறி வாளர், நவின்றநூல் தேற்றாதார்
புல்லறிவு, தாம்அறிவ(து) இல்.

(இல் பிறப்பு - நற்குடிப்பிறப்பு; எனைத்து - எவ்வளவு?; நவின்ற - சொன்ன.)

*உயர்குடிப்பிறப்பு இல்லாதவர் எவ்வளவுதான் நல்ல நூல்களைக் கற்றிருந்தாலும், இன்னொருவர் சொல்லினால் வரும் குற்றத்தைப் பிறர் அறியாதவாறு காத்தற்குரிய அறிவினையுடையவர் ஆவரோ? (ஆகார்); கற்ற நூலின் பொருளைத் தெளிவாக அறியாதவர்களுடைய புல்லிய அறிவினை, உயர்குடியிற் பிறந்த நல்லறிவுடையார், தாம் அறிந்தாலும், அதனை அறிந்தவர்போல, வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள்.*

*கருத்து* : **கற்றறிவுடையோர் கல்லாதவரின் புல்லறிவினைக் கண்டும் காணாதவர் போலிருப்பர்.**

# 33

# புல்லறிவாண்மை

321. அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வார் புலவர்; – பொருள்அல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும்; பால்கூழை
மூழை சுவைஉணரா(து) ஆங்கு.

(ஏழை - அறிவில்லாதோன்; கூழ் - சோறு; மூழை - அகப்பை; ஆங்கு - அங்கே.)

*அருளால் அறநெறியைக் கூறுகின்ற அன்புடையவர்களது வாயிலிருந்து வரும் சொல்லைப் புலமைநலம் மிக்க பெரியோர் மெய்ப்பொருளாகக் கொள்வர். தன்னை ஒரு பொருளாக மதிக்கப்படாத அறிவற்றவன், அகப்பை, பாற்சோற்றின் சுவையை உணர முடியாததுபோல, அந்த அறநெறியின் சிறப்பை உணராது இகழ்ந்து பேசுவான்.*

**கருத்து : புல்லறிவாளர் அறிவுடையார் கூறும் மெய்ப்பொருளை அறியார்.**

322. அவ்வியம் இல்லார் அறத்தா(று) உரைக்குங்கால்,
செவ்வியர் அல்லார் செவிகொடுத்தும் கேட்கலார்;
கவ்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய், பால்சோற்றின்
செவ்வி கொளல்தேற்றா(து) ஆங்கு.

(அவ்வியம் - பொறாமை; அறத்து + ஆறு = அற வழி; குணுங்கர் - புலையர்.)

*தோலைக் கடித்துத் தின்னும் புலையருடைய நாயானது பால் சோற்றினை நுகர்ந்து, அதன் சுவையை அறிய முடியாததுபோல, பொறாமை முதலிய தீய குணங்கள் இல்லாத பெரியோர் அறநெறிகளை எடுத்துச் சொல்லும்போது, செவ்விய தன்மை இல்லாத புல்லறிவாளர் அதனைக் காது கொடுத்துக் கேட்கவும் மாட்டார்.*

**கருத்து : புல்லறிவாளர் மேலோர் கூறும் நல்லுரைகளைக் கேளார்.**

323. இமைக்கும் அளவில்,தம் இன்உயிர்போம் மார்க்கம்,
எனைத்தாலும் தாம்கண் டிருந்தும் – தினைத்துணையும்
நன்றி புரிகல்லா நாண்இல் மடமாக்கள்,
பொன்றில்என், பொன்றாக்கால் என்?

(மார்க்கம் - முறைமை; எனைத்தானும் - எல்லா வகையாலும்; புரிகல்லா - புரியாத; மடமை - அறிவின்மை; பொன்றுதல் - இறத்தல்.)

*கண்மூடி விழிக்கும் கால அளவிற்குள் தம் இனிய உயிரானது நீங்குகின்ற முறையை எவ்வகையாலும் தம் கண் முன்னால் கண்டிருந்தும், தினையளவாயினும் நற்செயல் செய்யாத, நாணமில்லாத புல்லறிவாளர்கள் இறந்தால் என்ன? இறவாது இருந்தால்தான் என்ன? (இரண்டும் ஒன்றே).*

**கருத்து : நலம் புரியாத புல்லறிவாளர் இருப்பதும் இறப்பதும் ஒன்றே.**

324. உளநாள் சிலவால், உயிர்க்(கு)ஏமம் இன்றால்,
பலர்மன்னும் தூற்றும் பழியால், – பலருள்ளும்

கண்டாரோ(டு) எல்லாம் நகாஅ(து), எவன்ஒருவன்
தண்டித் தனிப்பகை கோள்?

(ஏமம் - பாதுகாப்பு; மன்னுதல் - நிலை பெறுதல்; தண்டி - விலகி; தனி - தனியாயிருந்து.)

*வாழும் நாள் சிலவே; உயிருக்குப் பாதுகாப்பு இல்லை; பலரும் நிலையாகச் சொல்லும் பழிப்புரையும் பலவாம்; இவ்வாறிருக்கப் பார்ப்பவர்களுடனெல்லாம் மகிழ்வுடன் கூடி யிராமல் ஒருவன் விலகி நின்று தனித்திருந்து பகையைப் பெருக்கிக் கொள்ளுதல் யாது கருதியோ?*

*கருத்து* : **பல்லாருடனும் பழகி மகிழாது பகை கொள்வது அறிவின்மையாம்.**

325. எய்தி இருந்த அவைமுன்னர்ச் சென்(று),எள்ளி
வைதான் ஒருவன் ஒருவனை; – வைய
வயப்பட்டான் வாளா இருப்பானேல், வைதான்
வியத்தக்கான் வாழும் எனின்.

(வைதல் - திட்டுதல்; வாளா - வெறுமனே; எனின் - என்றால்.)

*பலர் கூடியிருந்த அவை முன்னர்ச் சென்று ஒருவன் மற்றொரு வனை இகழ்ந்து திட்டினான். அவன் அவ்வாறு திட்டுகையில் திட்டப்பட்டவன் பொறுத்துக்கொண்டு சும்மா இருப்பானேல், திட்டியவன் அதன் பின்னரும் உயிர் வாழ்வானாகில், அவன் வியக்கத்தக்கவனே ஆவான்.*

*கருத்து* : **புல்லறிவாளர் பிறரை இகழ்ந்து பேசித் தம்மையே அழித்துக் கொள்வர்.**

326. மூப்புமேல் வாராமை முன்னே, அறவினையை
ஊக்கி, அதன்கண் முயலாதான் – நூக்கிப்
புறத்திரு, போகென்னும், இன்னாச்சொல் இல்லில்
தொழுத்தையால் கூறப் படும்.

(நூக்கி - தள்ளப்பட்டு; புறத்திரு - வெளியே இரு; தொழுத்தை - வேலைக்காரி.)

*முதுமைப் பருவம் நெருங்கி வருவதற்கு முன்பே அறச்செயலை ஊக்கத்துடன் மேற்கொண்டு, முயன்று செய்து, பிறர்க்கு உதவாதவன், வீட்டில் உள்ள வேலைக்காரியாலும் தள்ளப்பட்டு, 'வெளியே இரு, போ' என்ற கடுஞ்சொற்களால் திட்டப்படுவான்.*

*கருத்து* : **இளமையில் அறம் செய்யாத புல்லறிவாளர் ஏவலாளராலும் இகழப்படுவார்.**

327. தாமேயும் இன்புறார்; தக்கார்க்கு நன்(று)ஆற்றார்;
ஏமம்சார் நன்னெறியும் சேர்கலார்; – தாம்மயங்கி,
ஆக்கத்துள் தூங்கி, அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

(ஆற்றார் - செய்யார்; ஏமம் - பாதுகாப்பு; சேர்கலார் - சேர மாட்டார்; அவத்தம் - வீண்.)

*புல்லறிவாளர் தாமும் இன்பமடையார்; தகுதியுடையவர்களுக்கும் நல்லது செய்யார்; தமக்குப் பாதுகாவலாயுள்ள நல்ல வழியிலும் சேரார்; தம் அறிவுகெட்டு, செல்வத்திலேயே ஆழ்ந்திருந்து, வாழ்நாளைப் பயனின்றியே கழிப்பர்.*

*கருத்து* : **புல்லறிவாளர் செல்வப் பெருக்கில் மயங்கி வாழ்நாளை வீழ்நாளாக்குவர்.**

328. சிறுகாலை யே,தமக்குச் செல்வுழி வல்சி
இறு(க)இறுகத் தோள்கோப்புக் கொள்ளார், – இறு(கி)இறுகிப்
பின்அறிவாம் என்றிருக்கும் பேதையார், கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்காய் ஆம்.

(சிறுகாலை - இளமைப் பருவம்; வல்சி - உணவு; தோள் கோப்பு - தோளில் கட்டிய மூட்டை.)

*இளமைப் பருவத்திலேயே தாம் செல்லும் மறுமைக்குரிய அறமாகிய உணவினை, மிகவும் இறுக்கமான கட்டுச்சோறாகக் கட்டி, தோள்கோப்பாகக் கொள்ளாமல், பொருளைக் கைவிடாமல் இறுகப்பிடித்து, பின்னர் அறம் செய்வோம் என்றெண்ணியிருக்கும் அறிவிலார், தாங்கள் இறக்கும்போது வாயடைத்து, வைத்த பொருளைக் கையால் காட்ட, அவர் புளித்த விளாங்கனி கேட்கிறார் என்று பிறர் எண்ணும்படியாகிவிடும்.*

*கருத்து* : **புல்லறிவாளர் இளமையில் அறம் செய்யாது முதுமையில் வருந்துவர்.**

329. வெறுமை இடத்தும், விழுப்பிணிப் போழ்தும்,
மறுமை மனத்தாரே ஆகி, – மறுமையை
ஐந்தை அனைத்தானும் ஆற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார்.

(வெறுமை - ஒன்றுமில்லாத; விழுப்பிணி - மிகுந்த நோய்; போழ்து - காலத்து; ஐந்தை - சிறுகடுகு; அனைத்தானும் - அளவாயினும்.)

*புல்லிய அறிவுடையார் தாம் வறுமையுற்ற காலத்தும், மிக்கப் பிணி வந்த காலத்தும் மட்டுமே மறுமைக்குரிய அறம் செய்யும்*

*நினைவுடையவர்களாக இருப்பர். ஆனால்), அவர்கள் தமக்குச் செல்வம் வந்து சேர்ந்து தம்மால் அறச் செயல்களைச் செய்ய முடியும் காலத்தில் சிறுகடுகளவாயினும் மறுமை பற்றி நினைக்க மாட்டார்கள். (துன்பக் காலத்தில் மட்டுமே நினைப்பர்.)*

*கருத்து* : **புல்லறிவாளர் துன்புறும்போது அறத்தை நினைவர்; இன்புறும் போது நினையார்.**

**330.** என்னேமற்(று) இவ்வுடம்பு பெற்றும் அறம்நினையார்!
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை; – அன்னோ
அள(வு)இறந்த காதல்தம் ஆருயிர் அன்னார்க்
கொளஇழைக்கும் கூற்றமும் கண்டு.

**(கொன்னே - வீணே; அன்னோ - ஐயகோ; இறந்த - கடந்த; கொள - கொண்டு போக; இழைக்கும் - முயல்கின்ற.)**

*ஐயகோ! அளவு கடந்த அன்பினையுடைய, தம் அரிய உயிரைப் போன்றவரின் உயிரைக் கொண்டுபோக முயல்கின்ற கூற்றுவ னைக் கண்டிருந்தும், பெறுதற்கரிய மனித யாக்கையைப் பெற்றி ருந்தும், புல்லறிவாளர், அறம் செய்தலைக் கருதாது, தம் வாழ்நாளை வீணே கழிக்கின்றார்களே! இஃது என்ன கொடுமை?*

*கருத்து* : **புல்லறிவாளர் யாக்கை நிலையாமையைக் கண்டும் வாழ்நாளை வீணாக்குகின்றனரே!**

# 34

# பேதைமை

**331.** கொலைஞர் உலைஏற்றித் தீமடுப்ப, ஆமை
நிலைஅறியா(து), அந்நீர் படிந்தாடி யற்றே;
கொலைவல் கொடுங்கூற்றம் கோள்பார்ப்ப, ஈண்டை
வலைஅகத்துச் செம்மாப்பார் மாண்பு.

**(தீ மடுப்ப - தீ ஏற்ற; படிந்து - மூழ்கி; ஆடி அற்றே - விளையாடியது போன்றதே; கோள் - கொள்ளுதல்; ஈண்டை - இவ்வுலகம்.)**

*கொலைத்தொழில் வல்ல கொடுமையான கூற்றுவன் உயிரைக் கொண்டு செல்லச் சமயம் பார்த்திருக்க, இவ்வுலக வாழ்வாகிய வலையிலகப்பட்டு இறுமாந்திருப்பவர் தன்மையானது, (சமைத்துத் தின்பதற்காகக்) கொலைஞர் நீரை உலையாக வைத்து, அதனுள் ஆமையை விட்டு, தீயேற்ற, அந்த ஆமை மேல்வரும் நிலையை அறியாது, அந்நீரில் மூழ்கி விளையாடினாற் போன்றதாகும்.*

*கருத்து* : **மேல்வரும் துன்பநிலை அறியாது உலக வாழ்வில் திளைத்திருத்தல் பேதைமையாம்.**

332. பெருங்கடல் ஆடிய சென்றார், ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும் என்(று)அற்றால்;
இற்செய் குறைவினை நீக்கி, அறவினை
மற்(று)அறிவாம் என்(று)இருப்பார் மாண்பு.

(ஆடிய - நீராடுவதற்கு; ஒருங்குடன் - ஒரு சேர; அவிதல் - அடங்குதல்.)

*தாம் செய்ய வேண்டிய குடும்பப் பணிகளைக் குறைவற முடித்து அதன்பிறகு அறச்செயல்களைச் செய்வோம் என்றிருப்பவர் தன்மை, பெரிய கடலில் நீராடச் சென்றவர், அலை ஓசை முழுதும் ஒருசேர அடங்கிய பிறகு நீராடுவோம், என்று கருதுவது போலாகும்.*

*கருத்து* : **அறம் செய்யக் காலம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.**

333. குலம்,தவம், கல்வி, குடிமை,மூப்(பு) ஐந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும், – நலம்சான்ற
மைஅறு தொல்சீர் உலகம் அறியாமை,
நெய்இலாப் பால்சோற்றின் நேர்.

(மூப்பு - முதிர்ச்சி; விலங்காமல் - தவறாமல்; மை அறு - குற்றம் நீங்கிய; நேர் - ஒப்பானது.)

*நற்குடிப்பிறப்பு, தவப்பேறு, கல்விநலம், குடியொழுக்கம், அறிவு முதிர்ச்சி ஆகிய ஐந்தும் தவறாமல் ஒருவர்க்கு வாய்த்தாலும் நலம் மிக்க, குற்றமில்லாத, பழம்பெருமையுடைய உலக நடையை அறியாதிருத்தல், நெய்யில்லாப் பொங்கலுக்கு நேராகும்.*

*கருத்து* : **மேன்மைகள் அனைத்தும் வாய்ப்பினும் உலக நடை அறியாதிருப்பது பேதைமையாம்.**

334. கல்நனி நல்ல கடையாய மாக்களின்,
சொல்நனி தாம்உணரா ஆயினும், – இன்னினியே
நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல்,என்(று)
உற்றவர்க்குத் தாம்உதவ லான்.

(நனி - மிகவும்; இன்னினியே - அந்தப் பொழுதே; இயங்குதல் - நடத்தல்; உற்றவர்க்கு - சேர்ந்தவர்க்கு.)

*கற்கள் பிறர் சொல்லும் சொற்களை உணராவாயினும் தம்மைச் சேர்ந்தவர்க்கு (அவர்கள் வந்தடைந்த) அப்பொழுதே நிற்றலுக்கும், இருத்தலுக்கும், கிடத்தலுக்கும், நடத்தலுக்கும் உதவுவதால் அக்கற்கள் எவ்வகையினும் பயன்படாத கடையாய மக்களைக் காட்டிலும் நல்லவை.*

*கருத்து* : **பிறர்க்குவாதார் கல்லினும் கீழ்ப்பட்டவர்.**

**335.** பெறுவ(து)ஒன்(று) இன்றியும் பெற்றானே போலக்,
கறுவுகொண்(டு), ஏலாதார் மாட்டும் – கறுவினால்
கோத்(து)இன்னா கூறி உரையாக்கால், பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுனைத்து.

**(கறுவு - சினம்; ஏலாதார் - முடியாதவர்; சுனைத்து - தினவு.)**

*தான் பெறுவது ஒன்றும் இல்லையாயினும், ஏதோ பெரிதாகப் பெற்றவன்போல வெகுளி கொண்டு, இயலாதவரிடத்திலும் அவ்வெகுளியைக் காட்டி, இன்னாச் சொற்களைக் கோவையாக, அடுக்கி, மேன்மேலும் சொல்லிக்கொண்டே இருக்காவிட்டால், அறிவில்லாதவன் நாக்கை மிக்க தினவு அரித்துத் தின்னும் போலும்.*

*கருத்து* : **பேதையர் பயனின்றியும் யாரையும் பழித்துப் பேசிக் கொண்டிருப்பர்.**

**336.** தம்கண் அமர்வில்லார் பின்சென்று, தாம்அவரை
எம்கண் வணக்குதும் என்பவர், – புன்கேண்மை
நல்தளிர்ப் புன்னை மலரும் கடல்சேர்ப்ப!
கல்கிள்ளிக் கைஇழந் தற்று.

**(அமர்வு - விருப்பம்; புன் கேண்மை - அற்பமான அறிவு.)**

*அழகிய தளிர்களையுடைய புன்னை மரங்கள் பூத்திருக்கும் கடற்கரை நாட்டவனே! தம்மிடம் விருப்பம் இல்லாதவர்கள் பின்னே சென்று, 'அவரை நம் நட்புடையராய் அடங்கியிருப்பச் செய்வோம்' என்று முயல்பவருடைய அற்பமான முயற்சி, கல்லைக் கிள்ளிக் கைவிரலை இழந்ததுபோலாகும்.*

*கருத்து* : **இணக்கமில்லாரை இணக்க முற்படுவது பேதைமை.**

**337.** ஆகா(து) எனினும், அகத்துநெய் உண்டாகில்,
போகா(து) எறும்பு புறம்சுற்றும்; – யாதும்
கொடாஅர் எனினும், உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

**(அகத்து - உள்ளிடத்தில்; புறம் - வெளியே; கொடாஅர் - கொடாதவர்.)**

*தம் நுகர்வுக்குக் கிட்டாதாயினும், ஒரு கலத்திற்குள் நெய் இருக்குமானால், எறும்புகள் அதைவிட்டு நீங்காமல் வெளிப் பக்கத்தில் சுற்றிக்கொண்டேயிருக்கும். அதுபோல், ஒரு சிறிதும் கொடாதவர்களாயினும் பொருளுள்ளவர்களை உலக மக்கள் அவரை விடாமல் சுற்றிக் கொண்டேயிருப்பர். (இஃது ஒரு வகையில் பேதைமையே).*

*கருத்து* : **கொடாராயினும் செல்வரைப் பேதையர் சூழ்ந்திருப்பர்.**

338. நல்லவை நாள்தோறும் எய்தார்; அறம்செய்யார்;
இல்லாதார்க்(கு) யாதொன்றும் ஈகலார்; — எல்லாம்
இனியார்தோள் சேரார்; இசைபட வாழார்;
முனியார்கொல் தாம்வாழும் நாள்.

(எய்தார் - அடையார்; இனியார் - இனிமையானவர்; இசை - புகழ்; முனிதல் - வெறுத்தல்.)

*நற்குண நற்செய்கைகள் நாள்தோறும் கைவரப் பெறார்; அறம் செய்யார்; வறியவர்களுக்கு எதையும் கொடார்; எல்லா நலமுமுடைய இனிய மனைவியின் தோள்களைச் சேரார்; புகழ் பெருக வாழார்; இத்தகையவர் தாம் வாழும் நாள்களை வெறுத்தல் இல்லையோ?*

*கருத்து* : **பேதையர் நல்லன செய்யாது வாழ்நாளை வீழ்நாள் ஆக்குவர்.**

339. விழைந்(து)ஒருவர் தம்மை வியப்ப, ஒருவர்
விழைந்திலேம் என்(று)இருக்கும் கேண்மை; — தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினும், இன்னாதே,
ஆய்நலம் இல்லாதார் மாட்டு.

(விழைவு - விருப்பம்; விழைந்திலேம் - விரும்ப மாட்டோம்; பாய் - பாயும்; திரை - அலை; பயப்பது - தருவது.)

*ஒருவர் தம்மை விரும்பிக் கொண்டாட, தாம் அவரை விரும்ப மாட்டோம் என்று புறக்கணித்து இருக்கின்றவரிடத்தில் கொள்ளுகின்ற நட்பு, முழங்குகின்ற ஒலியையுடைய அலைபாயும் கடல் சூழ்ந்த இந்த உலகம் முழுவதையும் தருவதாய் இருந்தாலும் பொல்லாததேயாம்.*

*கருத்து* : **பேதையர் நட்புப் பெரும் பயனைத் தரினும் பொல்லாததே.**

340. கற்றனவும், கண்அகன்ற சாயலும், இற்பிறப்பும்,
பக்கத்தார் பாராட்டப் பா(டு)எய்தும்; தான்உரைப்பின்,
மைத்துனர் பல்கி, மருந்தில் தணியாத
பித்தன்,என்(று) எள்ளப் படும்.

(கண் அகன்ற சாயல் - கண் கொள்ளாத அழகு; பாடு - பெருமை; பல்கி - பெருகி; தணியாத - தீராத; எள்ளுதல் - இகழ்தல்.)

*ஒருவன் கற்ற கல்வியும், கண்கொள்ளா மேனி அழகும், நற்குடிப் பிறப்பும் அயலிலுள்ளார் பாராட்டும்போது பெருமை பெறும். அவ்வாறின்றி, அவற்றைத் தானே எடுத்துச் சொல்லிப் புகழ்ந்து கொள்வானானால், அவனைத் துதி பாடுவோர் மிகவும் பெருகி,*

*அதனால், 'இவன் எந்த மருந்தினாலும் தீராத பித்தன்' என்று உலகத்தவரால் இகழப்படுவான்.*

*கருத்து* : **தன்னைத்தானே புகழ்தல் பேதைமை.**

# 35

# கீழ்மை

341. கப்பி கடவதாக், காலைத்தன் வாய்ப்பெயினும்,
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்; — மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும், கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

**(கப்பி - நொய்யரிசி; கடவதா - போதுமான அளவினதாக; கிளை போவா - கிளறுதலை விடாத; கனம் - பெருமை; விரித்து - விவரமாக.)**

*நொய்யரிசியைப் போதிய அளவில் விடியலிலேயே அதன் வாயில் வலியப் போட்டாலும், குப்பை கிளறுதலை ஒழியாத கோழியைப் போல, மிக்க பெருமை பொருந்திய நூற்பொருளை விரிவாகச் சொன்னாலும் கீழ்மகன் தன் மனம் விரும்பிய வழியிலேயே நடப்பான்.*

*கருத்து* : **நன்னெறியை ஏற்காது கீழோர் தம் வழியே செல்வர்.**

342. காழாய கொண்டு கச(டு)அற்றார் தம்சாரல்
தாழாது போவாம், எனஉரைப்பின், — கீழ்தான்,
உறங்குவாம் என்றெழுந்து போமாம்; அஃதன்றி
மறங்குமாம் மற்றொன்(று) உரைத்து.

**(காழ் - உறுதி; கசடு - குற்றம்; தாழாது - தாமதியாது; மறங்கும் - மறுத்துப் போவான்.)**

*குற்றமற்ற மேலோர், 'உறுதி பயக்கும் நூல்களைக் கற்றுள்ளோர் பக்கம் தாமதியாது போ' என்று சொன்னால், அதனை ஏற்காது கீழ்மகன் 'தூங்குவோம்' என்று சொல்லி எழுந்து போவான்; அஃதில்லாவிட்டால் வேறு யாதானும் ஒன்றைச் சொல்லி மறுத்துப் போவான்.*

*கருத்து* : **கீழோர் மேலோரைச் சேர என்றும் ஒருப்படார்.**

343. பெருநடை தாம்பெறினும், பெற்றி பிழையா(து),
ஒருநடையர் ஆகுவர் சான்றோர்; — பெருநடை
பெற்றக் கடைத்தும், பிறங்கருவி நன்னாட!
வற்றாம் ஒருநடை கீழ்.

(பெரு நடை - பெரிய செல்வம்; பெற்றி - இயல்பு; பிறங்குதல் - விளங்குதல்; வற்று ஆம் - வல்லவன் ஆவான்.)

*ஒளிருகின்ற மிக்க அருவிகளையுடைய நல்ல நாட்டவனே! சான்றாண்மையுடையவர் பெரிய செல்வத்தைத் தாம் பெற்றாலும் இயல்பு மாறாது ஒரே தன்மை உடையவராய் இருப்பர். கீழ்மகன் பெரும் செல்வம் பெற்றபோது தன் தன்மையிலிருந்து வேறு படுதலில் வல்லவனாய் இருப்பான்.*

*கருத்து* : **கீழோர் செல்வக் காலத்திலும் தம் சிறுமைக் குணத்திலிருந்து மாற மாட்டார்.**

344. தினைஅனைத்தே ஆயினும் செய்தநன்(று) உண்டால்
பனைஅனைத்தா உள்ளுவர் சான்றோர்; – பனைஅனைத்(து)
என்றும் செயினும், இலங்கருவி நன்னாட!
நன்றில நன்(று)அறியார் மாட்டு.

(உள்ளுவர் - நினைப்பர்; இலங்கு - விளங்குகின்ற; நன்றில - நல்லன அல்ல.)

*அருவிகள் விளங்குகின்ற நல்ல நாட்டையுடையவனே! தினையளவு சிறிதே ஆயினும் பிறர் செய்த நன்மை இருக்குமானால் சான்றோர் அதனைப் பனையளவு பெரிதாக நினைப்பார்கள். நன்றி உணர்வு இல்லாதவரிடத்துப் பனையளவாகிய பெரிய நன்மையை நாள்தோறும் செய்தாலும் அதனை ஓர் உதவியாகவே கருத மாட்டார்கள்.*

*கருத்து* : **கீழ்மக்கள் மிகப் பெரிய உதவியையும் மறப்பர்.**

345. பொற்கலத்(து) ஊட்டிப் புறந்தரினும், நாய்,பிறர்
எச்சிற்(கு) இமையாது பார்த்திருக்கும்; – அச்சீர்
பெருமை உடைத்தாக் கொளினும்,கீழ் செய்யும்
கருமங்கள் வேறு படும்.

(புறந்தரினும் - பாதுகாத்தாலும்; இமையாது - கண் கொட்டாமல்; அச்சீர் - அத் தன்மையதாக; கருமங்கள் - செயல்கள்.)

*பொன்னால் செய்த கலத்தில் உண்ணச் செய்து பாதுகாத்தாலும், நாய் பிறருடைய எச்சிற்சோற்றுக்குக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும். அத்தன்மைபோல, பெருமையுடையராகப் பிறர் மதித்தபோதிலும், கீழ்மக்கள் செய்கின்ற செயல்கள் பெருமையினின்று வேறுபட்டே இருக்கும்.*

*கருத்து* : **பெருமைப்படுத்தினாலும் கீழோர் தம் இழிதன்மையிலிருந்து மாறார்.**

346. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்; – எக்காலும்

முந்திரிமேல் காணி மிகுவதேல், கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்.

**(சக்கரம் - உலகம்; முந்திரி, காணி - சிறிய அளவுகள்; இந்திரன் - தேவர்க்கு அரசன்.)**

*பெரியோர், உலகச் செல்வம் முழுவதையும் பெற்றார் என்றாலும், வரம்பு கடந்த சொல்லை எந்நாளும் சொல்லார். முந்திரிக்குமேல் காணி அளவு செல்வம் மிகுவதாய் இருந்தால், உடனே கீழ்மகன் தன்னை என்றும் தேவர்களுக்கு அரசனாக எண்ணிக் கொள்வான். (அதனால் இறுமாந்து பேசுவான்.)*

*கருத்து* : **கீழோர் சிறிதளவு செல்வம் சேர்ந்தாலும் செருக்கடைவர்.**

347. மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணிஅழுத்திச்
செய்த(து) எனினும், செருப்புத்தன் காற்கேயாம்;
எய்திய செல்வத்தர் ஆயினும், கீழ்களைச்
செய்தொழிலால் காணப் படும்.

**(மை - குற்றம்; மாண்ட - மாட்சிமையுடைய; காற்கேயாம் - காலுக்கே ஆகும்.)**

*குற்றமற்ற பசும்பொன்னின்மேல் மாட்சிமையுடைய மணி களைப் பதிய வைத்துச் செய்யப்பட்டது என்றாலும், செருப்புத் தன்னுடைய காலிற் கொள்ளுதற்கே உரியதாம். அதுபோல நிரம்பிய செல்வமுடையவரானாலும் கீழ்மக்களை அவர்கள் செய்யும் தொழிலால் இன்னாரென்று அறிந்துகொள்ளுதல் கூடும்.*

*கருத்து* : **செல்வமுடையோராயினும் கீழோர் தம் கீழ்மைக் குணத்தி லிருந்து மாறார்.**

348. கடுக்கெனச் சொல்வற்றாம், கண்ணோட்டம் இன்றாம்,
இடுக்கண் பிறர்மாட்(டு) உவக்கும் – அடுத்தடுத்து
வேகம் உடைத்தாம், விறல்மலை நன்னாட!
ஏகுமாம், எள்ளுமாம் கீழ்.

**(சொல் வற்றாம் - கடுமையாகப் பேசவல்லனாம்; வேகம் - வெகுளி; விறல் - பெருமை.)**

*பெருமை சான்ற மலைகளைக் கொண்ட நல்ல நாட்டை யுடையவனே! கீழ்மகன் கடுமையாகப் பேசவல்லவனாயும், கண்ணோட்டம் இல்லாதவனாயும், அயலார்க்கு உண்டாகும் துன்பத்தைக் கண்டு மகிழ்பவனாயும், அடிக்கடி வெகுளியை அடைபவனாயும், கண்ட கண்ட இடத்திற்குச் செல்பவனாயும், பிறரை இகழ்பவனாயும் இருப்பான்.*

*கருத்து* : **கீழோர் தீச்செயல்களையே செய்து ஒழுகுவர்.**

349. பழையர் இவர்என்று பன்னாள்பின் நிற்பின்
உழைஇனியர் ஆகுவர் சான்றோர்; – விழையாதே,
கள்உயிர்க்கும் நெய்தல் கனைகடல் தண்சேர்ப்ப!
எள்ளுவர் கீழா யவர்.

(பழையர் - வெகுகாலம் பழகியவர்; பன்னாள் - பலநாள்; உழை - (அவர்கள்) இடம்; கனை - ஒலிக்கின்ற.)

*தேனைச் சொரியும் நெய்தற் பூவையும் ஒலிக்கின்ற கடலையுமுடைய குளிர்ச்சியான கடற்கரை நாட்டவனே! பெரியோர் தமக்குப் பின்னால் வந்து ஒருவர் பலநாள் நிற்பாரானால் இவர் நமக்குப் பழைய நட்பினர் என்று அவரிடத்து இனியராயிருப்பர்; கீழானவரோ, அப்படிச் சென்று நின்றால், விரும்பாது இகழ்வர்.*

*கருத்து* : **கீழோர் தம்மிடம் நெருங்கிப் பழகுவாரையும் இகழ்வர்.**

350. கொய்புல் கொடுத்துக், குறைத்தென்றும் தீற்றினும்,
வையம்பூண் கல்லா சிறுகுண்டை; – ஐய;கேள்!
எய்திய செல்வத்தர் ஆயினும், கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(கொய்புல் - அறுத்த புல்; குறைத்து - நறுக்கி; தீற்றினும் - தின்னுமாறு செய்தாலும்; வையம் - வண்டி; பூண்கல்லா - பொருந்தி இழுக்க மாட்டா; குண்டை – சிறிய எருதுகள்.)

*தலைவனே! கேட்பாயாக! நாள்தோறும் அறுத்த புல்லை நறுக்கிக் கொடுத்துத் தின்பித்தாலும் சிறிய எருதுகள் பெரிய வண்டியைப் பொருந்தி இழுக்க மாட்டா. அதுபோல, பெருஞ் செல்வம் சேரப் பெற்றாலும் கீழ்மக்களை அவர்கள் செய்யும் தொழிலால் இவர்கள் கீழ்மக்கள் என்று அறிந்துகொள்ள முடியும்.*

*கருத்து* : **கீழோர்க்குச் செய்த நன்றி பயன்படாது.**

# 36

# கயமை

351. ஆர்த்த அறிவினர், ஆண்(டு),இளையர் ஆயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப; – மூத்தொறூஉம்,
தீத்தொழிலே கன்றித் திரிதந்(து), எருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்.

(ஆர்த்த - நிறைந்த; மூத்தொறூஉம் - வயது முதிர முதிர; கன்றி - மிகுந்து; எருவை - கழுகு; போத்து - குற்றம்; அறார் - நீங்கார்.)

*நிறைந்த அறிவுடையோர் வயதில் இளையராயிருந்தாலும், தங்களைத் தீயவழியிற் செல்லாது தடுத்துக் காத்து அடங்கி நடப்பர். சிற்றறிவுடையார் வயது முதிர முதிரத் தீய செயல் களிலேயே மிகுந்து ஒழுகி, பிணம் தின்னும் கழுகுபோலத் தீய வற்றையே விரும்புவர்.*

*கருத்து* : **கயவரின் தீமைச் செயல் என்றும் மாறாது.**

352. செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
வழும்(பு)அறுக்க கில்லாவாம் தேரை; – வழும்(பு)இல்சீர்
நூல்கற்றக் கண்ணும், நுணுக்கமொன்(று) இல்லாதார்,
தேர்கிற்கும் பெற்றி அரிது.

(பொய்கை - குளம்; வழும்பு - வழுவழுப்பான அழுக்கு; தேர்கிற்கும் - ஆராய்ந்தறியும்.)

*தவளைகள் வளம் நிறைந்த பெரிய குளத்தில் வாழ்ந்தாலும் தம்மேலுள்ள வழுவழுப்பான அழுக்கை நீக்கிக் கொள்ளுகின்ற ஆற்றலை எந்நாளும் பெற்றுக்கொள்வது இல்லை. அதுபோல, குற்றமில்லாத சிறப்புடைய நூல்களைக் கற்றாலும் நுட்ப அறிவு சிறிதுமில்லாதவர் உண்மைப் பொருளை ஆராய்ந்தறிந்து நடக்கின்ற தன்மையைப் பெற்றுக் கொள்வது இல்லை.*

*கருத்து* : **கயவர் கற்பினும் கசடு நீங்கார்.**

353. கணமலை நன்னாட! கண்நின்(று) ஒருவர்
குணனேயுங் கூறற்(கு) அரிதால்; – குணன்அழுங்கக்
குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்(கு)
எற்றால் இயன்றதோ நா.

(கணம் - கூட்டம்; கண் நின்று - முன்னே நின்று; அழுங்க - அழியும்படி; உழை - பக்கம்; எற்றால் - எதனால்.)

*கூட்டமாகிய மலைகளையுடைய நல்ல நாட்டை உடையவனே! ஒருவர் முன்னே நின்றுகொண்டு, அவருடைய நற்குணங்களைக் கூடச் சொல்வதற்கு அருமையாய் இருக்கிறது. அப்படியிருக்கை யில் ஒருவர் அருகிலேயே நின்றுகொண்டு அவருடைய நற் குணங்களை நீக்கி, குற்றங்களையே கூறுகின்ற சிற்றறிவுடை யவர்களின் நாக்கு எதனாற் செய்யப்பட்டதோ?*

*கருத்து* : **குற்றத்தையே கூறும் கயவர் நாக்கு நாக்கல்ல.**

354. கோ(டு)ஏந்(து) அகல்அல்குல் பெண்டிர்தம் பெண்நீர்மை
சேடியர் போலச் செயல்தேற்றார் – கூடிப்

புதுப்பெருக்கம் போலத்தம் பெண்நீர்மை காட்டி
மதித்(து)இறப்பர் மற்றை யவர்.

**(நீர்மை - தன்மை; சேடியர் - ஏவல் மகளிர்; புதுப் பெருக்கம் - புது வெள்ளம்; இரத்தல் - வரம்பு கடத்தல்.)**

*பக்கங்கள் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய குலமகளிர், தம் பெண்தன்மையை ஏவல் மகளிரைப் போல (சிறிதளவுகூட) ஒப்பனை செய்து கொள்ளுதலை அறியார். அவ்வாறிருக்கையில், பரத்தையரோ எனின் ஆடவரோடு கூடி, புதுப்புனல் வெள்ளம் போலத் பெண் தன்மையைப் புனைவு செய்து வெளிப்படப் பிறர்க்குக் காட்டித் தம்மை வியந்து வரம்பு கடந்து நடப்பார்கள்.*

*கருத்து* : **கயமை மகளிர் பகட்டிக்கொண்டு பான்மை மீறி நடப்பர்.**

**355.** தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரார் மாதோ கயவர்; – அளிநீரார்க்(கு)
என்னானும் செய்யார்; எனைத்தாலும் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்.

**(நீரார் - தன்மையுடையவர்; அளி - இரக்கம்; இன்னாங்கு - துன்பம்.)**

*இளந்தளிரின்மேல் நின்றாலும் ஒரு கொட்டாப்புளி கொண்டு தட்டினால் அல்லாமல் தளிரைத் துளைத்து இறங்காத உளியின் தன்மையை உடையவர் கயவர். இரங்கத் தக்கவர்க்கு அவர் யாதொரு உதவியும் செய்யார்; தம்மை நெருக்கித் துன்பம் செய்பவர்க்கு அஞ்சி எதை வேண்டுமாயினும் செய்வர்.*

*கருத்து* : **கயவர் தம்மை வருத்துவோர்க்கு உதவுவர்.**

**356.** மலைநலம் உள்ளும் குறவன்; பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்(து)ஒருவர்
செய்தநன்(று) உள்ளுவர் சான்றோர்; கயம்தன்னை
வைததை உள்ளி விடும்.

**(உள்ளும் - நினைக்கும்; பயந்த - பயன்தரும்; கயம் - கீழ்மகன்; வைதல் - திட்டுதல்.)**

*குறவன் மலையின் வளப்பத்தை நினைத்திருப்பான்; உழவன் தனக்குப் பயன்தரும் விளைநிலத்தின் வளப்பத்தை நினைத்திருப் பான்; சான்றோர் ஒருவர் செய்த நன்றியைச் சிறப்பாக நினைந் திருப்பர்; கீழ்மகனோ பிறர் தன்னைத் திட்டியதையே நினைத்துக் கொண்டிருப்பான்.*

*கருத்து* : **கயவர் தீமைகளையே நினைவில் கொண்டிருப்பர்.**

**357.** ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றி எழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்; – கயவர்க்(கு)

எழுநூறு நன்றிசெய்(து), ஒன்றுதீ(து) ஆயின்,
எழுநூறும் தீதாய் விடும்.

(ஒன்றி எழுந்த - தொடர்ந்து தோன்றிய; பிழை - தவறு.)

*பெரியோர், தமக்கு ஒரே ஒரு நன்மை செய்தவரிடம் தொடர்ந்து தோன்றிய நூற்றுக்கணக்கான குற்றங்களையும் பொறுத்துக் கொள்வர். ஆனால் கீழோர்க்கு எழுநூறு நன்மை களைச் செய்து, அறியாமல் ஏதாவது ஒரு தீமையைச் செய்ய நேருமாகில், முன்செய்த எழுநூறு நன்மைகளும் தீமையாகப் போய்விடும்.*

*கருத்து* : **கயவர் தீமையை மட்டும் நினைந்து நன்மைகளை மறப்பர்.**

358. ஏட்டைப் பருவத்தும் இல்பிறந்தார் செய்வன,
மோட்டிடத்தும் செய்யார் முழுமக்கள்; – கோட்டை
வயிரம் செறிப்பினும், வாள்கண்ணாய்! பன்றி
செயிர்வேழம் ஆகுதல் இன்று.

(ஏட்டை - வறுமை; மோட்டிடத்தும் - உயர்ந்த நிலையில் இருக்கும் போதும்; கோட்டை - கொம்பினை (தந்தத்தை); செறிப்பினும் - பூட்டினாலும்; செயிர் - சினம்; வேழம் - யானை.)

*வாள் போன்ற கண்களையுடையவளே! தந்தங்களில் வயிரப் பூண் கட்டினாலும் பன்றியானது போர் செய்யும் யானையாக ஆவதில்லை. அதுபோல, நற்குடிப் பிறந்தோர் வறுமையுற்றுள்ள காலத்திலும் செய்கின்ற உதவிகளைக் கயவர் செல்வம் மிக்க காலத்திலும் செய்ய மாட்டார்கள்.*

*கருத்து* : **கயவர் செல்வக் காலத்தும் நல்லன செய்ய மாட்டார்.**

359. இன்றாதும்; இந்நிலையே ஆதும்; இனிச்சிறிது
நின்றாதும்; என்று நினைத்திருந்(து), – ஒன்றி
உரையின் மகிழ்ந்து,தம் உள்ளம்வே(று) ஆகி,
மரைஇலையின் மாய்ந்தார் பலர்.

(இன்று ஆதும் - இன்று பெறுவோம்; சிறிது நின்று - சிறிது காலத்திற்குப் பின்பு; மாய்ந்தார் - இறந்தவர்.)

*இன்று பெறுவோம்; இப்பொழுதே பெறுவோம்; இன்னும் சிறிது நாளைக்குப் பின்பாயினும் பெறுவோம் என்று தமக்கு எய்தாத செல்வத்தைப் பற்றியே கருதி, இவ்வாறு மேல்மேல் சொல்லுவதில் மகிழ்ச்சியடைந்து, பின்பு அது கூடாதபடி யினாலே, தமது மனம் மாறுபட்டு, நீருள் கிடந்து அழுகும் தாமரை இலைபோல மாய்ந்துபோனவர் பலர்.*

*கருத்து* : **கயவர் வீண்பெருமை பேசிப் பயன்பெறாது மடிவர்.**

360. நீருள் பிறந்து நிறம்பசிய(து) ஆயினும்
ஈரம் கிடையகத்(து) இல்லாகும்; – ஒரும்
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்,
அறைப்பெருங்கல் அன்னார் உடைத்து.

(பசியது - பசுமையானது; ஆயினும் - ஆனாலும்; கிடை - நெட்டி; அகத்து - உள்ளே; அறை - பாறை; உடைத்து - கொண்டிருக்கிறது.)

*நீரில் உண்டாகி, பசுமையானதாக இருந்தாலும், நெட்டியின் உள்ளிடத்தில் ஈரம் இல்லையாகும். அதுபோல, நிறைந்த செல்வத்தைப் பெற்றிருந்தாலும் பாறையாகிய பெரிய கல்லைப் போன்ற உள் ஈரம் இல்லாதவர்களை இவ்வுலகம் கொண்டிருக் கிறது.*

*கருத்து* : **கயவர்கள் செல்வத்தில் திளைப்பினும் உதவி செய்கின்ற மனத்தைப் பெறுவதில்லை.**

# 37

# பன்னெறி

361. மழைதிளைக்கும் மாடமாய், மாண்(பு)அமைந்த காப்பாய்,
இழைவிளக்கு நின்(று)இமைப்பின் என்னாம்? – விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்அகம்,
காண்டற்(கு) அரியதோர் காடு.

(மழை - மேகம்; திளைக்கும் - தவழும்; காப்பு - காவல்; விழைதக்க - விரும்பத்தக்க.)

*மேகம் தங்கும்படி உயர்ந்த மேல்நிலை மாடிகளை உடையதாய், சிறப்புப் பொருந்திய காவலையுடையதாய், மணி களால் இழைக்கப்பட்ட விளக்கு நின்று ஒளியைத் தருவதாய் இருந் தாலும், விரும்பத்தக்க மாட்சிமை பொருந்திய மனைவியைப் பெற்றில்லாதவனுடைய வீடு, காண்பதற்கு அச்சம் தருகின்ற காடு ஆகுமே அல்லாமல், வேறு என்ன பயனுடையதாம்?*

*கருத்து* : **நல்ல மனையாளைப் பெறாத இல்லம் செல்வத்தால் சிறப்புற்றிருந்தும் பயனில்லை.**

362. வழுக்(கு)எனைத்தும் இல்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுவர் ஆயின், – இழுக்(கு)எனைத்தும்
செய்குறாப் பாணி சிறிதே,அச் சின்மொழியார்
கைஉறாப் பாணி பெரிது.

**(வழுக்கு - குற்றம்; பாணி - காலம்; கை உறா - நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளாது.)**

*மென்மைச் சொற்களையுடைய மகளிர், தளர்வில்லாத கொடிய வாள் வீரன் காவலில் இருந்தும், கற்பு நெறியிலிருந்து வழுவிய குற்றத்தினை உடையவராக இருந்தால், அம்மகளிர் குற்றம் செய்யாதிருக்கும் காலம் சிறிதே. அவர் நல்லொழுக்கம் இல்லாத காலமே பெரிதெனக் கொள்ளத்தகும்.*

*கருத்து* : **சிறை காக்கும் கற்பு கற்பல்ல.**

**363.** எறிஎன்(று) எதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி; – அட்டதனை
உண்டி உதாவதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

**(எறி -அடி; சிறு காலை - விடியற்காலை; அட்டில் - சமையலறை; உதவாதாள் - கொடுக்காதவள்; கொண்டான் - கணவன்.)**

*கணவன் வெகுண்டு உரைக்கும்போது, 'அடி பார்க்கலாம்' என்று கூறி எதிர்த்து நிற்பவள் எமனாவாள்; விடியற்காலத்தில் சமையலறையில் புகாதவள் நீக்கமுடியா நோயாவாள்; சமைத்த உணவைக் கணவனுக்கு இடாதவள் வீட்டில் வாழும் பேயாவாள்; இம்மூவகையினரும் கொண்டவனைக் கொல்லும் படைக்கலம் ஆவர்.*

*கருத்து* : **நற்குணமில்லா மனைவி கணவனின் உயிர்க்கொல்லி.**

**364.** கடியெனக் கேட்டும் கடியான்; வெடிபட
ஆர்ப்பது கேட்டும் அதுதெளியான்; – போத்தும்ஓர்
இல்கொண்(டு), இனிதிரூஉம் ஏமுறுதல் என்பவே,
கல்கொண்(டு) எறியும் தவறு.

**(கடி - நீக்கு; ஆர்ப்பது - ஆரவாரிப்பது; ஏமுறுதல் - மயங்கியிருத்தல்.)**

*திருமணத்தைக் 'கடி' (கடி = திருமணம்; மற்றொரு பொருள் நீக்குக என்பதாம்) என்று பெரியோர் சொல்லக் கேட்டும் நீக்கான். தன் மனைவி தனக்கு எதிராக வெடிபோல ஆரவாரிப்பது கேட்டும் 'கடிய' வேண்டுமென்பதைத் தெளியான். அதன் பின்னும் வேறொரு மனைவியை மணந்து கொண்டு மகிழ்ந்து மயங்கியிருத்தல் கல்லைத் தன்மேல் தானே எறிந்து கொள்ளும் தவறாகும்.*

*கருத்து* : **மனைவி பொல்லாதவளானால் மனைவாழ்வைத் துறக்க வேண்டுமே அல்லாமல் மறுமணம் செய்து கொள்வது மடமை.**

365. தலையே தவம்முயன்று வாழ்தல்; ஒருவர்க்(கு)
இடையே இனியார்கண் தங்கல்; – கடையே
புணராதென்(று) எண்ணிப், பொருள்நசையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை.

(புணராது - பொருந்தாது; நசை - விருப்பம்.)

*ஒருவர் தவத்திலே முயன்று வாழ்தல் தலையாய செயல்; இனியவர்களோடு கூடி வாழ்தல் இடையாய செயல்; கிடைக்காது எனத் தெரிந்தும் பொருளாசையால் தம் தகுதியை அறியாத கீழோர்பின் சென்று நிற்றல் கடையாய செயலாம்.*

*கருத்து* : **தவவாழ்வு முதல்; இல்வாழ்வு இடை; அடிமை வாழ்வு கடை.**

366. கல்லாக் கழிப்பர் தலையாயார்; நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள்; கடைகள்
இனி(து)உண்ணேம், ஆரப் பெறேம்யாம், என்னும்
முனிவினால் கண்பா(டு) இலர்.

(கல்லா – கற்று; துவ்வா – நுகர்ந்து; ஆர – நிரம்ப; கண்பாடு – உறக்கம்.)

*தலையாய அறிவுடையார் நூல்களைக் கற்றுக் காலம் கழிப்பர்; இடையாயினோர் நல்ல உணவு வகைகளை நுகர்ந்து காலம் கழிப்பர்; கீழோர், 'நாம் இனிதாக உண்டிலேம்; நிரம்பச் செல்வம் பெற்றிலேம்' என்னும் வெறுப்பினால் உறக்கமின்றி வருந்துவர்.*

*கருத்து* : **உயர்ந்தோர் கற்றும், இடைப்பட்டோர் உண்டும், கடையர் உறங்காமலும் காலம் கழிப்பர்.**

367. செந்நெல்லால் ஆய செழுமுளை, மற்றும்அச்
செந்நெல்லே ஆகி விளைதலால், – அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர!
மகன்அறிவு தந்தை அறிவு.

(ஆய - உண்டாகிய; செழு - செழிப்பான; காய்க்கும் - விளையும்.)

*செந்நெற்களை விதைப்பதால் எழுகின்ற செழிப்பான முளைகள் மீண்டும் அந்தச் செந்நெல்லாகவே விளையும். அச்செந்நெல் நிறைந்து விளைந்திருக்கும் செழித்த வயல் சூழ்ந்த ஊர்களையுடையவனே! நெல்லில் விளைவது நெல்லே போலத் தந்தையின் அறிவே மகனது அறிவாக அமையும்.*

*கருத்து* : **மகனது அறிவு, தந்யையின் அறிவால் அமையும்.**

368. உடைப்பெரும் செல்வரும் சான்றோரும் கெட்டுப்,
புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகிக்,

கடைக்கால் தலைக்கண்ண(து) ஆகிக், குடைக்கால்போல்
கீழ்மேலாய் நிற்கும் உலகு.

(புடைப் பெண்டிர் - விலை மகளிர்; கடைக்கால் - கால் மாடு; தலை - தலை மாடு; குடைக்கால் - குடைத் தண்டு.)

*பெரிய செல்வமுடையாரும் சான்றோர்களும் வளம் கெட்டு வறியராய் இருக்க, பொருள் தருவாரைக் கூடுகின்ற விலை மகளிரின் பிள்ளைகளும் கீழோரும் செல்வத்தால் பெருகி மேன்மையுற்று இருப்பதானது, கால்மாட்டில் இருக்க வேண்டியது தலைமாட்டில் இருப்பதாகி, உலகமானது குடையின் தண்டு கீழ்மேலாய் நிற்கும் தகுதியுடையதாகும்.*

*கருத்து* : **கீழோர் மேலோராகியிருத்தல் உலக இயல்பு.**

369. இனியார்தம் நெஞ்சத்து நோய்உரைப்ப, அந்நோய்
தணியாத உள்ளம் உடையார், – மணிவரன்றி
வீழும் அருவி விறல்மலை நன்னாட!
வாழ்வின் வரைபாய்தல் நன்று.

(இனியார் - இனிய நட்பினர்; நோய் - துன்பம்; தணியாத - நீங்காத; வரன்றி - வாரிக் கொண்டு.)

*மணிகளைக் கொழித்துக் கொண்டு விழுகின்ற அருவிகளை யுடைய பெருமைமிகு மலைகள் பொருந்திய நல்ல நாட்டவனே! இனிய நட்பினர் தம் மனத்தை வருத்தும் துன்பத்தை வாய்விட்டுக் கூறிய பிறகும் அத்துன்பத்தை, நீக்காத கல் மனமுடையவர்கள் உயிர் வாழ்தலினும் மலையேறி வீழ்ந்து உயிர் விடுதல் நல்லது.*

*கருத்து* : **நட்பினர் வருத்தத்தைக் களையாதார் வாழ்தலினும் இறத்தல் நன்று.**

370. புதுப்புனலும், பூங்குழையார் நட்பும், இரண்டும்
விதுப்பற நாடின்,வே(று) அல்ல; – புதுப்புனலும்
மாரி அறவே அறுமே; அவர்அன்பும்
வாரி அறவே அறும்.

(பூங்குழையார் - அழகிய காதணியுடையார்; விதுப்பு அற - விரைவு இல்லாமல் (நிதானமாக); நாடின் - ஆராயின்; மாரி - மழை; அறவே - நீங்கவே; வாரி - அன்பு.)

*புது நீர்ப்பெருக்கு, அழகிய காதணியை உடைய வேசையரது நட்பு ஆகிய இரண்டையும் நடுநிலையோடு ஆராயின் வேறானவை அல்ல. புதுநீர் வெள்ளம் மழை நீங்கினால் ஒழியும். அவ்வேசையர் அன்பும் பொருள் வருவாய் நின்றதும் நீங்கிவிடும்.*

*கருத்து* : **பொருள் இல்லையேல் வேசையர் அன்பும் இல்லை.**

# 38
# பொது மகளிர்

371. விளக்(கு)ஒளியும், வேசையர் நட்பும், இரண்டும்
துளக்(கு)அற நாடின்வே(று) அல்ல; – விளக்(கு)ஒளியும்
நெய்அற்ற கண்ணே அறுமே; அவர்அன்பும்
கைஅற்ற கண்ணே அறும்.

(வேசையர் – பொதுமகளிர்; துளக்கு அற – குற்றம் நீங்க; அறும் – நீங்கும்; கை அற்ற – கைப்பொருள் அற்ற.)

*விளக்கு ஒளி, வேசையர் நட்பு ஆகிய இரண்டையும் குற்றமற ஆராயின் வேறுபடுவன அல்ல. எவ்வாறெனில் விளக்கின் ஒளி விளக்கில் நெய் வற்றியபொழுதே நீங்கும்; அவ்வேசையர் அன்பும் கைப்பொருள் நீங்கியபோதே நீங்கும்.*

*கருத்து* : **வேசையர் அன்பு பொருள் மேலதே.**

372. அங்கோட்(டு) அகல்அல்குல் ஆய்இழையாள், நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன்; – செங்கோட்டின்
மேல்காணம் இன்மையான், மேவா(து) ஒழிந்தாளே,
கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து.

(செங்கோடு – செங்குத்தான மலை; காணம் – பொருள்; கலுழ்ந்து – அழுது.)

*அழகிய பக்கமகன்ற அல்குலையுடையவளும், அணிகலன்களை ஆராய்ந்தணிந்தவளுமான பொதுமகள் எம்மிடம் பணமிருந்தபோது, "உம்மைப் பிரிதலினும் உம்மோடு செங்குத்தான மலையுச்சியிலிருந்து ஒன்றாகவே விழுந்து மாய்வேன்" என்று சொன்னாள்; இப்போது என்னிடம் பொருளில்லாமையால் செங்குத்தான மலைமீது ஏறுதற்குத் தன் காலில் வாதநோய் உள்ளது என்று காரணம் காட்டி அழுது, உடன்வராது நீங்கி விட்டாள்.*

*கருத்து* : **பரத்தையர் அன்புடையார்போல நடித்துப் பொருள் பறிப்பர்.**

373. அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்,
செங்கண்மால் ஆயினும் ஆகமன்; – தம்கைக்
கொடுப்ப(து)ஒன்(று) இல்லாரைக், கொய்தளிர் அன்னார்
விடுப்பர்தம் கையால் தொழுது.

(விசும்பு – வானம்; செங்கண் மால் – சிவந்த கண்ணுடைய திருமால்; அன்னார் – போன்றவர்.)

*அழகிய இடமகன்ற விண்ணுலகத்தில் தேவர்களால் வணங்கப் படுகின்ற சிவந்த கண்களையுடைய திருமாலே ஆயினும் ஆகுக; தம்முடைய கையில் கொடுப்பதற்குரிய பொருள் இல்லாதவரை இளந்தளிர்போலும் மேனியையுடைய பரத்தையர் தம் கைகளால் கும்பிட்டு வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிடுவர்.*

**கருத்து : வேசை பொருளில்லா அழகனைக் கும்பிட்டு அனுப்பிவிடுவாள்.**

374. ஆணம்இல் நெஞ்சத்(து) அணிநீலக் கண்ணார்க்குக்,
காணம்இல் லாதார் கடுஅனையர்; – காணவே
செக்(கு)ஊர்ந்து கொண்டாரும், செய்த பொருள்உடையார்
அக்காரம் அன்னார் அவர்க்கு.

(ஆணம் - அன்பு; அணி - அழகு; காணம் - பொருள்; கடு - நஞ்சு; அக்காரம் - சர்க்கரை.)

*அன்பில்லாத மனத்தையும் அழகிய நீலமலர் போலும் கண்களையுமுடைய பரத்தையர்க்குப் பொருளில்லாதவர் நஞ்சு போல்வர். யாவரும் அறியச் செக்கை ஆட்டி எண்ணெய்த் துணி உடுத்திருப்பவராயினும் பொருளைத் தேடி வைத்திருப்பவராயின் அவர் அப்பொது மகளிர்க்குச் சர்க்கரை போல்வர்.*

**கருத்து : பொருளுடையார் இழிந்தவராயினும் பரத்தையர் அவரையே நாடுவர்.**

375. பாம்பிற்(கு) ஒருதலை காட்டி, ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும்; – ஆங்கு
மலங்(கு)அன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்,
விலங்(கு)அன்ன வெள்அறிவி னார்.

(ஒருதலை - ஒருபுறம்; தெள் + கயம் - தெளிந்த குளம்; மலங்கு - விலாங்கு மீன்; வெள் அறிவு - அறிவில்லாமை.)

*பாம்புக்கு ஒருபுறத்தைக் காட்டி, மற்றொரு புறத்தை இனிமை பொருந்திய தெளிந்த நீர்க் குளத்தின் மீனுக்குக் காட்டுகின்ற விலாங்கு மீனையொத்துச் செல்வர்க்கு முன்புறத்தையும் இல்லார்க்குப் பின்புறத்தையும் காட்டுகின்ற செயலையுடைய பொதுமகளிரின் தோள்களைச் சேர்பவர் விலங்கொத்த மூடர் ஆவர்.*

**கருத்து : பரத்தையர் தோள்களை அறிவுடையார் சேரார்.**

376. பொத்தநூற் கல்லும், புணர்பிரியா அன்றிலும்போல்,
நித்தலும் நம்மைப் பிரியலம் என்(று)உரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ(டு) ஆயினாள், நன்னெஞ்சே!
நிற்றியோ போதியோ நீ.

(பொத்துதல் - துளைக்கப்படுதல்; அன்றில் - ஒரு பறவை; தகர் - ஆட்டுக் கிடாய்; கோடு - கொம்பு.)

*துளைக்கப்பட்டு நூலில் கோத்த மணிக்கல்லும், இணை பிரியாத அன்றிலும்போல எந்நாளும் நம்மைப் பிரியோமென்று உறுதிசொன்ன பொன்வளையணிந்த பொதுமகள் இப்போது போர் செய்யும் ஆட்டுக்கடாவின் கொம்புபோல முறுக்கிக் கொண்டு போய்விட்டாள். எனவே நல்ல நெஞ்சமே! நீ இனியேனும் என்னுடன் நிற்பாயோ? அல்லது அவளுடன் போவாயோ? (சொல்).*

*கருத்து* : **பரத்தையர் சொல்லும் செயலும் வேறுபடும்.**

377. ஆமாபோல் நக்கி, அவர்கைப் பொருள்கொண்டு,
சேமாபோல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை,
ஏமாந்(து) எம(து)என்று இருந்தார், பெறுபவே
தாமாம் பலரால் நகை.

(ஆமா - காட்டுப் பசு; சேமா - பொலி எருது; சில்லை - தீயொழுக்கமுடையவள்.)

*காட்டுப் பசு கன்றினை நக்குவதுபோல உடம்பெல்லாம் தடவிக் கொடுத்துக் குழைந்து, கையிலுள்ள பொருளெல்லாம் பறித்துக் கொண்ட பின்பு, பொலிஎருதுபோலக் குப்புறப் படுத்துக் கொள்ளும் தீயொழுக்கமுடையாளின் அன்பைத் தமது என மயங்கி ஏமாந்திருப்பவர் பலராலும் இகழப்பெறுவர்.*

*கருத்து* : **வேசையர் அன்பை மெய்யென எண்ணி மயங்குவோர் பொருளிழந்து இகழ்ச்சியடைவர்.**

378. ஏமாந்த போழ்தின் இனியார்போன்(று); இன்னாராய்த்
தாமாழ்ந்த போதே தகர்க்கோடாம்; – மான்நோக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே,
செந்நெறிச் சேர்தும்என் பார்.

(ஆழ்ந்தபோது - மூழ்கிப்போன போது; தகர் - ஆட்டுக்கிடாய்; கோடு - கொம்பு; தந்நெறி - தன் வழி; செந்நெறி - செம்மையான வழி.)

*மான்போலும் கண்களையுடையவர்களாய்த் தம் மனம் போனபடி நடக்கும் பொதுமகளிர், ஆடவர் தம்மிடம் உள்ள பொருள்களையெல்லாம் தந்து ஏமாந்திருக்கும் காலத்தில், இன்பம் தருபவர்போல நடந்துகொள்வர். அவர்கள் செல்வம் இன்றி மூழ்கிப்போனபோது, துன்பம் தருபவர்களாய் மாறி, ஆட்டுக்கடாவின் கொம்புபோல முறுக்கிக் கொள்வர். எனவே நல்வழியில் ஒழுகுவோம் எனக் கருதுபவர் அப்பொதுமகளிரின் பெரிய கொங்கைகளை அணையார்.*

*கருத்து* : **நல்லொழுக்கமுடையார் பொதுமகளிரைச் சேரார்.**

379. ஊறுசெய் நெஞ்சம்தம் உள்அடக்கி, ஒள்நுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத், – தேறி
எமர்என்று கொள்வாரும் கொள்பவே; யார்க்கும்
தமர்அல்லர் தம்முடம்பி னார்.

(ஊறு - கேடு, துன்பம்; ஒள் நுதலார் - ஒளி பொருந்திய நெற்றியை உடையவர்; தேற - தெளியும்படி; எமர் - எமக்கு உறவானவர்.)

*ஒளி பொருந்திய நெற்றியையுடைய பொதுமகளிர் கேடு செய்யும் கருத்தினை வெளித் தோன்றாது தன்னுள்ளேயே மறைத்து, தம்மை அன்புடையாரென்று தெளியும்படி சொல்லிய சொற்களைக் கேட்டு, அவற்றை மெய்யென்று நம்பி, அப்பொது மகளிரை, 'இவர் எமக்கு உறவாவார்' என்று கொள்பவர்கள் கொள்ளட்டும். ஆனால், தம்முடம்பையே தமக்குச் சொத்தாக உடைய அப்பொதுமகளிர் எவர்க்கும் உறவாக மாட்டார்கள். இதை அவர் அறியாதது ஏனோ?*

*கருத்து* : **பரத்தையர் எவரிடத்தும் உண்மையன்பு கொள்ள மாட்டார்.**

380. உள்ளம் ஒருவன் உழையதா, ஒள்நுதலார்,
கள்ளத்தால் செய்யுங் கருத்(து)எல்லாம், – தெள்ளி
அறிந்த இடத்தும் அறியாராம்; பாவம்
செறிந்த உடம்பி னவர்.

(உழையது ஆ - இடத்தில் இருக்க; தெள்ளி - தெளிவாக; செறிந்த - நிரம்பிய; உடம்பினவர் - உடம்பினை உடையவர்.)

*ஒளி பொருந்திய நெற்றியையுடைய பரத்தையர் தம் மனத்தை வேறு ஒருவனிடம் வைத்துக்கொண்டு கள்ளத்தனத்தால் நம்மிடம் செய்யும் குறிப்பெல்லாவற்றையும் தெளிவாக ஆராய்ந்து நன்றாக உணர்ந்த நிலையிலும், தீவினைகள் நிரம்பிய உடலினையுடையவர், அவ்வேசையர் உறவு விலக்கத்தக்கது என்பதை அறியார்.*

*கருத்து* : **வேசையரின் கள்ளத்தனத்தை அறிந்தும் பாவிகள் அவரை விட்டு நீங்குவதில்லை.**

## 39

## கற்புடை மகளிர்

381. அரும்பெறல் கற்பின் அயிராணி அன்ன
பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும், – விரும்பிப்

பெருநசையால் பின்நிற்பார் இன்மையே பேணும்
நறுநுதலாள், நன்மைத் துணை.

(அயிராணி - இந்திரன் மனைவி; பெரும் பெயர் - பெரிய புகழ்; இன்மை - இல்லாமை; பேணும் - பாதுகாக்கின்ற.)

*பெறுதற்கரிய கற்பினையுடைய இந்திராணியைப் போன்ற பெரிய புகழையுடைய பெண்ணேயாயினும், அவர்களுள் தன்னை அடைய வேண்டும் என்ற ஆசையால் தன் பின்னே வேறொருவர் நிற்காத வகையில் தன் ஒழுக்கத்தைப் பாதுகாத்துக் கொள்கின்ற அழகிய நெற்றியையுடைய பெண்ணே கணவனுக்கு நன்மை பொருந்திய துணையாவாள்.*

***கருத்து* : கணவனன்றிப் பிறர் இச்சியாதவாறு ஒழுகவல்லவளே கற்புடைய மகளாவாள்.**

382. குடநீர்அட்(டு) உண்ணும் இடுக்கண் பொழுதும்,
கடல்நீர் அற(உ)ண்ணும் கேளிர் வரினும்,
கடன்நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

(அட்டு - சமைத்து; இடுக்கண் - துன்பம்; அற - வற்றும்படி; கையாறு - ஒழுக்க நெறி.)

*குடத்து நீரால் சமைத்துண்டு வாழும் வறுமையும் பஞ்சமும் வந்த துன்பக் காலத்திலும், கடல் நீரே வற்றும்படி உண்ணத்தக்க பெருங்கூட்டமான உறவினர் வந்தாராயினும், விருந்தோம்பலாகிய கடமைக் குணத்தை ஒழுக்க நெறியாகக் கொள்ளுகின்ற இன்சொற்களையுடைய பெண்ணே மனைவாழ்க்கைக்குரிய சிறப்புடையவள் ஆவாள்.*

***கருத்து* : வறுமையிலும் தன் கடமையை நிறைவேற்றுபவளே மனைமாட்சி உடையவள் ஆவாள்.**

383. நாலாறும் ஆறாய், நனிசிறிதாய், எப்புறனும்
மேலாறு மேல்உறை சோரினும், — மேலாய
வல்லாளாய், வாழும்ஊர் தற்புகழும் மாண்கற்பின்
இல்லாள் அமைந்ததே இல்.

(நாலாறும் - நான்கு பக்கங்களிலும்; மேல் உறை - கூரை; வல் ஆளாய் - வல்லவனாய்.)

*குடியிருக்கும் வீடு நான்கு பக்கங்களிலும் சுவர் இடிந்து உள் நுழைகின்ற வழிகளை உடையதாய், மிகச் சிறியதாய், எல்லாப் பக்கங்களிலும் கூரை பிரிந்து மேல்தொளைகளிலிருந்து மழைத் துளி ஒழுகுவதாய் உள்ள வறுமை நிலையிலும், மேலான*

*அறங்களைச் செய்யவல்லவளாய், தான் வாழும் ஊரிலுள்ளார் தன்னைப் புகழும்படியான சிறப்புப் பொருந்திய கற்பினையுடையவளாய் அமைந்துள்ள மனையாளைப் பெற்றிருக்கும் வீடே வீடு எனப்படும்.*

*கருத்து* : **வறுமையிலும் பிறர் மதிக்க வாழுகின்ற கற்புடையாளைப் பெற்றிருப்பதே வீடு.**

**384.** கட்(கு)இனியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,
உட்(கு)உடையாள்; ஊராண் இயல்பினாள், – உட்கி
இடனறிந்(து) ஊடி, இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.

(உட்கு - அச்சம்; ஊராண் இயல்பினாள் - பிறர்க்குதவும் ஒப்புரவுடையவள்.)

*கண்ணுக்கு இனியவளாய், கணவன் விரும்பும் வகையில் அழகு செய்துகொள்பவளாய், பிற ஆடவர் கண்டு அஞ்சத்தக்க நன்னடத்தை உள்ளவளாய், ஒப்புரவுடையவளாய், கணவனுடன் ஏற்ற இடமறிந்து ஊடி, இனிதாக அவ்வூடல் தீர்க்கின்ற இன்சொற்களையுடையவளாய் இருப்பவளே கற்புடைய பெண்.*

*கருத்து* : **கண்ணுக்கு இனியவளாய், கணவனுக்கு உகந்தவளாய் வாழ்பவளே கற்புடைய பெண்.**

**385.** எஞ்ஞான்றும் எம்கணவர்; எம்தோள்மேல் சேர்ந்(து) எழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்; – எஞ்ஞான்றும்
என்னை கெழீஇயினர் கொல்லோ? பொருள்நசையால்
பன்மார்பு சேர்ந்(து)ஒழுகு வார்.

(அஞ்ஞான்று - (மணந்த) அந்தக் காலத்திலே; நாணுதும் - நாணம் அடைகின்றோம்; என்னை - எவ்வாறு?; கெழீஇயினர் - தழுவினர்.)

*எல்லா நாளும் எம்முடைய கணவர் எம்முடைய தோள்களில் பொருந்தி அணைந்தாலும் மனம் செய்த அன்று யாம் கண்டது போலவே இன்றும் நாணமடைகின்றோம். இங்ஙனமிருக்கப் பொருள் ஆசையால் பலர் மார்புகளைச் சேர்ந்து ஒழுகும் பரத்தையர் எவ்வாறு எப்போதும் நாணமின்றித் தழுவுகிறார்களோ? தெரியவில்லையே! நாணம் என்பதே அவர்கள் உள்ளத்தில் இல்லையோ?*

*கருத்து* : **பொதுமகளிர் நாணம் அறியார்.**

**386.** உள்ளத்(து) உணர்வுடையான் ஓதிய நூல்அற்றால்,
வள்ளண்மை பூண்டான்கண் ஒண்பொருள்; – தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ,
நாண்உடையாள் பெற்ற நலம்.

(அற்றால் - போல; வள்ளண்மை - கொடைத் தன்மை; அயில் - கூரிய; அனைத்து - போன்றது.)

*உள்ளத்தில் நல்லுணர்வு உடையான் பயின்ற நூல்கள் பலர்க்கும் பயன்படுவதுபோல, கொடைத் தன்மை பூண்டவனிட முள்ள மேன்மையான செல்வமும் பலர்க்கும் பயன்படும். நாண மிகுந்த குலமகளிரின் அழகு, அறிவிற் சிறந்த வீரனின் கையிலுள்ள கூரிய வாள்போல யாராலும் நெருங்குதற்கு அரிதாம்.*

*கருத்து* : **குலமகளிர் அழகு வீரன் கை வாள் போன்றது.**

**பரத்தையிடம் சென்று திரும்பும் தலைவனைப் பற்றித் தலைவி தோழியிடம் கூறியது:**

387. கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்(று)
ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரன்; – ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன், நீராடா(து)
என்னையும் தோய வரும்.

(தூணி, பதக்கு - அளத்தல் அளவைகள்.)

*ஊரனாகிய தலைவன், ஒரே விலைக்கு முறையே தூணி, பதக்கு என்ற அளவுகளில் தாழ்ந்த கருமையான கொள்ளையும் உயர்ந்த சிவப்புக் கொள்ளையும் வாங்கி, அவற்றை ஒரே தன்மையதாகக் கொண்டானாம். அவ்வாறே என்னோடு எவ்வகையிலும் ஒத்திராத அழகிய நெற்றிப் பகட்டையுடைய பரத்தையைத் தழுவி அனுபவித்த மலை போன்ற மார்பையுடைய தலைவன், அவளைத் தொட்ட தீட்டு நீங்க நீராடாது, என்னையும் அவளோடு ஒப்பு நினைத்து, தழுவித் தோயவருகிறான். நான் அவனை ஏற்க மாட்டேன்.*

*கருத்து* : **பரத்தையரைத் தழுவிய தலைவனை நான் ஏற்க மாட்டேன்.**

**பரத்தை வீடு சென்ற தலைவனின் தூதாகப் பாணன் வர அவனை நோக்கித் தலைவி நகையாடக் கூறியது :**

388. கொடியவை கூறாதி பாணநீ! கூறின்,
அடிபைய இட்(டு)ஒதுங்கிச் சென்று, – துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற்(கு), அதனால்
வலக்கண் அனையார்க்கு உரை.

(கூறாதி - கூறாதே; பைய - மெதுவாக; இட்டு - வைத்து; துடி - உடுக்கை.)

*பாணனே! தலைவன் பக்கமாய்ச் சேர்ந்து கொடுமையான சொற்களை எம்மிடம் கூறாதே. யாம் தலைமகனுக்கு உடுக்கையின் இடப்பக்கம்போலப் பயன்படாதிருக்கின்றோம். அதனால் நீ கூறுவதாயிருந்தால் மெதுவாக அடி வைத்து அப்புறம் போய்,*

*உடுக்கையின் வலப்பக்கம்போல் அவனுக்குப் பயன்பட்டு வருகின்ற பரத்தையிடம் சொல்வாயாக!*

*கருத்து* : **பாண! நீ சொல்ல வருவதைத் தலைவனுக்குப் பிரியமான பரத்தையிடம் சொல்.**

**பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நீ, புலவாமைக்குக் காரணம் என்? என்ற தோழிக்குத் தலைவி கூறியது :**

389. சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வயல் ஊரன்மேல்,
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்! – தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந்(து) அணிஅகலம்
நோக்கி இருந்தேனும் நான்.

(சாய் - கோரை; நொந்தேனும் - வருந்தியவளும்; சாந்து - சந்தனம்; அணி - அணிந்துள்ள; அகலம் - மார்பு.)

*கோரையைப் பிடுங்க நீர் தோன்றும் குளிர்ந்த வயலையுடைய தலைவன்மீது ஈ பறந்தாலும் அது பொறுக்காது, முன்பு நொந்த வளும் நானே! தீப்பொறி பறக்கும்படியாகப் பரத்தையர் முலை யோடு மோதப் பெற்று சந்தனம் கலைந்த தலைவனின் மார்பை இப்பொழுது பார்த்துப் பொறுத்துக்கொண்டு இருப்பவளும் நானே! எனவே அவன் பரத்தமை கண்டு ஊடவில்லை.*

*கருத்து* : **கணவர் பரத்தையரைக் கூடினும் கற்புடை மகளிர் பொறுத் திருக்கும் இயல்பினர்.**

**பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தூதாக வந்த பாணனிடம் தலைவி வெகுண்டு கூறியது**

390. அரும்(பு)அவிழ் தாரினான் எம்அருளும் என்று
பெரும்பொய் உரையாதி பாண!–கரும்பின்
கடைக்கண் அனையம்நாம் ஊரற்(கு); அதனால்
இடைக்கண் அனையார்க்(கு) உரை.

(தாரினான் - மாலையணிந்தவன்; உரையாதி - உரைக்காதே; கடைக்கண் - நுனிக் கணு; அனையம் - போன்றவர்; இடைக்கண் - இடையிலுள்ள கணு.)

*'பாணனே! அரும்புகள் மலரும் மாலையையணிந்த தலைவன் எமக்கு அருள் செய்வான்' என்று பெரும் பொய்யைச் சொல்லாதே! நாம் தலைவனுக்குக் கரும்பின் நுனிக்கணுபோலச் சப்பென்று சுவை குறைந்து உள்ளோம். அதனால் இப்பேச்சைத் தலைவனுக்குக் கரும்பின் இடையிலுள்ள கணுக்களையொத்த சுவைமிக்கவளாயுள்ள பரத்தையிடம் போய்ச் சொல்.*

*கருத்து* : **பாண! தலைவனுக்கு நுனிக்கரும்பாய்க் கசக்கும் என்னிடம் சொல்வதைவிட இதனை நடுக்கரும்பாய் இனிக்கும் பரத்தையிடம் சென்று சொல்.**

# 40

# காமநுதலியல்

**தலைவியின் ஊடல் தணிப்பான் வேண்டித் தோழி தலைமகனிடம் கூறியது**

391. முயங்காக்கால் பாயும் பசலை;மற்(று) ஊடி
உயங்காக்கால் உப்(பு)இன்றாம் காமம்; – வயங்(கு)ஓதம்
நில்லாத் திரைஅலைக்கும் நீள்கரைத் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோர் ஆறு.

(முயங்குதல் - தழுவுதல்; உயங்குதல் - வருந்துதல்; ஓதம் - கடல்; புல்லுதல் - தழுவுதல்.)

*கடலில் புரள்கின்ற மிகுதியான அலைகள் கரையை மோதுகின்ற நீண்ட கழிகளினது குளிர்ந்த கரையையுடையவனே! கணவனுடன் கூடாத பொழுது மேனி எங்கும் பசலை பரவும்; ஊடல் கொண்டு வருந்தாவிட்டால் காதலானது உணவில் உப்பு இல்லாததுபோல ஆகிவிடும். ஆதலின் கூடி, ஊடுவதே வழி.*

*கருத்து* : **ஊடுதல் காமத்திற்கு இன்பம்.**

**தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்ற பருவம் வந்தும் அவன் வராதது கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்குச் சொல்லியது**

392. தம்அமர் காதலர் தார்சூழ் அணிஅகலம்
விம்ம முயங்கும் துணையில்லார்க்(கு), – இம்மெனப்
பெய்ய எழிலி முழங்கும் திசைஎல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து.

(அமர் - விருப்பம்; அகலம் - மார்பு; விம்முதல் - புடைத்தல்; நெய்தல் - சாப்பறை; நீர்த்து - தன்மையது.)

*தம்மை விரும்பும் காதலரது மாலைசூழ்ந்த அழகிய மார்பைத் தம் மார்பு இன்பத்தால் புடைத்துப் பொங்கும்படி தழுவுமாறு துணைவன் அருகிலில்லாத மகளிர்க்கு, இம்மெனும் ஓசையோடு மழைபொழிவதற்காக மேகங்கள் திக்குகளில் எல்லாம் செய்கின்ற முழக்கம், சாப்பறையை ஒத்திருக்கும்.*

*கருத்து* : **கணவன் அருகில்லாமல் பருவம் களிப்பைத் தராது.**

**களவில் தலைவி தலைவனுடன் செல்ல விரும்பாததைத் தோழி தலைவனிடம் கூறியது**

393. கம்மஞ்செய் மாக்கள், கருவி ஒடுக்கிய
மம்மர்கொள் மாலை, மலர்ஆய்ந்து பூத்தொடுப்பாள்,

கைம்மாலை இட்டுக் கலுழ்ந்தாள்; துணையில்லார்க்(கு)
இம்மாலை என்செய்வ(து) என்று?

(கம்மம் - கம்மியத் தொழில்; ஒடுக்கிய - அடங்கச் செய்த; மம்மர் - மயக்கம்; கலுழ்ந்தாள் - அழுதாள்.)

*கம்மியத் தொழிலைச் செய்கின்ற மக்கள், தமது கருவிகளின் வேலையை நிறுத்துகின்ற இருளும் ஒளியும் மயங்குகின்ற மாலைப் பொழுதில், மலர்களை ஆய்ந்தெடுத்து மாலை தொடுப்பவள், தன் கையிலுள்ள மலர்மாலையைக் கீழே நழுவவிட்டு, 'துணையில்லா மகளிர்க்கு இம்மாலை நேரத்தில் இந்த மலர்மாலை என்ன பயனைத் தர போகிறது?' என்று பெருமூச்செறிந்து அழுதாள்.*

*கருத்து* : **கணவனோடு இல்லா மாலை நேரம் களிப்பில்லாதது.**

**சென்ற செயல் முற்றுப்பெற்றுத் திரும்புகின்ற தலைமகன் இடைவழியில் தன் தேர்ப்பாகனிடம் சொல்லியது**

394. செல்சுடர் நோக்கிச், சிதர்அரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா, விம்மித்தன் – மெல்விரலின்
நாள்வைத்து, நம்குற்றம் எண்ணுங்கொல்? அந்தோதன்
தோள்வைத்(து) அணைமேற் கிடந்து.

(சிதர் - சிதறிய; அரிக் கண் - செவ்வரி படர்ந்த கண்; ஊழ் - முறைமையாக; தெரியா - எடுத்து எறிந்து; அணை - தலையணை.)

*பாணனே! மேற்றிசையில் மறைகின்ற சூரியனைப் பார்த்து, சிதறிய செவ்வரிகளையுடைய கண்களில் நிறைந்த நீரை மெல்லிய விரல்களால் முறையாக எடுத்துத்தெறிந்து, பொருமி, தன் மெல்லிய விரல்களினால் நாம் பிரிந்த நாள்களைக் கோடிட்டுக் கணக்கு வைத்து, படுக்கைமேல் தன் தோளை வைத்துத் தலையணையைத் தழுவிக் கிடந்து, அந்நிலைக்கு ஆளாக்கிவிட்டுப் பிரிந்த நம் குற்றங்களை நம் தலைவி இதுவேளை நினைத்திருப் பாளோ?*

*கருத்து* : **பாக! நாம் பிரிந்த நாளை எண்ணிக் கணக்கிட்டுத் தலைவி வருந்தியிருப்பாள். விரைந்து செல்.**

**தலைமகன் தலைவியின் அழகு நலம் தன்னை வருத்துவதைப் பாங்கனிடம் சொல்லியது**

395. கண்கயல் என்னும் கருத்தினால் காதலி
பின்சென்ற(து) அம்ம சிறுசிரல்; – பின்சென்றும்
ஊக்கி எழுந்தும் எறிகல்லா, ஒண்புருவம்
கோட்டிய வில்வாக்(கு) அறிந்து.

(கயல் - ஒருவகை மீன்; சிரல் - சிச்சிலிப் பறவை; ஊக்கி - முயற்சி செய்து; கோட்டிய - வளைக்கப்பட்ட; வில் வாக்கு - வில் போன்றிருந்ததை.)

*பாங்கனே! சிறிய சிச்சிலிக் குருவியானது என் காதலியின் கண்களைக் கயல்மீன் என்று கருதியதால் அவற்றைக் குத்தி எடுக்க அவள் பின்னே சென்றது. அவ்வாறு பின்னே சென்று, ஊக்கத்துடன் குத்த எழுந்ததும், அவளுடைய ஒள்ளிய புருவமானது வளைக்கப்பட்ட வில் போலிருந்ததைக் கண்டு அஞ்சி, அக்கண்களைக் குத்தாது திரும்பியது.*

**கருத்து : தலைவியின் தணிந்த பார்வை என்னை அழைக்கிறது; வளைந்த புருவம் அஞ்ச வைக்கிறது.**

**தலைவி தலைவனுடன் சென்றுள்ள காட்டு வழியின் கடுமையை நினைந்து செவிலி கூறியது**

396. அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற்(கு) அன்னோ
பரல்கானம் ஆற்றின கொல்லோ! — அரக்(கு)ஆர்ந்த
பஞ்சிகொண்டு ஊட்டினும், பையெனப் பையெனஎன்(று)
அஞ்சிப்பின் வாங்கும் அடி.

(அரக்கு - சிவப்பு; மருங்கு - இடை; பரல் - பருக்கைக் கற்கள்; ஊட்டினும் - தடவினாலும்; பைய என - மெல்ல என்று.)

*சிவந்த ஆம்பல்போல மணங்கமழும் வாயையும் அழகிய இடையையுமுடையவள் என் மகள் முன்பு செந்நிறம் பொருந்திய பஞ்சைக் கொண்டு எழுதினாலும், 'மெல்ல, மெல்ல' என்று சொல்லி அஞ்சிப் பின்வாங்கிய அவளுடைய மென்மையான அடிகள் இப்போது ஐயகோ! பருக்கைக் கற்களையுடைய காட்டு வழியை எவ்வாறு பொறுத்தனவோ?*

**கருத்து : கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் என் மகளின் மென்மையான பாதம் எப்படி நடக்குமோ?**

**களவில், தலைவி பெற்றோரைப் பிரிந்து தலைவனுடன் செல்ல உடன்படாமையைத் தோழி, தலைவனிடம் கூறியது**

397. ஓலைக் கணக்கர் ஒலிஅடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதில், மணந்தார் பிரி(வு)உள்ளி
மாலை பரிந்திட்(டு) அழுதாள்; வனமுலைமேல்
கோலஞ்செய் சாந்தம் திமிர்ந்து.

(புன் - புல்லிய; செக்கர் - செந்நிறமுடைய; மாலை - மலர் மாலை; பரிந்து இட்டு - அறுத்து எறிந்து; திமிர்ந்து - உதிர்த்து.)

*ஓலையில் கணக்கு எழுதுவோரின் ஓசை அடங்கும்படியான புல்லிய செந்நிறமுடைய மாலைக் காலத்தில் தலைமகள் தன்னைத்*

*தழுவிய தலைவனின் பிரிவை நினைத்துதான் அணிந்திருந்த மாலையை அறுத்தெறிந்து, அழகிய முலைகளின்மேல் கோலஞ் செய்திருந்த சந்தனத்தையும் அழித்து அழுதாள்.*

*கருத்து* : **தலைவனின் மாலைப்பொழுதுப் பிரிவைப் பொறாது தலைவி பெரிதும் வருந்தினாள்.**

**தலைவனுடன் போகச் சம்மதித்த தோழி சொல்லியது**

398. கடக்(க)அரும் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ என்றி? — சுடர்த்தொடீஇ
பெற்றான் ஒருவன் பெருங்குதிரை, அந்நிலையே
கற்றான் அஃ(து)ஊரும் ஆறு.

(வல்லையோ - வல்லமை உடையையோ; ஊர்தல் - செலுத்துதல்.)

*ஒளி பொருந்திய வளையலை உடைய தோழியே! கடத்தற்கரிய பாலை நில வழியில் காளைபோலும் காதலனுடன், நாளை நடந்து செல்லும் ஆற்றல் உனக்கு உண்டா? என்றுதானே கேட்கிறாய். ஒருவன் ஒரு குதிரையை எப்போது பெற்றானோ அப்போதே அதில் ஏறிச் செல்லும் ஆற்றலையும் கற்றவன் ஆவான். (ஆதலால் காதலனுடன் நடத்தல் அரிதன்று.)*

*கருத்து* : **தலைவனுடன் புறப்பட முடிவு கொண்ட அப்போதே அதற்கான ஆற்றல்கள் அனைத்தையும் பெற்று விட்டேன்.**

**தலைவனுடன் போன தன் மகளை எண்ணி நற்றாய் வருந்திச் சொல்லியது**

399. முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறியேன்; — கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலும்என்
பூம்பாவை செய்த குறி.

(புல்லுதல் - தழுவிக் கொள்ளுதல்; கலை - மான்; கணம் - கூட்டம்; வெரூஉம் - அஞ்சும்.)

*என் மகள் தன் முலைக்காம்புகளும் முத்துமாலையும் என் உடல் முழுதும் அழுந்தும்படி தழுவிக் கொண்டதன் காரணத்தை அப்போது அறியேன். தாமரைப்பூவில் உறையும் திருமகள் போன்ற அவளை, மான் கூட்டங்கள் அஞ்சும் புலிகள் உலவும் வழியில் என்னைப் பிரிந்து தன் காதலனுடன் செல்லத்தான் என்னை அப்போது அவ்வாறு தழுவினளோ?*

*கருத்து* : **மகள் பிரிவை முன்னரே அறியாது போயினளே என, நற்றாய் வருந்துகிறாள்.**

**தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துவது**

400. கண்மூன்(று) உடையானும், காக்கையும், பைஅரவும்
என்ஈன்ற யாயும், பிழைத்த(து)என்? – பொன்ஈன்ற
கோங்(கு)அரும்(பு) அன்ன முலையாய்! பொருள்வயின்
பாங்கனார் சென்ற நெறி.

(கண்மூன்று உடையான் - மூன்று கண்களையுடைய சிவன்; பை அரவு - படத்தையுடைய பாம்பு; யாய் - தாய்; கோங்கு - ஒரு வகை மலர்; பொருள் வயின் - பொருள் கருதி; பாங்கனார் – தலைவர்.)

*பொன்போலும் தேமல் பொருந்திய கொங்க மலரைப் போன்ற மார்பையுடைய தோழியே! முக்கண்ணனான சிவபெருமானும், காக்கையும், பையுடைய பாம்பும் எனக்கு என்ன குற்றம் செய்தனர்? அவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. தலைவன் சென்ற வழியே என்னைத் துன்புறுத்துகிறது. (மன்மதனைச் சிவன் எரிக்காமல் மீண்டும் பிழைக்க வைத்ததால் இப்போது உயிரோடிருந்து காமக்கணையைச் செலுத்தி வாட்டுகிறான். காக்கை தன் கூட்டில் பொரித்த குயிலைக் கொத்திச் கொல்லாமல் பிழைக்க விட்டதால் தான் இன்று கூவி கூவி என்னை வருத்துகிறது. பாம்பு மதியை விழுங்கியதை வெளியே விட்டு விடாமலிருந்தால் நிலவு என்னை வருத்த முடியாது. தாய் பெற்றபோதே என்னைக் கொன்றிருந்தால் இன்று அவள் என்னைக் கண்டிக்க வேண்டிய வேலை இராது. இந்நான்குமே தலைவியை இப்போது துன்பம் செய்கின்றன. இவர்களே துன்பம் செய்திருக்க, இவர்கள் துன்பம் செய்யவில்லை எனத் தலைவி நயமாய்க் கூறுகிறாள்.)*

*கருத்து* : **தோழியே! மன்மதன் அம்பும், குயில் குரலும், பாம்புப் படமும், தாயின் கண்டிப்பும் என்னைப் பெரிதும் வருத்துகின்றன.**

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| **அ** | |
| அக்கேபோல் அங்கை | 123 |
| அகத்தாரே | 31 |
| அங்கண்... அகல்நிலா | 151 |
| அங்கண்... அமரர் | 373 |
| அங்கோட்டு அகல் அல்குல் | 372 |
| அச்சம் பெரிதால் | 81 |
| அடுக்கல் மலைநாட | 203 |
| அடைந்தார்ப் பிரிவும் | 173 |
| அத்திட்ட கூறை | 281 |
| அம்பல் அயல் | 87 |
| அம்பும் அழலும் | 89 |
| அரக்காம்பல் | 396 |
| அருகல் அது ஆகி | 261 |
| அரும்புஅவிழ் தாரினான் | 390 |
| அரும்பெறல் கற்பின் | 381 |
| அரும்பெறல் யாக்கை | 34 |
| அருளின் | 321 |
| அலகுசால் கற்பின் | 140 |
| அவ்வியம் இல்லார் | 322 |
| அவமதிப்பும் ஆன்ற | 163 |
| அழல்மண்டு | 202 |
| அள்ளிக்கொள்வஅன்ன | 262 |
| அறம்புகழ் கேண்மை | 82 |
| அறிமின் அறநெறி | 172 |
| அறியாப் பருவத்து | 171 |
| அறியாரும் அல்லர் | 108 |
| அறிவது அறிந்து | 74 |
| **ஆ** | |
| அறுசுவை உண்டி | 1 |
| ஆகாது எனினும் | 337 |
| ஆடுகோடு ஆகி | 192 |
| ஆணம்இல் நெஞ்சத்து | 374 |
| ஆமாபோல் நக்கி | 377 |
| ஆர்த்த அறிவினர் | 351 |
| ஆர்த்த பொறிய | 290 |
| ஆவாம்நாம் | 32 |
| ஆவேறு உருவின | 118 |
| ஆள்பார்த்து உழலும் | 20 |
| ஆற்றும் துணையும் | 196 |
| ஆன்படு நெய்பெய் | 239 |
| **இ** | |
| இற்சார்வின் | 182 |
| இசைந்த சிறுமை | 187 |
| இசையா ஒருபொருள் | 111 |
| இசையாது எனினும் | 194 |
| இசையும் எனினும் | 152 |
| இட்டாற்றுப் பட்டு | 288 |
| இடம்பட மெய்ஞ்ஞானம் | 116 |
| இடும்பைகூர் | 107 |
| இம்மி அரிசி | 94 |
| இம்மை பயக்குமால் | 132 |
| இம்மையும் நன்றாம் | 294 |
| இமைக்கும் அளவில் | 323 |
| இரவலர் கன்றுஆக | 279 |
| இருக்கை எழலும் | 143 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| இரும்பார்க்கும் | 122 |
| இல்பிறப்பு இல்லார் | 320 |
| இல்லம் இளமை | 53 |
| இல்லா இடத்தும் | 91 |
| இல்லாமை கந்தா | 303 |
| இலங்கு நீர்த்தண் | 227 |
| இழித்தக்க செய்து | 302 |
| இழைத்த நாள் | 6 |
| இளையான் அடக்கம் | 65 |
| இற்பிறப்பு எண்ணி | 212 |
| இறப்பச் சிறிது எண்ணாது | 99 |
| இறப்பவே தீய | 223 |
| இறப்ப நினையுங்கால் | 174 |
| இன்பம் பயந்தாங்கு | 79 |
| இன்றாதும் | 359 |
| இன்றுகொல் | 36 |
| இன்னர் இனையர் | 205 |
| இன்னா இயைக | 306 |
| இன்னா செயினும் | 76 |
| இன்னா...விடற்பாலர் | 225 |
| இன்னா...விடுதற்கு | 226 |
| இனநன்மை இன்சொல் | 146 |
| இனியார் தம் | 369 |
| **ஈ** | |
| ஈட்டலும் துன்பம் | 280 |
| ஈண்டுநீர் | 109 |
| ஈதல் இசையாது | 181 |
| ஈனமாய் இல்இருந்து | 198 |
| **உ** | |
| உடாஅதும் உண்ணாதும் | 10 |
| உடுக்கை உலறி | 141 |
| உடையார் இவர்என்று | 160 |
| உடைப்பெருஞ் செல்வரும் | 368 |
| உண்டாய போழ்தில் | 284 |
| உண்ணான் ஒளிநிறான் | 9 |
| உணர உணரும் | 247 |
| உபகாரம் செய்ததனை | 69 |
| உயிர்போயார் வெண்தலை | 50 |
| உருவிற்கு அமைந்தான்கண் | 240 |
| உருவும் இளமையும் | 102 |
| உலகுஅறிய | 204 |
| உள்கூர் பசியால் | 286 |
| உள்ளத்தால் நள்ளாது | 128 |
| உள்ளத்து உணர்வுடையான் | 386 |
| உள்ளம் ஒருவன் | 380 |
| உளநாள் சிலவால் | 324 |
| உறக்கும் துணையது | 38 |
| உறற்பால நீக்கல் | 104 |
| உறுபுலி ஊன்இரை | 193 |
| உறுபுனல் தந்துலகு | 185 |
| உறைப்புஅரும் காலத்தும் | 184 |
| **ஊ** | |
| ஊக்கித்தாம் கொண்ட | 57 |
| ஊர்அங் கணநீர் | 175 |
| ஊருள் எழுந்த | 90 |
| ஊறி உவர்த்தக்க | 47 |
| ஊறுசெய் நெஞ்சம் | 379 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| **ஏ** | |
| எஞ்ஞான்றும் | 385 |
| எத்துணையானும் | 272 |
| எந்நிலத்து வித்திடினும் | 243 |
| எம்மை அறிந்திலிர் | 165 |
| எய்திஇருந்த | 325 |
| எற்றுஒன்றும் இல்லா | 150 |
| எறிநீர்ப் பெருங்கடல் | 275 |
| எறிஎன்று எதிர்நிற்பான் | 363 |
| என்பாய் உகினும் | 292 |
| என்னானும் ஒன்று | 5 |
| என்றும் புதியார் | 307 |
| என்னேமற்று இவ்வுடம்பு | 330 |
| எனக்குத்தாய் ஆகியாள் | 15 |
| எனதுஎனது என்றிருக்கும் | 276 |
| **ஏ** | |
| ஏட்டைப் பருவத்தும் | 358 |
| ஏதிலார் செய்தது | 228 |
| ஏமாந்த போழ்தின் | 378 |
| ஏற்றகை மாற்றாமை | 98 |
| **ஒ** | |
| ஒண்கதிர் வாள்மதியம் | 176 |
| ஒருநன்றி செய்தவர்க்கு | 357 |
| ஒருநீர்ப் பிறந்து | 236 |
| ஒருபுடை பாம்பு | 148 |
| ஒருவர் ஒருவரை | 309 |
| **ஓ** | |
| ஓக்கிய ஒள்வாள் | 129 |
| ஓதியும் ஓதார் | 270 |
| ஓலைக் கணக்கர் | 397 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| **க** | |
| கட்குஇனியாள் | 384 |
| கடக்கஅரும் | 398 |
| கடகம் செறிந்ததம் | 289 |
| கடமா தொலைச்சிய | 300 |
| கடல்சார்ந்தும் இன்னீர் | 245 |
| கடிப்பிடு கண்முரசம் | 100 |
| கடியெனக் கேட்டும் | 364 |
| கடித்துக் கரும்பினை | 156 |
| கடுக்கி ஒருவன் | 189 |
| கடுக்கென | 348 |
| கடையெலாம் | 297 |
| கடையாயார் | 216 |
| கண்கயல் | 395 |
| கண்மூன்று | 400 |
| கணம்கொண்டு | 25 |
| கணமலை நல்நாட | 353 |
| கப்பி கடவதா | 341 |
| கம்மஞ் செய் | 393 |
| கரவாத திண்அன்பின் | 305 |
| கருங்கொள்ளும் | 387 |
| கருத்துஉணர்ந்து | 211 |
| கரும்புஆட்டி | 35 |
| கருமமும் உள்படா | 250 |
| கரும வரிசையால் | 249 |
| கல்எறிந் தன்ன | 66 |
| கல்ஓங்கு உயர்வரை | 283 |
| கல் நனி நல்ல | 334 |
| கல்லாக் கழிப்பர் | 366 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| கல்லாது நீண்ட | 254 |
| கல்லாது போகிய | 169 |
| கல்லாமை அச்சம் | 145 |
| கல்லாரே ஆயினும் | 139 |
| கல்லென்று தந்தை | 253 |
| கல்வி கரையில | 135 |
| கழிந்தார் இடுதலை | 49 |
| கழுநீருள் கார்அட | 217 |
| கள்ளார்,கள்ளுண்ணார் | 157 |
| களர்நிலத்துப் பிறந்த | 133 |
| கற்றதூஉம் இன்றி | 314 |
| கற்றனவும் கண்அகன்ற | 340 |
| கற்றார் உரைக்கும் | 260 |
| கற்றறிந்த நாவினார் | 256 |
| கனைகடல் தண்சேர்ப்ப | 138 |
| **கா** | |
| காணில் குடிப்பழி | 84 |
| காதலார் சொல்லும் | 73 |
| காலாடு போழ்தில் | 113 |
| காவாது ஒருவன் | 63 |
| காழாய கொண்டு | 342 |
| **கு** | |
| குஞ்சி அழகும் | 131 |
| குடநீர் அட்டு | 382 |
| குடரும் கொழுவும் | 46 |
| குலம்தவம் கல்வி | 333 |
| குற்றமும் ஏனை | 230 |
| **கூ** | |
| கூர்த்துநாய் | 70 |
| **கே** | |
| கேளாதே வந்து | 30 |
| **கொ** | |
| கொடியவை | 388 |
| கொடுத்தலும் | 274 |
| கொய்புல் | 350 |
| கொல்லை இரும்புனத்து | 178 |
| கொலைஞர் உலைஏற்றி | 331 |
| கொன்னே கழிந்தன்று | 55 |
| **கோ** | |
| கோட்டுப்பூ | 215 |
| கோடு ஏந்து அகல் அல்குல் | 354 |
| கோதை அருவி | 71 |
| கோள்ஆற்ற | 191 |
| **ச** | |
| சக்கரச் செல்வம் | 346 |
| **சா** | |
| சாய்ப் பறிக்க | 389 |
| சான்றாண்மை | 142 |
| சான்றோர் என | 126 |
| **சி** | |
| சிதலை தினப்பட்ட | 197 |
| சிறுகா பெருகா | 110 |
| சிறுகாலையே | 328 |
| **சீ** | |
| சீரியார் கேண்மை | 232 |
| **செ** | |
| செந்நெல்லால் ஆய | 367 |
| செம்மையொன்று | 85 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| செய்கை அழிந்து | 147 |
| செய்யாத செய்தும் | 235 |
| செல்சுடர் நோக்கி | 394 |
| செல்லா இடத்தும் | 149 |
| செல்வர்யாம் | 8 |
| செல்வுழிக் கண் | 154 |
| செழும்பெரும் | 352 |
| செறிப்புஇல் பழங்கூரை | 231 |
| செறுத்தோறு | 222 |
| சென்றே எறிப | 24 |
| **சொ** | |
| சொல்தளர்ந்து | 13 |
| சொற்றாற்று | 313 |
| **த** | |
| தக்காரும் | 112 |
| தக்கோலம் | 43 |
| தண்டாச் சிறப்பின் | 62 |
| தம்அமர் காதலர் | 392 |
| தம்கண் அமர்வில்லார் | 336 |
| தம்மை இகழ்ந்தமை | 58 |
| தம்மை இகழ்வாரை | 117 |
| தமர்என்று தாம் | 229 |
| தலையே தவம்முயன்று | 365 |
| தவல்அரு | 137 |
| தளிர்மேலே நிற்பினும் | 355 |
| தனதாகத் தான் | 278 |
| **தா** | |
| தாம்செய் வினை | 120 |
| தாமேயும் இன்புறார் | 327 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| தாழாத் தளரா | 14 |
| தான்கெடினும் | 80 |
| **தி** | |
| திருத்தன்னை | 304 |
| திருமதுகை யாக | 291 |
| தினைஅனைத்தே | 344 |
| தினைத்துணையர் | 105 |
| **தீ** | |
| தீங்கரும்பு ஈன்ற | 199 |
| **து** | |
| துக்கத்துள் தூங்கி | 121 |
| துகள்தீர் பெருஞ்செல்வம் | 2 |
| துய்த்துக் கழியான் | 273 |
| துன்பம் பலநாள் | 54 |
| துன்பமே மீதூர | 60 |
| **தெ** | |
| தெரியத் தெரியும் | 168 |
| தெள்நீர்க் குவளை | 44 |
| தெளிவிலார் நட்பின் | 219 |
| **தோ** | |
| தோணி இயக்குவான் | 136 |
| தோற்போர்வை | 42 |
| தோற்றம்சால் | 7 |
| **ந** | |
| நச்சியார்க்கு ஈயாமை | 299 |
| நட்டார்க்கும் நள்ளா | 271 |
| நட்புநார் அற்றன | 12 |
| நடுஊருள் வேதிகை | 96 |
| நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் | 93 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| நம்மாலே ஆவர் | 301 |
| நயவார்கண் | 267 |
| நரம்பெழுந்தது | 153 |
| நரைவரும் என்று | 11 |
| நல்ஆவின் கன்று | 115 |
| நல்ல குலம் | 195 |
| நல்லர் பெரிதுஅளியர் | 298 |
| நல்லவை செய்யின் | 144 |
| நல்லவை நாள்தோறும் | 338 |
| நல்லார் எனத்தாம் | 221 |
| நல்லார் நயவர் | 265 |
| நளிகடல்...நல்கூர்ந்த | 242 |
| நளிகடல்...நாள்நிழல் | 166 |
| நறுமலர்த் தண்கோதாய் | 209 |
| நன்னிலைக்கண் தன்னை | 248 |
| **நா** | |
| நாப்பாடம் சொல்லி | 312 |
| நாய்க்கால் சிறுவிரல் | 218 |
| நார்த்தொடுத்து | 26 |
| நாலாறும் ஆறாய் | 383 |
| நாள்வாய்ப் பெறினும் | 207 |
| நாறாத் தகடேபோல் | 266 |
| **நி** | |
| நிலநலத்தால் | 179 |
| நிலையாமை நோய் | 52 |
| நின்றன நின்றன | 4 |
| **நீ** | |
| நீர்மையே அன்றி | 287 |
| நீரினும் நுண்ணிது | 282 |
| நீருள் பிறந்து | 360 |
| **நு** | |
| நுண்உணர்வி னாரொடு | 233 |
| நுண்உணர்வு இன்மை | 251 |
| **நெ** | |
| நெடுங்காலம் | 68 |
| நெருப்புஅழல் | 124 |
| **நே** | |
| நேர்அல்லார் நீர்அல்ல | 72 |
| நேர்த்து நிகர்அல்லார் | 64 |
| **ப** | |
| பகைவர் பணிவிடம் | 241 |
| படுமழை மொக்குளின் | 27 |
| பண்டம் அறியார் | 48 |
| பரவா வெளிப்படா | 88 |
| பராஅரைப் புன்னை | 246 |
| பருவம் எனைத்து | 18 |
| பல்ஆவுள் உய்த்து | 101 |
| பல்லான்ற... பாடுஅழிந்து | 252 |
| பல்லார் அறிய | 86 |
| பல்ஆன்ற கேள்வி | 106 |
| பலநாளும் பக்கத்தார் | 214 |
| பன்னாளும் சென்றக்கால் | 159 |
| பழமைகந் தாகப் | 310 |
| பழையர் இவர்என்று | 349 |
| பன்றிக் கூழ்ப் பத்தரில் | 257 |
| பனிபடு சோலைப் | 17 |
| **பா** | |
| பாடமே ஓதி | 316 |
| பாம்பிற்கு ஒருதலை | 375 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| பாலால் கழீஇ | 258 |
| பாலோடு அளாயநீர் | 177 |
| பாவமும் ஏனைப் பழியும் | 295 |
| பி | |
| பிறந்த குலம் | 285 |
| பிறர்மறை யின்கண் | 158 |
| பு | |
| புக்க இடத்து | 83 |
| புணர்கடல்சூழ் | 264 |
| புத்தகமே சால | 318 |
| புதுப்புனலும் | 370 |
| புல்நுனிமேல் நீர் | 29 |
| புல்லா எழுத்தின் | 155 |
| புல்லாப் புன்கோட்டி | 255 |
| புறத்துத்தன் இன்மை | 308 |
| பெ | |
| பெயற்பால மழைபெய்யா | 97 |
| பெரியவர் கேண்மை | 125 |
| பெரியார் பெருநட்பு | 77 |
| பெரியார் பெருமை | 170 |
| பெருகுவது போல | 234 |
| பெருங்கடல் ஆடிய | 332 |
| பெருநடை தாம்பெறினும் | 343 |
| பெருமுத்தரையர் | 200 |
| பெருவரை நாட | 186 |
| பெறுவதுஒன்று | 335 |
| பெறுவது கொள்பவர் | 317 |
| பொ | |
| பொத்த நூற் கல்லும் | 376 |
| பொழிந்துஇனிது | 259 |
| பொழிப்புஅகலம் | 319 |
| பொற்கலத்து ஊட்டி | 345 |
| பொற்கலத்துப் பெய்த | 206 |
| பொறுப்பர்என்று | 161 |
| பொன்நிறச் செந்நெல் | 269 |
| பொன்னே கொடுத்தும் | 162 |
| ம | |
| மக்களால் ஆய | 37 |
| மடிதிரை தந்திட்ட | 224 |
| மதித்துஇறப் பாரும் | 61 |
| மரீஇப் பலரோடு | 220 |
| மல்கு திரைய | 263 |
| மல்லல்மா ஞாலத்து | 296 |
| மலைநலம் உள்ளும் | 356 |
| மலைமிசைத் தோன்றும் | 21 |
| மழைதிளைக்கும் | 361 |
| மற்றுஅறிவாம் | 19 |
| மறுமைக்கு வித்து | 183 |
| மறுமையும் இம்மையும் | 95 |
| மன்றம் கறங்க | 23 |
| மன்னர் திருவும் | 167 |
| மனத்தான் மறுஇலர் | 180 |
| மனைப்பாசம் | 130 |
| மா | |
| மாக்கேழ் மடநல்லாய் | 41 |
| மாண்ட குணத்தொடு | 56 |
| மாற்றாராய் நின்று | 67 |
| மான அருங்கலம் | 40 |

| செய்யுள் | செய்யுள் எண் |
|---|---|
| **மு** | |
| முட்டிகை போல | 208 |
| முட்டுற்ற போழ்தில் | 238 |
| முயங்காக்கால் | 391 |
| முல்லை முகைமுறுவல் | 45 |
| முலைக்கண்ணும் | 399 |
| முற்றல் சிறுமந்தி | 237 |
| முன்துற்றுத் துற்றினை | 190 |
| முன்னரே சாம்நாள் | 92 |
| **மூ** | |
| மூப்புமேல் வாராமை | 326 |
| **மெ** | |
| மெய்ஞ்ஞானக் கோட்டி | 311 |
| மெய்வாய்கண் | 59 |
| மெல்லிய நல்லாருள் | 188 |
| **மை** | |
| மைதீர் பசும்பொன் | 347 |
| **யா** | |
| யாஅர் உலகத்தோர் | 119 |
| யாஅர் ஒருவர் | 127 |
| யாக்கையை யாப்புடைத்தா | 28 |
| யாம்ஆயின் எம்இல்லம் | 293 |
| யானை அனையவர் | 213 |
| யானை எருத்தம் | 3 |
| **வ** | |
| வடுவிலா வையத்து | 114 |
| வயாவும் வருத்தமும் | 201 |
| வலவைகள் அல்லாதார் | 268 |
| வழங்காத செல்வரின் | 277 |
| வழுக்கு எனைத்தும் | 362 |
| வளம்பட வேண்டாதார் | 103 |
| வற்றிமற்று ஆற்ற | 78 |
| **வா** | |
| வாழ்நாட்கு அலகா | 22 |
| வான்இடு வில்லின் | க.வா. |
| **வி** | |
| விரிநிற நாகம் | 164 |
| விருப்பிலார் இல்லத்து | 210 |
| விழைந்தஒருவர் | 339 |
| விளக்குஒளியும் | 371 |
| விளக்குப் புகஇருள் | 51 |
| வினைப்பயன் வந்தக்கால் | 33 |
| **வெ** | |
| வெறிஅயர் வெம்களத்து | 16 |
| வெறுமை இடத்தும் | 329 |
| வென்றிப் பொருட்டால் | 315 |
| **வே** | |
| வேம்பின் இலையுள் | 244 |
| வேற்றுமை இன்றி | 75 |
| **வை** | |
| வைகலும் வைகல் | 39 |
| வைப்புழிக் கோட்படா | 134 |

வெற்றி விநாயகா கல்வி நிறுவனங்கள்
வேழ முகத்து விநாய கனைத்தொழ
வெற்றி மிகுத்து வரும்